பல்சுவை

# தமிழ்நெஞ்சம்

tamilnenjam.com

சனவரி 2025

2025



17 ஆம் பக்கம் வாருங்கள்

இணைப்பு நூலொன்று பரிசு




ஏட்டுலா கனவாக்கம் பணிப்பாளர்

## ஆஷிக் ஹுஸைன்

HAPPY NEW YEAR


வடிவமைப்பு
சேவைகள்
GRAPHIC DESIGN
எமது சேவைகள்
Logo Design
Banner Design
Designing Business Cards
Flyer Designs
Brochure Design
Certificate/Invitation Designs
மற்றும் தங்கள் விருப்பத்திற்கேற்ப தட்டச்சு மற்றும் வடிவமைப்பு வேலைகளை தமிழ், சிங்களம், ஆங்கிலம் மொழிகளில் செய்து கொள்ளலாம்.
தொடர்புகளுக்கு: 0753761731 / 0779998608

பல்சுவை

# தமிழ்நெஞ்சம்

உதயம் 1972 – சனவரி 2025

637

நன்மக்கள் உள்ளமெலாம்
நல்லொளியால் நிரம்பட்டும்,
நன்னெறிபால் எல்லோரும்
ஒருங்கிணைந்து திரும்பட்டும்!

ஆசிரியர் / வெளியிடுபவர் :

அமின் மொஹமெட்

இணையாசிரியர் :

முனைவர் பெண்ணியம் செல்வக்குமாரி

நிர்வாக ஆசிரியர் :

சஃபி மொஹமெட்

ஆசிரியர் குழு :

ஹிப்ஸுர் ரஹ்மான்

பாவேந்தல் பாலமுனை பாறூக்

கவிஞர் நெல்லை உலகம்மாள்

பாவலர்மணி இராம வேல்முருகன்

பாவலர்மணி தென்றல் கவி

வெண்பா வேந்தர் ஏடி வரதராசன்

கவிஞர் பொன்மணிதாசன்

கவிஞர் ஈழபாரதி

வடிவமைப்பு :

அமின் மொஹமெட்

ஆயிஷா சகீலா

ஆலோசகர்கள் :

பாட்டரசர் கி. பாரதிதாசன்

கவிதாயினி சக்தி ஜோதி

எழுத்தாளர்கள், நன்கொடையாளர்கள், புரவலர்கள் மற்றும் நூல்கள் விமர்சனம், மதிப்புரை, அறிமுகத்திற்கு நூல்கள் அனுப்ப மற்றும் அஞ்சல் தொடர்புகளுக்கு...

**இராம வேல்முருகன்**
எண் 12 புங்கஞ்சேரி முதன்மைச் சாலை
வலங்கைமான் 612804
திருவாரூர் மாவட்டம்
தமிழ்நாடு , இந்தியா
தொடர்பு எண் +91 9952529619 ( கட்செவி )
web : tamilnenjam.com
email : editor@tamilnenjam.com

புதிய ஆக்கங்களும், விமர்சனங்களும் எதிர்பார்க்கப்படுகின்றன். படைப்பின்கீழ் படைப்பாளர்கள் தமிழில் பெயரையும், மின்னஞ்சல் மற்றும் தொடர்புக்கான தகவல்களையும் ஆக்கம் தங்களால் எழுதப்பட்டது எனும் உறுதியையும் தருதல் அவசியம்.

நூல் விமர்சனம் செய்திட நூலின் இரண்டு பிரதிகளை அனுப்ப வேண்டும். படைப்புகளுக்கு ஆசிரியர் பொறுப்பல்ல. படைப்பாளிகளே பொறுப்பாவார்கள். ஆக்கங்களை செவ்வைப் படுத்த ஆசிரியர் குழுவுக்கு உரிமையுண்டு.

# நெஞ்சோடு நெஞ்சம்









**அன்பார்ந்த தமிழ்நெஞ்சங்களே வணக்கம்!**

மலர்ந்திருக்கும் இப் புத்தாண்டு நம் அனைவரின் உள்ளங்களிலும் உள்ள மாசுகளைக் களைந்து உள்ளத்திற்கு புதிய ஒளியையும் புத்து ணர்ச்சியையும் தரவேண்டும் எனப் பிரார்த்திக்கிறேன்.

தொடர்ந்து பல தடைகளையும் சவால்களையும் தாண்டி 54 ஆவது ஆண்டில் நமது தமிழ்நெஞ்சம் இதழ் கால்வைப்பதை எண்ணி பூரிப்படைகின்றேன். தடுக்கி விழும் போதும் சோர்ந்து போகும் போதும் உற்சாகப்படுத்தி ஊக்கப்படுத்திய பல நல்ல உள்ளங்களை இந்த இடத்தில் நினைவுகூர்ந்து நன்றி கூறுகின்றேன்.

ஆரம்பத்தில் இருந்து ஒப்பிடும் போது இதன் வளர்ச்சி அபரிமித மானதாக உள்ளது. அனைவரும் ஆர்வத்தோடு எழுதுகிறார்கள். இயந்திரமயமாக மாறி வரும் உலகில் எழுதுவதற்கும் நேரம் ஒதுக்கு பவர்களை பார்க்கும் போது சந்தோசமாக இருக்கிறது. மாற்றங்கள் எம்மை அதிசயமாக வந்தடைவதல்ல. மாற்றங்களை நாம் தான் உருவாக்கிக் கொள்ள வேண்டும். எமக்கு இருக்கும் கனவுகளையும் ஆசைகளையும் எமது அத்தியவசியத் தேவையாக மனதில் நிறுத்தி அதற்காக முழு முயற்சி செய்து போராடும் போது தான் அதனை நாம் பெற்றுக் கொள்ள முடியும். எனவே வெறுமனே கனவு காண்பதோடு நிறுத்தி விடாமல் அதற்காக தொடர்ந்தும் முயற்சி செய்யுங்கள். வெற்றி பெறுவீர்க்ள.

புதிய வருடத்தை வரவேற்கும் முகமாக நமது இதழ் பல புதிய சுவாரஷ்யமான தகவல்களுடன் உங்களை வந்தடைந்திருக்கின்றது. பல இளம் எழுத்தாளர்களை அறிமுகம் செய்து வைத்துள்ளது. அனைவரும் படித்துப் பயன்பெறுங்கள்.

என்றென்றும் அன்புடன்
தமிழ்நெஞ்சம் அமின்
(ஆசிரியர்)

பட விநயம் : கூகுள்

# புத்தாண்டில் பூக்க வேண்டும்

நிலவினிலே கால்வைத்தோம் செயற்கைக் கோளை
நீல்வானில் பறக்கவிட்டோம்; கண்ணால் செவ்வாய்
நிலம்பார்த்துக் காலூன்றி இறங்க வேண்டும்
நிறைந்துள்ள வளங்களினை அறிய வேண்டும்!
புலம்பெயர்ந்தே அடுத்தகோளில் வாழ வேண்டும்
புரியாத இயற்கைபுதிர் புரிய வேண்டும்
நலமாக இவையெல்லாம் பிறக்கும் இந்த
நல்லபுது ஆண்டினிலே மலர வேண்டும்!

வான்முட்டும் தொழிற்சாலை அணைகள் என்றே
வளம்பெருக்கும் தொழிற்புரட்சி நாட்டில் செய்தோம்
தேன்சுவையாய் வாழ்வினிக்க விஞ்ஞா னத்தால்
தேவையெனும் கருவிகளை ஆக்கிக் கொண்டோம்!
வான்படல ஓசோனின் துளையும் நீங்கி
வற்றாத கங்கைநீர்கா விரியில் சேர்ந்து
மேன்மேலும் முன்னேற்றம் பிறக்கும் இந்த
மேன்மையுடை புத்தாண்டில் நடக்க வேண்டும்!

வீட்டிற்குள் இணையத்தால் உலகை வைத்தோம்
வீதிக்குள் சாதிகளால் பகைமை வைத்தோம்
நாட்டிற்குள் பதவிகளால் சண்டை வைத்தோம்
நன்நெஞ்சுள் தன்னலத்தால் நஞ்சை வைத்தோம்!
கேட்டிற்கே துணையாம்இக் கீழ்மை நீங்கிக்
கேடகன்று மனத்தினிலே மனித நேயக்
கூட்டுறவால் வாழ்வெல்லாம் மகிழ்ச்சி தம்மில்
கூடுமின்பம் புத்தாண்டில் பூக்க வேண்டும்!



**பாவலர் கருமலைத்தமிழாழன்**



# பொங்கல்

தை மகளும் வந்தாள்
தரணி போற்ற வந்தாள்
தமிழர் திருநாளிலே
தங்கத் தாரகையாய் வந்தாள்

புத்தாடை உடுத்தியே புதுப்
பெண்ணாய் வந்தாள்
பச்சரிசி வெல்லமிட்டு
புதுப் பானையில் பொங்கல் வைத்து
பொங்கல் பொங்கி வருகையிலே
மனமெல்லாம் மகிழ்ச்சியிலே

மஞ்சள் கிழங்கெடுத்து
வாழைமரம் கட்டிவச்சி
தோரணங்கள் தொங்விட்டு
வாழை இலையில் படையலிட்டு

வெண்பொங்கல்
வெல்லத்துடன்
சர்க்கரைப் பொங்கல்
சேர்த்து வைத்து
பரங்கிக்காய் பொரியல் வைத்து
வெண்பூசனி சாம்பார் வைத்து

தேங்காய் பழத்துடன்
கற்பூர வாசனையுடன்
பத்தி மணம் வீச
பக்தி மனம் கமழ
உற்றார் உறவினர்கள் புடைசூழ
அண்டை வீட்டார் வரவால் மகிழ
சின்னஞ்சிறார் சிரித்து மகிழ
பெரியோர்கள் வாழ்த்துக்கூற
கொண்டாடி மகிழும்
பொங்கல் திருநாளாம்
தமிழர் திருநாள் வருக!வருகவே!
மனதில் மகிழ்ச்சி பொங்கவே!

**கவிஞர்.ச.சங்கீதா**
ரெட்டிப்பட்டி637002
நாமக்கல்



# தூரல் நடுவே...



தூரல் நடுவே
ஊடுருவும் கதிர்கள்
அவள் வரும் நேரத்தில்
ஆவலாக அந்தி.

சாயல் தெரியாது
அவிழ்ந்த மொட்டு
அவளைச் சார்ந்து
பூப் பூவாய்
மழை பொழுதில்
மறையத் தான் செய்கிறது
குலுங்கும் கிளையில்
மலரும் கனியும்.

மேகங்கள் மூட
வானம் இருண்டது
முந்தானை போர்த்த
மலர்ந்த முகம்.
மழை வருகிறது என
ஒதுங்கி நின்றேன்
நீ வர
மலையாக சரிந்தேன்

குடை பிடிக்க மனமில்லை
மெல்லிய தூறலில்
புயலாக வந்து சென்றாள்
பிடிக்காமல் போகுமா.

பிராத்தனை நடுவே
பறவையின் சப்தம்
திரும்பி பார்க்கிறேன்
அழகாய் அவள்.
இரைச்சலிடும் மலையருவி
சமாதானமாக இரு பறவைகள்
தொலைக் போகிறேன்
இருண்ட நினைவை.

**மூ.மணி திரு முருகன்.**
சங்கரன்கோவில்

## பட்டாம்பூச்சி

என் கைகளில் நீ அமர்ந்திருக்க;
உன் இறக்கைகள் ஓய்வெடுக்க,
பயணங்கள் இனிமையானதாக,
உன்னோடு நான் இருக்க....

## பணம்

வெள்ளை காகிதத்தாள் ஓர் ஓரமாக;
எண்ணுள்ள காகிதத்தாள் பத்திரமாக;
ஓவியத்தின் மதிப்பு விற்கும் வரை..
பணம் பிறர் மதிக்கும் வரை...

**சி. ஹரிசுவேதா.,**
ஜலகண்டாபுரம்,
சேலம்

# நெற்றிக்கண் திறப்பினும்...

## - வெண்பாவில் வாதம்





செ. இராசா


**சிவனின் வினா**

*என்பாட்டில் குற்றமென்றோன் எங்குள்ளான் இச்சபையில்*
*என்முன்னே வந்திடடா இங்கு!*

**அரசனின் பதில்**

*பண்புடன் பேசுங்கள் பாட்டுடைப் பாவலரே*
*கண்ணியம்தான் இச்சபையின் காப்பு*

**சிவனின் வினவல்**

*சீற்றத்தைத் தூண்டாதே செண்பகப் பாண்டியா..*
*கூற்றினைக் கூறியதார் கூறு*

**பாண்டியனின் பதில்**

*ஐயாப் புலவரே ஆத்திரம் வேண்டாமே..*
*பொய்யாப் புலவரிவர் பார்*

**சிவனின் நையாண்டில்**

*அரசன் இருக்க அதிகாரம் எங்கோ?*
*முரணாய் இருக்குதே மாண்பு*

**புலவர்களின் பதில்**

*நற்றமிழ் சங்கத்தில் நக்கீரர் தானய்யா*
*கற்றோரில் மூத்த கவி*

**சிவனின் நேரடிக்கேள்வி**

*நீர்தான் பெருங்கவியாய் நிற்கின்ற ஓர்கவியோ...!!*
*கோர்த்திட்ட குற்றமென்ன கூறு*

**நக்கீரர் பதில்**

*கோர்த்திட்ட பூவால்தான் கூந்தலிலே வாசமெல்லாம்*
*வார்த்துள்ளீர் மாறுபொருள் வைத்து*

**சிவனின் வாதம்**

*உயர்சாதிப் பெண்களுக்கும் உன்கூற்று மெய்யோ?!*
*உயிர்நீக்கும் நெற்றிக்கண் ஓய்!*

**நக்கீரனின் நச்சென்ற பதில்**

*எம்மை எரித்தாலும் எம்வாக்கில் பொய்யில்லை*
*எம்மயிரும் ஓர்மயிரே இங்கு*



# உயர்ந்திடு உயர்ந்திடு

நேரிய வழியில் நேர்மையாக நின்றிட
சரியான பாதையில் சிந்தித்து செயற்பட
பரிசுத்த மனதுடன் பாரில் உயர்ந்திட
கரிசனை கொண்டு காலமும் உழைத்திடு ..!


எள்ளி நகையாடாது எளியோரையும் வசப்படுத்திட
தெள்ளத் தெளிவோடு திறமையாக முயன்றிட
உள்ளத்தால் என்றும் உதவி செய்திட
அள்ளிக் கொடுத்து எப்போதும் உயர்ந்திடு...!

நல்லவை உரைத்து நாளும் சிறந்திட
நல்லதை செய்து நலமாய் வாழ்ந்திட
எல்லோரையும் மதித்து ஏணியாக உயர்ந்திட
நல்லோர் போற்ற நற்பணி புரிந்திடு ...!

கற்று அறிந்ததை கல்லாதோருக்கு வழங்கிட
ஒற்றுமையாய் இருந்து ஒழுக்கம் பேணிட
சற்றே சிந்தித்து சாதனையை நிலை நாட்டிட
வெற்றியின் சிகரத்தை விரைவாக தொட்டிடு...!

எட்டமுடியாத இலக்கையும் எளிதாக அடைந்திட
நட்போடு பழகி நல்லபெயர் வாங்கிட
ஊட்டிடு நல்லெண்ணம் சாதனைகள் செய்திட
திட்டங்கள் தீட்டி தரணியில் வென்றிடு...!

**ஜெனனி. மோ**
இலங்கை



# பொங்கலிடு பொங்கலிடு




மனிதநேயப் பொங்கலிடு !
தமிழ் மண் சார்ந்த மரபோடு
உறவாடும் விவசாயி !
தை மாத வரவோடு
தழைக்கும் உறவோடு பொங்கல் !
புத்தரிசி புதுவெல்லாம்
இத்தரை போற்றும் மண்பானை !
முற்றத்தில் பொங்கலிட்டு
குலவையிடும் மாதர் கூட்டம் !
புத்தாடை அணிந்து கொண்டு
பொங்கலோ பொங்கலன்று
அனைவரும் ஆனந்தக் கூத்தாடும்
உழவர் பெருமக்கள் !
வண்ண கோலமிடும் கன்னியர்கள்
கும்மியடிக்கும் குதூகலம் !
காளையர்கள் ஏறுதழுவி
வீரத்தமிழராய் உலா வருவர் !
பெரியோர்கள் ஆசியுடன்
காணும் பொங்கலன்று உறவுகள்
ஒன்று கூடும் உன்னதத் திருநாள் !
பொங்கலிடு பொங்கலிடு
மனிதநேயப் பொங்கலிடு !
என முழக்கமிடும் கவிஞர் கூட்டம்
தையுடன் கைகோக்கும்
தமிழர்தம் வாழ்வு உயர்க்கவே !

**கா.ந.கல்யாணசுந்தரம்**
சென்னை.

# இனிக்கும் பொங்கல்

வேலைக்குப் புறப்பட்டுவிட்ட மணி மேகலை 'அம்மா, என் ஹான்ட் பேக் கைக் குடும்மா. பீரோவில் வெச்சியே' என்று பெண் மணிமேகலை கேட்கவும், விசாலாட்சி பீரோவைத் திறந்து அதை எடுத்துக் கொடுத்தாள். திறந்து பார்த்து முதல் நாள் தான் வைத்திருந்த பணப்பை அதில் பத்திரமாக இருக்கிறது என்ற திருப்தி யுடன், 'வரேம்மா, நான் போய்ட்டு வரேன், பாட்டி!' என்று சொல்லிக் கொண்டே படி இறங்கினாள் மணிமேகலை.

'ஆக, அம்மாவும் பொண்ணும் என் பேச்சை மதிக்கல்லே. அங்க என் பேத்தி' அப்பா பொங்கல் சீர் கொண்டு வரப் போறார்னு எதிர்பார்த்து காத்துகிட் டுருப்பா. உங்க அப்பாவாலேயோ பணம் புரட்டமுடியல்லே. சீர் இல்லைன்னா பொங் கலன்னிக்கு அவங்க மாமியார் அவளை



வீட்டைவிட்டே துரத்திடப் போறாங்க. என்னவோ நான் கும்பிடற சாமிதான் இந்த பணத்தை அனுப்பிவெச்சிருக்குன்னு சொன்னா தாயும் மகளும் என்னமோ நியாயம் பேசறீங்க. பெரியவங்க வார்த்தைக்கு மதிப்பு கொடுக்கறதுதான் இல்லேன்னு ஆயிடிச்சி இந்த வீட்ல. என்னவோ செய் யுங்க' என்று நொடித்தாள் பாட்டி.

'பாட்டி, நீ கும்பிடற தெய்வம் உன்னைக் கை விடாதுங்கற நம்பிக்கைல நீ இரு. நல்ல வழியிலேயே பிரச்னை தீரும்.' என்ற மணிமேகலை வேலைக்குக் கிளம்பி விட்டாள்.

கெட்டியாக மார் போடு பையை பிடித்துக் கொண்டே, நேற்றைய சம்பவங்களை நினைத்துப் பார்த்துக் கொண்டே தான் வேலை செய்யும் புடவைக் கடைக்கு நடந்தாள் மணி மேகலை. அந்த புடவைக்கடையில் அவள் வேலை செய்கிறாள் என்று பெயரே ஒழிய முதலாளி சிவநேசனுக்கு அடுத்தது அங்கு அவள்தான் எல்லாமே. அவளுடைய தந்தைக்கு சிவநேசன் தூரத்து உறவில் தம்பி முறை. அதனால் இவள் பி..காம் முடித்தவுடன் சிவநேசன் தன் கடையிலேயே இவளுக்கு கணக்கர் வேலை கொடுத்தார். இவளுடைய பொறுப்புணர்ச்சியும், சுறுசுறுப்பும் அனைவரிடத்திலும் நடந்துகொண்ட விதமும் இவளை சிவநேசனின் நம்பிக்கைக்கு வெகு விரைவில் பாத்திரமாக்கிவிட்டன. இவளிடம் கடையை ஒப்படைத்துவிட்டு வெளிவேலைக்குப் போகும் அளவு இவள் மேல் அவருக்கு நம்பிக்கை.

நேற்றும் அப்படித்தான். சிவநேசன் வெளியே போயிருந்தார். இவர்கள் கடையிருக்கும் திண்டுக்கல்லுக்கு அக்கம் பக்கத்து கிராமங்களிலிருந்தெல்லாம் பொங்கலுக்கு துணிமணி எடுக்க நிறைய பேர் வருவார்கள். அந்தப் பகுதியில் விவசாயிகள் அதிகம். எனவே, பொங்கலைத்தான் நன்றாகக் கொண்டாடுவார்கள். இவர்கள் கடை அடைக்கும் முன் பேங்க் மூடிவிடுவார்கள் என்பதால், அன்றாடம் இவர்களுடைய கலெக்ஷனை உள்ளே கட்டப் பட்டிருக்கும் பாதுகாப்புப் பெட்டியில் வைத்துப் பூட்டி விடுவார்கள். அதன் ஒருசாவி கடையில் நிறைய வருடங்களாக வேலை பார்க்கும் சேகரனிடமும், மற்றொரு சாவி மணிமேகலையிடமும் இருக்கும். இவள் கடைசியாகத்தான் கிளம்புவாள் தினமும். சிவநேசனுடைய அப்பா காலத்திலிருந்து அந்த கடையில் வேலை செய்து கொண்டிருக்கும் கல்யாணசுந்தரம் பெரியப்பா இவளுடைய வீட்டு வாசல் வரை துணைக்கு வருவார். அதைத்தாண்டித்தான் அவர் வீடு. அதற்குள் கூர்க்கா வந்து வாசல் ஷட்டர் கதவைப் பூட்டி சாவியை இவளிடம் கொடுத்துவிடுவார்.

நேற்று லாக்கரைப் பூட்டிவிட்டு சேகரன் வீட்டிற்குக் கிளம்பிவிட்டார். ஷட்டரை இழுத்துப் பூட்டச் சொல்லப் போன மணிமேகலை 'டா' ணா வடிவில் அமைந்திருந்த கவுண்டரின் வெளியே அது திரும்பும் இடத்தில் ஒரு பையைப் பார்த்தாள். அதைப் பிரித்துப் பார்த்தவள், 'பெரியப்பா, இங்கே பாருங்களேன்' என்று கூப்பிட்டாள். 'என்னம்மா?' என்று கேட்டுக் கொண்டே வந்து பார்த்தவர், 'அம்மாடியோவ்! எக்கச் சக்கமான பணம் இருக்கே!' என்றார். 'ஆமாம் பெரியப்பா! பாவம், யார் விட்டுவிட்டுப் போனார்களோ?' என்றாள்.

'பையை எடும்மா' என்றவர் பார்த்ததுமே, 'அம்மா, இன்னிக்கி வந்தாங்களேம்மா வத்தலகுண்டு பண்ணையார் வீட்டுக்காரங்க, அவங்க தாம்மா விட்டுட்டுப் போயிருக்காங்க. அவங்க பைதாம்மா இது' என்றார்.

'ஆமாம் பெரியப்பா, எனக்குக்கூட அந்த பெரியம்மா பையிலே இதைப் பார்த்த மாதிரி நினைவுக்கு வருது. இந்த பணத்தை கவுண்டருக்கு கீழே இருக்கிற அலமாரிலே

வெச்சு பூட்டிடலாமா? பத்திரம்தானே!' என்றாள்.

'இல்லேம்மா' என்று ஒரு நிமிடம் யோசித்தவர், 'பேசாமே இதை நீ உன் வீட்டிற்கு எடுத்துப் போயி பத்திரமா வெச்சி ருந்து காலைலே எடுத்துகிட்டு வாம்மா ' என்றார்.

'என்ன பெரியப்பா, எங்கிட்டே சொல் றீங்க, நீங்களே உங்க வீட்லே கொண்டு வெச்சுக்கலாம், இல்லையா?' என்றாள் மணிமேகலை.

'இல்லேம்மா, எங்க வீடு ஒரு ஒண்டுக் குடித்தன வீடு. நீ எடுத்துகிட்டு வா. நான் தான் கூட வரேனே ! காலையிலும் உன்னை வீட்டிலிருந்து கூட்டிகிட்டு வரேன், பயப் படாதே!' என்றார்

'காலைலே ஒண்ணும் பயமில்லே, இப் பத்தான் ராத்திரி வேளை, பயமாயிருக்கு.' என்றாள்.

'நான், உங்கூட வரேன். வேணும்னா கூர்க்காவை தெரு முனை வரை வரச் சொல்லுவோம்.. புறப்படும்மா, லேட் டானா தெருவிலே அப்புறம் நடமாட்டம் குறைஞ்சிடும்.' என்றார்.

சரியென்று பணப்பையையும் தன் தோள் பையில் வைத்துக் கொண்டு அவருடன் நடந்தாள். ஷட்டர் கேட்டைப் பூட்டிவிட்டு கூர்க்காவும் கொஞ்ச தூரம் நடந்துவந்தார். வீட்டிற்குள் நுழைந்ததுமே கதவை சாத்திய மணிமேகலை உள் அறைக்குப் போய் தன் பையை வைத்துவிட்டு வந்தாள்.

அதற்குள்ளேயே அவளின் பாட்டி மணிமேகலையின் வீங்கிய பையைப் பார்த்துவிட்டாள். 'என்னடி, பை ரொம்ப பெருத்திருக்கு? அத்தனை ஜாக்கிரதையா உள்ளே வெச்சுட்டு வரே?' என்றாள்.

'ஒண்ணுமில்லே, பாட்டி!' என்றவள் அவள் அம்மா, 'டிபன் பாக்ஸ் எங்கே?' என்று கேட்கவும், அதை எடுக்க உள்ளே போனாள். பணப்பையை எடுத்து வெளியே வைத்துவிட்டு அவள் டிபன் பாக்ஸை எடுப்பதற்குள் கூடவே வந்த பாட்டி, அந்தப் பையை திறந்து பார்த்துவிட்டு 'ஏதுடி இவ்வளவு பணம்?' என்று கேட்டு முகவாயில் கை வைத்தாள்..

'பாட்டி, இது கடைக்கு வந்த யாரோ மறந்து வெச்சுட்டுப் போன பணம். காலைலே அவங்க கிட்டே கொடுத்துட ணும்' என்றாள்.

'யாரும்மா அது? இத்தனை பணத்தை கூட யாராவது மறந்து வைப்பாங்களா?' என்று அதிசயித்தாள் விசாலாட்சி.

' சரி, இந்த பணத்தை நீ எடுத்துகிட்டு வந்தது யாருக்குத் தெரியும்?' என்று விசாரித் தாள் பாட்டி.

'ஏன், கல்யாணசுந்தரப் பெரியப்பாவுக் குத் தெரியுமே!' என்றாள் மணிமேகலை.

'அதுசரி, எத்தனை ரூபான்னு அவருக்குத் தெரியுமா?' என்று கேட்டாள் பாட்டி.

'தெரியாது பாட்டி! பை பூரா பணம்னு பார்த்ததுமே பதறிட்டோம். எண்ணல்லே' என்றாள் மணிமேகலை.

'அப்போ, இதிலேர்ந்து கொஞ்சம் பணத்தை எடுத்து என் பேத்திக்கு பொங்கல் சீரை நிரக்கச் செஞ்சுடலாம்மா' என்று கெத்தாகப் பார்த்தாள் பாட்டி.

'பாட்டி, என்ன பேசறீங்க? யார் பணத்தை எடுத்து யாருக்கு யார் சீர் செய்ய முடியும்? ' என்று பதறிப் போய்க் கேட்டாள் மணிமேகலை.

'என்ன அத்தை, என் பேத்தி, என் பேத் தின்னு பிரிச்சு பேசிக்கிட்டே இருக்கீங்க? பணம் ஏற்பாடு பண்ணத்தானே உங்க பிள்ளை மதுரை போயிருக்காரு! மணி சொல்ற மாதிரி யார் பணத்திலேயோ நம்ம பிள்ளைக்கு எதுக்கு சீர் செய்யணும்?' என்று கேட்டாள் விசாலாட்சி. 'வேண்டாம்மா! நீ பீரோவிலே வை பணத்தை. காலைலே

போகும்போது கொண்டு குடுத்துடணும்'

வாசற்கதவையும், கொல்லைக் கதவையும் பூட்டியிருக்கா என்று நான்கு தடவை இழுத்துப் பார்த்துவிட்டுப் படுத்த தாயும் மகளும் வெகு நேரம் தூங்கவேயில்லை. இதோ சீக்கிரமே கடைக்குக் கிளம்பி விட்டாள்.

இவள் கடைக்குப் போய்ச் சேர்ந்தபோது முதலாளி வந்துவிட்டார். கல்யாண சுந்தரமும் வந்து விட்டார். முதலாளியிடம் வணக்கம் சொன்னவள், 'அவங்க போன் செஞ்சாங்களா சார்? இத்தனை சீக்கிரம் வந்துட்டீங்களே!' என்று கேட்டவள், ஷட்டரின் சாவியை எடுத்துக் கொடுக்க, கூர்க்கா கதவைத்திறக்கவும் உள்ளே முதலாளியைத் தொடர்ந்து நுழைந்தாள்.

'யார் போன் செஞ்சாங்களான்னு கேக்கறேம்மா? எனக்கு ஒண்ணும் புரியல்லியே' என்றார் சிவநேசன். 'இந்தாங்க சார்' என்று பணப்பையை எடுத்து அவர் கையில் கொடுத்து நடந்த மொத்த விஷயங்களையும் சொன்னாள்.

'முருகா! இப்படியா அஜாக்கிரதையாக இருப்பாங்க?' என்று சொன்னவர் வத்தலகுண்டு பண்ணையாருக்குப் போன் செய்தார். சற்று நேரம் அவர்கள் பேசுவதை உன்னிப்பாக கவனித்துக் கேட்டவர் 'கொஞ்சம் இருங்கய்யா' என்றவர் மணிமேகலையிடம் 'அங்கே அவங்க பணத்தைக் காணோம்னு தவிச்சிகிட் டிருக்காங்கம்மா! ஆனா இங்கே வெச்ச நினைவே இல்லையாம். அவங்க கார் இங்கே திண்டுக்கல்லுக்குத்தான் வந்திருக்காம். உடனே அதிலே உன்னையும், என்னையும் வரச் சொல்றாங்கம்மா' என்றார்.

'ஐயா, நான் வரலீங்கய்யா' என்றாள் மணிமேகலை.

'நீ வரலேன்னா அவங்களே வரேங்கறாங்க. என்ன சொல்றே?'

'அது நல்லா இருக்காதுய்யா. ஆனா நான் வீட்லே சொல்லிவிட்டு வந்துடறேன்' என்றாள் மணிமேகலை. தாங்களே வருவதாக அவர்களுக்குத் தகவல் சொல்லிவிட்டு போனை வைத்தார். அதற்குள் மற்றவர்களும் வந்து விடவே அதற்குமேல் இவர்கள் எதுவும் பேசிக் கொள்ளவேயில்லை. கார் வந்ததும் கல்யாணசுந்தரத்தையும் அழைத்துக் கொண்டு இவர்கள் இருவரும் புறப்பட்டார்கள்.

போகும் வழியில் வீட்டில் சொல்லி விட்டு வந்துவிட்டாள். அவள் புறப்பட்டதுமே பாட்டி மருமகளிடம் இரைந்து கொண்டிருந்தாள் 'இவள் என்னவோ நல்ல வேலை பண்ணறதா நினைச்சிகிட்டு பெரிய இவ மாதிரி போயிருக்கா. வெச்சிருந்த ரூபா குறையுதுன்னு அவங்க போலீஸைக் கூப்பிடப் போறாங்க. என் பிள்ளை நேத்திக்கு வீட்ல இருந்திருந்தான்னா அந்தப் பணம் நமக்கு உபயோகப் பட்டிருக்கும்.'

நல்ல வேளை என்று நினைத்துக் கொண்டாள் விசாலாட்சி. அவருக்கு அம்மா சொல்வதுதான் வேதம். கிழவிக்கோ தான் பிடித்த முயலுக்கு மூணே கால் என்கிற குணம். விசாலத்தின் அக்கா கல்யாணமாகி ஒரு பெண்ணைப் பெற்று உடனே கண்ணை மூடிவிட விசாலத்தை இரண்டாம் தாரமாகக் கொடுத்தார்கள். இவளுக்கு மணிமேகலை பிறந்ததிலிருந்து கிழவிக்கு மருமகள் முதல் பேத்திக்கு மாற்றாந்தாயாய் வஞ்சனை செய்வாள் என்ற அழிக்க முடியாத எண்ணம் வந்துவிட்டது. விசாலம் அந்தப் பெண்ணிற்கு அல்லா, அசலா? நன்றாகத்தான் பார்த்துக் கொண்டாள். ஆனால் பயனில்லை.

வத்தலகுண்டு பண்ணையார் வீட்டு வாசலில் கார் போய் நின்றது. இவர்கள் வரவிற்காகவே காத்துக் கொண்டிருந்தவர்கள் போல் பண்ணையார், அவர் மனைவி,, மகள்கள் எல்லோருமாக வாசலுக்கு வந்து இவர்களை வரவேற்றார்கள். மணிமேக

லைக்கு கூச்சமாக இருந்தது. 'அம்மா, பேரனுக்கு உடம்பு தேவலையா?' என்று கேட்டாள்.

பாவம்! முதல் நாள் இவர்கள் வத்தலகுண்டிலிருந்து கிளம்பவே தாமத மாகியிருக்கிறது. திண்டுக்கல் வந்தால் யாரோ நகைக் கடை சங்கத்துக்காரர் காலமாகிவிட்டதால் நகைக் கடை எதுவும் திறந்திருக்கவில்லையாம். நகை வாங் குவதற்காகத்தான் அத்தனை பணம் கொண் டுவந்திருக்கிறார்கள். பண்ணையார் வரவில்லை. அவர் குடும்பத்தினர்தான் வந்திருந்தனர். இவர்கள் கடைக்கு அவர்கள் வரும்போது சின்னப் பேரனுக்கு நல்ல ஜுரம். பெரிய குழந்தைகளுக்கும் நல்ல பசி. அழுகை. அதுதான் அடுத்த வாரம் வருவதாகப் பேசிக்கொண்டு உடனே கிளம்பி விட்டார்கள்.

மணிமேகலை கேட்டதும் அந்த அம் மாள், 'ஜுரம் இன்னும் இருக்கும்மா. உங்க கடையிலிருந்து அங்கேயே ஒரு டாக்டரிடம் போய் மருந்து வாங்கி கிட்டுத்தாம்மா வந்தோம். பணப்பை இல்லாததையே படுக்கும்போதுதாம்மா பார்த்தோம். உங்க கடைக்கு வரதுக்கு முன்னே பாத்திரக்கடை, ரெடிமேட் கடை, ஓட்டல் எல்லாம் போய் விட்டு வந்தோம். அதான் எங்கேன்னு தேடறதுன்னு குழம்பிக்கிட்டிருந்தோம். பெரிய தொகையாச்சேம்மா, ஒருத்தருக்கும் ஒண்ணும் ஓடல்லே' என்றாள்

பையை பண்ணையாரிடம் கொடுத்தார் சிவநேசன்.

'நன்றிம்மா, ரொம்ப நன்றி!' என்று சொல்லியபடி பண்ணையாரும், அவர் மனைவியும் மூவரையும் பார்த்து கண்களில் நீர்மல்க கை கூப்பினர்.

'வாங்க!. நீங்க மூணு பேரும் இன்னிக்கு எங்க வீட்லே சாப்பிட்டுட்டுத்தான் போக ணும்.' என்றாள் பண்ணையார் மனைவி.

'இல்லைம்மா, பண்டிகை சமயம். கடை யில நாங்க யாரும் இல்லேன்னா ரொம்ப கஷ்டம்மா. நாங்க கிளம்பறோம்' என்றார் சிவநேசன்

'அதெல்லாம் இல்லே! எத்தனாம் பெரிய உதவி பண்ணியிருக்கீங்க. ராத்திரி எல்லாம் எங்க வீட்டு பொம்பளைங்க எப்படி அழுதிருக்காங்க. சாப்பிட்டுட்டுத்தான் போகணும். பத்தே நிமிஷம் தான் ஆகும்' என்றார் பண்ணையார். எல்லாருமாக இவர்களை உபசாரம் பண்ணி திணற அடித்துவிட்டார்கள். ஏகப்பட்ட பதார்த் தங்கள்.

சாப்பிட்டு எழுந்ததும் உபசாரமாக உட்கார வைத்துவிட்டு, பண்ணையாரின் மனைவி கையில் ஒரு பெரிய ஸ்டீல் தாம்பாளத்துடன் வந்தாள். 'எடுத்துக் கோம்மா' என்று மணி மேகலையிடம் கொடுத்தாள். அதில் ஒரு பட்டுப் புடவை, பிளவுஸ், இரண்டு அரை பவுன் காசுகள், ஒரு வெள்ளிக் குங்குமச் சிமிழுடன் ரூபாய் இருபதாயிரம் பணமும் இருந்தது.

மிரண்டு போனாள் மணிமேகலை. 'வேண்டாம்மா! எதுக்கும்மா இத்தனை? நான் என்னம்மா பெரிசா செஞ்சிட்டேன்?' என்றாள்.

'அம்மா அந்த பணப்பையில் எவ்வளவு இருந்ததுன்னு உனக்குத் தெரியுமா? 15 லட்சம்! கட்டுகளைத் தவிர லூசாகவே எவ்வளவு பணம் இருக்கு, பார்த்தியா? சபலம் இல்லாமே அப்படியே கொண்டு வந்து குடுத்திருக்கியே! எல்லோருக்கும் வருமாம்மா, இந்த குணம்? ராத்திரி நாங்க பட்ட கஷ்டத்தையெல்லாம் ஒரு நிமிஷத்தில் போக்கிட்டியே! ஏதோ எங்க சந்தோஷத்தையும் நன்றியையும் தெரிவிச்சிக்கறோம்மா. வேண்டாம்னு சொல்லாமே எடுத்துக்கம்மா, தாயி!' என் றார் பண்ணையார்.

மணிமேகலையின் அருகில் வந்து நின்ற சிவநேசன், சின்னக் குரலில், 'அம்மாடி! உங்கப்பா நேத்துதான் இருபதினாயிரம் ரூபா கடனாகக் கேட்டார், உங்க அக்கா

வுக்கு பொங்கல் சீர் செய்யணும்னு. எடுத்துக்கம்மா, தயங்காமே.! இவங்க ராசிக்கையால் வாங்கிகிட்டா உனக்கும் ஒரு நல்ல வாழ்க்கை அமையும் ’ என்றார்.

பிறகே அதை வாங்கி கொண்டாள் மணிமேகலை. சிவநேசனுக்கு ஒரு வேஷ்டி, ஷர்ட் பீஸை பண்ணையார் கொடுக்க ‘திருப்பதிக்கே லட்டா?’ என்று சிரித்தபடி வாங்கிக் கொண்டார் அவர். கல்யாணசுந்தரத்திற்கும் ரூபாய் இரண்டாயிரமும், வேஷ்டி, ஷர்ட் கொடுக்க அவரும் மகிழ்ச்சியுடன் வாங்கிக் கொண்டார்.

திரும்ப அவர்களை திண்டுக்கல்லிற்கு கொண்டுவிட கார் கிளம்பியது. ‘வீட்டில் விடுகிறேன். பணத்தையெல்லாம் பத்திரமாக வெச்சுட்டு, ரெஸ்ட் எடுத்துக்கிட்டு சாயந்திரமா வா, போதும்’ என்றார் சிவநேசன்.

இவர்கள் புறப்படும்போது சொன்னதையே சொல்லிச் சொல்லி மருமகளைப் படுத்திக் கொண்டிருந்தாள் பாட்டி. ஊரிலிருந்து நினைத்தபடி பணம் புரட்ட முடியாமல் கோபத்துடன் திரும்பியிருந்த கிழவியின் பிள்ளை ஒத்து ஊதிக் கொண்டிருந்தார்.

கையில் பரிசுப் பொருட்களோடு உள்ளே நுழைந்த மணிமேகலை அதை அப்படியே அம்மாவிடம் கொடுத்தாள். ‘பாட்டி! உன் கடவுள் கைவிடாமல் அக்காவுக்கு பொங்கலை இனிப்பாக்க வழி பண்ணிட்டார், பாரு! சந்தோஷம் தானே?’ என்றவள் கூடவே ‘நேத்திக்கு நாம அந்த பணத்திலே கை வெச்சிருந்தா மனசிலே இந்த நிம்மதியும் சந்தோஷமும் வந்திருக்குமா?’ என்றாள்.

பாட்டி பேத்தியின் கன்னங்களை வழித்து நெட்டி முறித்து திருஷ்டி கழித்தாள்.

**மைதிலி சம்பத்,**

செகந்திராபாத்- 15.

# சென்ரியு...

1..

குழந்தையின் கையில் தக்காளி
மண்ணில் புதைத்து விளையாட
அடடா... தக்காளித் தோட்டம் !

2..

ஆடிக் கொண்டிருக்கும் அரிக்கேன் விளக்கொளி
வெற்றுக் கையால் மகன் வரைகிறான்
சிலந்தி வலை!

3..

சிறுமியின் நனைந்த கிழிந்த ஆடைகள்
நடைபாதையில் நழுவி விழும்
சில ஈர நிலாக்கள் !



**- விஜி சிவா,**
**நார்வே.**




தமிழ்நெஞ்சம் வழங்கும் புத்தாண்டு பரிசு மழை இணைப்பு நூலை பெற்றுக்கொள்ள மேலேவுள்ள படத்தில் சொடுக்கவும்

# தன்முனைக் கவிதைகள்



**கவிக்கோ. இரா.சீ.பாலகுமார். M.A**

தாய் நாட்டை பிரிந்தேன்
பணத்திற்காக அயலகம் சென்றேன்,
தாய் தந்தையைப் பிரிந்து
தனிமையில் தினம் வாடுகிறேன்.

* * * * * * * * * * * * * * *

அவள் முகத்தில் மஞ்சள்
வெள்ளிக்கிழமை விரதம்
கோவில் தரிசனம் உண்டு
சுமங்கலி வரம் கேட்கிறாள்

* * * * * * * * * * * * * * *

புகையீரதம் புறப்பட்டுப் போனது
வாடகைத்தாய் பயணம் செய்கிறாள்
மழலை கை அசைத்து அனுப்புகிறது
பாசம் நேசம் பிணைப்பு

* * * * * * * * * * * * * * *

மீன் சந்தையில்
விற்பனை மந்தமானது
பத்திரப்படுத்தி விற்றால்
கருவாடு விற்பனை அமோகம்

* * * * * * * * * * * * * * *

உழவனின் தொழில் வயலில்
கௌபீனம் இடுப்பில் மட்டும்
சுடும் வெயிலில் வியர்வை
தேகத்தில் இருந்து கொட்டுகிறது

* * * * * * * * * * * * * * *

பூக்களின் அச்சுப்புடவை
பட்டாம்பூச்சி தொடர்கிறது
வாசம் இல்லாததால் திரும்பின
கிடைத்தது பெரும் ஏமாற்றம்

* * * * * * * * * * * * * * *

செய்கை மொழி பேசினாள்
உற்றுக் கவனித்த நான்
உதட்டசைவில் புரிந்து கொண்டேன்
ஊமை என்பதின் அடையாளம்

* * * * * * * * * * * * * * *

சிறு மீன்கள் நீரினுள்
பெரும் வெள்ளம் பாதிப்பில்லை
வாழ்வு காலம் நீளுகிறது
இணக்கம் மனிதருக்கு அவசியம்

* * * * * * * * * * * * * * *

குடிநீர் கேட்டுப் போராட்டம்
சர்வ கட்சி கூட்டம்
நெகிழி அடைப்பான் நீர்
அனைவருக்கும் விநியோகம் செய்தனர்

* * * * * * * * * * * * * * *

கால்களில் மிதியானது புற்கள்
எவ்வித பாதிப்பும் இல்லை
திரும்பவும் வளர துவங்குகிறது
இயற்கை தரும் விந்தை

* * * * * * * * * * * * * * *

கொத்தி தின்ன
புறாக்களை காணும்
தரையில் பரவியபடி
நவதானியங்கள்

* * * * * * * * * * * * * * *

இப்பிறவியில்
காதலியின் முத்தம்
கிடைக்காத இளைஞர்களில்
நானும் ஒருவன்

* * * * * * * * * * * * * * *

காதல் செய்யவே
ஒரு கண்ணியும் காணோம்
தேடிக் கொண்டிருக்கிறேன்
முப்பொழுது வேலையிலும்

* * * * * * * * * * * * * * *

சாக்கடை நீரில்
பிறந்து சுற்றித் திரிகிறேன்
மனித ரத்தம் கிடைக்கவில்லை
கொசுக்களின் புலம்பல்

* * * * * * * * * * * * * * *

பால் பாத்திரம்
உறையவிடும் தயிர்
பாலும் தயிர் ஆகின்றன
உடலுக்கு குளிர்ச்சி&

* * * * * * * * * * * * * * *

# தமிழர் உயிரே!

**பிறப்பின் வழியில் பிறந்தோம் நாமே!**
**பிறந்தப் பின்போ பிள்ளைத் தானே!**

**தமிழில் கற்கத் தருக்கும் ஏனோ?**
**தமிழோ மொழியின் தாய்மைத் தானே!**

**உலகின் மொழியில் உயிரே தமிழே**
**நலமே நல்கும் நன்னெறித் தமிழே!**

**உண்மை உணர்ந்தால் உயர்வாய் இனிதே!**
**பண்பை ஊட்டும் பாங்காய்த் தமிழே!**

**தமிழைப் பொழுதும் தவிர்த்தால் கொடிதே!**
**தமிழர் நெஞ்சினில் தமிழே உயிரே!**



**வாழ்வியல் கவி சா.நாகூர் பிச்சை**
**துபாய்**

# நினைவிருக்கிறது!

வீதியெங்கும் விளையாடி!
நண்பிகளோடு அலைமோதி!
மகிழ்ச்சி வானில் சிறகடித்து!
பள்ளி வாழ்வை அனுபவித்த!
அந்த இனிய நாட்களெல்லாம்..!

துன்பமென்று ஏதுமில்லை!
பாரமென்று ஒன்றுமில்லை!
கண்ணீர் என்றால் தெரியாது!
கஷ்டம் என்றால் புரியாது!
வாழ்க்கை என்ற நதியினிலே!
ஒரு நொடியும் நில்லாமல்!
ஓடம்போல ஓடியிருந்தோம்..!

நண்பியின் தாய் நமக்கும் தாய்!
நமது தாய் நண்பிக்கும் தாய்!
ஒற்றுமையில் பற்றி நின்ற!
இனிப்பான நாட்கள் அவை..!

பள்ளிக்கூடம் அலுப்புத்தான்!
பாடங்களும் அலுப்புத்தான்!
கற்பிக்கும் ஆசான்களும்!
அவ்வப்போது அலுப்புத்தான்!

சடுதியாக அடி விழும்!
எப்போதும் திட்டு விழும்!
என்றாலும் ஒரு நாளும்!
ஆசான்களை வெறுத்ததில்லை!

பள்ளிக்கூட நிமிடங்கள்!
நெருப்பாகத்தகித்தாலும்!
பள்ளிக்கூடம் செல்லாமல்!
ஒருநாளும் இருந்ததில்லை!





எதிர்காலம் பற்றியெல்லாம்!
ஒருபோதும் நினைத்ததில்லை!
நிகழ்காலம் என்ற ஒன்றே!
வாழ்வோடு நிறைந்திருக்க..!!
கூடிக்களித்தோமே..!

பொற்காலம் என்றால் அது!
அக்காலம் மட்டும்தான்.!
காலை எழுந்தால் பள்ளிக்கூடம்!
மாலை வந்தால் மைதானம்!
இரவு வீட்டில் பள்ளிப்பாடம்!
மீண்டும் காலை பள்ளிக்கூடம்!

பணமெல்லாம் பெரிதில்லை!
பாசம் மட்டும் போதுமென்று!
எல்லோரும் அரவணைத்த!
இனிப்பான காலங்கள்!

இனி மீண்டும் வாராதா?!
உண்மை இன்பம் தாராதா?!
காலத்தால் அழியாத!
நாட்கள் அதை நினைக்கையிலே!
கண்களோடு மனசும் சேர்ந்து!
கண்ணீர் மழை பொழிகிறதே..!

அவசர வாழ்க்கை!
விரையும் உறவுகள்!
நில்லாத சந்தோசம்!
தினந்தோறும் போராட்டம்!
இது ஏதும் இல்லாமல்!
பழைய நாளில் நாம் கண்ட!
அதே அப்பா இன்றும் வேண்டும்!
அதே அம்மா மீண்டும் வேண்டும்!
அதே பள்ளி வாழ்க்கை இங்கே!
நில்லாமல் தொடர வேண்டும்..!

அதே நண்பர் வட்டம் இன்றும்!
அதே போன்றே இருக்க வேண்டும்!
ஓடித்திரிந்த வீதிகளில்!
மீண்டும் கால்கள் ஓட வேண்டும்!
பாடித்திரிந்த நாட்களைப்போல்!
சந்தோசம் நீள வேண்டும்..!

இவ்வாசை அத்தனையும்!
ஆதங்கம் என்றாலும்!
இவ்வாசை நிறைவு கண்டால்!
அது போதும் எப்போதும்..!
வலியில்லா வாழ்க்கை அது!
முடிவில்லா வேட்கை அது!
பொற்காலம் என்றால் அது!
அக்காலம் மட்டும்தான்.

M.Miska Muna
Thihariya



# விதியின் பிடியில் இவள்!



கிடைத்துவிடும் என்றதெல்லாம்
தொலைந்தே போனது
நெருங்கி வந்ததெல்லாம்
தொலைதூரமானது

முடிந்துவிடும் என்றதெல்லாம்
முடிவிலியாய் தொடர்ந்தது
பிடித்த ஆரம்பமெல்லாம்
வெறுப்பில் முடிவடைந்தது

விரும்பிய விடையமெல்லாம்
மனதை உடைத்தே வெளியேறியது
ஆர்வமான தேடலெல்லாம்
ஆர்வமற்று முடங்கிப் போனது

அலைபாய்ந்த ஆசையெல்லாம்
நிராசையாய் நிர்கதியானது
தொடர்ந்து செல்லும் பாதைகளை போல
விதியின் பிடியில் விடுதலை தேடுகிறாள்

**அகீலா ஜவுபர்**
ஏத்தாளை புத்தளம், இலங்கை

# இயற்கை

காடுகள் நிறைந்த
அழகான உலகம்
கனவில் மட்டுமே
இன்று சாத்தியமாய்

மரங்கள் எல்லாம்
மரணித்து போய்
வறுமையின் பிடியில்
காடுகள் வாழாவெட்டியாய்

பூமித்தாயின் முகம்
கட்டிட கழிவுகளின்
நிரந்தரமான குப்பை
தொட்டிகளாய் வேதனை

சாலையோர மரங்கள்
அநாதை பிணங்களாய்
நிழல் தேடும்
வியர்வை துளிகள்

ஆரோக்கியம் மறந்து
குளிர்பான குளியலில்
இயற்கையை காப்போம்
என்ற குரல்கள்

காகித கவிதை
வரிகளில் ஊமையாய்
இயற்கை அன்னையின்
கோபத்தின் கொடூரம்

பலமுறை கண்ட
பின்பும் மனிதா

நீ மாறவில்லை
மாறவும் விரும்பவில்லை

**ரா.பிரேம் சுரேஷ்**
கோத்தகிரி

மதுமிதா அமெரிக்காவிலிருந்து வந்திருந்தாள். சென்னைக்கு வந்தவள் மாமா வீட்டுக்கு திருச்சி அருகிலுள்ள பால்குளம் கிராமத்திற்கு வந்திருந்தாள்.

அவள், அந்த வீட்டுக்கு வந்த பிறகுதான் காஞ்சனாவிற்கு எரிச்சலும், கோபமும் மிகுந்தது. 'எப்போதும் சாந்தமும், சந்தோஷமும் நிறைந்திருக்கின்ற பெண் காஞ்சனா. ஏன் இப்படி மாறினாள்' என்று குடும்பத்தினரிடையே ஒரு சிறிய சல சலப்புக்கூட ஏற்பட்டது.

காஞ்சனாவின் வீட்டில் தங்கிக் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்த அவளுடைய அத்தைப் பையன் கணேசன், மதுமிதா பால்குளத்திற்கு வந்ததிலிருந்து கல்லூரியைக் கூட மறந்து அமெரிக்காவிலிருந்து வந்திருந்த மதுமிதாவிற்கு கல்வெட்டுகள் நிறைந்த சின்னச் சின்ன கிராமங்கள், கோயில்கள் என்று அவள் விரும்பிய சரித்திர ஆராய்ச்சிக்காக அவளுக்கு திருச்சியையும் அதைச் சுற்றியுள்ள இடங்களையும் சுற்றிக்காட்ட ஆரம்பித்தான். தினம் தினம் ஊர் சுற்றுவதோடு சாயங்காலம் வீடு திரும்பியதும் காஞ்சனா 'டிபன் கொண்டு வா, சூப்பரா ஒரு பில்டர் காபி கொடு. அமெரிக்காவில் எங்களுக்கு பில்டர் காபியே கிடைக்கது.' என்று மதுமிதா கேட்கும்போது கோபத்தில் குமுறி எழுவாள் காஞ்சனா.

கணேசன் கல்லூரி முடித்ததும் நல்ல வேலையில் சேர்த்து விடவேண்டிய பொறுப்பு காஞ்சனாவின் தந்தை குமரேசப் பெருமாளுடையது. அதற்குப் பதிலாக காஞ்சனாவை கனேசனுக்குத் திருமணம் செய்து வைக்க வேண்டும் என பெரியவர்களால் ஏற்கனவே தீர்மானிக்கப் பட்ட விஷயம்.

'மதுமிதா எப்போது ஊருக்குப் போவாள்' என்று கோபித்துக் கொண்டே இருந்த காஞ்சனா காபி எடுத்துக் கொண்டு மதுமிதாவின் அறைக்குள் வர.. அங்கே சப்தம் கேட்டு ஒதுங்கி நின்றாள்.

# அமெரிக்கப் பறவை



'ஏய் கணேஷ் என்னைக் கல்யாணம் பண்ணிக் கொள்கிறீர்களா?'

'பண்ணிக்கொண்டால் போச்சு'

'ஏய் நான் சீரியஸாக கேட்கிறேன்.'

'உன் வயதென்ன மது'

'பதினெட்டு'

'இது கல்யாணம் பண்ணுகிற வயசா?'

'நான் மேஜர் தெரியுமா?'

'என்ன சொல்ல வர்றே'

'என்னைக் கல்யாணம் பண்ணிக் கொள்கிறாயா?'

'சரி' என்று கனேசன் முடிப்பதற்குள் அதிர்ச்சியில் காஞ்சனாவின் கையிலிருந்த காபி கப் விழுந்து சிதறியது.

'ஏய். காஞ்சனா என்னாச்சு? ஓடி வந்தாள் மதுமிதா.' 'உன் தலையாச்சு' என்று

கத்திக் கொண்டு சமையலறைக்குள் ஓடிப்போய் அமர்ந்து அழ ஆரம்பித்தாள்.

'வாட் ஹாப்பண்ட் யா கணேஷ்?'

மதுமிதா கணேசன் பக்கம் திரும்பினாள்.

'ஒன்றுமில்லை, நீ எப்போது அமெரிக்கா போகிறாய்?'

'இன்னும் ஒரு மாதமாகும்'

'சென்னைக்கு?'

'அடுத்தப் புதன் கிழமை கிளம்புகிறேன். அதற்கு முன்னால வால்புத்தூரில் கொஞ்சம் கல் வெட்டுகள் பார்த்ததாக பென்னட் நேற்று அமெரிக்காவிலிருந்து போன் பண்ணிச் சொன்னான். நாளைக்குப் போகலாமென்றிருக்கிறேன். நீ வருவேயில்ல.'

'எனக்கு வேற என்ன வேலை?' என்றான் கணேசன்.

'குட் பாய்' என்று அவன் கன்னத்தில் முத்தமிட்டு விட்டுச் சென்றாள் மதுமிதா.

மறுநாள் காலை இருவரும் புறப்பட்டுக் கொண்டிருக்கும் போது மதுமிதாவிற்கு போனில் அழைப்பு வர வேகமாக ஓடினாள்.

கிடைத்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்ள நினைத்த காஞ்சனா, வேகமாக வந்து 'உங்கள் மனதில் என்னதான் நினைத்திருக்கிறீர்கள்?' என்றாள் கணேசனின் அருகில் வந்து.

'நான் ஒன்றும் நினைக்கவில்லை'

'ஒரு சின்னப்பொண்ணு அமெரிக்கா அப்பிடீன்னு சொல்லிக் கொண்டு ஜீன்ஸ்ஜும், ஆம்பிள்ளைச் சட்டையும் போட்டுக் கொண்டு வந்தால் வாயைத் தொங்கபோட்டுக் கொண்டு திரிவீரள் அப்படித்தானே'

'காஞ்சனா என்ன சொல்கிறாய் என்று புரிந்துதானே பேசுகிறாய்?'

'ஆமா எங்கே தெரியுதுண்ணு அலையிற ஆட்களை அடக்க முடியலைண்ணா, எப்படி நான் பேசுகிறது.? என்னவோ மதுமிதாவைக் கல்யாணம் பண்ணிக் கொள்கிறேன் என்று கூட சொன்னீங்களே. அவள் உங்களுக்கு முத்தம் கூட கொடுத்து விட்டுப் போகிறாள்.'

'ஆமாம் அவளைக் கல்யாணம் பண்ணிக் கொள்ளத்தான் போகிறேன். உனக்கு என்ன?'

'என்னது ..?' ன்றவாறு அதிர்ச்சியில் தரையில் அமர்ந்து தலையில் கையை வைத்து அழ ஆரம்பித்தாள் காஞ்சனா.

'சீ! அசடு மாதிரி அழுதுகிட்டு எழிந்திரு' என்று அவள் கையைப் பிடித்துத் தூக்கினான்.

'என்னைத் தொடாதீர்கள். நீங்கள் அதற்குக் கூட லாயக்குக் கிடயாது.'

'சும்மா எதையாவது மனதில வைத்துக் கொண்டு உளறாதே. அவள் அமெரிக்காரிடார்ன். அடுத்த புதன் கிழமை ஊருக்குப் போகிறாள். இளம் வயது. அவள் 'கல்யாணம் பண்ணிக்கொள்ளச் சொல்லி 'சரி' என்றவுடன் எல்லாம் ஆச்சா?'

'அப்புறம் என்ன?' கத்தினாள் காஞ்சனா.

'பொறுமையாக இரு காஞ்சனா. அவள் கல்வெட்டு ஆராய்ச்சிக்கு வந்திருப்பவள். அவள் மனதை ஏன் கஷ்டபடுத்த வேண்டும். என்று நினைத்துதான் 'சரி' என்றேன். மற்றபடி என் காஞ்சனாவிற்கு யாராவது ஈடாக முடியுமா?' என்று சிரித்தான் கணேசன்.

'அப்படின்னா உங்களை அவள் முத்தமிட்டது?'

'இது அமெரிக்காவிம் சகஜம். நான் திரும்பி அதே கிக்கில் அவளை முத்தமிடவில்லையே'..

'ஸாரி கணேசன். உங்களைத் தப்பாக...' என்று காஞ்சனா கூறி முடிப்பதற்குள் புயலாக வந்த மதுமிதா 'கணேசன் போகலாமா?'' என்று அவன் கையைப் பிடித்து இழுக்க, மனது லேசாகிப் போன காஞ்சனா இருவருக்கும் 'டாடா' காட்டினாள்.

**தமிழ் முகில் - இரஜகை நிலவன்**

மும்பாய்

# ஒண்ணுமில்லை



ஒண்ணுமில்லை.
அடிக்கடி சொல்லப்படுகிறது
கேட்கப்பட்டும் விடுகின்றது
ஆனாலும் அதற்குள்
என்ன இருக்கிறது??

பேச ஆரம்பித்து விட்டு பேசாமலே
ஒண்ணுமில்லை என்கிறார்கள்..

ஏதோ ஒரு சிந்தையில்
இருந்து கொண்டே
ஒண்ணுமில்லை என்கிறார்கள்..

அந்த அமைதிற்கு
காரணம் கேட்டாலும்
ஒண்ணுமில்லை என்கிறார்கள்..

ஏன் இந்த தனிமை
என்றால் அதற்கும்
ஒண்ணுமில்லை என்கிறார்கள்..

சற்று முறைத்து பார்க்கிறார்கள்
அதுவும் ஏனென்று கேட்டால்
ஒண்ணுமில்லை என்கிறார்கள்..
அந்த கோப பார்வை அதற்கும்
ஒண்ணுமில்லை என்கிறார்கள்..

ஒண்ணுமில்லை ஒண்ணுமில்லை
அப்போது என்னதான் இருக்கிறது.?
அதற்கும் ஒண்ணுமே இல்லை
என்கிறார்கள்..

‘ஒண்ணுமில்லை‘ வார்த்தையை
கேட்டு சலிப்படைந்து விட்டாலும்
சொல்லப்படுவர்களுக்கு
‘ஒண்ணுமில்லை‘ என்ற வார்த்தை
வலி நிவாரணமாகி விடுகிறதே உல்

**ஷஸ்னா ஹசீன்**
கல்பிட்டி - இலங்கை



# 22

# உளி பேசும் மொழி

நெல்லை க. சோமசுந்தரி

கவிஞர். எழுத்தாளர் தொல்லியல் ஆர்வலர்
சென்னை, தமிழ்நாடு

இப்பூமிப் பந்தில் வாழும் அனைத்து உயிரினங்களுக்கும் அடிப்படை ஆதார மாக விளங்குவது 'காற்று'. ஐம்பூதங்களில் ஒன்றாகவிளங்கும்காற்றானது, இவ்வுலகில் வாழும் உயிரினங்களின் உயிர்ப்பை உறுதி செய்கிறது. ஒவ்வொரு ஜீவராசிகளுக்கும் அதனதன் வாழ்க்கைக்குப் பஞ்சபூதங்கள் அனைத்தும் தேவையாக இருப்பினும், அவற்றினுள் சிறப்பு வாய்ந்தது காற்று. ஏனெனில் ஒவ்வொரு உயிரின் உயிர்ப்பு தன்மை இருக்கும் வரையே, அவ்வுயிர்க்கு மற்ற பூதங்கள் அனைத்தும் தேவையாக இருக்கும். அங்ஙனமே, காற்றின் தனித் தன்மையை நம்மால் அறிந்து கொள்ள முடியும்.

பஞ்சபூதங்கள் ஒவ்வொன்றும் ஒன்றோடு ஒன்று தொடர்புடையது. காற்றானது தனித்துவமாக இருப்பது மட்டுமின்றி மற்ற நான்கு பூதங்களிலும் நிறைந்து காணப்படுகிறது. காற்றின் தன்மை இருப்பதனாலேயே மற்ற நான்கு பூதங்களும் சிறப்புத்தன்மை பெறுகின்றன.

அவ்வகையில் நிலத்தினை எடுத்துக் கொண்டால் சரியான காற்றோட்டம் இருப்பதனாலேயே நிலத்தின் மேற்பரப்பு மட்டுமின்றி உட்பரப்பிலும் உயிரினங்கள் வாழ்வதற்கு ஏற்றவகையில் அந்நிலமானது விளங்குகிறது. அடுத்ததாக நீரினை எடுத்துக் கொண்டால், அவை காற்றினை தன்னுள் உள்ளடக்கியுள்ளது. மேலும் நீரானது அதன் கொதிநிலை வெப்பத்தில் ஆவியாகிக் காற்றாக வெளிப்படுகிறது. நெருப்பானது காற்றின் துணை கொண்டு தனது நிலைத் தன்மையை உறுதிப்படுத்துகிறது. காற்றில்லா வெற்றிடத்தில் தீயினால் நிலை பெற முடியாது. மேலும் வான்வெளி எங்கும் காற்றானது வியாபித்திருக்கிறது. அதுவே புவியின் மேற்பரப்பில் வளி மண்டலமாகவும் அதன் துணை கொண்டே இப்பூவுலகில் அனைத்து உயிரினங்களும் வாழ்வதற்கு ஏற்ற சூழல் நிலவுகிறது என்பது நம் அனைவராலும் ஏற்றுக்கொள்ளப் பட்ட ஒன்றாகும்.

மானிட சமூகம் மட்டுமின்றி



தாவரங்கள், விலங்குகள், நீர் மற்றும் நிலத்தினில் வாழும் அனைத்து ஜீவ ராசிகளும் காற்றினையே சுவாசிக் கின்றன. ஆனால் ஒவ்வொரு புவி வாழ் உயிரினங்களின் சுவாச முறை யானது வேறுபட்டாலும், சுவாசத்தின் ஆதாரமானது அனைத்து உயிரினங் களுக்கும் ஒன்றாகும். அதுவே 'காற்று' எனும் போது அதன் சிறப்பு அம்சமானது இப்புவி மட்டுமல்லாது, அண்ட சராசரங்கள் அனைத்திலும் சிறப்பானது காற்றென்றால் மிகையாகாது.

காற்றின் சக்தியானது அதன் மென்மை யான நிலையிலும், வலிமையான நிலையிலும் வெளிப்படுகிறது. மென்மை யான நிலையில் இப்புவியில் வாழும் அனைத்து உயிரினங்களுக்கும் வாழ்வ தற்குத் துணையாக இருக்கிறது.



ஆனால் அதன் வலிமையான நிலையில் புயல் காற்றாக வீசும் போது அதனை எதிர்கொள்ளும் அனைத்தையும் அழிவின் விளிம்பு நிலைக்கு இட்டுச் செல்கிறது. அவ்வகையில் ஜீவராசிகள் சுவாசிக்கும் போது, மென்மையான நிலையில் உடலுக்கு உள்ளே சென்று உயிரினங்களுக்குச் சக்தியினை அளிப்பதற்கான ஆதாரமாக விளங்குகிறது. மேலும் காற்றானது மென்மையான நிலையில் இசையின் வடிவத்திலும், ஸ்வரங்களின் அடி நாதத் திற்கான ஆதாரமாகவும் விளங்குகிறது. இசையின் பரிணாமமானது காற்றினை முதன்மையாகக் கொண்டே உருவாகி இருக்க வேண்டும் என்பதனை நம்மால் புரிந்து கொள்ள இயலும்.

பஞ்ச பூதங்களில் நெருப்பினை தவிர்த்து, மற்ற நான்கு பூதங்களும் ஒன்றோடு ஒன்று இணைந்து அதன் உருவாக்கமானது நிகழ்கிறது என்பதனை நாம் எண்ணும்போது நமக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்துகிறதல்லவா? நிலப்பரப்பின் மேல் உள்ள நீரானது ஆவியாகி காற்றாக உருவெடுத்து, ஆகாயத்தில் உள்ள வளிமண்டலத்தில் கலந்து பின் மழையாய் பொழிந்து, மீண்டும் நிலத்தினை அடைந்து நீராகிறது. இச்சுழற்சியானது காலம் காலமாக இப்புவித் தோற்றத்தின் ஆதியிலிருந்து நிகழ்ந்து கொண்டிருக்கிறது. அவ்வழியே, பஞ்சபூதங்கள் அனைத்தும் இயற்கையோடு இணைந்து ஏதோ ஒரு நேர்க்கோட்டில் பயணிப்பதை நம்மால் உணர முடியும்.

காற்றானது உயிரினங்களுக்குச் சக்தி யினை வழங்குவது மட்டுமின்றி, அவ்வுயிரி னங்களின் உடல் ஆரோக்கியத்திற்கும் அடிப்படை ஆதாரமாக விளங்குகிறது. அவ்வழியே மனித ஜீவராசிகள் காற்றினை நன்றாக ஆழ்ந்து சுவாசிக்கும் போது



அதிக சக்தியினை பெறுகிறார்கள். அவையே இன்றும் மூச்சுப் பயிற்சி, பிராணாயாமம், யோகா என்ற பல வழிமுறைகளில் மானிடர்களால் பின் பற்றப்படுகிறது. இவை அனைத்தும் அவர்களின் உடல் சக்தியினை அதிகரிப்பது மட்டுமின்றி மன வலிமையினையும் உறுதியாக்குகிறது.

இதன் மூலம் காற்றானது சக்தியின் அம்சமாகத் திகழ்கிறது. மேலும் மற்ற நான்கு பூதங்கள் போல் அல்லாமல் காற்றினை நம் கண்ணால் காண்பது என்பது இயலாது. ஆனால், உணர முடியும் அவ்வகையில் நம் அகக்கண்களால் காண முடியாத மற்றும் உணர மட்டுமே கூடிய இறைவனை, காற்றோடு உருவகித்து ஒரு ஆலயம் எழுப்பப்பட்டுள்ளது. அவ்வாலயத்தின்வழியே காற்றின் சிறப்பானது உலகிற்குப் பறை சாற்றப்படுகிறது. அத்தகைய பேறு பெற்ற ஆலயத்தின் சிறப்பினை அறிந்து கொள்ள உளியின் மொழியோடு தொடர்ந்து பயணியுங்கள்.



---

**உளியின் மொழி மனதின் ஆழத்தில் ஊடுருவி திருத்தலங்களில் ஆத்மரீதியாக பயணிக்க வைத்த சிறப்பு தங்களின் எழுத்திற்கு உரியதாக்கு கிறது. அனைவருக்கும் புரியும் விதத்தில் எளிமையான நடையில் எழுதிய தங்களுக்கு மனம் நிறைந்த பாராட்டுகள்.**

கவிஞர்.அ. அஷ்ரஃப் பேகம்

எழுத்தும் கருத்தும்

# நியாயமென்ன நியாயம்...?

ஏடி வரதராசன் தமிழ்நெஞ்சம் அமின்

அப்பாவாக ஏடி - மகனாக அமின்

ஏடி : -

.

கல்லூரிப் பட்டமும்
காசுக்கோர் வேலையும்
எல்லாமே கையில்
இருக்கிறதே - நல்லவொரு
பொண்ணொன்னு பாத்துப்
புடிச்சிருந்தா கல்யாணம்
பண்ணலாமா என்னே
பகர்...?

.

அமின் : -.

.

இப்பயெதும் வேண்டாம்பா
இன்னும்நாள் ஆகட்டும்
அப்புறம்பே சுங்க
அதப்பத்தி - இப்பவே
என்னே அவசரமாம்
ஏன்தான் துடிதுடிப்பாம்
ஒண்ணுமே வேணாம்
ஒதுங்கு.

.

ஏடி : --

.

ஏன்டாநீ வேணான்ற ?
ஏன்குரலை ஏத்துற ?
சீண்டாத கோவத்தச்
சீண்டுற ? - ஆண்டெல்லாம்
பொண்டாட்டி கட்டாம
போக்கத்து வாழுவியா ?
என்னடா அர்த்தம்
இது?

.

அமின் : -

.

என்னோட போக்குல
என்ன விடுங்கப்பா
உண்மையைதான் சொல்றேன்
ஒதுங்கிடுங்க - இன்னும்நாள்
காசெல்லாஞ் சேத்துவச்சிக்
கார்வண்டி வாங்கியபின்
ஆசையெல்லாஞ் சொல்லுறேன்
ஆம்.

.

ஏடி : -

.

கார்வண்டி வேணும்ன்னா
காசிருக்கு நான்வாங்கிச்
சீர்போலத் தாரேன்டா
சீர்க்கிரமா - ஓர்நல்லப்
பொண்ணாநான் பாக்குறேன்
போய்நல்ல நாள்பாத்துக்
கண்ணாலம் பண்ணுடா
கண்டு.

.

அமின் : -

.

பொண்ணெல்லாம் பாத்தாலும்
பொய்யாலோ் கல்யாணம்
பண்ணவே மாட்டேன்நான்
பாருங்க - என்னோட
எண்ணமெல்லாம் என்னென்று
எதுவும் தெரியாமக்
கண்முன்நிற் காமல்
கட.

.

ஏடி : -

.

என்னோட முன்னே
    எதிர்த்துநின்னு நீயிப்போ
என்னடா பேசுற
    இப்படில்லாம் - உன்னோட
ஆசதான் என்ன
    அதையாச்சும் எங்கிட்டப்
பேசுடா பேசுடா
    பேசு.

.

அமின் : -

.

நோண்டிநோண்டிக் கேள்விகேட்டு
    நோகடிக்க வேண்டாம்பா
நான்பேசும் எல்லாமும்
    ஞாயம்தான் - காண்பதை
உன்கோணம் தன்னில்
    உணராதே உன்பிள்ளை
என்கோணம் தன்னில்பார்
    இங்கு.

.

ஏடி : -

.

எனக்குநீ பாடம்
    எடுக்காதே இங்கே
உனக்கென்ன வேணுன்னு
    ஒழுங்கா - சுணங்காம
தெள்ளத் தெளிவா
    தெரியும் படிஇங்கே
உள்ளத்தச் சொன்னால்
    உயர்வு.

.

அமின் : -

.

உள்ளத்த தான்சொன்னேன்
    உண்மையை தான்சொன்னேன்
எள்ளளவும் நெஞ்சில
    இட்டமில்லை - கல்யாணம்
பண்ணமாட்டேன் இப்போ
    பலதடவைச் சொன்னாலும்
எண்ணமாட்டேன் ஆமாம்
    இனி.

.

ஏடி : -

.

எங்கேயோ போய்நீ
    எவளையோ காதலிச்சி
இங்கவந்துப் பேசிநீ
    ஏய்கிறியா? - எங்கிட்டச்
சொல்லுடா யாரவள் ?
    சொந்தமா பந்தமா ?
சொல்லுடா சொல்லுடா
    சொல்...?

.

அமின் : -

.

ஆமாம்நான் காதலிச்சேன்
    அந்தவொரு பொண்ணுக்கு
பூமால தோள்மேல
    போட்டிடுவேன் - ஏமாத்தி
இன்னொரு பொண்ணநான்
    எண்ணவே மாட்டேன்பா
இன்றைக்கும் என்றைக்கும்
    யான்.

.

ஏடி : -

.

அந்தப்பெண் யாராம்
    அவங்கயென்ன ஆளுகளாம்
எந்தவூர் சொல்லுடா
    இப்பவே - அந்த
இடத்துக்குப் போயிநான்
    இப்பவே பேசி
முடிச்சித் தொலைக்குறேன்
    முன்.

.

அமின் : -

.

உன்னோட நண்பர்
    உலகநாதன் தான்அந்தப்
பொண்ணோட அப்பா
    புரிஞ்சிடுச்சா? - என்னோட
உள்ளத்தின் ஆசையை
    உங்களிடம் சொல்லிட்டேன்
எள்ளளவும் மாறமாட்டேன்
    யான்.

.

ஏடி : -

.

சீச்சீ அவம்பொண்ணா
சேக்கமாட்டேன் என்னோட
மூச்சேநின் னாலும்
முடியாதே - ஆச்சாரம்
எல்லாமே போகுமே
என்னோட சொந்தபந்தம்
எல்லாம் மதிக்காதே
இங்கு...?

.

அமின் : -

.

என்னை நினைக்காமல்
ஏக்கம் புரியாமல்
உன்மதிப்பைப் பற்றியே
ஓதுகிறாய் - என்னுடன்
தாயாய் மனைவியாய்த்
தாரணியில் வாழ்வதினி
நீயா அவளா?சொல்
நீ...?

.

ஏடி : -

.

என்ன பிடிக்குமோ
என்ன பிடிக்காதோ
எண்ணிவாங்கித் தந்திருக்கேன்
இன்றுவரை - உன்னுடைய
கண்ணாலம் எந்தன்
கடமையடா ஆதலால்
என்இட்டம் போல்நீ
இரு.

.

அமின் : -

.

வழக்கமாய் நீயெனக்கு
வாங்கும் பொருட்கள்
அழவே தெரியா(து)
அதற்கு - பழகவரும்
பெண்ணுக்கோ நெஞ்சுண்டே
பீறிட கண்ணுண்டே
என்ப(து) அறிவாய்
இனி...

.

ஏடி : -

.

இஃதறிந்த போதும்
எனதுமனம் கேக்கலையே
அஃஹஃஹஃ அஃஹஃஹஃ
அஃஹஃஹஃ - எஃகைபோல்
உன்னைநான் பெத்ததுக்கு
ஒண்ணுமட்டும் சொல்லுடா
என்னடா செய்யணும்
யான்...?

.

அமின் : -

.

உங்களோட ஆசைய
உள்ளேயே வச்சபடி
எங்களோட ஆசைய
ஏற்றபடி - இங்கிருந்து
கண்ணு கலங்காம
காதலுக்கோர் பாதையிட்டு
பொண்ணநீ கூட்டிவா
போ.

ஏடி : --

.

மகனான போதும்நான்
மன்னிப்பைக் கோரி
அகத்துக்கண் நீரால்
அழதுன் - சுகத்துக்காய்
என்மதிப்பை நீக்கி
இருமனமும் சேர்த்துவைத்து
இன்புற்றேன் அப்பா
இனி.




.

## 2025 ஆம் ஆண்டின்
## இனிய தைப்பொங்கல்

பொங்கலோ பொங்கல் என்று
பொங்கிடும் நன்னாள் இன்று
தங்கமாய் மின்னும் அந்த
சூரிய வழிபா டுண்டு
மங்கலம் நிறைய வேண்டி
மஞ்சளும் சூழ்ந்து கொள்ளும் !
சங்கமம் ஆக யாரும்
சமத்துவப் பொங்கல் பொங்கும் !

அருஞ்சுவைக் கரும்பி னோடு
அரிசியும் புதிதாய்ச் சேரும் !
பெருகிட உலையில் பொங்கல்
"பொங்கலோ பொங்கல்" என்பர் !
உருகிடும் வெல்லம் போல
உள்ளமோ உவகை கொள்ளும் !
திருவிழா இதற்கோ ஈடாய்
திருநாடு காண்ப தில்லை !

உழவரின் மேன்மைக் கெல்லாம்
உறுபெரும் நன்றி சொல்வோம் !
கழனியில் விளைந்தால் தானே
காசினி வாழக் கூடும்
செழுமையே எங்கும் சூழ
சூல்கொள் மேகம் பெய்க
வழுத்துவோம் கால்நடை யாவும்
வளமுற வையம் வாழ!

சோ.கு.செந்தில்குமரன்
குரும்பாப்பட்டு, புதுவை





## வாழ்வில் ஒளி வீச

ஏறி வந்த ஏணி ஈன்றோராவர்
இறுதிவரை காத்தலே நிறை வாழ்வாகும்
அயராத உழைப்பால் ஒளி வீசும்
உயர்ந்த வாழ்க்கை ஊர் பேசும்

குற்றம் காணாது கரம் கோர்த்தலில்
சுற்றமும் நட்பும் சூழும் வாழ்வில்
இத்தகு வாழ்க்கை வாழ்ந்திட வேண்டும்
மெச்சத்தகு முயற்சி தொடரட்டும் யாண்டும்

முயற்சி திருவினை யாக்கும் ஆதலால்
முயற்சியும் பயிற்சியும் கொண்டு முன்னேறு
முன்னேறும் போதில் தடைக் கற்கள்
பின்னோக்கி நகர வழி வகுக்கும்

தயக்கம் வழி மறிக்கும் முன்னேற்றத்தை
மயக்கம் இன்றி தகர்த்தெறி தயக்கத்தை
கருமமே கண்ணாயினார் சும்மா அல்ல
அருமை சொற்றொடர் வெற்றி அள்ள

திட்டமிட்ட முறையில் தொடர்ந்திடு பயணம்
எட்டுமளவில் மீண்டும் வராது தருணம்
இலக்கு நோக்கிய கண்களுக்கு எப்போதும்
இலக்கு மட்டுமே குறியாகட்டும் தப்பாது

இழக்கப் போவது எதுவுமில்லை உனக்கு
அடையப் பொன்னுலகு காத்து இருக்கு
துணிந்து செயல்படு வெற்றியைக் குறித்து
பணிந்து சேர்ந்திடும் வெற்றியைக் குவித்திடு.

பெரணமல்லூர் சேகரன்

# ஒன்றாய்க் கூடுகிறோம்...!



மது அரக்கன்
மாயை ஆனதில்
குடி மக்களோ
கூடிக் குலாவி

ஒன்றாய்க் கூடுகிறோம்!
நன்றாயிது மாந்தர்களே!
அரசே அளித்து
ஆதரவு காட்டும்

அவலம் சபையேறுது!
ஆயிரம் மங்கையர்கள்
தாலிக் கயிறு
தரை இறங்கி

குடும்பத்தார் அழும்
கூக்குரல் கேட்கலியே
ஒவ்வொரு ஆட்சியும்
ஓங்கி ஒலிக்கிறதே

ஒன்றாய்க் கூடிய
மக்களிடம் ஓலம்!
மாற்றம் ஒன்றே
மாறாதது என்று!

நாமும் நல்லதே
நடக்க நம்புவோம்!
அறங்காவலர் நடத்தும்
ஆலயங்களில் அன்னம்

நாடியே பசியுடனே
தேடியே ஓடுகிறோம்!
ஒன்றாய்க் கூடுகிறோம்!
ஒருவாய்ச் சோறுக்காக!

வறுமை ஒழிக்க
வாய்ப்பு தந்தும்
நமக்கே வாய்க்கரிசி
நன்றாகப் போடுகிற

அரசைப் புகழ்ந்திடவே
ஒன்றாய்க் கூடுகிறோம்!
விலையில்லாப் பொருட்களை
விரும்பிப் பெறுவதற்கெனவே

ஒன்றாய்க் கூடுகிறோம்!
ஓசையுடன் வேண்டாமென
மறுத்தோமா மக்களே?
மன்றாடுகிறோம் இப்ப!

ஒன்றாய்க் கூடுவோம்!
ஒற்றுமையாக இதுபோல
இனியும் நடக்காமலிருக்க!
இனிமையாக வாழ்வதற்காக!

இசுலாமியத் தாயால்
    இந்தியத் தேசியத்தின்
தலைவனுக்கு செவிலித்
    தாயாக பாசப்பாலூட்டி

சிங்கத் தமிழனாக
    சீரோடு சிறப்போடு
இறையாண்மை போற்றி
    இன்றுமினிய மகானாக

மக்களின் மனதில்
    மனங்குளிர வாழும்
அரசியல் தலைவர்களில்
    ஆசானாக விளங்குபவர்!

பசும்பொன் சொத்து
    முத்து இராமலிங்கம்
தேவர் திருமகனார்!
    தேனினும் இனிய


மகானே காட்டிய
    மகத்தான வழியில்
வேற்றுமை மறந்து
    ஒற்றுமை போற்றி

ஒன்றாய்க் கூடுவோம்!
    ஒரே வல்லரசாக்கவே!
நல்லது நடக்கவும்
    அல்லது மடக்கவும்

ஒன்றாய்க் கூடுகிறோம்!
    ஒருதாய் மக்களெனவே!
கூடுகிறோம் இனிமேல்
    பாடுகிறோம் தேசியமே!

**- மீரா ஹுசைன்!**





# உலகநியதி

அது ஒரு வானம் வஞ்சம் தீர்த்த வறண்ட கிராமம்! பல குடும்பங்கள் ஊரை காலிசெய்துவிட்டு நகரத்தார் வாகனங் களுக்கு ரோடு போட சாலையோரமாய் குடிபெயர்ந்து விட்டார்கள்!

ஊரை விட்டு பிரிய மனமில்லாமல் ஊரோடு ஒட்டிக்கொண்ட ஒரு சில குடும்பங்களில் வெள்ளைச் சாமியின் குடும்பமும் ஒன்று! பெயர் தான் வெள் ளைச்சாமி. கருப்பு நிறம், ஒல்லியான உடம்பு. வெள்ளைச்சாமிக்கு மூன்று பிள்ளைகள்! இது தவிர ஒரு ஒரு தாய் ஆடும் இரண்டு ஆட்டுக்குட்டிகளும் இருக்கின்றன. அதோடு நான்கு முருங்கை மரங்களும் இருக்கின்றன! ஆடும் குட்டிகளும் வருடாந் திர செலவுகளுக்கும், முருங்கை மரங்கள் வாராந்திர செலவுகளுக்கும் உதவுகின்றன! சீசன் வரும்போது ஐந்து கிலோ பத்து கிலோ என்று காய்க்கின்ற முருங்கைகள் மற்ற நாட்களில் ஒரு கிலோ இரண்டு கிலோ வோடு நிறுத்திக்கொள்ளும்!

எவ்வளவு வந்தாலும் பையில் நிரப்பி தோளில் வைத்துக் கொண்டால் ஒன்பது கிலோ மீட்டருக்கு அப்பால் இருக்கும் டவுன் வரை நடந்து சென்றே ரெகுலராக கோட்டீஸ்வரன் என்பவரின் மளிகை கடையில் விற்றுவிட்டு வருவது வெள்ளைச் சாமியின் வழக்கம்! முருங்கை காயை கொடுத்துவிட்டு அதற்கு பதிலாக அரிசி பருப்பு சர்க்கரை போன்ற வீட்டுக்கு தேவையான பொருட்களை வாங்கி வருவார்!

வெள்ளைச்சாமி கொண்டு வரும் முருங்கைக்காயின் சுவை அந்த பகுதி மக்களிடையே மிகவும் பிரபலம்! இதை பயன்படுத்தி மற்ற முருங்கைக்காயோடு கலந்து மளிகை கடைக்காரரும் நல்ல லாபம் சம்பாதித்து விடுவார்! பல வருட மாக வெள்ளைச்சாமி முருங்கைக் காய் கொண்டுவருவதால் மளிகை கடைக் காரர் கோட்டீஸ்வரன் அதை எடை போட்டு பார்த்ததில்லை, வெள்ளைச்சாமி சொல்கின்ற எடையை அப்படியே நம்பி

அதற்கு ஈடான மளிகை பொருட்களை கொடுத்து அனுப்புவார்! காரணம் வெள்ளைச்சாமியின் நேர்மையும் நாணயமும் எல்லோரும் அறிந்தது!

ஒரு நாள் வெள்ளைச்சாமி பத்து கிலோ முருங்கைக்காயை கொடுத்துவிட்டு அதற்கான பொருட்களை வாங்கிச் செல்ல, சிறிது நேரத்தில் பத்து கிலோ முருங்கைக் காய் மொத்தமாய் வேண்டும் என்று ஒரு சமையல்காரார் வந்து கேட்க, அவருக்காக மளிகைக்காரர் கோட்டீஸ்வரன் எடை போட அதில் ஒன்பது கிலோ மட்டுமே இருந்தது! அன்று முழுவதும் மளிகைகாரருக்கு தூக்கமே வரவில்லை! வெள்ளைச்சாமி மீது எவ்வளவு நம்பிக்கை வைத்திருந்தோம், இவ்வளவு பெரிய நம்பிக்கை துரோகத்தை செய்துவிட்டாரே, இத்தனை வருடங்களுக்காக இப்படி முட்டாள்தனமாக எடை குறைவான முருங்கைக்காயை வாங்கி ஏமாந்து விட்டோமே, அடுத்த முறை வெள்ளைச்சாமி வந்தால் சும்மா விடக்கூடாது என்று கடுங்கோபத்தில் இருந்தார்! நான்கு நாட்கள் கழித்து வெள்ளைச்சாமி மிகவும் சந்தோஷமாக வந்தார்! நல்ல விளைச்சல் என்பதால் நிறைய கொண்டு வந்திருந்தார்! கையும் களவுமாக பிடிக்கவேண்டும் என்று, எத்தனை கிலோ என்று மளிகைக்கடைகாரர் கோட்டீஸ்வரன் கேட்க பத்து கிலோ என்றார்!

அவர் முன்னாலேயே எடைபோட்டு பார்க்க ஒன்பது கிலோ தான் இருந்தது, வந்த கோபத்தில் மளிகைக்காரர் கோட்டீஸ்வரன் பளார் என வெள்ளைச்சாமியின் கன்னத்தில் அறைந்தார்! இத்தனை வருஷமா இப்படித்தான் ஏமாத்திட்டு இருக்கியா, கிராமத்துக்காரங்க ஏமாத்த மாட்டாங்கன்னு நம்பி தானே எடை போடாம அப்படியே வாங்கினேன், வெள்ளைச்சாமின்னு பெயர் வைச்சிக்கிட்டு இப்படி துரோகம் பண்ணிட்டியே சீய் என துப்ப, நிலைகுலைந்து போன வெள்ளைச் சாமி, 'அய்யா மன்னிச்சிடுங்க நான் ரொம்ப ஏழை, எடைக்கல்லு வாங்குற அளவுக்கு என்கிட்ட காசு இல்ல, ஒவ்வொரு முறையும் நீங்க கொடுக்கிற ஒரு கிலோ பருப்பை ஒரு தட்டுலயும், இன்னொரு தட்டுல முருங்கைக்காயையும் வச்சி தான் எடைபோட்டு கொண்டுவருவேன். இதை தவிர வேற எதுவும் எனக்கு தெரியாதுங்கய்யா,' என்று காலை பிடித்து அழ, மளிகைக்கடைக்காரர் கோடீஸ்வரனுக்கு செருப்பால் அடித்தது போல் இருந்தது! தான் செய்த துரோகம் தனக்கே வந்ததை உணர்ந்தார்!

இத்தனை வருடங்களாக வெள்ளைச் சாமியை ஏமாற்ற நினைத்த மளிகைக் கடைக்காரரும் அவருக்கே தெரியாமல் ஏமாற்றி கொண்டு தான் இருந்திருக்கிறார் என்பது தெளிவானது!. வெள்ளைச்சாமியின் நிறம் தான் கருப்பு. மனது பெயரை போலவே வெள்ளை தான்.

இது தான் உலகநியதி! நாம் எதை தருகிறோமோ அதுதான் நமக்கு திரும்ப வரும் நல்லதை தந்தால் நல்லது வரும், தீமையை தந்தால் தீமை வரும்! வருகின்ற காலங்கள் வேண்டுமானால் தாமதமாகலாம், ஆனால் நிச்சயம் வரும்! ஆகவே நல்லதை மட்டுமே தருவோம், நல்லதை மட்டுமே விதைப்போம்....

**ரெ. முரளி**

ஆசிரியர் - இலக்கியச் சாரல்





# நாத்திகனும் ஆத்திகனும்

(கற்பனையில் இரண்டுமாய் நான்)

நேரிசை வெண்பா

செ. இராசா

**நாத்திகன்**

இறைவன் எனப்போற்றும்
என்னருமை நண்பா
இறைவனவன் உண்டென்றால்
எங்கே? - உறையுமிடம்
இல்லாத ஒன்றை
இருப்பதாய்ச் சொல்வதுதான்
நல்லோர்க் கழகா
நவில்!

**ஆத்திகன்**

இல்லாத ஒன்றாய்
இயம்புகின்ற நண்பரே
கல்லாத நூல்பற்றி
கற்றதுபோல்- சொல்வீரோ?
உள்ளதென யாமுணர்ந்த
உண்மையைச் சொல்லுகின்றேன்
துள்ளுகின்றீர் ஏனோ
தொடர்ந்து?!

**நாத்திகன்**

இல்லை இருக்குதென
ஏதேதோ சொல்லாமல்
இல்லை எனச்சொல்வேன்
எப்போதும் - இல்லையேல்
எங்கே இருக்குதென
என்முன்னே காண்பித்தால்
தங்கள்சொல் கேட்டிடுவேன்
சார்ந்து!

**ஆத்திகன்**

ஆறும் உறையும்
அதிகக் குளிரிருந்தால்;
மாறி உருகும்
மறுபடியும் - ஆறெனவே
சூடு மிகையானால்
சூக்குமமாய் ஆவியென
ஊடும் இறைவனைப்பார்
ஓர்ந்து!

**நாத்திகன்**

என்னப்பா சொல்லுற
எல்லாம் அறிவியல்பா?
உன்னைப்போய் கேட்டா
உளறாம - என்னசொல்வ?!
சுத்தி வளைக்காம
சொல்லுப்பா எங்கிட்ட
எத்திசையில் உள்ளான்
இறை?

**ஆத்திகன்**

துரும்பிலும் உள்ளோன்;இத்
தூணிலும் உள்ளோன்
அருவமும் ஆனோன்
அணுவாய்- உருவா(க்)கி
நீக்கமற எங்கும்
நிறைந்துள்ளான் என்பதனால்
தீர்க்குமுடன் பார்ப்பாய்த்
தெளிந்து!

நாத்திகம்
என்னதான் சொன்னாலும்
ஏற்க முடியவில்லை
சின்ன அணுகூறும்
சித்தாந்தம் - என்றாலும்
ஊழ்வினை பற்றி
உயர்ந்தநூல் சொல்லுவதால்
ஆழ்ந்தறிய வேண்டும்தான்
ஆம்!

ஆத்திகம்
வந்தாயா ஓர்வழிக்கு
வள்ளுவம் சொல்வதென்ன?!
சிந்தையில் ஏற்றிப்பார்
சீர்பெறலாம் - தந்தையர்போல்
ஈரறம் போற்றி
இயன்ற பொருளீட்டி
பேரின்ப வீடடைந்தால்
பேறு!

நாத்திகம்
இறையென்ற ஒன்றிற்குள்
இத்தனை உண்டா?
மறைபொருள் கண்டிடவா
மார்க்கம் - நிறைவாய்
இறையென்ற தத்துவத்தை
யாமே அறிய
பறைந்தால் மகிழ்வேன்
பகிர்!

ஆத்திகம்
நான்யார் எனவுன்னை
நன்றாகக் கேட்டுப்பார்?
நான்நான் எனச்சென்றே
நண்குணர்வாய்- ஈன்றவனை
ஆழ்ந்துள்ளே கண்டபின்னே
ஆதியார் என்றறிந்தால்
ஊழ்வினையைத் தாண்டும்
உயிர்!

# கோணாத மனம் வேண்டும்

காணி நிலம்கூட
காணாத ஏழைக்கு
ஒரு வேளையாவது
சோறு கொடு

மேலாக பணம் சேர்த்து
நோயோடு போராடும்
வாழ்வும் உனக்கோர் வாழ்வாகுமா

அதிகாரக் கையோடு
ஆட்டிப் படைக்கின்ற அரசனும்
மக்களுக்கு அவசியமா

தேனாறும் பாலாறும்
ஓடியது ஒரு காலம்
அதையே சொல்லுவது
கதைக்காகுமா

நாட்டு நடப்பெல்லாம்
நீதிக்குப் புறம்பாக
மேய விடுவது
சரியாகுமா

ஆனாத மன்னரெல்லாம்
தறிகெட்டு மதிகெட்டு
மண்ணுக்கு இரையான
கதை வேண்டுமா
கோணாத மனத்தோடு
நேராக செயல்பட்டால்
நாட்டோடு வீடும்
நலமாகுமே.



**ராம ராஜேந்திரன்**
நாகியம்பட்டி

# காதல்

கடந்துபோன நம்காதல் அழகானது
கணநேர உன்முடிவால் வீணானது
எதிர்காலம் வினைபுரியா வேதியியலானது
எப்போதும் நீங்காத வடுவானது

என்னோடு வாழ்ந்தது நிழலானது
அவனோடு உன்வாழ்வு நிஜமானது
உன்வாழ்வே இப்போது சுகமானது
என்வாழ்வு இப்போது சுடுகாடானது

நீமீட்டிய என்பாடல் சோகமானது
நீகைவிட்ட என்வாழ்வு பிணமானது
நீசிரிக்கும் சிரிப்பெல்லாம் சுவையானது
என்சிரிப்பில் இன்பம் பறிபோனது

ஊரெல்லாம் நம்காதல் பேச்சானது
உன்நினைவே என்னுயிர் மூச்சானது
என்வாழ்வெல்லாம் வளமில்லா உரமானது
உன்வாழ்வோ தழைத்தோங்கும் மரமானது

என்காதில் கேட்பதெல்லாம் இடியானது
என்நிகழ்காலம் விடியாத இரவனது
நீயில்லா என்எதிர்காலம் பாழானது
நீமறந்த என்னுடல் சிதையானது

**எம்.சக்திவேல்**
திருவேற்காடு



# நட்பு



நட்புக்கு இலக்கணம் உண்டா? நட்பில் நல்ல நட்பு, தீய நட்பு என்று உண்டா? அடையாளம் காண முடியுமா? அதற்கான வழிவகைகள் ஏதுமுண்டா? இன்றைக்கு உறவுகளின் எண்ணிக்கையை விட நட்புகளின் எண்ணிக்கை அதிகம் தான். இன்னும் சொல்ல வேண்டுமானால், சில இடங்களில் உறவுகள் கைவிரித்தாலும் நட்புகள் தோள் கொடுக்கத்தான் செய்கின்றன. இது சாத்தியம்தானா என்றால் நிகழ்வுகள் சாத்தியம் என்றே கட்டியம் உரைக்கிறது.

நட்பு என்பதற்குள் பணம், பட்டம், பதவி, செல்வம், செல்வாக்கு, அழகு, அந்தஸ்து சாதி, இவைகள் எல்லாம் கிடையாது. 'நம்பிக்கையும் புரிதலும் மட்டுமே நட்பின் இரு விழிகள்'. விட்டுக் கொடுத்தலும் ஒளிவு மறைவு இல்லாது இருத்தலும், தியாக மனப்பான்மையும் இருந்தால் நட்பை யாராலும் பிரிக்க முடியாது.

அதுசரி, நட்பு என்று சொல்லிவிட்டு, நல்ல நட்பு தீய நட்பு என்று சொல்லலாமா? நட்பில் தீய நட்பொன்று இருக்க முடி யுமா? புரிகிறது. விளக்கம் ஒன்றும் பெரிதான தில்லை.

நீ இருக்கும் போது உன்னைப் புகழ்ந்து, நீயில்லாதபோது அதற்கு மாறாக, உன்னைப் பற்றி தவறாக, உரைப்பதுவே தீயநட்பு. இதில் இன்னும் சொல்ல வேண்டுமென்றால் 'உன் மனதில் நீ அவனை வைத்திருப்பது போல் அவன் மனதில் நீயில்லையென்று பொருள் கொள்வதும் நல்லது'. நல்ல நட்பானது நீயில்லாத இடத்தில் உன்னைப் பற்றி தவறாக யாரும் சொல்லும்போது நீ தவறானவன் இல்லை என்று உனக்காக வாதாடுபவனே நல்ல (நட்பு) நண்பன் ஆவான். வயதோ, மொழியோ, இனமோ எதுவும் நட்புக்கு என்றும் தடையில்லை. 'துன்பத்தில் தோள் கொடுப்பவனே நல்ல நண்பன் ஆவான்'. உன் மனக்குறையை உணர்ந்து உன்பக்கம் நிற்பவனே உண்மையான நண்பன். புரிதல் இருந்தால் வார்த்தை வர வேண்டிய அவசியம் இல்லை. வழித்

துணையில் நல்ல நட்பு இருந்தால் வாழ்வில் பயம் இல்லை.

நட்பு கொண்டவன் எப்போதும் உரிமையில் பேசுவதையும் ஒருமையில் பேசுவதையுமே அதிகம் விரும்புவான். நண்பர்களோடு, 'நேரில் பேசினால் மட்டுமே நட்பின் வளமை தெரியும்'. பகிர்ந்து கொள்ளும் விசயங்கள் மட்டுமே நட்பை சிறப்பாக்குகின்றன. உன் வளர்ச்சி கண்டு நண்பன் மகிழ்வடைய வேண்டும். பொறாமை இருந்தால், அங்கே உண்மையான நட்பு இல்லை. 'முக நக நட்பென்றும் அகநக நட்பென்றும்' வள்ளுவர் சொல்லுகின்றார். அதாவது 'உள்ளத்திலிருந்து மகிழ்வாக உன் ஏற்றத்தைப் பார்க்க வேண்டும்'. போலியான புன்னகை, நட்பில் கூடாது. சிலபல விசயங்களை பெற்றோர் உற்றார் உறவினர்களோடு கூட பகிர்ந்து கொள்ள முடியாது. நட்பில் ஒளிவுமறைவு இல்லை. நல்ல நட்பில் வார்த்தைகளுக்கு ஆடையுடுத்துவதில்லை. எது சரியோ அதுவே அங்கு வெளியாகும்.

மனம் துயர்கொள்ளும் போது அதனை ஆண்டவனிடம் ஒப்புவிக்கிறோம். ஏன்? எதற்காக? வேறு யாரிடத்திலும் சொன்னால் நம்மைப் பற்றி தவறாக வேறு யாரிடமும் சொல்லமாட்டார் என்பதால் தானே. ஆண்டவன் உனக்கு பதில் சொல்கிறானா? இல்லையே. வழிபாடு என்பது நமது நம்பிக்கை. 'நம்பிக்கையோடு நம்பி நம் பாரத்தை இறக்கி வைக்கும்போது மனம் இலகுவாகிறது'. இது தானேஉண்மை. இப்போது ஒன்றை யோசித்துப் பாருங்கள். நம்பிக்கைக்கு உரிய ஒரு நட்பு கிடைத்தால் அது தெய்வத்தின் அருளாகக் கொள்ளலாம் தானே.

பகிர்ந்ததை தனக்குள் வைத்துக் கொண்டு உனக்குத் தேவையான அறிவுரையைச் சொல்லும் நட்பை இறையென்றும் சொல்லலாம். தவறில்லையே. உன்னுடைய அனைத்து ரகசியங்களையும் உண்மையான நட்பானது என்றுமே கட்டிக் காப்பாற்றும். நட்பு எதாவது காரணத்தால் தடைபட்டாலும் உன்னைப் பற்றிய உண்மைகளை மற்றவர்களிடம் பகிர்வதற்கு நட்பு கொண்டவன் விரும்ப மாட்டான்.

நம்மைச் சுற்றி இருப்பவர்கள் அனைவரும் நண்பர்கள் என்று சொல்லி விட முடியாது. வேவு பார்ப்பதற்கு கூட நம் முடன் இணைந்தே பயணிப்போரும் உண்டு. 'இன்று அண்ணன் எப்போது போவான் திண்ணை எப்போது நமக்கு கிடைக்கும்' என்ற நோக்கத்தில் தான் பலர் நம்மோடு பயணிக்கின்றனர். இதனை நட்பென்று சொல்லி விட முடியுமா?

'உழைப்பால் உன்னிலைக்கு உயர முடியாதவன் தான் உன்னைக் கீழிறக்கக் காத்துக் கொண்டிருக்கிறான்' என உணர வேண்டும். நட்பில் பொறாமை இருக்கக் கூடாது. நண்பன் உயர்ந்தால் மனம் மகிழ்வாக வேண்டும். அது தான் நல்ல நட்பு. இன்று நட்பு என்பது அவ்வளவு சிறப்பாக இல்லை, காரணம் புரிதல் இல்லை, சகிப்புத் தன்மையில்லை. முக்கியமாக நம்பகத் தன்மையில்லை. நல்ல நட்புக்கு நல்லது மட்டும்தான் தெரியும். அது தன்னிலிருந்து வேறுபடுத்திப் பார்க்காது.

மின்னுவதெல்லாம் பொன்னல்ல. இது மனம் அறிந்து கொள்ள வேண்டிய ஒன்றாகும். இவனுடன் இவன் இருக்கிறான் ஆதலால் இவனுக்கு இவன் நண்பன் என்ற முடிவுக்கு வரக்கூடாது. மனம் அறிந்த நட்புக்கும், கூடவே நிற்கும் நபருக்கும் நிறைய வேறுபாடுகள் உண்டு. உண்மையான நட்பில் 'விட்டுக் கொடுப்பதும் தன்னலம் பாராத நிலைப்பாடும் முதலாக இருக்கும்.' உற்றார் உறவினர் கை விரித்தாலும் உண்மை நட்பு கூடவே நிற்கும். இன்பத்தில், கூடவே வரும் நட்பு,

துன்பப்படும் போது உன்னைத் தூக்கிக் கொண்டு வரும்.

நட்பிலும் சுயமரியாதை உண்டு என்பதை அவசியம் புரிந்து கொள்ள வேண்டும். சுயமரியாதையை சீண்டிப் பார்க்கக் கூடாது. மனித வாழ்வில் குறைகள் இருக்கத்தான் செய்யும். குறைகளை பெரிதுபடுத்தாது மன்னித்து ஏற்றுக் கொள்ளும் தன்மை தான் நட்பை பலப்படுத்தும். 'விசுவாசம் என்பதன் இன்னொரு பொருள் உண்மையான நட்பு என உணர வேண்டும்.'

நட்பை யாசகம் பெற முடியாது. தானாக வர வேண்டும். இருவர் நட்பாக இருந்தார்கள் என்ற காரணத்திற்காக அவர்களின் வாரிசுகள் நட்பாக இருப்பார்கள் என்ற கட்டாயம் இல்லை. வழிமாறா நட்பு வழிவழியாக வருவதில்லை. 'வயதோ பாலினமோ நட்புக்குத் தடையில்லை'. சமுதாயப்பார்வையை நல்ல நட்பு, கண்டு கொள்வதும் இல்லை. நட்புக்கு என வள்ளுவர் ஏழு அதிகாரங்களைப் படைத்துள்ளார். (நீ 1330 ஐயும் படிக்க வேண்டாம். இந்த எழுபதை மட்டுமாவது படித்து அதன்படி நடந்தால் வாழ்க்கை வெற்றியாகும்.

'முகத்துக்கு நேராக சுட்டிக்காட்டி உன்னை வழி நடத்தும் நட்பு உனக்கிருந்தால் அதை தவற விடக் கூடாது'. மாறாக நட்பென்று சொல்லிக் கொண்டு உன்னையும் சில தீயபழக்க வழக்கத்திற்கு துணையாக்கினால் நீ கொண்டது நட்பில்லையென புரிதல் என்றும் வேண்டும்.


நட்பைப் பற்றி சொல்லும்போது மூன்று வகையாகச் சொல்லியிருப்பதை காண்கின்றோம். பனையென்றும், தென்னையென்றும், வாழையென்றும், நட்பை வகைப்படுத்தியுள்ளதாகப் படிக்கின்றோம். மொத்தத்தில் அனைத்துமே ஒரு வகையில் பயன் தருமென்றாலும் உட்கூறுகள் வேறாக இருப்பதை உணரலாம். 'பனை நட்புக்கு நீ எதுவும் செய்ய வேண்டாம். அது சுயம்பு போல தானாக வளர்ந்து எந்த உதவியையும் எதிர்பார்க்காது உனக்கு உதவிகளைச் செய்யும்'. தென்னை நட்புக்கு அவ்வப் போது உதவிகள் செய்தால்தான் உனக்கு உதவியாக இருக்கும். ஆனால் வாழை நட்புக்கோ நீ உதவி செய்து கொண்டே இருந்தால் தான் உன்னுடன் இருக்கும். ஆக நட்பில் கூட வகைபாடுகள் உண்டு. 'பனை நட்பு உனக்குக் கிடைத்தால் உனது வாழ்வு வளம் தான்'.

இன்று நாம் டிஜிட்டல் உலகத்தில் வாழ்கின்றோம். புலனம் (whatsup), பற்றியம் (messenger) முகநூல் (facebook) படவரி (Instagram) என நட்பின் அணிவகுப்பு அதிகமாகவே... 'சிலர் தன்னைப் பற்றிய தகவல்களை திரைபோட்டு மறைத்து விட்டு நட்புக்கு அழைப்பு விடுக்கின்றனர்'. இன்னும் சிலரோ தவறான தகவல்களை தனது தகவலாக (Fake id) தந்து நட்புக்கு அழைக்கிறார்கள். 'ஒவ்வொரு முகத்துக்குள்ளும் ஓராயிரம் முகங்கள்'. பலவீனம் உனக்கிருந்தால் பாவமாகப் போய்விடும் உன்வாழ்க்கை.

நட்பை நிலை நிறுத்தும் முன் நான்கு புறமும் பார். நான்கையும் யோசி. உளறிக்கொட்டி விட்டு உருப்படாமல் போகக்கூடாது. நட்பின் முக்கியம் இரகசியம் காத்தல் தான். நட்பை ஒன்றுக்கு பல தடவை யோசித்து முடிவாக்கு. 'தீய நட்பைக் காட்டிலும் நட்பே இல்லாத தனிமை சிறந்தது' என யோசித்து கவனத்தோடு களம் இறங்கு. 'நல்ல நட்பை அலசி ஆய்ந்து முடிவாக்கி விட்டால் பிறகு சந்தேகம் கொள்ளாதே'. நல்ல நட்பு என்பது கணவன் மனைவி உறவை விட புனிதமானது. உணர்ந்தால் உயரும் வாழ்வு. நட்பால் வளர்ந்தவர்கள் நிறையவே. அதில் நலமே. நாமும் நல்ல நட்பில் நிலைப்போமா?

**இதயமலர்**
மேற்கு தாம்பரம். 600045

# வெற்றி



வெற்றியை விரும்பாத உள்ளங்கள் உண்டா? வெற்றியாளனைத் தானே உலகம் எப்போதும் கொண்டாடுகிறது. வெற்றிக்குரிய வழிமுறை யாது என்று வினவும் போது 'சரியான நேரத்தில் நீங்கள் எதைத் தொலைக்க வேண்டும் என்ற தெளிவு இருந்தால் வெற்றி வந்து சேரும் என்பது தான்'. இதை நாம் நமது அனுபவத்தில் காண்கின்றோம். 'மாற்றம், எண்ணம், இலக்கு, ஆர்வம், கற்றல், வாசித்தல், நேசித்தல், புரிதல், போன்ற வார்த்தைகளும், உழைப்பு, சகிப்புத் தன்மை, ஒத்துழைப்பு போன்ற செயல் முறைகளும் வெற்றிக்கு தொடர்புடைய தென அறிகின்றோம்'. தனிப்பட்ட வெற்றியும் உண்டு, கூட்டான வெற்றியும் உண்டு. வெற்றி வரும் போது புத்துணர்வு வருகிறது. புத்துணர்வு மனதை அள்ளும் போது அகம் விரிவாகிறது. மகிழ்வாகவும் மாறுகிறது. எதிர்மறை சிந்தனையில்லாதவன் வெற்றியின் வாசலை விரைவில் அடைகின்றான். ஆக்கப்பூர்வமாக சிந்திக்கும் போது அனுப வத்தின் துணையோடு வெற்றியை அடையலாம். 'அனுபவங்களை விட சிறந்த தோழன் வெற்றிக்கு இல்லை'. அதே மாதிரி தோல்வியின் படிக்கட்டுகளைத் தொடாமல் யாரும் வெற்றியின் வாசலுக்குள் நுழைய முடியாது.

எவனொருவன் தோல்வியை அனுபவமாக உணர்கிறானோ அவன் மீண்டும் அத்தவறுகளை செய்ய மாட்டான். போராடிப் பெற்ற வெற்றி மட்டும் தான் புத்துணர்வைத் தந்து நிற்கும் 'வெற்றியை யோசிக்கும் முன் தோல்வியின் அடையாளங்களை கண்டு கொள்ள வேண்டும்'. இருப்பதை விட்டுவிட்டு என்றும் பறப்பதற்கு ஆசைப்படக்கூடாது. இதனால் தான் வெற்றி வாய்ப்பை இழந்தோம் என்று தெரிந்தும், இன்னும் கொஞ்சம் பொறுத்துப் பார்க்கலாம் என்று நினைக்கும் தெளிவில்லாத சகிப்புத் தன்மை வெற்றிக்கான தடையென உணர வேண்டும்.

தனிமனிதனின் வெற்றி என்பது எதில் வேண்டுமானாலும் இருக்கலாம். அவரவர் மனநிலையைப் பொறுத்தே வெற்றி கணக்கிடப் படுகிறது. 'சராசரி மாணவன் தேர்வில் தேர்ச்சி பெற்றாலே வெற்றியை நுகர்கின்றான். ஆனால் முதலிடத்தை இலக்காகக் கொண்டவன் ஒரு மதிப்பெண் குறைந்தாலே கவலைப் படுகின்றான். 'அவனவன் இலக்கே வெற்றியாகிறது'. சராசரி விளையாட்டு வீரனுக்கு தான் மாவட்ட, மாநில, தேசிய அணியில் இடம் பெறுவதையே வெற்றியாக உணர்கின்றான். ஆனால் தேசிய அணியில் உள்ளவன் பரிசுக் கோப்பையை

கைப்பற்றினால் தான் வெற்றியாளன் ஆகின்றான். 'ஆக தகுதிக்கு ஏற்ப வெற்றி தன்னை எடை போட்டுக் கொள்கிறது.

வெற்றியாளர்கள் அனைவரும் அறிவு ஜீவிகளாகத்தான் இருக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை. 'தொழில் முறை வெற்றி என்பது பொருளாதாரம் சம்பந்தப்பட்டது'. தனது அனுபவத்தால் வெற்றி பெற்று நிறுவனத்தை அல்லது தொழிலை நடத்தி நல்லதொரு முன்னேற்றப் பாதையில் கொண்டு செல்பவனிடம் தான் அறிவில் முதிர்ந்தவன் பணியாளன் ஆகின்றான். நாடறிந்த. அல்லது மக்களின் அபிமானம் பெற்ற நடிகர் ஒருவர் நடிப்பதால் மட்டுமே எந்தப் படமும் வெற்றி யடைவதில்லை. இங்கு தனிமனிதனை விட கூட்டணிக்கே முக்கியத்துவம் வருகிறது. கதை, இசை பாடல், மற்றும் சிலவற்றால் தான் படம் வெற்றியாகிறது. வெற்றி என்பது ஆக்கத்திலும் உண்டு. வணிகத்திலும் உண்டு. வெற்றி தொடரும் போது வியாபாரம் வெற்றியாகிறது. இங்கு வெற்றியானது முதலீடும் அதனால் வரும் இலாபமும் தான்.

சில வெற்றிகளை நம்மால் கொண்டாட முடிவதில்லை. 'யாருக்கும் கெடுதல் தரா மல், யாருடைய வாழ்வாதாரத்தையும் நிலை குலைக்காமல் வெற்றியைப் பெற வேண்டும். திரைப்படக் காட்சிக்கான சண்டைகளில் தோல்வியிருக்கலாம். அது தொழில். கதாநாயகன் வென்றால் தான் வெற்றி. வில்லன் தோற்க வேண்டிய கட்டாயம். இதை நிழல் வெற்றியாகவே பார்க்க வேண்டும். 'மக்கள் வாழ்க்கைக்கு இதனால் எந்த உபயோகமும் இல்லை'. அங்கே வென்றவன் தோற்றவன் இருவ ருக்கும் ஊதியம் உண்டு. ஆனால் சமு தாயம் இருட்டாகிறது. 'வாழ்க்கைக்குத் தேவையான ஒன்றைச் சுட்டிக் காட்டி அந்த திரைப்படம் வியாபார நோக்கில் தோல்வியானாலும் மக்களைத் தட்டி யெழுப்பினால் அது வெற்றிப்படம் தான்'.

அரசியலைப்பொறுத்தவரை பெறுகின்ற வெற்றியென்பது ஆட்சியைத் தக்க வைத் துக் கொள்வதிலோ அல்லது ஆட்சியை மாற்றுவதிலோ மட்டும் தான். ஆனால் 40% விகித மக்கள் களத்திற்கே வருவதில்லை. மீதியுள்ள 60 % விகிதத்தில் யார் அதிகம் பெறுகிறார்களோ அதுவே வெற்றியின் கணக்காகிறது. உள் கணக்குப் பார்த்தால் வெற்றி பெற்றவன் வாங்கிய வாக்குகள் என்பது தோல்வியடைந்தவர்களின் வாக்குகளையும் களத்திற்கு வராதவனின் வாக்குகளையும் சேர்த்துப் பார்க்கும் போது உண்மை வெற்றியெனச் சொல்ல முடியாது. ஆனால் சனநாயகக் கணக்கில் களத்திற்கு வராதவைகளை கண்டு கொள்ள மாட்டோம். அதனால் மீதியைக் கொண்டு வெற்றியைக் கொண்டாடுகின்றோம். வெற்றிக்குத் தேவை கூட்டணி என்பதை இங்கு ஒத்துக் கொள்ளலாம்'.

எல்லா வெற்றிகளையும் நம்மால் கொண்டாடி விட முடியாது. போரில் காணப்படும் வெற்றியாகட்டும், எல்லை யைக் காக்கின்ற காவலில் பெறும் வெற்றி யாகட்டும், நம்மில் பலரை இழந்து தான் அத்தகு வெற்றியை நிம்மதியை உணர்கின்றோம். இந்த வெற்றியில் பல குடும்பங்களின் சோகம் நிரம்பியுள்ளது. வெற்றியென்பதை எப்படி வேண்டு மென்றாலும் கொண்டாடி விட முடியாது. 'உலக அளவில் வெற்றியை எப்படி பார்க்கிறீர்கள் என்ற கருத்தாய்வை பெரிய அளவில் நடத்திய போது ஆரோக்கியமான உடல்நிலையும் மன நிம்மதியும் மகிழ்ச்சியும் மட்டுமே உண்மையான வெற்றியென்று தெரிவித்துள்ளனர்'. இது ஏற்றுக் கொள்ளும் படியே உள்ளது.

இந்தக் காலத்திலும் பெண்களுக்கான சுதந்திரம் என்பது ஒரு கட்டுக்குள் தான் இருக்கிறது. அதை விட்டு வெளிவர முடியாமல் இருப்பவர்களுக்கு வெற்றியும் மகிழ்வும் எப்படி வரும். அத்தகு வெற்றியை

பெறுவதற்கு நல்லதோர் களம் அமைக்க வேண்டாமா? இன்றைக்கு சிலரின் சுதந்திரம் (வெற்றி) என்பது ஐந்தடி கயிற்றில் இருந்து ஐம்பதடி கயிற்றுக்கு மாறியிருக்கிறது. கட்டில் இருந்து முழுமையாக விடுவிக்கப் படவில்லை. உணர வேண்டும். ஏதோ ஒரு அழுத்தம் இங்கே மகிழ்வுக்கும் நிம்மதிக்கும் தடையாக உள்ளது.

தேவைகளை முதலில் தேடிக் கொள்வதிலும் தேடியதில் பயணப்படுவதிலும் தான் வெற்றியின் களம் இருக்கிறது. பின் புலத்தாலும் பணத்தை அள்ளித் தெளித்து பெறும் வெற்றி உணர்வுப் பூர்வமாக இருக்காது. நல்லதோர் காரணத்துக்காக ஒரு உத்வேகத்துடன் அல்லவைகளை அழித்து புதியதோர் நிலைப்பாட்டைக் கொண்டு வருவது தான் மிகப் பெரிய வெற்றியாகும். இத்தகு வெற்றிக்கு தனி மனிதன் திடமாகவும், ஆரோக்கியம் நிறைந்தவனாகவும் மக்களின் நன்மதிப்பைப் பெற்றவனாகவும் இருக்க வேண்டும். இதற்கு முறையான உடற்பயிற்சியும் மனிதாபிமானத்துடன் கூடிய நல்ல நோக்கங்களும் நேர்மறையான நல்ல எண்ணங்களும் இருக்க வேண்டும். அப்படியிருப்பவனே வெற்றியாளனாக வலம் வர முடியும்.

வெற்றி என்பதை சமூக நிலைப்பாடு என்றும் தனித்துவ நிலையென்றும் கொள்வோம். தனி மனிதர்கள் வெற்றி சமுதாய வெற்றியாகும். சமுதாய வெற்றியென்பது சாதிக்கும் நிலை கொண்டது. தேவைகளைப் பெறுவதும் தேவையில்லாததை விட்டொழிப்பதுவும் கூட வெற்றி தான். அத்தகு வெற்றியை சந்திப்போம். மனம் மகிழ்வோம். நிம்மதி காண்போம்.

**பரணி சுப சேகர்**
மதுரை தமிழ்நாடு

# ஒளிமயமான எதிர்காலம்

புத்தாண்டு பிறந்தது
புதுவாழ்வு மலர்ந்தது
மனமும் மகிழ்ந்தது
மாற்றமும் வந்தது

இயற்கையும் செழித்தது
பசுமையும் பூத்தது
புத்துணர்வு வந்தது
புதுமையாய் புலர்ந்தது

வறுமை மாறியது
வாட்டமும் போனது
சமத்துவம் தந்தது
சரிநிகர் என்றானது

வான்மழை பெய்தது
வளங்கள் கொழித்தது
இல்லாமை மாறியது
இனிமையே இன்பமானது

உறவுகள் ஒன்றானது
ஒற்றுமையே நிலைத்தது
புதுவருடத்தில் உள்ளத்தின்
ஒளிமயமான எதிர்காலமே...

**பெ.வெங்கட லட்சுமி காந்தன்**
விருதுநகர்







# என்னை மாற்றும் காதலே..!!!

சாரு சென்னை நகரின் பிரபலமான கம்பெனியில் ஹெச் ஆர் ஆக பணிபுரிந்து வரும் நவீன யுவதி. பாரதியின் புதுமை பெண்ணாக இருந்தாலும் பண்பாடு மாறாதவள். வீட்டில் குறும்பு நிறைந்தவளாகவும், அலுவலகத்தில் பொறுப்பு மிக்கவளாகவும் இருந்தாள். அலுவலகத்தில் சாருவிற்கு நெருங்கிய தோழி மதுமிதா. இருவரும் ஒன்றாகவே சுற்றுவார்கள் ஷாப்பிங் மால்களுக்கும், வேறு வெளியே எங்கே சென்றாலும் ஒன்றாகவே இருப்பார்கள். சாருவின் வீட்டிற்கு ஒரே பெண் என்பதால் செல்லம் அதிகம். பாசமான தந்தை, அன்பான தாய் கிடைத்திருந்ததால் வீடு சொர்க்கமாக இருந்தது சாருவுக்கு.

இவை எல்லாம் ஹரிஷ் வந்த பிறகு முழுவதுமாக மாறும் என்று கனவிலும் அவள் நினைத்து பார்க்கவில்லை.

ஹரிஷ் பெங்களூர் அலுவலகத்தில் இருந்து மாறுதலாகி சென்னை அலுவலகத்தின் மேனேஜராக பொறுப்பு ஏற்று இருந்தான்.

ஹரிஷ் பற்றி சொல்ல வேண்டுமானால் அவனின் கட்டுக்கோப்பான உடல்வாகு, அழகான கண்கள், தாடி, மீசை என்று பெண்களை கவரும் தோற்றம் கொண்டவன். முதல் நாள் அனைவரும் தங்கள் பெயரை சொல்லி அவனிடம் அறிமுகம் செய்து கொண்டார்கள். சாருவும் அவருக்கு கை கொடுத்து வாழ்த்துக்கள் சொல்லி தன்னை அறிமுகம் செய்துகொண்டாள். ஹரிஷ்க்கு முதல் பார்வையிலேயே சாரு மீது காதல் வந்துவிட்டது. அலுவலகம் சார்பான கோப்புகளை, விஷயங்களை பரிமாறிக்கொள்ள இருவரும் ஒன்றாக இருக்கும் நேரம் அதிகமானது. மாதங்கள் உருண்டோட சாரு மீதான காதலை ஹரிஷ் அதிகமாய் உணர்ந்தான், சரியான சூழலில் மனதில் இருந்த காதலை சொல்லிவிட்டான். ஹரிஷ் போன்ற ஆண்மகனை எந்த பெண்ணிற்கு தான் பிடிக்காது. சாருவும் காதலை ஏற்றுக்கொண்டாள் இருவரும் மிகவும் நெருக்கமாகி விட்டார்கள். சாருவின் தோழி மதுமிதா கண்டிப்புடன் இப்படி எச்சரிக்கை செய்தாள். அவர் அழகாக இருக்கிறார் உயர்ந்த பதவியில் இருக்கிறார். நாளை என்ன வேண்டுமானாலும் நடக்கலாம். நீ உன்னோட எல்லையில் உறுதியாக நில், ஏமாந்து விட்டு பிறகு வருந்தாதே என்றாள். சாருவுக்கு கொஞ்சம் பயமாக இருந்தாலும், ஹரிஷ் மீதான காதல் நம்பிக்கை அவளை மதுவின் பேச்சை அலட்சியப்படுத்த வைத்தது. அன்று புதிய ஆண்டு பிறப்பதற்கான பார்ட்டி ஒன்று பெரிய ஆடம்பர ஓட்டலில் ஏற்பாடு செய்திருந்தார்கள். அந்த பார்ட்டிக்கு இருவரும் ஜோடிகளாக இணைந்தே வந்து கலந்து கொண்டார்கள். சக ஊழியர்கள் மேனேஜர் சாருவை உஷார் பண்ணிட்டார் போல என்றும், பெண் ஊழியர்கள் சாரு ரொம்ப அதிர்ஷ்டக் காரி தான் இல்லனா இவ்ளோ அழகாவும், அதிகமா சம்பாதிக்கிற

ஹரிஷ் இவளை காதலிச்சிருப்பானா என்று ஒவ்வொரு மாதிரி பேசிக்கொண்டார்கள். பார்ட்டி ஆரம்பித்தது. வண்ண விளக்குகள் சூழ, பாட்டு சத்தங்களுடன் ஹாப்பி நியூ இயர் என பேரிரைச்சலோடு மகிழ்ச் சியையும், வாழ்த்துக்களையும் பகிர்ந்து கொண்டார்கள். மதுவகைகளும், குளிர் பானங்களும் இருந்த ட்ரேயில் விரும் பியதை எடுத்து பருகத்தொடங்கினர். ஹரிஷ் விலை உயர்ந்த மதுவை கோப்பையில் ஊற்றி எடுத்துப்பருகினான், சாருவும் ஆரஞ்சு ஜூஸ் ஒன்றை எடுத்துப் பருகினாள். நேரம் செல்ல செல்ல ஹரிஷ் போதையில் தன்னிலை மறந்தான். சாரு அவனை அழைத்துக்கொண்டு தனக்கு வழங்கப்பட்ட ஓட்டல் அறையில் நுழைந்து தாழிட்டுக்கொண்டாள். ஹரிஷை கட்டிலில் கிடத்திவிட்டு சாரு குளித்து விட்டு வந்தாள். புத்தகம் ஒன்றை படித்துக் கொண்டே சோபாவின் மீது உறங்கிப் போனாள். சில மணி நேரங்களுக்கு பிறகு எழுந்த ஹரிஷ் அருகில் சோபாவில் படுத்திருக்கும் சாருவின் அழகை பார்த்து ரசித்தான். கொஞ்சம் போதையில் இருந் ததாலும், தனிமையும் அவனுக்குள் ஏதோ கிளர்ச்சி செய்திருந்தது. மெல்ல கட்டிலை விட்டு எழுந்து ஷோபாவை நோக்கி நடந்தான். சாருவின் முகத்தருகே வந்து வெப்பமாய் மூச்சுக்காற்று உடன் ஒரு முத்தம் வைத்தான். சாரு பதட்டத்துடன் எழுந்தாள்.

என்ன ஹரிஷ் இப்போது தான் எழுந் தாயா என்றாள்?

ஆமா சாரு

சாப்பிட ஏதாவது ஆர்டர் செய்யட்டுமா?

வேணாம் சாரு பசிக்கல.

சரி ஹரிஷ் போய் கட்டிலில் தூங்குங்க என்றாள், பதில் ஏதும் பேசாமல்

சாருவையே வெறித்து பார்த்துக் கொண்டிருந்தான்.

என்ன ஹரிஷ் அப்படி பாக்குறீங்க

உன்னோட அழகை ரசிக்கிறேன் என் றான். வெட்கத்தில் சிரித்தாள் சாரு,

அவள் முன்னமே தன் சட்டையை கழற்றி தன்னுடைய திரண்ட உடலை காட் டினான்.

என்ன ஹரிஷ் பண்றிங்க இதெல்லாம் இப்போ வேணாம் கல்யாணத்துக்கு அப் புறம் தான் என்றாள். ஒரு கண்ணால் அவன் தேகத்தை மேய்ந்து கொண்டே..!!!

ஹரிஷ் சாருவை ஷோபாவில் இருந்து அள்ளியெடுத்து கட்டிலுக்கு சென்றான்.

அவன் அணைப்பில் வேண்டாம் என்ற சாருவின் குரலும் ஓய்ந்து போயிருந்தது.

இருவரும் உடலால் இணைந்தார்கள், மோகக்கடலும், ஆசைநதியும் ஒன்றுடன் ஒன்று கலந்தது. உடல் அசதியில் இருவரும் உறங்கிப்போனார்கள்.

காலை மணி 10. சாரு எழுந்து குளித்து விட்டு காபி ஆர்டர் செய்து குடித்தாள், ஹரிஷும் எழுந்து குளித்துவிட்டு காபி பருகினான். இருவரும் புன்னகைத்து கொண்டார்கள். சாருவின் நெற்றி மீது முத்தமிட்டான்.

என்னை நிச்சயம் திருமணம் செய்துப் பிங்க தானே. ஏமாத்திட மாட்டிங்க இல்ல?

முட்டாள், என்ன கேள்வி இது. நீ தானே என் சுவாசம் என்று கொஞ்சம் கோபமாய் சொன்னான்.

சாரு ஓடிச்சென்று அவன் மார்போடு சாய்ந்து கொண்டாள்.

பிறகு இருவரும் கிளம்பி அவரவர் வீட்டிற்கு சென்றார்கள். மறுநாள் அலு வலகத்தில் சாருவுக்கு பேரதிர்ச்சி காத்தி ருந்தது. ஹரிஷ் மாறுதலாகி ஹைத ராபாத் சென்று விட்டான் என பேசிக் கொண்டார்கள்.

சாருவுக்கு தலை சுற்றியது. நேற்று

கூட இதைப்பற்றி நம்மிடம் பகிர்ந்து கொள்ள வில்லை, கிளம்பும் போதும் நம்மிடம் சொல்லவில்லையே என்று ஹரிஷ் மொபைலுக்கு போன் செய்தாள்

ஸ்விட்ச் ஆஃப் என்று சொல்லியது கணினி குரல்.

இடிந்து போனாள் சாரு. மதுவிடம் நியூ இயர் இரவில் அவளுக்கும் ஹரிஷ்க் கும் நடந்ததை கண்ணீருடன் பகிர்ந்து கொண்டாள். நாங்கள் இருவரும் இணைந்த நேரத்தில் சாட்சியாய் அறையில் இருந்த மீன் தொட்டியில் உள்ள வண்ண மீன்களும், உயிர் இல்லாத பொருட்களும் தானே இருந்தது.

அவர் என்னிடம் உன்னை நிச்சயம் திருமணம் செய்து கொள்வேன் என்ற போதும் அந்த மீன்கள் இயல்பாய் நீந்திக் கொண்டு தான் இருந்தன. அவர் சொன்ன சத்தியத்தை அவர் மறந்து விட்டிருந்தால் நான் என்ன செய்வேன். நான் ஏமாந்த விஷ யத்தை எப்படி எல்லாரிடமும் சொல்வேன். அவர் இல்லாமல் எப்படி என் வாழ்வை வாழ்வேன் என்று கதறினாள்.

அழாதே சாரு. இந்த தவறை ஹரிஷ் எந்த நோக்கத்துடனும் செய்திருக்க மாட்டார். உன்னை போலவே அவரும் வருந்திக் கொண்டு தான் இருப்பார். விரைவில் உன்னை சந்திப்பார் என்று சாருவிற்கு ஆறு தல் கூறினாள் மதுமிதா.

ஆனால் நாட்கள் கடந்ததே தவிர எந்த தகவலும் கிடைக்கவில்லை. ஹரிஷின் உயிர் சாருவின் வயிற்றில் வளர ஆரம்பித்தது. மதுவிடம் சொல்லி அழுதாள். இருவரும் ஒன்றாக ஹைதராபாத் அலுவலகம் நேரில் சென்று விசாரித்தார்கள். ஹரிஷ் அங்கு வந்து பணியில் சேரவில்லை என்றும், சேர வந்த நாளில் விபத்தில் சிக்கி கோமா நிலையில் மருத்துவமனையில் அனும திக்கப்பட்டு இருப்பதும் தெரிந்து அதிர்ந்து போனார்கள். எந்த மருத்துவமனை என தெரிந்து கொண்டு இருவரும் பார்க்க சென் றார்கள். மருத்துவமனையில் நுழைந்து ஹரிஷ் பெயரை கேட்டு ஐசியூ வார்டுக்குள் நுழைந்தார்கள். ஹரிஷின் உடல் எங்கும் மின் வயர்கள், முகத்தில் வென்டிலேட்டர் கருவி என அசைவில்லாமல் படுத்துக் கிடந்தான். சாரு கண்ணீர் விட்டு அழு தாள். ஹரிஷின் தாய் அழுத படியே வந்து இரண்டு பேரில் யாருமா சாரு என்றதும், சாரு அழுகையை நிறுத்திவிட்டு கொஞ் சம் முன்னோக்கி வந்தாள். வந்ததும் கட்டியணைத்துக்கொண்ட ஹரிஷின் தாய் ஊரிலிருந்து கிளம்பும் போது உன்னைப் பற்றி தான்மா பேசிட்டு வந்தான். வந்த தும் உங்க வீட்டுக்கு வந்து பொண்ணு கேட்கணும், நாள் குறிச்சு கல்யாணம் பண்ணனும்னு பேசிக்கிட்டு சந்தோஷமா வந்தான்மா. இறங்கி நடந்து வரும் போது லாரியில் அடிபட்டு கோமா நிலைக்கு போய்ட்டான்மா என்றாள்.

கண்ணீருடன் சாரு மருத்துவரிடம், அனு மதி வாங்கி உள்ளே சென்று ஹரிஷிடம் அழுதபடிப் பேசினாள். நம்ம காதலோட சாட்சியாய் இப்போ என் வயிற்றுல நம்ம குழந்தை இருக்கு ஹரிஷ் என்னைப் பாரு உன்னை கட்டிப்பிடிச்சு இதை சொல்லணும் எழுந்திரு ஹரிஷ் என்று அழுதாள். ஹரிஷின் கண்களில் கண்ணீர் வழிந்தது. உடனே சாரு டாக்டரை அழைத்து வந்து காட்டினாள். பரிசோதித்து பார்த்து விட்டு ஓ மெடிக்கல் மிராகில் அவரு மூளை இப்போ செயல்பட ஆரம்பிச்சிடுச்சு. இன்னும் சில மணி நேரத்தில் அவர் சுயநினைவை அடைந்து விடுவார் என்றார். கடவுளுக்கு கண்ணீரால் நன்றி சொன்னாள் சாரு. ஹரிஷின் தாய் அவள் கைகளை பற்றிக்கொண்டு கண் ணீர் மல்க நன்றி சொன்னாள். விடியும் பொழுது சாருவுக்கு இன்பமானதாகவே இருக்கும் என்ற நம்பிக்கையில் நிலவு உறங்கிக்கொண்டிருந்தது..!!!

**மீ.யூசுப் ஜாகிர்,**
வந்தவாசி.

# எல்லோர்க்கும் புரிதல்



எதெற்கென்று புரிந்ததே
விடிகிறது காலை
எல்லோர்க்கும்.

நிசப்தம் கிழித்து
மெல்லப் பறக்க
திசைதேடி யோசிக்கும்
பறவைகள்.

அரைகுறைப் புணர்தலில்
அதிருப்தி முகத்தோடு
சோம்பல் முறிப்பாள்
எதிர்வீட்டுப் பவானியக்கா.

மரங்கொத்திக்கு
என்ன அவசரமோ
கிளையை ஓட்டையிடும்
மூர்க்கமாய்.

சர்க்கார் பயத்தில்
அவசரமாய்
அள்ளிப் போட்டுக்
கொண்டு
வழக்கமாய் ஜானாவிற்குத்
தரும்
முத்தம் மறந்து
அரக்கப் பறக்க
அலுவலகம் ஓடும்
ரங்கசாமி.
எனக்கு மட்டும்
விடிகிறது
ஏதெற்கென்றும் –
ஏதும் புரியாமலும்.

**நா.விச்வநாதன்**



# மற்றுமொரு நாள்

1.
டிசம்பர் 31
ஊசலாடிக்கொண்டிருக்கிறது
நீண்ட ஆயுளெனும்
ராசி பலன் தாங்கிய
நாட்காட்டியின்
கடைசித் தாள்.

2.
வருடத்தைச் சுமந்து
விடியலுக்காகக் காத்திருக்கிறது
பனி போர்த்திய இரவு.

உடைத்த போத்தலிலிருந்து
பொங்கும் நுரைகளாக
நாளைய கனவுகள்.

கோப்பைகளில் இட்ட
பனிக்கட்டிகளாகக் கரைகின்றன
பழைய சபதங்கள்.

மெழுகுவர்த்தியின் ஒளியில்
மலரக் காத்திருக்கிறது
மற்றுமொரு நாள்.

**அப்பு ராஜகுமார்**

# புது வருடம்

புத்தாண்டு மலர்ந்திட
புன்னகைப் பூக்கட்டுமே
சிந்தை மகிழ்ந்திட
சிந்தனை செழுமையாகட்டுமே


இதயங்கள் இணைந்திட
இனிமை இனிதாகட்டுமே
இதழ்கள் இனித்திட
இன்பம் பெருகட்டுமே

இயற்கை சீற்றங்கள்
இல்லாது இருக்கட்டுமே
மக்கள் மனதில்
நிம்மதி பரவட்டுமே

கோபதாபங்கள் உள்ளத்தை
விட்டு விலகட்டுமே
பகவலன் ஒளியில்
பனித்துளிபோல்
பகைமை மறையட்டுமே

உறவுகள் ஒன்றாகியே
உணர்வில் களிப்புறட்டுமே
ஒற்றுமை எங்கும் நிலவியே
நெஞ்சங்கள் நெகிழ்ந்திடட்டுமே..

**பெ.வெங்கட**
**லட்சுமி காந்தன்.**
விருதுநகர்



# வரமாகும் வாழ்க்கை

உள்ளத்தில் சூழந்திடும் கறைகளைப் போக்கி
உன்னத வாழ்வினை அடைந்திடல் நன்று
பள்ளத்தில் வெள்ளமாய் பண்புகள் சேர்த்து
பாரினில் வாழ்ந்திடல் மானிடர்க் குயர்வு
கள்ளமும் கபடமும் இல்லா தொழித்து
கருணையை நெஞ்சத்தில் மஞ்சமாய் நிறைத்து
அள்ள அள்ள குறைந்திடா அன்போடு
அனுதினம் வாழ்ந்திடல் ஆயுளுக் கழகு

மென்மையை நாவினில் மென்மேலும் பெருக்கி
மேன்மைப் பண்பினை எந்நாளும் நிறைத்து
வன்முறை விலக்கி வாய்மையைப் பெருக்கி
வாழும் வாழ்விலே வசந்தங்கள் தூவி
எண்ணத்தில் தூய்மையை வண்ணமாய் விதைத்து
இன்னலை கன்னலாய் இலகுவாய் நினைத்து
உண்மையே உயர்வென்று உவப்போடு எடுத்து
உலகிலே வாழ்ந்திடல் பிறவிக்கே பெருமை

அயரா துழைத்து ஆன்றோரை மதித்து
அறநெறி பயின்று அறிவினி லுயர்ந்து
செயல்களை சிரசிலே சின்னமாய் ஏந்தி
சீருடன் நடந்திட சிறக்குமே வாழ்வு
துயரங்கள் துடைத்து துன்பங்கள் போக்கி
தூய்மை உள்ளத்தை துணையாக கொண்டு
உயிர்களை உவந்து உறவினைக் கவர்ந்து
உலகினில் வாழ்ந்திடல் உன்னத செயலே

தருவினை போலவே தண்மையில் நிலைத்து
தார்மீக பொறுப்புடன் தரணியில் உழைத்து
கருவினில் காத்திடும் அன்னையைப் போலவே
கனிவுடன் வாழ்வதும் தனியான சுகமே
உருவத்தை விடுத்து உள்ளத்தை மதித்து
உள்ளன்பும் கருணையும் உணர்வினில் இணைத்து
வருத்தங்கள் காணாத வாழ்வினை அமைத்து
வாழ்ந்திடும் வாழ்வினில் இன்பங்கள் மலரும்
வறுமையில் செழுமையை செம்மையாய்ச் சூடி

அறநெறி முறைமைகளை வனப்புடன் நாடி
பொறுமையும் பெருமையும் துணையாகக் கொண்டு
பெருவாழ்வு வாழ்ந்திடல் பாரினில் சிறப்பு
குறுகிய சிந்தனை கருவோட ழித்து
குறைவிலாத் திருவோடு குதூகலம் கண்டு
நறுமணம் கமழும் நற்பணி புரிந்து
நாடு போற்றிட வாழ்ந்திடல் வரமே

வஞ்சனை யென்பதைநெஞ்சிலே யகற்றி
வாழ்வினை எஞ்ஞான்றும் வசந்தமாய் மாற்றி
வெஞ்சினம் விலக்கி வெகுளியை நீக்கி
வாஞ்சையோடு நம் வாணாளைப் பழக்கி
கொஞ்சமும் குழப்பங்கள் சூழ்ந்திடா வண்ணம்
குடும்பத்தில் குறைவிலா இன்பத்தைச் சேர்த்து
மஞ்சு போல் பஞ்சு போல் மனதினைத் தளர்த்தி
மண்ணிலே வாழ்திட மலர்ந்திடும் மகிழ்ச்சி.

**ஹாஜறா கலீலுர் ரஹ்மான்**
காத்தான்குடி.

# என் அவள்!!

அன்பென்ற வடிவில் அழகிய - நிலவாக
அரவணைத்து கரை சேர்த்திட்டாள்.
கலங்கிய பொழுது கட்டி அணைத்து
கண்ணீரைக் கரைத்திட்டாள்..
என் சிந்தனையில் மலர்ந்த கனவினை
சிகரம் ஏற்றி இன்புற்றாள்..
என் ஒவ்வொரு செயலிலும்
கலந்திருக்கிறாள் என் அவள்..

**பா.நூருல்லாக்**
மதுரை - 625002



காலையிலேயே சாப்பாடு போட்டோ
அனுப்பினால் கூகுள்ல சுட்ட தான்னு
கேட்குராணுவ..

அடேய் இது நான் சுட்ட இட்லி

**பிரியா பாரதி**

# புத்தக போதை



புத்தகங்கள் தரும்
நித்திய போதைக்கு
ஈடாக எங்கனுமில்லை
போதை வகையராக்கள்.

இரு வாரம் தாண்டியும்
மீண்டெழ வழியில்லா
சுகமான ராகங்கள்,காட்சிப்பிழைகள்
காருண்யக்கைமாறுகள்.

மூளையின் வடிவமைப்பை
சுருக்கி மடித்து ,
நீண்டு செல்லும்
மைக்கோ நரம்புகளை
கிளை பரப்பி
தீராத தாகத்தின் திசைகளில்
பயணிக்க விட்டு
அண்ட வெளியிடையே
சஞ்சரிக்க வைக்கும்
சில புத்தகங்கள்.

விழிநீர் வடிய
நாசிக்குள் புதிதாய்
புகுந்த சைனஸ் தொல்லையையும்
இணைத்து இன்ஸ்டன்டாய்
ஒரு சோகத்தைபரிசளித்து
விடைபெற்றுச்செல்லுபவையும்
ஒரு வகை.
உனக்கொன்று சொல்கிறேன்
கேள்...!

உன் வாழ்க்கையை
மட்டும் வாழ்வதானால்
தயவு செய்து
எந்தப்புத்தகத்தையும்
வாசித்து விடாதே...!

அது உனக்குள்ளே
ஓராயிரம் உருவகங்களை
ஏற்படுத்தும்.
கதாபாத்திரங்களை காட்சிப்படுத்தும்.
வாழ்தலின் வரைமுறைகளை
உன் முன் வகைப்படுத்தும்.

புத்தகமில்லாத உலகில்
வாழ்தலென்பது,
நியண்டதால் காலத்தில்
நீச்சல் கற்றுக்கொள்வதுபோலத்தான்.

**- ரிஷாதா ரஷீத்**
அக்குறணை, இலங்கை



# பெயர்வு வாழ்வில் நம்பகத்தன்மை

- தமிழ்மணி நகுலா சிவநாதன்

வாழ்க்கை என்ற வண்ணமான சுழற்சி நம்பிக்கை என்ற வித்திலிருந்தே பூக்கிறது. நம்பிக்கை என்ற வித்தே நாளைய வாழ்வை மலரச்செய்யும் சொத்து.

இன்றைய வாழ்வு சுகமும் சுதந்திரமும் நிறைந்ததாக இருப்பதால் எதுவும் செய்து வாழ்ந்துவிட முடியும் என்று எண்ணுகிறார்கள். இதனால் மற்றவர்களை அணைத்தோ! அன்பு செய்தோ வாழ முடிவதில்லை.

இது காலத்தின் கோலமா? வாழ்க்கையின் ஓட்டமா? இயந்திரமயமான சுழற்சியில் வெறுப்பும் மற்றவர்களை மதியாத தன்மை யும் மலிந்து, பெருகுவதைக் காண முடிகிறது

“அன்போடு இயைந்த வழக்கென்ப ஆருயிர்க்கு

என்போடு இயைந்த தொடர்பு”

உயிர்கள் எலும்புடன் கூடிய உடம்போடு பொருந்தி இருப்பது அன்புடன் பொருந்திய வாழ்க்கை வாழ்வதற்கே என்று வள்ளுவர் அழகாகக் கூறினார். ஆதலால் அன்பு செய்தே வாழ்வது என்பது எமது பண்பாகிறது.

இன்றைய இந்த பெயர்வு வாழ்வில் பலர் நம்பகத் தன்மையின்றி நடந்து கொள்வதைக் காணக் கூடியதாக உள்ளது. இது மனதளவில் கவலைத் தோற்றுவிக்கக் கூடியது. மனிதன் ஒரு சிறப்பு விலங்கு. தனித்து வாழ்வதைவிட சமுதாயமாக வாழவே முனைபவன். அப்படியான சமுதாய வாழ்வு நிலைக்கக்கூடியது.

மனித வாழ்வில் நாம் நம்பிக்கைப் பலத்தை உருவாக்கி, வாழ முற்பட வேண்டும். நம்பிக்கைப் பலமே தும்பிக்கையாகப் பயன்படும். மாறாக பாதிப்புகளை ஏற்ப டுத்துவதால் முன்னேற்றமான வாழ்வு, குன்றிப் போகிறது.

பணம் கொடுக்கல் வாங்கல் பொறுப்பு பதவி அன்புப்பரிமாற்றம் இவை

நம்பகத்தன்மையுடன் நடந்தால்தான் நாளை சமுதாயத்தில் பலவிடயங்களை கட்டியெழுப்ப முடியும். இது நம்மிடம் இல்லாமல் ஏன்பறந்து போகிறது? கால மாற்றமா? கடுகதி வேகமா?

நம்பகத்தன்மை என்பது ஒரு சிறந்த பண்பு. மக்களை வெகுவாக கவர்ந் திழுக்கும் பண்புகளில் இதுவும் ஒன்று. நம்பகத்தன்மை என்பது பேச்சில் மட்டும் இருந்துவிடக் கூடாது. மாறாக செய்யும் செயல்களிலும் இருக்க வேண்டும்.

நேர்மை, உண்மை உள்ளவர்கள்தான் இறைநம்பிக்கையுடன் வாழ்வார்கள்.

நம்பிக்கை, உடல், உள, ஆன்மீகம் சார்ந்த விடயம். நல்ல செயற்பாடுகள் இதனூடாகத்தான் அரங்கேறுகின்றன. இறை நம்பிக்கை வைத்திருக்கும் ஒவ்வொரு மனிதனும் கடவுளுக்கு பணிந்து நல்லன செய்வான். இதனால் நன்மையான செயற் பாடுகள் என்றும் நடைபெறும்.

நம்மிடம் நம்பி ஒப்படைக்கும் விடயங்கள் நாளை நம்பிக்கையோடு செயலாற்ற முனைய வேண்டும். இதனால் சமுதாயத்தில் நல்ல செயற்பாடுகள் விளையும்.

**நம்பிக்கையின்மை ஏன் ஏற்படுகிறது?**


மனிதரோடு மனிதர் புரிந்து பழகாத தன்மை, விட்டுக்கொடுப்பு இன்மை, புரிந்துணர்வு இல்லாத நிலைகளால் நம்பிக்கையின்மை ஏற்படுகிறது. காலப் போக்கில் இது நம்பகத்தன்மையை தோற்றுவிக்கிறது.

ஒவ்வொரு மனித செயற்பாட்டிலும் இறை நம்பிக்கை பலமாக இருப்பின் நம்பிக்கை இதயத்தில் பூக்கும். ஆனால் நம்பத்தகுந்த மனிதன் சமுதாயத்தில் அமைதியாக நட்பாக வாழமுடியும். நம்பிக்கை ஒரு சொத்து. நம்பினால் கெடுவதில்லை. நான்கு மறை தீர்ப்பு என்பர்.

ஆதலால் ஒரு சமூக மறுமலர்ச்சிக்கு திருப்திகரமான நல்வாழ்விற்கு நம்பிக்கைத் தன்மை எப்போதும். தேவை. என்பதை உளவியலாளர்கள் உறுதிப்படுத்துகிறார்கள்.

நம்பிக்கை இல்லாவிட்டால் நாளைய சமூகமே அழிந்துவிடும். எனவே எனவே நம்பிக்கைத் தன்மையோடு நாமும் வாழ்வோம். அடுத்த சந்ததியையும் வாழ வைப்போம்.

# துளிப்பாக்கள்



1.

வலையில் சிக்கிய மீன்
இழுபடும் கயிற்றில்
துடிக்கிறது நதி

2.

ஒற்றைத் தண்டவாளம்
கவிழாமல் நகர்கிறது
கட்டெறும்புகளின் வரிசை

3.

வளரும் காகம்
மெல்லக் கரைகிறது
பென்சில்

4.


நசுக்கியபடி செல்கிறது
இரயிலுக்கு எங்கே தெரியும்
பூவின் வாசம்

5.

உயர்ந்த கட்டிடம்
பள்ளத்தில் தெரிகிறது
சிதைந்த மலை

**ஐ.தர்மசிங்**
நாகர்கோவில்

# நாம் என்ன செய்யணும் சொல்லுங்கோ



**மதிப்பிற்குரிய தோழருக்கு,**

நீங்கள் அனுப்பிய ‘தேனி மாவட்ட சிறுகதைகள் தொகுப்பு’- இன்னும் கிடைக்க வில்லை. நீங்கள் சேலத்துக்காரராக இருந்தாலும் மாவட்ட ரீதியாக சிறு கதைகளை தொகுத்து வெளியிடுவது பாராட்டுக்குரியது. இதில் உங்களுக்கு எந்த பிரதிபலனோ, பண ஆதாயமோ கிடை யாது என அறிவேன். சமூகத்தின் மீதும் இலக்கியத்தின் மீதும் உள்ள அதீத பற்றின் காரணமாக உங்கள் சேமிப்பு தொகையை செலவிடுகிறீர்கள் என அறியும் போது நெகிழ்ச்சியாக உள்ளது.

அரசு தபால் துறையின் மூலம் அனுப்பும் போது அலட்சிய போக்கு நிகழ்வதால் உரிய நேரத்தில் புத்தகம் சென்றடைவதில்லை என்பது எனக்கும் அனுபவமே. அதனால், தனியார் தூதஞ்சல் மூலமாக கனிசமாக தொகை செலுத்தி அனுப்பி உள்ளீர்கள். ஆனால், மக்கள் சேவையில் பணம் பெற்று செயல்படுபவர்களும் சில நேரங்களில் அப்படித்தான் இருக்கிறார்கள் என்பதற்கு உதாரணமாக இருக்கிறது.

தூதஞ்சலிலிருந்து ‘புத்தக பையை’ எடுத்துக் கொண்டு அதில் குறிப்பிட்டுள்ள என் வீட்டு முகவரி முன் வந்து நின்று அலைபேசி மூலம் அழைத்து பார்த்துவிட்டு பதில் கிடைக்காததால் புத்தக பையை திருப்பி அனுப்பிவிட்டதாக தூதஞ்சல் நிறுவனர் சொல்கிறார். உண்மையில் அவர் அலைபேசி மூலம் அழைத்த எண் அவர்கள் இணைய முகவரியில் கொடுக் கப்பட்ட எண் அல்ல. நான் அந்த எண்ணை சேமித்து வைத்திருந்ததால் அந்த எண்ணின் அழைப்பை மட்டுமே எதிர் பார்த்திருந்தேன். தினமும் சேமிப்பில் இல்லாத பத்துக்கும் மேற்பட்ட விளம்பர அழைப்புகளுக்கெல்லாம் நான் பதில் கூறுவதுமில்லை. மேலும் புத்தக பை திரும்பி வந்துவிட்டதாக உங்கள் குருஞ் செய்தியை கண்டவுடன் தூதஞ்சலின் இணைய எண்ணுக்கு அழைப்பு விடுத்தேன். நான்கு முறை அழைத்தும் அவர்கள் பதில் கொடுக்கவில்லை. ஐந்தாவதாக அழைத்த போது சுட்சு ஆப் என்று குரல் விளக்கம் மட்டுமே கேட்டது.

நான் மறுநாள் விடுப்பு எடுத்துக் கொண்டு தூதஞ்சல் அலுவலகத்திற்கு சென்றேன். நான் அவர்களிடம் கேட்ட முதல் கேள்வி வீட்டு முகவரி சரியாக இருக்கிறது. அங்கு வந்து நின்று அலைபேசியில் அழைக்க வேண்டிய அவசியம் என்ன என்றும், வீடு பூட்டி இருந்தால் மட்டுமே அலைபேசியில் அழைக்க நேரிடும்தானே என்று கேட்டேன். அவர்களோ முகவரி சரியாக இருந் தாலும் அலைபேசியில் அழைத்து உறுதி செய்ய வேண்டியது எங்கள் கடமை என்றார். அதையே நீங்கள் வீட்டில் இருப்பவர்களிடம் கேட்டு உறுதி செய்து கொள்ள முடியாதா என்றும் அழைப்பை எடுக்காததால் புத்தக பையை திருப்பி அனுப்புவது பொறுப்பான செயல்தானா என்றும் கேட்டேன்.

இது எங்களுக்கு கொடுக்கப்பட்ட விதி என்றும் முடிந்தால் தலைமை அலுவலகம் சென்று முறையிடும்படி அவர் பதில்

தந்தார். சரி, நான் உங்களுக்கு அழைப்பு கொடுத்தேனே அதை நீங்கள் ஏன் எடுக்க வில்லை. நான்கு முறையும் மணி அடித்து ஓய்ந்ததே என்று கேட்டேன். எனது இந்த கோள்வியை சற்றும் எதிர்பார்க்காத அவர் முதலில் இல்லை, வரவில்லை! என்று சொல்லிவிட்டு தன் அலுவலக அலை பேசியை எடுத்து சரிபார்த்தார். அவர் முகத் தில் தோல்வியின் இருள் தெரிந்தது. நீங்கள் என் அழைப்பை ஏன் எடுக்கவில்லை. நான் உங்கள் சரியான இணையத்தில் உள்ள எண்ணுக்குத்தானே அழைப்புவிடுத்தேன். நீங்களோ வேறொரு எண்ணிலிருந்து எனக்கு அழைப்புவிடுத்தீர்களே எது சரி என்றேன்.

நாங்கள் எந்த எண்ணிலிருந்து அழைத்தாலும் பொருளை பெறுகிறவர் நீங்கள். எடுத்துத்தான் ஆகவேண்டும் என்று விடாப்பிடியாக தங்கள் தவறை மறைத்துக் கொண்டிருந்தார். ஒருவருக்கு சரியான முகவரி இருந்தும் அலைபேசி எண்தான் 'முகவரி' என்று பொருளை திருப்பி அனுப்பி விட்டீர்களே இப்போது நான் என்ன செய்ய வேண்டும் சொல்லுங்கோ என்றேன். அவருக்கு அது கையறு நிலை இல்லை. எனக்குத்தான் கையறு நிலை.

மக்களிடம் பணம் பெற்று சமூக பணி செய்பவர்கள் ஒருபடி, இரண்டுபடி இறங்கி வந்து வாடிக்கையாளரை அலைக்கழிப்பு செய்யாமல் தீர விசாரித்து கடமை ஆற்றலாமே.

நான் சிறிது மன அழுத்தத்தில் இருந் தாலும் மறுநாள் காலை தலைப்பு செய்தியை படித்த போது எனது ரத்த அழுத்தம் ஏறிவிட்டது. ஆம்! அந்த செய்தி 'மருத்துவரை கத்தியால் குத்திய இளைஞன்' செய்திதான்.

அந்த காலத்தில் வனத்தில் இருக்கும் சித்தர்கள் கடுமையான புற்று நோயையும் குணப்படுத்தினார்கள் அவரிகளிடம் மருத் துவம் பயின்றவர்களும் வைத்தியர்களாக இருந்தார்கள். வெத்தலை பாக்கு, இரண்டு ரூபாய் காணிக்கை தந்தால் போதும். நூறுவிழுக்காடு நோய் குணமாகி விடும்.

பணப் புழக்கம் அதிகமாகிவிட்ட மருத்துவமனைகளில் உண்மைத் தன்மை அருகிவிட்டது. தனியார் மருத்துவமனையில் புற்று நோய்க்கு சிகிச்சை எடுக்கும் போது மருந்துகளின் வீரியத்தால் தலை முடி உதிர்வதைவிட, அதிகப்படியான கட்டண விதிப்பால் நோயாளியின் தலை மொட்டையாகிவிடுகிறது. தங்கள் சேமிப்பை அனைத்தும் இழந்துவிட்டு இரண்டாம் பட்சமாகதான் அரசு மருத்துவமனைக்கு வருகிறார்கள் நோயாளிகள். அவர்களிடம் கனிவான பேச்சு இல்லை. அலட்சிய போக்கு. ஒவ்வொரு படி சிகிச்சைக்கும் கையூட்டு பெறுவது. பணம் கொடுக்காவிடில் கட்டாயமாக அடுத்த சிகிச்சைக்கு போகவிடாமல் தடுத்தல். மற்றும் மருத்து வர்களுக்கும்,செவிலியர்களுக்கும் இதில் சிறிது கூட பங்கு இல்லை யென்றாலும் மருத்துவமனை பணியாளர்கள் கையூட்டு பெற ரகசிய சங்கமே வைத்து செயல்படுகிறார்கள். அநேக அரசு மருத்துவ மனைகளில் இது போன்ற செயல்களால் நோயாளிகள் அலைக்கழிக்கப் படுவது போராட்டத்தில் இறங்கும் மருத்துவர்களுக்கு தெரியாதா? அல்லது, அரசுக்குத்தான் தெரியாதா? தங்கள் தவறுகளை மறந்து நீதி கேட்டு போராடுவதும் குற்றம்தானே?

இந்த கடிதத்தை எழுதி முடிக்கும் முன் நூறு முறை ரத்ததானம் செய்து விட்டேன்...கொசுவுக்கு. ஏழைகள் என்றால் எல்லோருக்கும் இளப்பம்தான்.

நாம் என்ன செய்ய வேண்டும் சொல்லுங்கோ!

இப்படிக்கு உங்கள் வாசகன்.

இடம்:தேனி.

**எஸ்.மைக்கேல் ஜீவநேசன்**

# பாதகத்தீ...

அடி பாதகத்தீ!
நுனியில் வைத்தாலும் பரவாயில்லை
அடியில் அல்லவா வைத்திருக்கிறாய் தீ
இப்பொது பற்றி எரிகிறது தேகமெங்கும்
நீ மூட்டிய நெருப்பு!

விரல்களால் பற்றியிருந்தால்
இத்தனை விளைவுகள் விளைந்திருக்காது
இதழ்களால் தீப்பற்றியதாலே இத்தனை வீரியம்!

கடிகாரத்தின் முட்கள் சாமத்தின்
நடுநிலை தாண்டிவிட்டது - ஆனாலும்
கொடுத்ததும் தீரவில்லை
பெற்றுதும் போதவில்லை என
கற்றதும் பெற்றதும் பெற்றதும்
கற்றதுமாய் இன்னும் இருவரும்!

எப்படியேனும் தீர்ந்தால் தானே பசி
நிறைந்தால் தானே வயிறு
சமைந்து கொண்டே இருக்கிறாய்
உன்னை நீ பசியாற்ற
சமைத்துக் கொண்டே இருக்கிறேன்
என்னை நான் பரிமாற!

நெடுநேர வேள்வியில் பிந்தைய இரவுக்குப்பின்
நீர் நிறைந்த வயல் போல நீ செழித்து கிடக்கிறாய்
பெரும் மழை வெள்ளம் வடிந்த வடிகால் போல் நான்
அயர்ந்து கிடக்கிறேன்!

இப்போது உன் அழகு
நீரு பூத்த நெருப்பாய்
என் கண்களுக்கு!



**-மகிழை சிவகார்த்தி**
புறத்தாக்குடி

# ஏட்டுலா கனவாக்கம் பணிப்பாளர்

# ஆஷிக் ஹுசைன்



> **உங்கள் நோக்கம் நிறைவேற வேண்டுமாக இருந்தால் உங்கள் எண்ணம் சீரானதாக இருக்க வேண்டும்**
>
> **- ஆஷிக் ஹுசைன்**

**1. உங்களைப் பற்றிய அறிமுகத்தை கூறுங்கள்**

*1997 ஜனவரி மாதம் 30 ஆம் திகதி இலங்கையில் கேகாலை மாவட்டத்தில் ஹெம்மாதகமை எனும் ஊரில் பிறந்தேன்.*

*எனது தந்தையின் பெயர் முஹம்மத் ஹுசைன், தாயின் பெயர் சித்தி மர்சூனா. எனது உடன் பிறந்தவர்கள் மொத்தம் ஒன்பது பேர். அதில் நான் ஏழாமவன். உடன்பிறப்பில் மூன்று பேரும், தந்தையும் இறைவனின் அழைப்பை ஏற்றார்கள்.*

*எனது ஆரம்பக்கல்வி தொடக்கம் உயர்தரம் வரையிலும் ஹெம்மாதகமை அல் அஸ்ஹர் கல்லூரியில் கல்வி கற்றேன்.*

*உயர்தரப் பரீட்சையின் பிற்பாடு மேற்படிப்புகளை தொடர முடியாத குடும்ப சூழ்நிலையினை கருத்திற்கொண்டு எனது பத்தொண்பதாவது வயதில் வேலையின் நிமித்தம் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் (UAE) இல் தனியார் நிறுவனம் ஒன்றில் உதவியாளனாக சேர்ந்தேன்.*

*அல்ஹம்துலில்லாஹ் சுமார் எட்டு வருடங்களைக் கடந்து இந்த வெளிநாட்டு வாழ்க்கை சென்று கொண்டு இருக்கின்றது.*

**2. இலக்கியம், சமூக சேவை மற்றும் மனிதவள மேலாண்மை விடயத்தில் உங்களின் தற் போதைய கவனம் செலுத்தப்பட்டு வருகின்றது. அந்த வகையில் இவ்வாறான துறையில் நீங்கள் பயணிக்க தூண்டுகோலாக இருந்த காரணிகள் பற்றி எம்முடன் பகிர்ந்து கொள்ள முடியுமா?**

நிச்சயமாக. என்னுடைய பாடசாலை காலத்தில் இருந்தே கதை, கட்டுரை, நாவல் போன்ற புத்தகங்கள் வாசிப்பதில் ஆர்வம் அதிகமாகவே இருந்து வந்ததுடன், டயரி எழுதும் பழக்கமும் உண்டு. அன்றாடம் வாழ்வில் நடை பெறுகின்ற சிறிய நினைவுகளாக இருந்தாலும் டயரியில் எழுதும் பழக்கம் எனக்குள் இருந்து கொண்டே வந்தது. வேலையின் நிமித்தம் வெளிநாடு வந்தமையினால் நானும் இயந்திர மனிதனை போல் இயங்க ஆரம்பித்து விட்டதால், டயரி எழுதும் பழக்கத்தை தொடர முடியாமல் போனது. அவ்வப்போது விடுமுறை நாட்களில் சில நேரம் உறவுகள் இல்லாத தனிமையிலும் அறுதலையும் நம்பிக்கையையும் என்னுள் ஏற்படுத்திக் கொள்ள சில வரிகளை அந்த டயரியில் எழுதி வருவேன். முன்னைய காலங்களில் எனக்கு சமூக வலைதளங்களில் நான் எழுதும் கவிதை, கட்டுரைகளை பதி விடுவதில் விருப்பமின்மையாகவே இருந் தது. காலம் உருண்டோட வேலைப்பளுக் களும் அதிகமாகி பொறுப்புக்களும் தலைக்கு மேல் வந்ததால் கையில் உறவாக என்னுடன் இருந்த அந்த டயரியும் காணாமல் போனது. அதன் பிறகு தொலைபேசி மூலம் சில நேரங்களில் வாட்சப் குழுமங்களில் மன திற்கு தோன்றும் விடயங்களை அவ்வப் போது பகிர்ந்தும் வருவேன்.

காலங்கள் கடந்து செல்ல 2023 இறுதியில் தான் பொறுப்புக்கள் குறைந்து, வேலையின் நேரங்களில் மாற்றங்கள் ஏற்பட மனம் நிறைவான ஒரு தருவாயில் இருந்த போது



2015 இல் பாடசாலை மாணவத் தலைவனாக...

எனக்கு மிகவும் பிடித்தமான ஒரு உறவின் வேண்டுகோளுக்கு பிற்பாடு மீண்டும் இலக் கியத்துறையில் ஆர்வம் காட்ட ஆரம்பித் தேன். அதன் பிறகு என் எழுத்துக்களை சமூக வலைதளங்களில் பதிவிட்டு வர அதற்கான ஒரு அங்கீகாரமும் கிடைத்தது. அது மட்டுமின்றி, இலக்கியத்துறைக்கு என்னால் முடியுமான ஒரு தொண்டை செய்ய வேண்டும் என்ற ஆர்வமும் என்னுள் வந்தது.

கடல் கடந்து இருந்தாலும் என் தனிமை யினை இல்லாமலாக்கி சமூகத்துடனான ஒரு இணைப்பில் இருக்கவும் இலக்கியத்துறை பெறும் பங்காற்றியது எனது வாழ்வில்

என்றால் மிகையாகாது.

### 3. இளம் வயதிலே இலக்கியத்தின் பக்கம் உங்களின் சமூக பயணத்தை முன்னெடுப்பதற்கான காரணம் என்ன?

எனது வாழ்க்கையில் கடினமான கால கட்டத்தில் உதவியவர்கள் ஏராளமான வர்கள் இருக்கின்றனர். அவர்களை கட்டாயமாக நினைவுபடுத்த வேண்டும். இறைவன் அவர்களுக்கு நற்கூலியையும் வழங்க வேண்டுமென நான் எப்போதும் பிரார்த்திக்கிறேன். அன்று அவர்கள் எனக்கு உதவும் போது நான் பிரார்த்திப்பது ஒன்று தான். இறைவா... நான் சிறந்த ஓர் நிலையை அடைந்த பின் என்னால் இந்த சமூகம் பிரயோசனம் அடைய வேண்டும். இந்த சமூகத்திற்கு என்னுடைய பங்களிப்பு பெறும் ஓர் பங்காற்ற வேண்டும் என்பதே என் ஆசையும் பிரார்த்தனையாகவும் இருந்தது. அந்த வகையில் தான் இன்று இறைவனின் அருளால் ஒரு சிறந்த நிலையினை அடைந்து இருப்பதால், எனக்கு மிகவும் பிடித்த துறை யான இலக்கிய துறையினை தெரிவு செய்து இதன் மூலம் சமூகத்திற்கு என்னால் முடிந்த முழு பங்களிப்பை செய்ய முடியும் என்ற நம்பிக்கையில் என்னுடைய வருமானத்தில் ஒரு பகுதியினை கொண்டு இறைவனின் துணையுடன் இந்த சமூகப் பணியினை சிறப்பாக செய்து வருகிறேன்.

### 4. ஏட்டுலா கனவாக்கம் அமைப்பின் மூலமாக நீங் கள் வெளியீடு செய்யும் இலக்கிய படைப்புகள் மற்றும் அந்த வெளியீடுகள் மூலமாக நீங்கள் எதிர்பார்க்கும் நீண்டகால அடைவுகள் என்ன?

இலைமறை காய்களாக ஈழத்து மண்ணில் இருக்கும் சிந்தனைத் திறன் மிக்க இளம் எழுத் தாளர்களின் இலட்சியக்கனவாம் புத்தக் கனவை நனவாக்கும் ஒரு செயற்திட்டம் தான் ஏட்டுலா கனவாக்கம் என்ற அமைப்பு.

இந்த அமைப்பினால் இலக்கியத் துறைக்கு என்னால் முடியுமான ஒரு பங்களிப்பினை செய்ய வேண்டும் என்ற எண்ணத்தில் எனது தலைமையில் உருவாக் கப்பட்டதுவே இந்த ஏட்டுலா கனவாக்கம் என்ற அமைப்பு.

இன்றைய நவீன உலகில் சமூக வலை தளங்களில் எழுத்துத் துறையில் உலா வரும் அதிகமானோர் இருப்பதை நாம்



யாவரும் அறிவோம். ஆனபோதிலும், அவர்களில் ஏராளமானோர் இலை மறை காய்களாக சமூகத்தில் இருந்து வருகின் றார்கள் என்பது நாம் காணக்கூடிய மறுக்க முடியாத உண்மையே. அதிலும் குறிப்பாக, எழுத்துத் துறையிலே சாதிக்க வேண்டும் என்றும் தன்னுடைய எழுத்துக்களும் தொகுக்கப்பட்டு ஒரு நூலாக வெளி யிடப்பட வேண்டும் என்றும் ஆசையுடன் பலர் இருக்கின்றனர். ஆனால் அவர்களு டைய எழுத்துக்களை நூலாக்கம் பெறச் செய்வதென்பது, தனியொரு நபரான தன்னால் மாத்திரம் முடியுமா? அத்தனை இலகுவானதொரு காரியமல்ல.

எனவே அவ்வாறு சிந்தனைத் திறன் வாய்ந்த எழுந்தாளர்களை இனங்கண்டு அவர்களுக்கான அடையாளத்தை உருவாக் கிக் கொடுப்பதற்காகவே இவ் ஏட்டுலா கனவாக்கம் என்ற குழுவுணர்வு தாங்கிய கூட்டு முயற்சியினை ஆரம்பித்துள்ளேன்.

இதன் மூலம் சமூகத்தில் இருக்கும்




சிந்தனைத்திறன் மிக்க இளம் எழுத்தாளர்களை உருவாக்கி அவர்களுக்கான அங்கீகாரத்தையும் ஏற்படுத்திக் கொடுக்கும் அதே சமயம், திறமைமிகு இலக்கிய வாதிகளையும் இந்த சமூகம் இலக்கிய துறையில் இழந்துவிடக் கூடாது.

தற்காலத்தில் எழுத்தாளர்கள் பலர் இருந்தாலும் இலக்கியவாதிகள் என்று சிறப்புக்குரியவர்கள் அரிதாகவே காணப்படுகின்றார்கள். அந்த வகையில் தற்காலத்திலும் எதிர்காலத்திலும் இலக்கிய துறையில் பல இலக்கியவாதிகள் உருவாக வேண்டும் இதன் மூலம் ஈழத்து மண்ணிலும் ஏட்டுலா கனவாக்க அமைப்பினால் பல இலக்கியவாதிகளை உலகுக்கு அறிமுகம் செய்ய வேண்டும் என்பதே என்னுடைய அமைப்பினதும் என்னுடையதுமான எதிர்கால அடைவாக இருக்கின்றது.

**5. உங்களின் தற்போதைய சமூகவியல் முயற்சிகள் நீண்ட காலத்திற்கு கொண்டு செல்வதற்காக நீங்கள் கட்டமைப்பு செய்துள்ள பொறிமுறை பற்றி சற்று கூறுங்கள்.**

உண்மையில் என்னை பொருத்த வரை யில் இலக்கியத்துறையில் எழுதுவதில் ஆர் வம் இருப்பதைவிட எழுதத்துடிக்கும் இதயங்களை ஊக்குவிப்பதிலே மிகவும் ஆர்வமாக உள்ளேன். அவ்வாறு சிறந்த திறமையான ஆளுமைகளை என் நட்பு வட்டாரத்திலும் சேர்த்தும் வைத்து இருக் கிறேன். இலக்கிய குழுமங்களை ஆரம்பித்து அதனையும் சிறப்பான முறையில் நடாத் தியும் வருகின்றேன்.

'மனம் இருந்தால் இடம் உண்டு' என்பது போல என்னுடைய நோக்கம் நிறைவேறவே என்னுடைய எண்ணத்தையும் சீராக்கி முழுமனதுடனும் செயற்பட்டும் வருகிறேன். எனவே நாம் ஒரு துறையில் சாதிக்கும் போது அதற்கான அங்கிகாரம் நிச்ச யமாக கிடைக்கும். மனம் தளராமல் எந்த




சூழ்நிலையிலும் இதனை விட்டு தூரமா காமல் இருந்தாலே இறுதிவரை சிறப்பான முறையில் கட்டமைத்துக்கொள்ள முடியும் என்று நினைக்கின்றேன்.

### 6. உங்களின் சமூக வாழ்வில் நீங்கள் பிரதானமாக எதிர்நோக்கும் சவால்கள் என்ன?

நான் தூரதேசத்தில் பணிபுரிகின்றவன் என்பதால் வேலைப் பளுக்களுக்கு மத்தியிலே இவ்வாறான வேலைத்திட்டங்கள், மற்றும் என்னுடைய தனிப்பட்ட எழுத்தாற்றலையும் வெளிப்படுத்தி வருகின்றேன். இதில் பிரதானமாக எதிர்நோக்கும் சவாலாக நேரமின்மை மாத்திரமே என்னால் சொல்ல கூடியதாக இருக்கின்றது. என்னென்றால் தன் கையே தனக்கு உதவி என்பது போல் உதவிட உறவுகளின்றி தனிமனிதனாக அத்தனை வேலைகளையும் பார்த்துக் கொண்டே தனிமையில் வாழ வேண்டிய வாழ்க்கை தான் வெளிநாட்டு வாழ்க்கை என்பது.





### 7. இலக்கியத்துறையில் சமூகத்திற்கு ஆற்றியுள்ள பங்களிப்புகள் பற்றி கூறுங்கள்?

இளம் எழுத்தாளர்களை ஊக்குவித்து அவர்களின் எழுத் துக்களை நூல் வடி வமாக்கி இலட்சியக்கனவை நிறைவேற்ற ஏட்டுலா கனவாக்கம் என்கின்ற அமைப்பினை நடாத்தி வருகின்றேன். அதில் இதுவரையில் இரண்டு நூல்கள் வெளி யீடு செய்து இருக்கின்றேன்.

அக்கரைப்பற்று மூபிதா அமீன் எழுதிய **'நிதர்சனத்தின் நிழல்'** *(06/07/2024)*

கண்டி / தெல்தோட்டை திக்ரா ஹனீபா எழுதிய **'வாப்பாக்கு'** *(03/11/2024)*




எதிர்வரும் 2025 பெப்ரவரி மாதத்தில் மூன்றாவது நூல் வெளியீடும் நடைபெற இருக்கின்றது என்பதனையும் தெரி வித்துக் கொள்கின்றேன்.

இரண்டு தசாப்தத்திற்கும் மேலாக இலக்கியத் துறையில் பெரும் ஈடுபாடு இல்லாமல் காணப்படுகின்ற எமது பிரதேசத்தில் அரிதாகி வரும் வாசிப்புப் பழக்கத்தை ஊக்குவிப்பதும், எழுத்துத்துறையில் ஆர்வமாக உள்ள அனைவரையும் இனங் கண்டு அவர்களையும் ஊக்கப்படுத்தி சிந்தனைத்திறன் மிக்க எழுத்தாளர்களை உருவாக்க வேண்டும் என்ற நன் நோக்கில் ஹெம்மாதகமை பிரதேசத்தில் இலைமறை காய்களாக உள்ள எழுத்தாளர்களை இனங்கண்டு அவர்களுக்கான அங்கீ காரத்தையும், அடையாளத்தையும் ஏற்படுத்திக் கொடுக்கும் அதே வேளை இச்சமூகத்திற்கு அவர்களின்



ஏட்டுலா கனவாக்கத்தின் இரண்டாவது நூலான திக்ரா ஹனீபா எழுதிய ‘வாப்பாக்கு’ நூல் வெளியீட்டின் போது…

திறமைகளை வெளிப்படுத்தும் ஒரு களமாக ஹெம்மாதகமை இலக்கிய மன்றம் எனும் நாமம் தாங்கிய குழுமத்தினை நான் 22.10.2024 அன்று ஆரம்பித்து சிறந்த ஆளுமைகளை எம் மண்ணுக்கு அடையாளப்படுத்தி வருகின்றேன்.

அண்மையில் தமிழ் நாட்டின் ‘திரு வள்ளுவர் உலக சாதனையாளர் அமைப்பு’ உலகெங்கிலுமுள்ள கவிஞர்களை ஒன்று திரட்டி உலக சாதனைத் தொகுப்பு ஒன்றை வெளியிட்டது. 1330 குறளுக்கும் 1330 கவிஞர்கள் 1330 கவிதைகள் படைக்க வேண்டப்பட்டது. உலகெங்கிலுமுள்ள 1330 கவிஞர்களுள் ஒருவனாக நானும் பங்கு கொண்டது மட்டும் இல்லாமல் இலங்கையில் இருந்து பல இளம் எழுத்தாளர்களையும் அதில் கலந்து கொள்ள வைத்தமைக்காக இலங்கையின் ஒருங்கிணைப்பாளராகவும் பணியாற்றிய வாய்ப்பு கிடைத்தது. அதற்காக ‘குறள் பணிச்செல்வர் விருது’ எனக்கு கிடைக்கப்பெற்றது.

ஜே. எம். ஐ நிறுவனத்தினால் வெளியிடு செய்து வருகின்ற நூறு கவிதைகளும், கவி ஞர்களும் கவிதை தொகுப்பின் இரண்டாம் தொகுதியாக வெளிவந்த விழுதுகள் நூலின் தொகுப்பாசிரியராகவும் செயல்பட்டு ஏரா ளமான இளம் எழுத்தாளர்களுக்கான ஒரு வாய்ப்பையும் ஏற்படுத்தி கொடுத்தேன்.

‘கல்விக்கு என்றும் முதலிடம்’ என்ற கருப்பொருள் தாங்கி சமூகசேவை செய்ய வேண்டும் என்ற நல்நோக்கில் சுமார் ஐந்து வருடங்களாக BBA Foundation என்கின்ற பெயரில் வசதியற்ற ஏராளமானவர்களுக்கு என்னாலான உதவிகளை செய்து வரு கின்றேன். அதே வேலை ரமழான் மாதத்தில் போட்டி நிகழ்ச்சிகள், நூல் வெளியீடுகள், ஆளுமைகளை கௌரவிக்கும் விழாக் களுக்கு அதனூடாக அனுசரணையும் வழங்கி வருகின்றேன்.

### 8. இலக்கிய ஆர்வலர்களுக்கும், ஆளுமையுள்ள இளைஞர் யுவதி களுக்கும் சொல்ல விரும்பும் செய்தி என்ன?

இலக்கிய ஆர்வலர்களுக்கு என்று குறிப் பிட்டு சொல்வதாக இருந்தால் இன்று ஏறாளமான இளம் எழுத்தாளர்கள் இருக் கின்றார்கள் இலக்கியத்துறையில் சாதிக்க வேண்டும் என்று அவ்வாறானவர்களை இனங்கண்டு அவர்களுக்கான சரியான வழிகாட்டுதல்களை செய்வோமாக இருந் தால் ஈழத்து மண்ணிலும் சிறந்த ஆளுமை களை உருவாக்க முடியும்.

ஏனென்றால் இங்கு ‘உன்னால் முடி யும்!! நீ முயற்சி செய்!! உன்னுடன் நான் இருக்கிறேன்’ என்று கூறி உற்சாகப்படுத்து வதற்கு யாரும் இல்லை என்பதனாலே

இங்குச் சிலரின் கனவுகள் வெறும் கற்பனையாகிப் போகின்றது. சாதிக்க துடிக்கும் முயலும் மனங்களின் பிணி பரிசு அல்ல. உத்வேகம் தரும் உயிரோட்டமான வார்த்தைகள். அவற்றை அவர்களிடம் சொல்லிப் பாருங்கள் சமூகத்தில் மாபெரும் புரட்சிகளை தோற்றுவித்து விடுவார்கள்.

உருவாகி இருப்பவர்களை ஊக்கபடுத்தி கொண்டடுவதை விட உருவாக துடிப்பவர்களை ஊக்கப்படுத்த முயற்சி செய்யுங்கள். அனுபவம் வாய்ந்த இலக்கியத் துறையில் ஏறாளமானவர்கள் இருந்தாலும் போதி யளவு வழிகாட்டுதல்கள் இளம் எழுத்தாளர்களுக்கு இல்லாமையினாலே இன்றுவரை ஒரு குறையாகவே காணப் படுகின்றன.

அதுபோலவே இன்றைய நவீன காலத்தில் இளம் எழுத்தாளர்கள் சமூக வலைதளங்களில் அதிகமாக அவர்களது திறமைகளை வெளிக்காட்டி வருகின்றார்கள். அதனை அவர்களை அடையாளப்படுத்தும் ஒரு தளமாகவே பயன் படுத்திக்கொண்டு இருக்கின்றார்கள். எனவே உங்களிடம் இருக்கும் திறமைக்கு மதிப்பளியுங்கள் ஏதோ ஒரு சந்தர்பத்தில் அது உங்கள் வாழ்வில் கைகொடுத்து தலை நிமிர்ந்து வாழவைக்கும். நம் திறமையின் வெற்றி தோல்வி நம் கையில் சந்தர்ப்பம் வரும்போது அது தானாக திறக்கப்படும்.


'வாழ்க்கை இப்படித்தான் இருக்கும் என்று எதற்கும் முற்றுப்புள்ளி வைக்க வேண்டாம். இறைவன் நாடினால் அதிலிருந்து புதியதொரு தொடக்கதை ஆரம்பித்து வைப்பான்.

உங்களால் முடியாது ஒன்றும் இல்லை நீங்கள் முயற்ச்சிக்காமையே தவறாகும். எதுவாக இருந்தாலும் முயற்சி செய்து பாருங்கள். அது கிடைத்துவிட்டால் வெற்றி..! கிடைக்காவிட்டால் அனுபவம் என்று நம்பிக்கையை ஆழமாக விதையுங்கள்.

வாழ்க்கையில் சோதனைகளும், பிரச்சினைகளும் வரும் போது தான் நாம் யார் என்பதை நாமே உணர்கின்றோம். எதுவும் இவ்வுலக வாழ்க்கையில் நிரந்தரமில்லை..! எல்லாம் சில காலம் தான். ஆகவே எந்த சூழ்நிலையிலும் கற்ப வனாகவே இருந்து வாருங்கள். அதுவே உங்கள் தரத்தை மேன் மேலும் வளர செய்யும்.

**9. தங்களின் பணிகளுக்கு துணையாக செயலாற்றும் தோழர்களைப்பற்றிச் சொல்லுங்கள்?**

'நன்றி சொல்ல பழகிகொள்ளுங்கள் அது உங்களை நல்ல மனிதநேயம் உள்ள மனிதனாக மாற்றும் பண்புகளில் ஒன்றாகும்' என்ற கூற்றுக்கினங்க என்னுடைய எல்லா செயற்பாடுளின் போதும் எனக்கு துணை யாய் இருந்தவர்களை நினைவு படுத்தி நன்றி தெரிவிப்பது எனது வழக்கமான









செயல்களில் ஒன்றாகும்.

அந்தவகையில் இன்று இந்த இடத்தில் சிறந்த ஆளுமையுடன் சமூகத்தில் ஒருவனாக இருப்பதற்கு பெறும் துணையாக இருந்தவர் பெயர் குறிப்பிட விரும்பத்தக்க ஒரு நல்ல நண்பர் தான் என்பதில் நான் பெருமிதம் கெள்கிறேன். மீண்டும் இலக்கியத்துறைக்கு வருவதற்கு என்னை வழிகாட்டி எல்லா நேரத்திலும் உதவியாக இருந்து சிறந்த இலக்கிய ஆளுமைகளை எனக்கு அறிமுகப்படுத்தி வைத்து எனக்கான ஒரு அடையாளத்தையும் அங்கீகாரத்தையும் ஏற்படுத்தி தந்த அந்த நல்ல உள்ளத்திற்கு முதற்கண் நன்றி தெரிவிப்பது மட்டும் இல்லாமல் என்னுடைய சேவையில் முழுமையான பங்கும் அவர்களுக்கு கிடைக்க வேண்டும் என்று நான் எப்போதும் பிரார்த்தனை செய்து வருகின் றேன்.

அதுபோல என்னுடன் இணைந்து உறவுகளாக துணைக்கரம் நீட்டுகின்ற ஏட்டுலா கனவாக்கம் குழும உறுப்பினர்கள் அனைவருக்கும் நன்றி சொல்ல நான் கடமைப்பட்டுள்ளேன். பொருளாதார ரீதியாக என்னுடைய பங்கு இருந்தாலும் நூலுருவாக்கம் செய்து அதனை வெளியீடு செய்கின்றவரை அணைவரினதும் ஒத்துழைப்பு பெரும் துணையே.

அந்த வகையில் ஏட்டுலா கனவாக்கத்திற்கு வருகின்ற அனைத்து நூல்களையும் திறன்பட திருத்தம் செய்து நூலுருவாக்கத்திற்கு பெறும் பங்காற்றுகின்ற என் அன்புக்குரிய ஆசான் தமிழ் மண் ஈன்றெடுத்த முத்து தமிழ் நெஞ்சம் சஞ்சிகையின் பிரதம ஆசிரியர் அமீன் முஹம்மட் அவர்களுக்கு நன்றியினை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அவர்களுடன் இணைந்து கவிதைகளை திறன்பட ஒழுங்கமைத்து திருத்தம் செய்து நூலுருவாக்கம் செய்ய என்னுடன் துணை நிற்கின்ற ஹாஸ்மியா தாஹா மற்றும் அதீகா மசூர் அவர்களுக்கும் இப்பதிவில் நேச நன்றிகளை தெரிவித்துக் கொள் கிறேன்.




2024 இல் நீவதீ மிழிதுஷ்யி 'சிறந்த ஆளுமைகளை கௌரவிப்பதற்கான விருது வழுங்கல் நிகழ்வில் **Sponcership** வழுங்கியமைக்காக வழுங்கப்பட்ட விருது.

எங்களுடைய நூல்களை கவர்ச்சிகரமாகவும் நேர்த்தியாகவும் சிறந்த முறையில் வடிவமைப்பு செய்து ஏட்டுலா கனவாக்கத்தின் அனைத்துவகையான வடிவமைப்புக்களையும் எந்த எதிர்பார்ப்பும் இல்லாமல் செய்து தருகின்ற என் அன்புக்குரிய சகோதரி ஷகீலா உமர்டீன் அவர்களுக்கு இத்தருணத்தில் நான் நன்றி சொல்ல கடமைப்பட்டு இருக்கின்றேன்.

அடுத்து இந்த நூலை அச்சுட்டு செய்வதற்காக உதவியாகவும் நிகழ்வுகளின் போது நான் இல்லாத குறையினை நிவர்த்தி செய்து விழாவிற்கு தலைமை தாங்கி நடாத்தி தருகின்ற மூதூர் ஜே.எம்.ஐ நிருவனத்தின் பணிப்பாளர் J.M.I இஹ்ஸான் அவர்களும், நிகழ்வை நேரலையாக அனைவரும் காண

வேண்டும் என்பதற்காக முக நூல் வாயிலாக நேரலை வழங்கி, ஊடக அனுசரணையும் வழங்குகின்ற என் அன்புக்குரிய நண்பன் RJ Media பணிப்பாளர் முஹம்மத் இன்ஷாப் அவர்களுக்கும் என் நேச நன்றியினையும் தெரி வித்தவனாய்.

பஹ்ரியா பாயிஸ், ரஜா முஹம்மத் அவர் களுக்கும் இத்தருணத்தில் என்னுடன் இணைந்து குழுமத்தில் பல வேலை திட்டங்களை செய் கின்றமைக்காக நன்றி களை தெரிவித்துக் கொள்கிறேன்.

ஹெம்மாதகமை இலக்கிய மன்றத்திலும் எமது ஊரினை பிரதிநிதித்துவப்படுத்தி ஏராளமான தோழமைகள் எல்லாச் சந்தர்ப் பத்திலும் துணையாய் இருக் கின்றார்கள் அவர்களுக்கு இந்த தருணத்தில் நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றேன்.

மிக முக்கியமாக இலக்கிய நட்பு வட்டா ரத்தில் இருக்கின்ற அதிகமானவர்கள் நான் இன்னும் நேரில் சந்தித்தது கூட இல்லை. இருந்தாலும் எனக்காய் எல் லா முமாய் எப்போதும் உதவிக்கரம் செய்ப வர்களாகவே இருக்கின்றனர்.

இன்னும் பெயர் குறிப்பிட்டு சொல் பவர்களாக இருந்தால் ஏட்டுலா கன வாக்கத்தின் மூலம் வெளியீடு செய்கின்ற நூல்களுக்கு குறிப்பு எழுதி அதற்கான அங்கீகாரத்தை எல்லாம் வெளியீடுகளின் போதும் செய்து தருகின்ற கலாபூசணம் பாலமுனை பாரூக் ஆசிரியருக்கும் நன்றி சொல்ல கடமைப்பட்டுள்ளேன். இலக்கியத் துறையில் எல்லா செயற்பாடுகளிலும் உத வியாக இருக்கின்றவர்களாக முஸ்னி முர்ஷித், கவிதாயினி நதீர வசூக் ஆசிரியை, அமானா ஸஹ்ரான் இளம் எழுத்தாளர், இன்னும் பெயர் குறிப்பிட விரும்பத்தக்க உறவுகள், தோழமைகள் அணைவருக்கும் இத்தரு ணத்தில் நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

### 10. தமிழ்நெஞ்சம் பற்றிய தங்களின் கருத்துகளைச் சொல்லுங்கள்

இலக்கிய உலகில் பல எழுத்தாளர் களுக்கு வழிகாட்டியாகவும்..

தன்னுடைய வயதுமுதிர்ந்த நிலையிலும் தனது உழைப்பையும் திறமையும் இன்னும் வெளிக்காட்டிக்கொண்டு இலக்கிய உல கிற்கு உதவிக்கொண்டு பல இளம் ஆளுமை களுக்கு வாய்ப்புகளையும் வழங்கிக் கொண்டு பல நூல்கள், சஞ்சிகைகள் வெளி வரவும் பின்புலமாக இருக்கின்ற மதிப்புக்கும் மரியாதைக்குறிய என் அன்பின் ஆசான் தமிழ் மண் ஈன்றெடுத்த தமிழ் முத்து அமின் ஆசிரியரின் தலைமையில் சும்மார் ஐம்பத்தி மூன்று வருடங்களாக தமிழ்நெஞ்சம் சஞ்சிகை வாசகர்களாகிய நமக்கு இலக்கிய விருந்து அளித்துக்கொண்டு இருக்கின்றது என்றால் மிகையாகாது.

நான் இலக்கியத்துறைக்கு வந்த பிற்பாடு என்னுடைய சிந்தனை வரிகளுக்கு முதல் அங்கீகாரம் தந்து சஞ்சிகையில் என் வரி களை பிரசுரித்து அடையாளப்படுத்தியது தமிழ்நெஞ்சம்.

மாதா மாதம் ஒரு ஆளுமையினை உல கிற்கு அறிமுகப்படுத்தி இலக்கியத் துறைக்கு பெறும் பங்காளியாக தன் பயணத்தை தொடர்ந்தும் பயணித்து கொண்டு இருக் கின்றது தமிழ்நெஞ்சம்.

பிறக்கின்ற புத்தாண்டை வரவேற்க எனக்கான ஒரு அங்கீகாரத்தையும் தந்து இம்மாத ஆளுமை பகுதியில் என்னை அடையாளப்படுத்திய தமிழ்நெஞ்சம் மென் மேலும் சிறப்புற வேண்டும்.

வரிகளை கொட்டித்தீர்த்து உன் புகழ் பாட வேண்டும். நன்றிகள் சொல்ல வார்த் தைகள் தேடி அலைகிறேன்.

உம் சேவைகளும், உம் எழுத்துக்களும் இப்பாரினில் இன்னும் பரவட்டும்

**நேர்காணல் செய்தவர் : தமிழுமின்**

# வெற்றியும் வெகுமதியும்

வெற்றிக் கோப்பையை வென்றவர் எல்லாம்
பற்றியே இருந்தது உழைப்பையும் ஊக்கத்தையுமே!
சுற்றியே இருக்கும் சூழலையே வாய்ப்பாக்கி
சற்றும் குறையாத முயற்சியால் சாதிப்பரே!

இலக்கொன்று கண்டே இயங்குதலும் நன்றே!
விலக்கிடும் சோம்பலே வழிகளிலே ஒன்றே!
திட்டமிட்டு களத்திலே துணிவுடன் இன்றே
நட்டமின்றி நாமும் நடப்போம் வென்றே!

தோற்றலுக்கும் வெற்றிக்கும்  தூரமில்லை அருகிலே!
காற்றடிக்கும் போதினிலே தூற்றுகின்ற செயலதே!
சாற்றிடவே மாலைகளோடு வந்திடும் வெகுமதியே!
கற்றிடவே சோதனைகளைத் தந்திடும் வாழ்விதே!



**கவிஞர் மாலதி இராமலிங்கம்,**
புதுச்சேரி.

---

# பஞ்சம்

பஞ்சமது ஆடையானால்
பாழுமுடல்  தவிக்குமே
பஞ்சமது நீரானால்
பாழுமுடல் தவிக்குமே
பஞ்சமது உணவானால்
பாழுமுடல் தவிக்குமே
பஞ்சமது அன்பானால்
பாழுமுடல் தவிக்குமே

பஞ்சமது அறிவானால்
பாழுமுடல் துடிக்குமே
பஞ்சமது சுகமானால்
பாழுமுடல் துடிக்குமே
பஞ்சமது சுவாசமானால்
பாழுமுடல் துடிக்குமே
பஞ்சமது உணர்வானால்
பாழுமுடல் துடிக்குமே

பஞ்சமது பஞ்சமாகி
பஞ்சமின்றி போனால்
நெஞ்சமது சுகமேகி
நெஞ்சம் இனிதாகும்
துஞ்சுவது இனிதாகி
துஞ்சலும் வழக்காகும்
பஞ்சபூத உடலில்
பஞ்சபூதம் சமமாகும்

**செ. இலட்சுமணக்குமார்**
ஈரோடு

# நாளைய விடியலின் நம்பிக்கை விதைகள்



பூக்களின் தோட்டத்தில்
முட்களை விதைக்காதீர்கள்//
கண்ணாடிப் பூக்களைக்
கல்கொண்டு அடிக்காதீர்கள்//
சிகரந் தொடமுன்
சிறுவரெம் சிறகையுடைத்து//
சிறையில் போடும்
சிந்தனையற்ற மாந்தரே//

பேசினால் வாயாடியென்று
பேசுங்கலையை முடக்குகிறீர்கள்//
கூடியோடி விழையாடப்
பாரதி பாட்டிசைத்தான்//
பகல் முழுதும் பள்ளியில்
மாலையிலும் பகுதிநேர வகுப்புகள் //

பெற்றோரின் விவாகரத்தால்
தனிமையில் எம் இரவுகள்//
ஏமாற்றப்படும் காதலரால்
அப்பன் பெயர் தெரியாதவர்கள்//
அனாதை இல்லம் சீர்திருத்தப் பள்ளிகளில்
கழிகிறது எதிர்காலம்//

குயிலின் குரவளையில்
குண்டூசிகளால் குத்திவிட்டு
கூவெனக் குரைக்கிறீர்கள்//
மயிலின் கால்களில்
சுமைகளைக் கட்டிவிட்டு

ஆடென அதட்டுகிறீர்கள்//

சிறுவர் எமக்கென்று
உரிமைகள் இல்லையா?
சுதந்திரம் தருவதில் தொல்லையா?
எந்திரன் போலெமைத் தந்திரமாய்
உங்கள் ஆசைகளில் இயக்குகிறீர்கள்!

சிட்டுக் குருவிகளெமைச்
சுட்டுக் கொல்கிறீர்கள்!
பட்டாம் பூச்சிகளெம்
வர்ணங்களைச் சிதைக்கிறீர்கள்!
சின்னத்தனமாய்ச் சீண்டியே
சீரழித்துப் புதைக்கிறீர்கள்!

பாலின்றிப் பாலகர்
பசியால் சாவதும்,
பாலியல் வன்கொடுமைகளால்
பாழாக்கப் படுவதும்;
தொடர் கதையாகுதே!

‘ஆசிபாவிற்கு அபயமளிக்கவில்லை
ஆர்த்திக்கு நீதிகிடைக்கவுமில்லை
சாமியும் சட்டங்களும்
வேடிக்கை பார்த்தது உண்மேயே‘
இன்னும் எத்தனை சிறார்கள்?

எமதுலகைப் பாருங்கள்
அன்பில் அழகானது//
சாதி இனமத
பால் வர்க்கமென்கின்ற
தர்க்கங்களில்லை நம்மிடையே//
வெள்ளைப் பூக்களுக்கு
நிறமொழி வேண்டுமோ?
எண்ணங்கள் எழில்மிகு
வண்ணங்களால் நிறைந்தது//

எமதுரிமைகளை
நாம் அனுபவித்து
வாழக்கூடிய நிலை
நிலவாது போயின்!
இங்கு வருங்கால உலகேது?
நாளை நமதென்போரே
நாம்தான் அதுவென்பதை
மறந்து போனீர்களே!
கண்ணில் துளிர் தோன்றும்வரை
மண்ணுள் விதைத்த விதைக்கு
நீரூற்றுங்கள்,உரம் போடுங்கள்
சுற்றிலும் வேலியடைத்துக் காத்திருங்கள்
சட்டங்களிலும் திட்டங்களிலும்
எமக்கான மட்டங்கள் உயரவேண்டும்
பட்டங்கள் பதவிகளில்
பாரபட்சங்கள் நீங்கவேண்டும்
கட்டங்களின் விட்டங்கள்
எட்டுத் திக்கிலும் படரவேண்டும்

வனப்பாக்கி வாய்ப்பினைத்
தாருங்கள் நம் கையில்
வளமான எதிர்காலத்தில்
கனிதரும் மரங்களாயிருந்து
நாமே நாளைய விடியலின்

நம்பிக்கை விதைகளாய்ப் பிறப்போம்//

உடுவிலூர்
**இரத்தினம்.ஜோர்ஜ் றஜீவ்சன்**
(பிரான்ஸ்)



# உயிர்த்தல்

மேற்றிசைக் காற்றில்
சுழன்று பறக்கிறது
ஒற்றைச் சருகு
பந்தம்விட்ட குறிப்போடு.

சிறுசுகள் தாவிப்பிடிக்க
முயன்றனர்.
அம்மன் ஊர்வலத்தில்
மறைந்து கொண்டது.
மோட்சம் புகும்
உத்தேசம்.

மேலத்தெரு சோதிடர்
வீட்டு முகப்பில்
உட்கார்ந்தது.

உற்றுப்பார்த்தால்
ஏதோ
சிரிப்பதைப் போல.

சின்னத் தென்றலில்
இறுதி ஊர்வலத்தில்
புகுந்து கொண்டது.

காலடியில் நசுங்கிச்
சிதைந்து போய்விடுமோ
என்று பதைபதைத்தால்

சிவன் கோயில்
கோபுரக் கலசத்தின்
கூர்முனையில்
உட்கார்ந்து கொண்டது.
கடவுளை அதிகாரம்
செய்வதுபோல.



திண்ணையில்
தூங்கிக் கொண்டிருந்த
கிழவனின் தலைதடவி
சிநேகத்தோடு
வீடுபுகுந்து
கொல்லையில் போய்க்
கரைந்து போனது.
அலகிலா விளையாட்டா
பயம் தொலைத்த
சருகுக்கு.

எட்டிப்பிடித்து விடலாம்
எனில்
ஆகாயம் தாவி
மறைந்து போகும்
பேரதிசியம்
சொல்லி மாளாது.

சற்றே நிமிர்ந்தால்
மரக்கிளையில்
சின்னதாய்த் தளிர்
கண்சிமிட்டியபடி.

**நா.விச்வநாதன்**

# சொல்லால் அடித்த சுந்தரன்!

மந்திரி கமலா சுப்ரமணியன் மாடியிலிருந்து இறங்கிக் கொண்டிருக்கும் போதே, உதவியாளர் அன்றைய புரோக்ராம் களைச் சொல்லிக்கொண்டே வந்தார்.

கமலா சுப்பிரமணியனை சந்திக்க வந்திருந்தவர்கள் வரவேற்பறையில் காத்திருக்க, 'மகாதேவ் எங்கே?' என்று கேட்டார்.

வேலைக்கார பெண்மணி 'இன்னும் தூங்கி முழிக்கலீங்கம்மா?' என்றாள்.

'இன்னும் என்ன தூக்கம், சே! ப்ளஸ் டூ படிக்கிறோம், ஒரு பாடத்திலே கூட பாஸ் மார்க் வாங்கவில்லை. படிக்க வேண்டும் என்ற அக்கறையேயில்லையே' என்றவாறு மகாதேவ் படுக்கையறையினுள் நுழைந்து அவனை தட்டி எழுப்பினாள்.

'மம்மி தூங்க விடுங்க' திரும்பவும் இழுத்து மூடிக்கொண்டு தூங்க எத்தனித்தான். 'சே! எல்லாம் உங்க அப்பன் கொடுக்கிற செல்லம். எழுந்திருடா தடி மாடு' என்று கத்தினாள்.

'எழும்பி நான் இப்போ என்ன செய்ய வேண்டும்' அமர்ந்தான் மகாதேவ்.

'ஒரு சப்ஜெக்டிலேயாவது இதுவரை பாஸ்மார்க் வாங்கியிருக்கிறாயா? இதுவரை என் அரசியல் ஆதாயத்திலே உன்னை பாஸ் பண்ண வச்சாச்சு. எஸ்எஸ்எல்சியிலேயே உன்னை பாஸ் பண்ண வைக்கப்பட்ட பாடு... ஏற்கனவே கட்சியிலே கெட்ட பேரு... இதிலே மந்திரியின் மகன் பிளஸ் டூவில் பெயில்னு கொட்டை எழுத்திலே அச்சிலே வந்து அது வேறே புது அவமானம் வரப்போது. எழுந்திருச்சு படிடா மடையனே''

'என்னாலே முடியலையே மம்மி' கண்களைக் கசக்கினான்.

'என் ராஜா, இல்லே, கண்ணில்லே,..... படிக்க முயற்சி செய்யுப்பா'

'சரி பக்கத்திலே உட்கார்ந்து சொல்லிக் கொடேன்'

'இந்த வேண்டாத ஆசைகள் எல்லாம் புதுதினுசாக இருக்கு. மகாதேவ் எனக்காக வெளியே எத்தனை பேர் காத்துக் கொண்டிருக்கிறார்கள் தெரியுமா?'

'எனக்கு படிக்க வரலியே மம்மி, உனக்கு சிவபாலன் வாத்தியாரை தெரியுமில்லையா? அவர்கிட்டே என்னை டியூசனுக்காகவாவது சேர்த்து விடு. அவரிடம் டியூசன் படிக்கிற பையன்கள் அத்தனை பேரும் பாஸ் பண்ணி விடுகிறார்கள். அவர் போர்டு எக்ஸாம் மெம்பரும் கூட. அவர் ஒரு முறை டியூஷனில் சேர்த்துக் கொண்டால் அப்புறமாக அவர் கையைக் காலைப் பிடித்தாவது...'

'சீ! இன்னும் படிக்க விரும்பவில்லை. பிள்ளையாருக்குத் தேங்காய் உடைத்தே பாஸ் பண்ணி விடணும்கிற குரூப்பிலேயே இருக்கிறாய். சரி, சிவபாலன் சார் கொஞ்சம் குட்டையா சிவப்பா இருப்பாரு. கண்ணாடி போட்டுக்கொண்டு எப்போதும் கக்கத்திலே ஒரு வெள்ளைத் துணிப்பை வைத்துக் கொண்டு வருவார். அவர் தானே!'

'ஆமாம் மம்மி. உங்களுக்கு எப்படி தெரியும்?'

'எனக்கும் ஒரு காலத்திலே அவர் கிளாஸ் டீச்சரா இருந்தார். அவரிடம் ரொம்ப வம்பு பண்ணியிருக்கிறேன். சரி நாளைக்கு'. ம் 'ராமராஜன்' என்று உதவியாளரை அழைத்தாள்.

'என்ன மேடம்'

'நாளைக்கு காலையிலே என்ன புரோக்ராம்?'

'மேடம். மாதர் சங்க இருபத்தைந்தாம் ஆண்டு விழாவிலே குத்து விளக்கேற்றப் போறீங்க. அப்புறம் அரசாங்க ஆஸ்பத்திரியிலே கலவரத்திலே அடிப்பட்ட ஆட்களைச் சந்திக்கப் போறீங்க'

'ஓகே. மாதர் சங்கம் போவதற்கு முன்னால் நாம் முதலிலே மகாதேவனின் பள்ளிக்கு போய் விட்டுப் போகிறோம் சரியா?'

'ஒ.கே மேடம்'

'தேங்க் யூ மம்மீ' என்றான் மகாதேவ்.

'எனக்கென்னடா தேங்க்ஸ், எல்லாம் உனக்காகத்தான் இந்த ஓட்டமும், சாட்டமும்' என்று எழுந்து வெளியே காத்திருந்தவர்களைச் சந்திக்கச் சென்றாள்.

மறுநாள் காலையில் வீட்டிலிருந்து கிளம்பி நேராக டான்பாஸ்கோ மேல் நிலைப் பள்ளிக்குக் கிளம்பினாள் கமலா தேவி தன் மகனுடன்.

பிரின்ஸிபாலிடம் தன்னை அறிமுகப் படுத்தாமலே வரவேற்கப்பட்டு தடபுடலான உபசாரங்கள் நடந்தன.

ஆசிரியர் சிவபாலன் வந்ததும், 'மகாதேவ் நீ வகுப்பிற்கு போ' என்றாள்,

'சார். என் மேலே நீங்கள் கோபத்திலே இருப்பீர்கள் என்று தெரியும். மந்திரியோட மகளாக அன்று இருந்ததால் அப்படியெல்லாம் விளையாடப் போய்... உங்களுக்கு வேண்டுமென்றே நான் காதல் கடிதம் கொடுத்து, அதற்குபதில் உங்க கையெழுத்திலே தயாரித்து தோழிகளெல்லாம் சேர்ந்து கொட்டமடிக்க, ஹெட் மாஸ்டருக்குத் தெரிந்து போய் உங்களை சஸ்பெண்ட் பண்ணியதெல்லாம் நினைவிருக்கிறது. மறக்கவில்லை. ஆனால் அதை ஒதுக்கிவைத்து விட்டு என் பிரச்சனையை கொஞ்சம் தீர்த்து வைப்பீர்கள் என்று நம்புகிறேன்'.

'சொல்லுங்க கமலா சுப்பிரமணியம்'

'என்ன இருந்தாலும் நான் உங்கள் மாணவிதானே. வா! போ! என்றே கூப்பிடலாமே'

'பரவாயில்லை. சொல்லுங்கள்'

'சார். என் மகன் படிப்பிலே கொஞ்சம் மக்கு'

'கொஞ்சமில்லை நிறைய'

'நன்றாகத் தெரிந்து வைத்திருக்கிறீர்கள்'

'உங்களிடம் என் மகனை டியூசனுக்கு சேர்த்துக் கொள்ள வேண்டும்'

'நான் நன்றாகப் படிக்கிற பையன்களுக்கு இன்னும் அவர்களுடைய திறமையைப் பட்டை தீட்ட வேண்டும் என்ற நோக்கத்தில்தான். நன்றாகப் படிக்கிற மாணவர்களுக்கு டியூசன் எடுக்கிறேன். ஸாரி கமலா, உங்க மகனுக்கு டியூசன் எடுக்க முடியாது'

'சார். நீங்கள் ஏற்கனெவே இருமுறை அரசுக் கல்லூரி புரொபசர் வேலைக்கு விண்ணப்பித்திருக்கிறீர்கள்'

'ஆமாம்'

'நீங்கள் என் மகனை டியூசனில் சேர்த்துக் கொண்டால் என்னாலே நீங்கள் அரசு கலைக் கல்லூரியில் புரொபசராக முடியும்'

'அதாவது படிக்காத முட்டாளை டியூசனில் சேர்த்து பாஸாக்கிவிட்டால் என்னை பதவி உயர்வு செய்ய ஆவன செய்வீர்கள் அப்படித்தானே?

'ஆமாம்' என்று தலையாட்டினாள் கமலா.

'பாருங்கள். உங்கள் அரசு பலம் உங்களோடு இருக்கட்டும், ஒரு மக்குப் பையனை பாஸ் பண்ணி எனக்கு வேறு நல்ல வேலை கிடைக்க வேண்டாம். உங்கள் அரசியல் குறுக்கு வழியை கல்வியிலும் இனிமேல்


காட்டாதீர்கள். இது என்றாவது ஒருநாள் சீரழிவிற்கு முன் உதாரணமாகிவிடும். என்னிடம் பதவி ஆசை காட்டாமல், நீங்கள் முறையுடன் கேட்டிருந்தால் நான் மனிதாபிமான அடிப்படையில் உங்கள் பையனுக்கு கல்வி கற்றுக் கொடுத்தி ருப்பேன். அதை விடுத்து உங்கள் அரசியல் செல்வாக்கைப் பயன்படுத்தி எனக்கு லஞ்சமாக பதவியுயர்வு வாங்கித் தர நீங்கள் தயாராக இருந்தாலும், அதைப்பெற நான் தயாராக இல்லை. என்னை மன்னித்து விடுங்கள்! மேலும் உங்கள் பையன் உங்க ளிடத்தில் வளர்ந்து உங்களை போலவே ஒரு அரசியல்வாதியாக வளரும் பட்சத்தில் அவனும் உங்களைப் போலவே ஒரு நேர்மை யற்ற அரசியல்வாதியாக வளர நான் விரும்பவில்லை. ஏனென்றால், நல்ல விதை இருந்தாலும் அது வளர நல்ல நிலமும், தண் ணீரும், இயற்கை சூழ்நிலையிலும் வேண்டும்.

அதுமாதிரியான சூழ்நிலை உங்களிடத் தில் இல்லை. இதை நான் உங்களின் முன்னாள் ஆசிரியர் என்ற முறையில் கூறுகிறேன். இவ்வாறு புத்திமதி கூறுவது ஒரு ஆசிரியரின் கடமையும் கூட, இப்படி நான் தத்துவம் பேசுவது உங்களுக்கு அதிகப் படியாகத் தெரிந்தாலும்கூட அதைப்பற்றி நான் துளியும் கவலைப்படவில்லை. என் னிடத்தில் தெரிந்தோ தெரியாமலோ நீங்கள் கேட்ட உதவிக்கு உதவ முடியாத சூழ்நிலையில், அதற்கான காரணத்தை உங்களிடம் கூற வேண்டிய கடமையிலுள் ளேன் என்று கூற...

எதிர்பாராத ஏமாற்றத்தைத் தாங்கிக் கொண்டாலும் அதை மறைக்க முயற்சி செய்த மாண்புமிகு அமைச்சருக்கு முடிய வில்லை. வெளிறிய முகத்தோடும், குற்ற உணர்வும் கை கோர்க்க ‘அப்போ வர்ரேன் சார் என்றவாறு புறப்பட்டார் மாண்புமிகு அமைச்சர் கமலா சுப்பிர மணியம்.

**–இரஜகை நிலவன்**





# உயிரில் கலந்த உறவே !...

அன்று எனை நீ இறுகத் தழுவிக் கலவியில் மகிழ்ந்தபோது
நினைக்கவில்லை நீதான் எனது மணாளன் என்று
பல்லோர் புழங்கும் காம மோக விற்பனைச் சந்தையிது
அதிலோர் போகக் கருவி நான்
நீயோ தொடர்ந்து மாலை மயங்கும் நேரத்தில்
நான்தான் வேண்டுமென்று பிடிவாதமாய் காத்திருந்தாய்
களித்திருக்கும் முத்தப் பொழுதுகளில்
உன் காதலை அறிவித்தாய்
அதனை நான் ஒரு பொருட்டாகவே நினைக்கவில்லை
எல்லா நுகர்வோரும் கூறும் போலிக் காதல் புலம்பல்
என்றே அலட்சியமாக  முத்தங்களைச் சுவைத்தேன்
நீ  விடுதி உரிமையாளர்களிடம் எனது விலையினை
விசாரித்து அறிந்தாய்

என்னவொரு அதிசயம்
என்னை விலைக்கு வாங்கியே விட்டாய்
உரிமையாளர்கள் மனத்திருப்தியோடு உன்னிடம் கையளித்தார்கள்
உன் கைகள் என் கைகளை மிகுந்த கனிவோடு பற்றிக் கொண்டன
இந்நொடியில் ஒரு மின்னல் என் உடலெங்கும் ஓடி ஒளிர்ந்தன
கண்கள் குபுகுபுவென்று நீரைக் கொட்டின

நீ யார் உன் பெயரென்ன ஏதும் அறியாமல்
உன்பின்னால் நான் மௌனமாகத் தொடர்ந்தேன்
என்ன நினைத்தேனோ விரைந்தோடி
தீராக் காதல் மீதூற உன் தோள் மீது சாய்ந்து கொண்டேன்
பின் இறுக அணைத்துக் கொண்டேன்
வீதியென்றும் பாராமல்

ஊருக்கு வெளியே ஒரு பூந்தோட்டம்
அதற்குள் ஒளிந்திருக்கும் ஒரு சிறு வீடு
தோட்டத்தின் பின்புறத்தில்
சில மயில்கள் நடந்தும் ஆடியும் கொண்டிருந்தன
அந்திப்பொழுது செவ்வானமாய் இளகிக் கொண்டிருந்தது
எனை அப்படியே

படுக்கையில் சாய்ந்திருக்கப் பணித்தாய்
ஓவியப் பலகையில்  திடுமெனத் தோன்றினேன்
என் அழகு எனக்குத் தெரியாது
கூடமெங்கும் என் ஓவியங்களே அலங்கரித்தன
விம்மிப் பருத்த மார்பகங்களை மெல்லியப் பட்டு நூலாடை
தொட்டுத் தழுவி மறைத்தும் மறைக்காமலும் தழுவிக் கிடந்தது
எல்லா ஓவியங்களிலும் என் முகமில்லை
வெவ்வேறு முகங்கள்

என் வட்டவடிவ முகத்தில்
துறுத்திக் கொண்டிருக்கும் தெற்றுப் பற்களின்
தனித்துவமிக்க அழகில்லாமல்
அந்த ஓவியங்கள் இறந்து கிடந்தன

பல ஆண்டுகள் கடந்தன
ஓவியங்கள் மட்டும் தொடர்ந்து
விற்பனையில் எங்களை செல்வந்தர்களாக்கியது
நான் ஒரு மகாராணியினைப் போல வலம் வந்தேன்
எல்லையற்றப் புணர்ச்சியில்
நீந்தி நுகர்ந்த காமலீலா வினோதங்கள்
வம்சம் தொடராத மலட்டுக் கலவி
மனத்தில் புண்ணாகி வலித்துக் கொண்டேயிருந்தது

அந்திமம் நெருங்கி அருகில் வந்து நின்றது
இன்று ஓவியப் பலகையில் எனை உயிர்ப்பித்தாய்
என்னவொரு அதிசயம் நான் விடுதலையாகி
வெளிவந்த அன்றைய முகம் ஓவியத்தில்
உதடுகளில் முத்தமிட்டச் சுவடு அச்சாகியிருந்தது
உயிரெங்கும் ஒளி ஊடுருவி பாய்ந்து கொண்டிருந்தது
அர்த்தமற்ற ஒரு உறவோடு
வாழ்ந்து களைத்தத் துயரத்தோடு
கண்ணீர் மல்க எனை முத்தமிட்ட கணத்தில்
எனது உயிர் பிரிந்து செல்வதை பார்த்தேன்

**கவிஞர் இ.தனுஷ்கோடி**
கும்முடிப்பூண்டி



# பில்டர் காபி

## சிறுகதை

பாஸ்கர் அதிகம் எதிர்பார்ப்பு இல்லாத, அதிகம் எதிர்த்துப் பேசத் தெரியாத, அமைதியான பையன். தனியார் அலுவலகத்தில் சூப்பர்வைசராக வேலைக்கு சேர்ந்து இரண்டு வருடங்கள் ஆகிறது.

அம்மா கற்பகாம்பாளும் அப்பா வைத்ய நாதனும் பையனுக்கு ஒரு கால் கட்டு போட வேண்டுமே என்று பக்கத்து ஊரில் பெண் பார்த்து பத்தாம் வகுப்பு வரை படித்திருந்த வாசுகியை தன் மகனுக்கு திருமணம் செய்து வைத்தனர்.

இதுவரை தான் ஆசை ஆசையாய் பேணி பாதுகாத்து வந்த தன் மகன் பாஸ்கரை மருமகள் வாசுகியிடம் முழுமை யாக விட்டுக் கொடுக்க, கற்பகாம் பாளுக்கு மனம் வரவில்லை.

வாசுகி எதைச் சமைத்தாலும், எப்படித்தான் பரிமாறினாலும், மாமியார் உரிமையை விட்டுக் கொடுக்காமல், அனைத் திலும் மூக்கை நீட்டி, தன் உரிமையை நிலைநாட்டிக் கொள்வாள் கற்பகாம்பாள்.

.முணுமுணுப்புகளாக இருந்த தகராறு உரத்த சத்தமாக மாறியதும் இன்று மெதுவாக பாஸ்கர் பேசத் தொடங்கினான்.

அம்மா, நான் தான் இவ்வளவு உயரம் வளந்திருக்கேனே, எனக்கு எது வேணும்? எது வேணான்னு தெரியாதாம்மா?

ஏம்மா, இப்படி எனக்கு பாத்துப் பார்த்து செய்றேன்னு, உங்களுக்கு இருக்கிற மரியாதையை குறைச்சிக்கிறீங்க? கொஞ்சம் என்னை நிம்மதியா இருக்க விடுங்கம்மா என்றான் பாஸ்கர்..

அப்பப்பா 28 வயது வரை எதிர்த்து பேசாத உனக்கு, தலையணை மந்திரம் நல்லாத்தான் போட்டிருக்கா. அம்மாவையே எதிர்த்து பேச ஆரம்பிச்சுட்டியாப்பா? இந்தக் கொடுமையை யார்கிட்ட போய்ச் சொல்ல?

இனிமே நான் இங்கு இருக்கிறதுல மரியாதை இல்லப்பா... நம்ம பக்கத்து வீடு வாடகைக்கு விட்டிருக்கோமே அந்த வீட்டு சரசை காலி பண்ணச் சொல்லிட்டு அந்த வீட்ல போய் இருந்துக்கறேன்.நீங்க இங்க நிம்மதியா தனிக் குடித்தனம் இருங்கப்பா என்று கூறி முற்றத்தை நோக்கிச் சென்றாள் கற்பகாம்பாள்..

பாஸ்கருக்கு அக்கம் பக்கம் கேட்கும்படி அம்மா உரத்து பேசியது மிகவும் வேதனை யைத் தந்தது. அமைதியாக இருந்த இடம் தெரியாமல் ஓடிக் கொண்டிருந்த வாழ்க்கை ‘பூ ஒன்று புயலானது’ என்பது போல் ஆகி விட்டதே என்று வருந்தினான்.

சென்ற வாரம் சினிமா டிக்கெட் எடுத்து வந்த பாஸ்கர்,

‘அம்மா இப்ப நாங்க சினிமாக்குப் போகலான்னு இருக்கோம்’, என்றான்.

அடடா! நாளைக்கு திருக்கார்த்திகை! இன்னிக்கு உன்னை சினிமா டிக்கெட் வாங்கிட்டு வரச் சொல்லிட்டாளா?

பக்கத்து வீட்டு அம்புஜம் மருமகளைப் பாரு!

காலையிலேயிருந்து வீட்டைத் துடைச்சு அழகழகா: பச்சரிசிமாவுல வீட்டுத் திண்ணையில எல்லாம் தீபக் கோலம் போட்டு, காவி வர்ணம் தீட்டி வச்சிருக்கா.

‘வீடே லக்ஷ்மிகரமா இருக்குல்.இதல்லாம் வளத்த வளப்புல வரணும்.

எனக்குனு வந்து வாச்சிருக்காளே,’ என்று தலையில் அடித்துக்கொண்டார் அம்மா.

அன்றைய சினிமா புரோகிராம் கேன்ச லானது, இன்றைக்கு மீண்டும் நினைவுக்கு வந்தது.

எவ்வளவு அன்பாகத் தன்னிடம் நடந்து கொள்ளும் அம்மா, திருமணத்திற்குப் பின் இப்படி அனைத்திற்கும் கோபம் கொள்வதைப் பார்த்து மிகவும் மனம் வருந்தினான் பாஸ்கர்.

இப்படி தினமும் நடக்கும் வார்த்தை பட்டாசுகள் இன்று சிவகாசி- லட்சுமி வெடி போல் பெரும் சப்தத்துடன் வெடித்தது .

முற்றத்திற்குச் சென்ற அம்மா, என்னங்க கேட்டீங்களா? நம்ம மகன் பேசுறத? நான் தான் எல்லா விசயத்துலேயும் வம்பு பண்றேணாம்.

இதை அந்த ‘ஊமக் கொட்டா’ சொல்லி வைச்சிருக்கா.

அந்த மகராசி பேச்சைக் கேட்டு இவனும் வந்து என்னைப் ‘பல்லு மேலே நாக்கைப் போட்டுக்’ கேக்கறானே!

ஒங்க காதில விழலியா? புடிச்சு வச்ச புள்ளையார் மாதிரி ஒக்காந்து இருக் கேங்களே?

அப்போது தான் சிம்ப்பிளாகத் தன்னை அழகு செய்து கொண்டு, மெது வாகத் தயங்கித் தயங்கி, வெளியே வந்து கொண்டிருந்த வாசுகியின் காதில் கற்பகாம்பாளின் வார்த்தைகள் கோடை இடியென விழ,கண்கள் சிவக்க பின்புறம் திரும்பி தன் அறைக்குள் சென்று கதவைச் சாத்திக் கொண்டாள் வாசுகி.

முற்றத்தில் பழைய சாய்வு நாற்காலியில் உட்கார்ந்து செய்தித்தாள் வாசித்துக் கொண்டிருந்த அப்பா, ஓய்வு பெற்ற தலைமை ஆசிரியர்.

பள்ளியில் பேசியதுடன் சரி. வீட்டில் என்றும் அமைதி காப்பவர்.

இன்று என்ன பேசப் போகிறார்?

கையில் இருந்த செய்தித்தாளை மடித்து மேசையில் வைப்பது போல் பாவனை செய்தார்.

அப்பா நீங்களே சொல்லுங்கப்பா. இப்ப நான் என்ன சொல்லிட்டேன்னு இப்படிப் பேசுராங்க அம்மா? தனிக்குடித்தனம் அது இதுன்னு. நீங்களாவது... என்று ஏதோ சொல்ல வந்த பாஸ்கரைப் பார்த்து,.

இந்த வைத்யனாதன் செய்யாத சாகசத்தை இந்த பாஸ்கரன் செய்கிறானே! என்ற எண்ணத்தில், தன் வலது கை பெருவிரலை உயர்த்தி தம்ஸ் அப் காட்டி னார்.

பாஸ்கருக்கு, மலைபோல் வந்த துயர் பனி போல் விலகியதைப்போல் இருந் தது. அப்பாவின் முக மலர்ச்சியையும் அனுசரணையையும் உணர்ந்த பாஸ்கர். அடுப்படியில் வேலை பார்த்துக் கொண் டிருந்த வாசுகியைப் பார்த்து ,

வாசுகி, நான் டிபன் வெளிய சாப்பிட் டுக்கிறேன் என்று கூறி,

தன் ஆபீஸ் பையை எடுத்துக்கொண்டு விர்ரென்று வெளியே சென்று விட்டான். .

அடப்பாவி! புருஷனைப் பசியோடு ஆபீசுக்கு அனுப்பிட்டாளே!

என்னிக்காவது என் புள்ளே சாப்பிடாம வேலைக்குப் போயிருக்கானா!

ஏம்ப்பா, பாஸ்கரு... பாஸ்கரு என்று அவள் அழைப்பது பாஸ்கரின் காதுகளில் விழ வாய்ப்பில்லாமல் தெருவைத் கடந்து சென்றது அவன் இரு சக்கர வாகனம்.

வீட்டை இரண்டாப் பிரிக்க முடிவு

பண்ணிட்டாளே இந்த ராங்கி. இந்தக் கொடுமையை எங்க போய் ச் சொல்ல?

அடியே சரசு கேட்டியா? என்று நேர டியாக பக்கத்து வீட்டிற்குள் நுழைந்த கற்பகாம்பாளை வாங்கம்மா வாங்க! என்று அழைத்து காபி சாப்பிடுறீங்களா அம்மா! என்று சரசு கேட்டாள்.

அதெல்லாம் வேண்டாம் சரசு, உங்கிட்ட ஒரு விஷயம் கேட்கணும்னு வந் தேன்.

இந்த வீடு.. என்று சொல்வதற்குள் சரசு குறுக்கிட்டு,

உங்களுக்கு இந்த வீடு வேணும், அவ்வளவு தானே!

பாஸ்கரும் நீங்களும் பேசி னது இங்க வரைக்கும் கேட்ட தும்மா.

நாங்களே எங்க பையன் விஜய்க்கு பொண்ணு பார்த் திருக் கோம். பொண்ணு நல்ல உத்தியோகம் பார்க்கிறா.

அடுத்த மாதம் கல் யாணம். உங்களிடம் நாளைக்கு சொல்லலாம்னு இருந் தோம். நல்ல வேளை நீங்களே வந்து கேட்டுட்டீங்க.

சந்தோசம் என்ற கற்பகாம்பாள் கல்யா ணத்துக்கப்புறம் அவுங்களோட கூட்டுக் குடித்தனம் நடத்தப்போறியா?



ஆமாம்மா!

அடியே சரசு! அப்படிக் கனவுலயும் நினைக்காதே! இந்தக்காலத்துலே வர்றவ எல்லாம் தீயாய் இருப்பாளுக! நீ நினைக்கிற மாதிரி எல்லாம் நடக்காது! நீயும் என்ன மாதிரி கேவலப்பட்டு, வீட்டைவிட்டு வெளியே வருவதற்குப் பதிலா, முதல்லேயே தனியா ஒரு வீடு பார்த்து வச்சுக்கோ. மானத்தோடு வாழலாம்! என்றாள் கற்ப காம்பாள்.

மெதுவாக சரசு சங்கோசத்துடன் அம்மா, ஒண்ணு சொல்றேன்னு கோச் சுக்காதீங்க. நீங்க தொலைக்காட்சி நாடகத்துல வர்ற வில்லி மாமியாரா இருக்கக் கூடாது. அதுதான் எல்லார் வீட்ல பிரச்சனையை.உண்டாக்கி ஜனங்க மனசைக் கெடுக்குது. நிறைய பெண் பிள் ளைங்க கல்யாணம் வேண்டாம் சொல்லக் காரணமும் அதுதான்.

நாம ஆசைய வளத்த நம்ம புள்ளைங்க ளுக்கு எப்பவும், அன்பா ஆதரவா இருக்கணும்!.

நாம போட்ட விதைதான், செடியா முளைக்கும்!

'வினை விதைத்தவன் வினைய றுப்பான். திணை விதைத்தவன் திணைய றுப்பான். உங்களுக்கே தெரியும்.

வேற வீட்ல இருபந்தைந்து இரு பத்தாறு வயசுவரைக்கும், வளர்ந்த பொண்ணு நம்ம வீட்டுக்கு வந்து பழகி நம்மளோட மருமகளா சேர்ந்து வாழ, சில மாதங்கள் ஆகும். பெரியவங்க நாமதான் கொஞ்சம் பொறுத்துக்கணும்.

நம்ம கொஞ்சம் பொறுத்து போய்ட்டா, நம்மள தலையில தூக்கி வச்சு கொண்டா டுவாங்க.

நம்ம வாழ்க்கைல பட்ட கஷ்டத்த மனசுல நினைச்சு, அது நம்ம புள்ளங்களுக்கு வராம பாத்துக்கணும்.

இந்த காலத்து பொண்ணுங்க நாம ஒரடி இறங்கி வந்தா, அவுங்க பத்தடி நம்மல நெருங்கி வருவாங்க! என்று நாசூக்காக வாழைப்பழத்தில் ஊசி குத்தின மாதிரி சொன்ன சரசு, கற்பகாம்பாளுக்கு பில்டர் காபி கொண்டுவந்து கொடுத்துவிட்டு ஆறுதலாக அருகில் அமர்ந்தாள்.

கற்பகாம்பாளுக்கோ வெட்கமாக இருந்தது. தன் மனதுக்கே தான் செய்தது தவறு என்று புரிந்தது.

சரசு... கொஞ்சம் பாஸ்கருக்கு போன் போட்டு குடும்மா, கொஞ்சம் பேசணும். தொண்டை கரகரக்குது என்று கண்களைக் கசக்கிய கற்பகாம்பாளுக்கு,

அம்மா.. அம்மா.. என்ற பாஸ்கரின் அழைப்பு ஆச்சர்யத்தில் ஆழ்த்தியது

உடன் வாசுகியும் வந்திருந்தாள்.

இருவரும் கற்பகாம்பாள் பாதங்களை வணங்கி, நாங்க ஏதாவது தப்பாப் பேசியிருந்தா மன்னிக்கணும்மா என்று கேட்க,

கற்பகாம்பாள் ரெண்டு பேறும் சந்தோசமா நல்லா இருக்கணும்மா என்று கண்களில் நீர் ததும்ப இருவரையும் வாழ்த்தி, வாசுகியை ஆரத்தழுவிக் கொண்டாள்.

இப்ப பில்டர் காபி நான்கு பேருக்கும் சுடச்சுட மணக்க மணக்கக் காத்திருந்தது.

சுவையான சூடான பில்டர் காபி சுவைக்கச் சுவைக்க,மனதின் பாரம் இறங்கி, அவர்களது உள்ளம் குளிர்ந்தது, முகம் மலர்ந்தது.

சரசு காபிப்பொடியை பில்டர் செய்யும்போதே பாஸ்கரின் பிரச்சினைகளையும் பில்டர் செய்து விட்டாளோ?

**பிரபாவதி ராஜா** M.A. B.Ed

ஹைதராபாத்

# சாலையோரத்து சிறுவன்

அவன் விழிகளில் ஏக்கம்
புத்தாடை அணியாததன் தாக்கம்
வெடிக்கும் வெடிச்சததங்களில்
அவனின் மகிழ்ச்சி சிதறிப் போனது
அறியாமல் இன்னும்
வேடிக்கை பார்த்து நின்றான்
சாலையோரத்து நிலவான
அந்த சிறுவன்

**செ. இலட்சுமணக்குமார்**

ஈரோடு


# தள்ளட்டமான...

- உள்ளங்கையில் ஒட்டாத
உறைந்த பஞ்சாய் உடல்;
பல்லாங்குழியில் விழும்
பளிங்கு போலும் நகை...

- தள்ளாத வயது காணும்
தள்ளட்டமான நடை;
எள்ளாது வீழ்த்தி விடும்
ஏகாந்த அன்புப் படை...

- கொள்ளாது கை நிறைந்து
கலையுச்சி காணும் கொடி ;
கல்லாத மொழி மழலைக்
கவிதை பாடும் செடி...

**- பட்டுக்கோட்டை ராஜா**



# மங்காத தமிழென்று சங்கே முழங்கு

தமிழென்று சொன்னாலே தேன் சொட்டும் இதழோரம்!
முத்தமிழ் உலகெல்லாம் மனமூட்டி உளமாரும்!

மொழியென்று சொன்னாலே அது தமிழென்றே உரைக்கும்!
பலமொழிகள் இருந்தாலும் பழைமை மொழி தமிழாகும்!

செந்தமிழ் என் தாய்மொழி
எனக்கது பெருமை!
சிந்தும் இசையிலது மேன்மேலும் அருமை!

மங்காத தமிழென்று சங்கே முழங்கு!
தெவிட்டாத அருஞ்சுவை தமிழென்றே ஓங்கு!

தமிழ் பெற்ற புலவரெலாம்
தமிழாலே சிறந்தார்!
அண்டம் முழுவதுமே தமிழனும் உயர்ந்தான்!

எம்மொழிக்கு ஈடான ஓர்
மொழியொன்று இல்லை!
என் தமிழுக்கு உயர் மொழி
என்றேதுமில்லை!

**முகம்மது ஹனிபா ஜவ்ஹர்**

# புத்தாண்டே


(கலிவிருத்தம்)

புவிமீதினிற் பொலிவைக்கொடு புகழோங்கிடும் நெறியைக்கொடு
கவினார்நிலை உலகிற்கொடு கறைமாய்ந்திட வொளியைக்கொடு
தவித்தேங்குவார் தளையைக்கெடு தனமோங்கிட மழையைக்கொடு
கவிவாணரில் நலத்தைக்கொடு கடைத்தேறிட மதியைக்கொடு.

மனமீதினில் திரத்தைக்கொடு மடிகாய்ந்திடா வரத்தைக்கொடு
சினமோய்ந்திட அறிவைக்கொடு சிரமோங்கிட அறத்தைக்கொடு
தனமீந்திடும் கரத்தைக்கொடு தமிழோங்கிடும் கவியைக்கொடு
வனப்பார்ந்திடும் உறவைக்கொடு வமிசாவளி மகிழக்கொடு.

- த.கி.ஷர்மிதன், இலங்கை.

# ஒத்தைக்கல்லு மூக்குத்தி ஒளிருதே !



கன்னிப் பெண்ணில் தொடங்கும் மூக்குத்தி
பேரிளம் பெண்கள் வரையில் அணிகிறார்கள்
மூக்குத்திப் போடுவது நலம்வளமுமே தரும்
தங்கம் வெள்ளி ப்ளா ட்டினம் உலோகங்களாகும்.

முகத்துக்கு தனிஅழகும் கூடிடவே செய்யும்
புதுப்பாணியில் கவரிங் மூக்குத்தியும் உண்டு
மூக்குத்தி அணிவது சம்பிரதாயமானதுஇங்கு
வைரத்தில் ஒரு கல் மூக்குத்தி அணிவதுமுண்டு.

இந்தியப் பெண்கள் அனைவரும் விரும்புவதுண்டு
குறைந்தவிலை செயற்கை ரகத்திலுமுண்டு
இளசுகளும் வாங்கி அணிவது வழக்கமாகும்
திருமணத்தில் மணமகள்மூக்கில் மிளிறுது.

வாழ்வினில் வசந்தம் தேடி வரச்செய்வோம்
சாஸ்திரச் சம்பிரதாயங்களை பின்பற்றிடுவோம்
பொலிவுடன் தோற்றமளிப்பது இன்றையபெண்கள்
சுமங்கலித்தோற்றம் பெற மூக்குத்தி அணியலாம்.

**கவிஞர். இரா. சீ. பாலகுமார்**. M.A.



இளையவன் சிவா

# தீண்டலின் முடிவில்

இதயக்கிடங்கில்
சேமித்த எல்லாக் கனவுகளும்
நொடியில் கலைகின்றன
உன் மறுப்புச் சத்தம் கேட்டவுடன்..

ஆசையின் ஊஞ்சல்
ஆனந்த வெள்ளோட்டமிட
உன் முத்தச்சங்கிலி
வேண்டி நிற்கிறது.

நீளும் உன்
தேடல் பார்வையில்
நிஜம் காண்கிறேன்
எனைக் காணும்
உன் நாணத்தில்
நிழல் தேடுகிறேன்.

காயத்தழும்பும்
காணாமல் போனது
உன் கண்ணீர் பட்டதும்.

ஊடுருவும் பனிக்காற்றின்
ஒவ்வொரு தீண்டலும்
உறைய வைக்கும் குளிரை
விரட்டியடிக்கின்றன
உனது நினைவுகள்.

தீண்டலின் முடிவில்
எனையே மறந்து
பறக்க வைக்கிறாய்
மீண்டும் தீண்டுதலில்
புதிதாய் உயிர்ப்பிக்கிறாய்.

இருக்கும் வரை
கிடைக்கமாட்டேன் என்கிறாய்
உயிர்ச் சுவையென
உன்னுடன் வாழ்கையில்
தேடத் தீண்டலின்
வேட்கை எதற்கு?

உயிர்ச்சங்கிலி
உன் பார்வைச்சூடு கேட்டு
நீள்கிறது காலடியில்.
நீயோ
மௌனச்சுத்தியால்
மனசைத் துண்டிக்கிறாய்.

இன்றே விதைத்து
இன்றே அறுவடை செய்கிறாய்
மேனிக்காட்டில்
முத்த விவசாயம்
மொத்தமாய் நீயே!

இதழ் அள்ளித் தின்னும்
என்னை இளைப்பாற வை.
கனவு நிறைக்கும்
நித்திரை இரவில்
என்னைக் தளவாட வந்து போ.
சந்திக்கும்
சொர்க்கத்தை தருணங்களில்
சாமரம் வீச அனுமதி.
பேசிக் கொள்ளும்
தொலைதூர எண்ணங்களில்
வர்ணிக்க வழி விடு.
விழிகளில் விழுந்து
வெளிச்சமிடும் நம் நேசம்
சூரியனுக்கு ஒளி தர வழி கொடு.
இளமையின் எல்லையில்
இன்னொரு தாயென
எனக்காய் வந்தவளே!
உலகம் முழுக்க
என் பேர் ஒலிக்க
காதலைத் தந்தவளே!
ஒவ்வொரு சுவாசத்திலும்
உள்ளிழுப்பது
உன் நேசத்தைத் தானே!



# ஹைக்கூ மலர்கள்

இமை
துணிதுவைக்கும்
கண்கள்.

---

மதத்துக்கு முன்
செயலிழக்கிறது
அங்குசம்.

---

கால்களுக்கு
கொலுசு மாட்டுகின்றன
அலைகள்.

---

கண்கொட்ட முடியாமல்
அலைகிறது மீன்
அவள் குளிக்கிறாள்.

---

சின்னவீடாய்
நடனக்காரி/
ஆடுகிறது
பெரிய வீடு!

---

மலருக்கும்
ஒப்பனை
வண்டுகள்.

---



**அய்யாறு.ச.புகழேந்தி**

# கவிதைகள்

## ஆடு

இலை தழைகளை
உண்ணுகிற ஆடு
எப்பவும் சைவம்
ஆனால்
அதே ஆடு
நமக்கு அசைவம்.

## சிகரெட்

பற்ற வைத்து
தன்னை அழித்தவனை
கொஞ்சம் கொஞ்சமாய்
பழி தீர்க்கிறது
சிகரெட்.

## சைவ முட்டை


புரட்டாசி மாதம்
என்று கூடப் பார்க்கவில்லை
மாணவன்
தினந்தோறும்
பள்ளிக்கூடத்திலிருந்து
முட்டை வாங்கி வந்தான்.

## பொய்

நாம்
மருத்துவரிடமும்
வழக்கறிஞரிடமும்
மட்டும் பொய்
சொல்லக் கூடாது
அதை அவர்கள்
பார்த்துக் கொள்வார்கள்.

**கவிஞர் எம்.சோலை**
அம்பத்தூர்.

# மகள் வரைந்த கோடுகள்




**ஆசிரியர்:** மகேந்திர பாபு

**வெளியீடு** : அன்புநிலா

*இருபத்தைந்து ஆண்டுகளுக்குப்பிறகான தனது இரண்டாவது நூலை ஹைக்கூ நூலாக வெளியிட்டிருக்கிறார். தொடர்ந்து பல்வேறு இணைய இதழ் மற்றும் அச்சு இதழ்களில் வெளி வரும் இவரது படைப்புகள் கவனம் பெற்று வருகின்றன. குறிப்பாக பள்ளி மாணவர்கள் மற்றும் சிறுவர்களுக்கான விழிப்புணர்வு பாடல்களென தொடர்ந்து எழுதி வருகிறார்.*

**செருப்பைக் கழட்டிவிட்டு**
**இறங்கி நடந்தார் அப்பா**
**திருத்தலமானது வயல்**

*சம்சாரிகள் செருப்புகள் போட்டு வயல்களில் நடந்து போக மாட்டார்கள். தங்கள் வயல்களைக் கோவிலெனக் கும்பிட்டு மண்ணை அள்ளிப் பூசி வழிபடும் சம்சாரிகள் எவ்வளவு நுண்ணறிவுமிக்கவர்கள். என் சிறுவயதில் நாற்றங்காலைச் சுற்றி வரப்பு வெட்டும் போது அப்பா சொல்வார் சாமி சுத்தி வரும் நல்லா அப்பு வரப்பு போடுப்பா என்பார்.*

*வயலோடும் வரப்போடும் கிடந்ததால் இந்தக் கவிதை மனதை இறுக்கிப் பிடிக்கிறது.*

**பாகப்பிரிவினை இல்லை**
**தொடரும் கூட்டுக்குடும்பம்**
**ஒரே மரத்தில் பறவைகள்**

*சமகாலத்தில் கூட்டுக் குடும்பம் என்பதே அரிது. பாகப்பிரிவினை இல் லாத உண்மையானக் கூட்டுக்குடும்பம் என்றால் அது பறவைகள் மட்டுமே. கூட்டுக்குடும்பத்தை பறவைகளோடு ஒப்பிட்டு எவ்வளவு அருமையாக காட்சிப்படுத்தியிருக்கிறார் கவிஞர்.*

**கைநிறைய பணமிருந்தும்**
**தாகத்தோடு ஏங்கும் மனம்**
**தட்டுப்பாட்டில் குடிநீர்**

*பெரும் வசதி வாய்ப்பு இருந்தாலும் தண்ணீரின்றி உயிர் வாழ முடியாது. முப்பாட்டன் வள்ளுவன் நீரின்றி அமையாது உலகு என்று சொல்லி விட்டுச் சென்றிருக்கிறான். கடந்த சில தினங்களுக்கு முன் எலக்ட்ரானிக் மெட்ரோ சிட்டி என்று சொல்லக்கூடிய பெங்களூர் பெருநகரத்தில் தண்ணீர் தட்டுப்பாட்டில் அலைக்கழிந்ததை நாம் அனைவரும் பார்த்திருப்போம்.*

**வறண்டு கிடந்த நதி**
**தின்று செரிக்கிறது**
**மதிய வெயிலை**

*வறண்டு சுனங்கிக் கிடக்கும் நதிகள் வெயிலைத் தான தின்று செரிக்க முடியும் என்பதை அழகாக காட்சிப்படுத்தியிருக்கிறார்.*

**சுமை தூக்கிச் செல்லும்**
**வண்ணத்துப்பூச்சிகள்**
**பள்ளிக் குழந்தைகள்**

*நாம் காணும் அற்புதமான காட்சியை கவிதையில் வடித்தெடுத்திருக்கிறார்.*

**வயலில் அம்மா**
**கனக்கிறது நெஞ்சு**
**மரக்கிளைத் தொட்டிலில் குழந்தை**

*நடுகை,களையெடுப்பு, கதிர் அறுப்பு போன்ற எல்லாக் காலங்களிலும் வயலோரங்களில் இருக்கும் வேம்பு,புங்கை, பூவரசு மரங்களில் தொட்டில் கட்டி போட்டுவிட்டு வேலை செய்யும் அம்மாக்களுக்கு தாயாகிறது மரங்கள். பிள்ளைகளைத் தொட்டிலில் போட்டுவிட்டு ரெண்டு வரி தாலாட்டு பாடிவிட்டு வந்தால் போதும் பிஞ்சுக் குழந்தைகள் உறங்கிவிடும்.*

**காலாண்டு விடுமுறை**
**வயலில் களையெடுத்த நினைவுகள்**
**இன்று கட்டடக்கலை**

*விடுமுறை காலங்களில் கால்கள் ஆற ஓடி ஆடி விளையாடுவது வயல்களில் மட்டும் தானே என்னைப் போன்ற கிராமத்து வாசிகளுக்கு. எங்க ஊரில் கருப்பிக் கெழவி என்ற ஒரு கெழவி இருந்தாள். அவளது வயலுக்கும் கருப்பிக்கெழவி வயல் என்று ஏழு தலைமுறைகளாக சொல்லி வந்தோம்.*

*நாற்றுப் பாவ நாற்றங்கால் தயார் செய்தால் போதும் கண்மாயில் இருக்கும் பாதிப்ப றவைகள் அந்த வயலில் தான் கெடக்கும் இன்று அடுக்குமாடிகளாக கட்டிடங்களாக உயர்ந்து போய் நிற்பதைப் பாரத்தால் உள்ளம் கனக்கிறது.*

**கவனிப்பாரின்றி**
**காவல் தெய்வங்கள்**
**வீட்டில் முதியோர்கள்**

*முதியோர்களை சுமையாக கருதி இச்சமூகம் தனித்து விடப்படுகின்றன.*

*தனித்து விடப்பட்டாலும் தங்களுடைய மகன் மகள் மருமகன் மருமகள் பெயரன் பெயரத்தியென பாசாங்குகளற்ற வெள்ளந்தியான அன்பைப் பகிர்கிறார்கள். தங்களுடைய இறுதிக் காலத்தையும் நரகமென கழித்து வீட்டின் காவல்தெய்வங்களாகவே இருக்கிறார்கள். உடம்பு சுருக்கம் பட்ட போதிலும் மோதிரத்தையும் தண்டட்டியையும் விற்று கிணறு தோண்டி விவசாயம் செய்து தலைமுறைகள் காத்து வந்த கிழவனும் கிழவியையும் முதியோர் இல்லத்தில் சேர்த்துவிட்டு பிணமாக வீட்டுக்குத் தூக்கி வரும் சம்பவங்கள் மனதை நெருடத் தான் செய்கின்றன.*

*இதைப் போன்ற ஏராளமான கவிதைகள் சமூகப் பார்வையோடும், இந்தப் பிரபஞ்சத்தில் ஹைக்கூ என்றால் என்ன என எள்ளி நகையாடும் நவீன உலகிற்கு மகேந்திரபாபுவின் ஹைக்கூ கவிதைகள் மேலும் வலுச்சேர்க்கின்றன.*

*அன்புடன்*


**கவிஞர் அய்யனார் ஈடாடி**

## நுகர்ந்தேன் உன் வாசம்

சாக்கடைப் புழுவாய்
சகதியில் விழுந்தேன்
கூக்குரல் போட்டு
அழுதே வழிந்தேன்
அன்பின் முகவரி
அன்னையோடு முடிய
சீரான பாதையோ
இல்லாத கொடிய
வழியினில் குழியினில்
உள்ளமும் தள்ள
தேவதையால் மோட்சம்
அடைந்தேனே மெல்ல
நுகர்ந்தேன் உனது
வாசத்தை நானே
அரவணைத்து நேர்வழிப்
படுத்தினாய் மானே
கலங்கிய மனதுக்கு
மருந்திடும் தோழி
வாழ்வுக்கு ஒளிதந்த
கலங்கரையே வாழி

**லீ.லியாகத்அலி**

# வேறென்ன நான் சொல்வேன்?



பெண்ணாகப்  பிறந்தாலே கள[illegible]ப்பால் [illegible]டுவித்[illegible]
களனியிலே புதைத்ததெல்லாம் கனவாகப் போனதுவே
பெண்ணாகப் பிறந்து இங்கே மாநிலத்தை ஆளுகின்ற
மாண்புதனைப் பெற்றதெல்லாம் நனவாகிப் போனதுவே

பருவமதை எய்துவிட்டால் திருமதியாய் மாறிடுவாய்
பேத்தியின் திருமணத்தால் பாட்டியுமாய் மாறிடுவாய்
நாவிற்குத் தாள் போட்டு பொறுமைதனைப் போற்றிடுவாய்
நாளெல்லாம் உடல் உழைப்பால் உன் குடும்பம் காத்திடுவாய்

பொருளாக்கம் செய்திடவே பெரும்பணியும் செய்திடுவாய்
பெற்றதனைக் காத்திடவே பணித் தியாகமும் செய்திடுவாய்
வறுமையே வந்தாலும் வற்றாத புன்னகையால்
வாழ்க்கையைச் சுவர்க்கமாக்கி வாழ்ந்து நீ காட்டிடுவாய்

தாயாய் வாழ்ந்தவளே! தாய்ப்பாலைத் தந்தவளே!!
தரணியிலே நான் உனக்கு கைமாறு என் செய்வேன்?
அடுத்த பிறவியிலே உன் தாயாய்ப் பிறப்பெடுக்க
ஆண்டவனை வேண்டுகிறேன்!. வேறென்ன நான் சொல்வேன்?

**எழுதியவர் வ.வெ. இராஜாமணி** பெங்களூர்

# தன்முனைக் கவிதைகள்

வெல்லும் சொல்கொண்டு
வேல் வடித்துக் கொடுங்கள்
கிழித்தெறிவேன் இனி
தோல்வியின் முகங்களை !

மேலிருந்து கீழே பார்க்க
எவரும் உயரவில்லை
கீழிருந்து மேலே நோக்கினேன்
அனைவரும் உயர்ந்தவரே .

வலைவீசிப் மீன்பிடித்த
வலைஞன் அதிசயித்தான்
பசித்தவன் இங்கிருக்க
ருசிப்பவன் யாரோ ?

விரல்களுக்குள் இருக்கிறது
ஏற்றத் தாழ்வுகள்
செயல்படும் போதில்
இணைந்தே உழைக்கின்றன

கண்முன்னே தெரிகிறது
கைக்கு எட்டாத உயரம்
கல்லெறிந்து பார்க்கிறேன்
காலடியில் கிடக்கிறது கனி



– கா.ந.கல்யாணசுந்தரம்



# மடலும் மனமும்

இளைப்பாறக் கூட
இயலுமை அற்றதாய்
கடிகார ஊசலைவிட
விரைவாகி விரைகிறது
நாளிகை நகர்வுகளால்
இன்றைய வாழ்க்கை.

மனக் கிடங்கில்
புதைக்கப்பட்ட புதையலாய்
புரிந்துணர்வற்ற
ஒட்டுதல்கள்
களைந்துவிட ஒண்ணாமல்.

உறவாய் உதிர்த்ததனால்
உலக நியதிகளில்
நீங்கா இடம்பிடித்து
பிடிவாதமாய் பிரபஞ்சத்தில்
விம்பம் தரித்து
வியாபித்து விழுதுகளுடன்.

ஆசைகள் எல்லாம்
ஓசை இழந்ததால்
மனதின் மாயைகள்
மடல்களில் மகுடமாகி
மடித்தடுக்கப்படுகிறது
புழுதி உறைந்த புத்தக
இடுக்குகளில்
பத்திரப்படுத்தலுக்கான பக்குவத்துடன
பார் உலகின் பரிசாய்.

**மு.ஹ. முர்ஷிதா ஷிரீன்**
விவசாய போதனாசிரியர் (ஏறாவூர்)
சம்மாந்துறை, இலங்கை.

சிறுகதை



# எட்டாங்கரை

பாலன் ராமநாதன்

‘என்ன மாமா கோயில் திருவிழா நெருங்குது ஊர் கூட்டம் போடலாம்ல’ என்றான் கணேசன் ஊர்ல நல்லது கெட்டது எல்லாத்துலயும் முதல் ஆளா நிக்கிறவன் கணேசன் .

‘சீக்கிரமா போற்றுவோம் மருமகனே’ என்றார் துரைப்பாண்டி. துரைப்பாண்டி ஊர் தலைவர் நல்ல மனிதர் பணம் காசு இல்லாட்டாலும் ஊர் மீது பற்று கொண்ட குடும்பத்தை சேர்ந்தவர். 25 வருடத்துக்கு முன்னாடி நடந்த கம்மா விறகு வெட்டின பிரச்சனையில் ஊருக்காக கொலை செய்துவிட்டு ஜெயிலுக்கு சென்ற வேல் சாமியோடு பையன் அப்பாவைப் போல ஊர் பற்று மிக்கவர்.

திருவிழாவிற்கான நேரம் நெருங்கியது ஊர் பெரியவர்கள் எல்லாம் ஊர் பொது மடத்தில் கூடினார்கள்

‘எப்பவும் போல வெள்ளிக்கிழமை சாட்டிருவோம் வெள்ளியோட வெள்ளி எட்டு நாள் சுத்த பத்தமா இருந்து திருவிழா நடத்தனும் நேத்திக்கடன் வர்றதை பொறுத்து அன்னதானம் போற்றலாம் அன்னதானத்தில் எந்த குறை யும் வந்துரக்கூடாது சுத்து பத்து ஊர் சன மெல்லாம் வரும்’ என்றார் ஊர் தலைவர் துரைப்பாண்டி.

எட்டு நாள் திருவிழா நடக்கும் எட்டாம் நாள் கிடாய் வெட்டு நேர்த்திக் கடன் வரக்கூடிய கிடாய், கோழி, சேவல் எல்லாத்தையும் வெட்டி ஊர் சனங்கள் எல் லாம் ஒண்ணா உக்காந்து சாப்பிடக் கூடிய திருவிழா .

‘வெளியூரிலிருந்து வர்ற சனங்களை ரொம்ப பொறுமையா கவனிக்கணும்’ என் றார் துரைப்பாண்டி .

‘சரி சித்தப்பு அதெல்லாம் சிறப்பா பண்ணிடலாம்’ என்றான் வீரணன் .

வீரணன் காவக்கார குடும்பத்தைச் சேர்ந்தவன் தாட்டியமான வீரன்.ஊரோட காவல் பாக்குறவன் ஊருக்கு ஒண்ணுணா முதல் ஆள நிக்கக்கூடியவன்.

‘ராவுலேயே தண்ணி எடுத்துறணும், வீடு தவறாமல் வெறகு எடுத்துறணும்’ என்றார் துரைப்பாண்டி.

‘வேற ஏதாவது நிகழ்ச்சி இருக்காப்பா’ என்றார் மூக்காண்டி மாமா.

‘எட்டு நாளும் தெரப்படம் இருக்கப்பா’ என்றார் கணக்குப்பிள்ளை ராமசாமி தாத்தா. ரொம்ப சிக்கனமான பெரிய மனு ஷன் ராமசாமி தாத்தா ஊர் கணக்கு வழக்கு பார்க்கக்கூடிய பெரியாம்பள.

‘வர வெள்ளிக்கிழமை ஊர்ல காப்பு கட் றோஞ் சாமியோ’ என்றான் பெருமாள். ஊரோட நாளு தெரு முக்குல நின்னு சாட்டிட்டு ஊர் கணக்குல ஒரு டீ குடிச் சிட்டு போறது வழக்கம்.

எட்டு நாளும் ஊரில் தடபுடலாக விழா

ஏற்பாடுகள் நடைபெற்றது. வியாழக்கிழமை இரவு விழா ஏற்பாட்டில் மும்மரமாக இருந் தார் துரைப்பாண்டி.

'சித்தப்பு இளவட்டங்கள் எல்லாம் தயார் தண்ணீர் எடுக்க போயிரலாம்' என்றான் வீரணண்.

ஊர் கிணற்றில் தண்ணீர் எடுப்பது என்பது இளவட்டங்களுக்கு ரொம்ப குஷியான விஷயம் .அந்த நேரம் தான் ஊர் குமரி பெண்கள் எல்லாம் தண்ணீர் எடுக்க வருங்க. பெண்களிடம் தங்கள் வீரத்தை காட்ட சிலர் கிணற்றுக்குள் இறங்கி தண்ணீர் எடுத்து விடுவார்கள் காது குத்து கல்யாணம் போன்ற விசேஷ நாள்களில் விசேஷ வீட்டாருக்கு தண்ணி எடுத்து கொடுத்தா ஒரு டம்ளர் வர காப்பி போட்டு தருவார்கள். ஒரு டம்ளர் காபிக்காக 100 குடம் தண்ணி இரைப்பது என்பது அல்ல விஷயம். ஊரே ஒரு குடும்பமாக இருந்த காலம் அது. தண்ணி தூக்க வரக்கூடிய முறைக்கார பெண்களை கேலி கிண்டல் செய்வதும் அவர்கள் தண்ணீர் குடத்தை ஓங்கி காலில் போடுவதும் என்று ஒரே விளையாட்டாக செல்லும் கிணத்துக்கரை. விசேஷ நாட்களில் வேறு யாரும் தண்ணீர் எடுக்ககூடாது என்பது ஊர் கட்டு .ஊர்ல குடி தண்ணி கிணறு ஒன்றுதான் அதனால தண்ணி பிரச்சனை ஏற்படும் என்று ஊர் கட்டு போடப்பட்டுள்ளது

பத்து வாளி, இருபது குடம், என வீடு வீடாக சென்று வாங்கினார்கள் இளவட்டங்கள். எல்லாரையும் ஒண்ணா வரச் சொன்னான் வீரணண் 'காசி மச்சான், குழந்தைச்சாமி, அண்ணே பெரியசாமி, ராமு மச்சான் நீங்க தண்ணி எறச்சு விடுங்க, கோயிந்தன், வேலு, மச்சகாள, பால்பாண்டி நீங்க தண்ணிய வாங்கி ஊத்துங்க சித்தப்பு மூக்கன், பாலு, போஸ் நீங்க கொடத்த தலையில தூக்கி விடுங்க' என்று உத்தரவிட்டான் வீரணண்.

'60 குடம் தண்ணி தான் போயிருக்கு அதுக்குள்ள கிணறு வத்தி போச்சு' என்றார் காசி.

'சரி மச்சான் ஊறப் போடுங்க பிறகு எடுத்துக்கலாம்' என்றான் வீரணன் .

'தண்ணி ஊறதுக்குள்ள வெறகு எடுத்து போட்டுரலாம்' என்றான் வீரணன் .

'அண்ணன் பெரியசாமி வீட்ல மாட்டு வண்டி எடுத்துக்குவோம்' என்றான் வீரணண்.

'எப்படியும் ரெண்டு வண்டி வெறகு வேணும்பா வீரணா' என்றார் கணேசன்.

'சரி மாமா சித்தப்பு மூக்கன் வண்டிய எடுத்துக்குவோம்' என்றான் வீரணண்.

இரண்டு வண்டியும் தயார்

'பகலெல்லாம் உழவுக்கு போயிட்டு வந்துருக்கு மாடுக ரொம்ப சிரமப்படும் அதனால நாமளே போய் இழுத்துட்டு வந்துருவோம்பா' என்றான் வீரணண்.

இளவட்டங்கள் வண்டியை இழுக்க ஒவ்வொரு வீடாக விறகு எடுக்கப்பட்டது. மூக்கம்மா கிழவி வீட்ல மட்டும் யாரும் விறகு எடுக்கல .

'ஏம்பா நிக்கிறீங்க' என்றான் வீரணன் .

'போப்பா கெழவி அது பாட்டுல கத்தும்' என்றான் மச்சகாளை.

'யார்ரா அது ஏவீட்டுல வெறகு தூக்குறது' என்றது மூக்கம்மா கிழவி.

'யாத்தோ! வீரணே கோயில் திரு விழாவுக்கு விறகு எடுக்குறோம்' என்றான் வீரணன் .

'யாரு ஏ அண்ணன் பேரனா? எடுப்பா எடு கூட நாலு கட்டையா எடு' என்றாள் கிழவி .

ஊர் முழுவதும் விறகு எடுக்கும் வேலை முடிந்து கையிழுவையாக இழுத்து கோவில் அருகில் குவித்து வைக்கப்பட்டது.

கிணத்திலிருந்து மச்சான் காசி கத்தும் சத்தம் கேட்டது.

'ஏப்பா ஏய் தண்ணி ஊத்து நல்லா வந்துருச்சு வாங்கப்பா' என்றார் .

அனைவரும் கிணத்துக்கு வந்தார்கள் மீதமுள்ள தண்ணியும் எடுத்து நிரப் பினார்கள். குமரிகள் எல்லாம் தலை சுமையாக சுமந்து கோவிலுக்கு கொண்டு சென்றார்கள். சிலர் இரட்டை குடம் போட்டார்கள் இடுப்பிலும் தலையிலும் எல்லாம் வேண்டுதல் தான்.

'என்னடி பூங்கொடி ரெட்டை குடம் போடுறவ' என்றாள் பஞ்சு .

'அதில்ல மதினி சீக்கிரமா கல்யாணம் நடக்கணும்னு வேண்டுதல் தான்ல் என்றாள் பேச்சி. பேச்சிக்குப் பஞ்சு மதினிமுறை வேணும்.இப்படியாக கேளியும் கிண்டலுமாக தண்ணீர் எடுத்து முடித்தார்கள் .

இரவு நிகழ்ச்சிக்கு நேரமானது ஒவ்வொரு நாளும் இரண்டு திரைப்படங்கள் போடுவார்கள் . வெள்ளை திரையை நீண்ட கம்புகளின் கட்டி மடத்தின் அருகே ஊண்டி விடுவார்கள். ரீல் பெட்டி கடைசி பஸ்ஸில் தான் வரும். ஊர் சிறுவர்கள் எல்லாம் கூட்டமாக ரீல் பெட்டியை தூக்க சென்று விடுவார்கள் . தொலைக்காட்சிகள் எல்லாம் பரவலாக இல்லாத காலம் ஊருக்கு ஒன்றோ இரண்டோ தான் இருக்கும். தங்கள் ஆதர்ச நாயகர்களை திரையில் காண்பதற்கு பகலெல்லாம் தயாராவார்கள். நடுவில் ஒரு கயிறு கட்டி ஆண்களுக்கும் பெண்களுக்கும் தனித்தனியாக இடங்கள் ஒதுக்கப்படும்.

இரவில் கண்விழித்து பார்ப்பதற்கு பெண்கள் பகலெல்லாம் முறுக்கு பலகாரம் தயார் செய்வார்கள். பாய் தலகாணி சகிதமாக படம் பார்க்க வந்து விடுவார்கள்

முறையாக பக்தி பாடல் போட்டவுடன் திரைப்படம் போடப்படும். முதல் படமாக பக்தி படம் போடப்படும் அடுத்ததாக தாங்கள் விரும்பிய கதாநாயகர்களின் திரைப்படங்கள் போடுவார்கள். இரண்டு படத்திற்கும் இடையில் இடைவேளை விடப்படும் கடை மகமை எடுத்தவரின் கோரிக்கை அது.

விடிந்தால் கிடாய் வெட்டு ஊரே திருவிழா கோலம் பூண்டது.

'காலையில ஏழு மணிக்கெல்லாம் கிடாய் வெட்டிரனும்' என்றார் ஊர் தலைவர் துரைப்பாண்டி .

'எல்லாம் தயார் சித்தப்பு காலையில ஏழு மணிக்கு ஆரம்பிச்சிடலாம்' என்றான் வீரணண்.

ஆண்டுதோறும் கிடாய் வெட்டக்கூடிய பொறுப்பு வீரணனுடையது .இந்த ஆண்டும் அதற்காக தயாரானான் வீரணண்.

ஊர் வழக்கப்படி முதலில் பொதுக் கிடாய் வெட்டப்படும் அடுத்து ஒவ்வொரு கரைக்கும் ஒரு மரியாதை ஏழு கரைக்கும் ஏழு கிடாய்கள் வரிசையாக வெட்டப்படும் கரை என்பது கோயில் திருவிழாக்களில் கொடுக்கப்படும் மரியாதையாகும்.

புளிய மரத்தடியில் பந்தல் போட்டு சமையலுக்கான வேலையை தொடங்கினான். சமையக்காரர் சுப்புராமு. சுத்து பத்துல கறி குழம்புக்கு பேர் போன ஆளு சமயக்கார சுப்புராமு. ருசியான கைப்பக்குவம் உள்ள ஆளு 50 கிலோ 100 கிலோ என்றாலும் அசராமல் சமைத்துக் கொடுப்பார் ஒத்தாசைக்கு நாலு ஆளுகளை கூட்டிட்டு வந்து சமையல் வேலை ஆரம்பிச்சாரு சுப்புராமு கல்ல அடுக்கி பத்தி, சூடங்காட்டி தேங்காய் உடைத்து தன் வேலையை முறைப்படி தொடங்கினார் சமையல்காரர். நேரம் நெருங்கியது எல்லா கரைக்குமான கிடாய்களும் வந்து இறங்கியது மஞ்சள் தண்ணீர் ஊற்றி கதம்பமும் மல்லிகை பூவும் கொம்பில் சுத்தி விடாப்பிடியாக இழுத்து வந்தார்கள்.

வேண்டாம் வேண்டாம்னா விடவா போறாங்க என்று கடைசியாக ஒருமுறை கத்தியும் பாக்குதுக கிடாய்க.

இழுத்து வந்து புளிய மரத்துக்கும் வேம்புக்கு இடையில கயிற கட்டி கிடாய்களை கட்டி போட்டார்கள்.

கிடாய் நேர்த்திக்கடன் செலுத்துவதற்கான நேரம் வந்தது.

'என்னப்பா எல்லாம் வந்தாச்சா' என்றார் ஊர் தலைவர் துரைப்பாண்டி .

'நம்ம ராமசாமி தாத்தாவை இன்னும் காணல வரட்டுஞ் சித்தப்பு' என்றான் வீரணண்.

'அதோ வாராரப்பா மச்சான் ராமசாமி' என்றார் மூக்காண்டி.

'வெரசா வாருமய்யா புது மாப்பிள்ளை கணக்கா சோடிச்சுக்கிட்டு' என்றார் மூக்காண்டி

மூக்காண்டியும் ராமசாமியும் மாப் பிள்ளை மச்சான் முறை.

'எல்லாரும் வந்தாச்சு கிடாய் வெட்டிடலாம் பா' என்றார் ஊர் தலைவர் துரைப்பாண்டி .

'பொதுக் கிடாய அவுத்துட்டு வாங் கப்பா' என்றார் ராமசாமி தாத்தா .

கட்டிப்போட்ட இடத்தில் பொதுக் கிடாயை காணவில்லை

அனைவரும் அதிர்ச்சியானார்கள்


'ரவையே கோயில்ல வந்து கட்டி யாச்சப்பா' என்றார் ராமசாமி தாத்தா

'ஊருக்குள்ள போய் தேடி பாருங்கப்பா எங்கிட்டாவது திரியும்' என்றார் ஊர் தலைவர் துரைப்பாண்டி .

வீரணன் தலைமையில் இளவட்டங்கள் ஊர் முழுவதும் தேடினார்கள் எங்கு தேடி யும் கிடைக்கவில்லை கிடாய் வெட்டுவ தற்கான நேரம் போய்க் கொண்டிருந்தது பெண்கள் கூட்டம் கூட்டமாக இருந்து ஏதோ சாமி குத்தம் ஆகிப்போச்சு என்று பேசிக் கொண்டார்கள்.

வீரணனுக்கு மிகப்பெரிய அவமானமாக போச்சு. இதுவரை எந்த பொருளையும் களவு போக விடவில்லை. எத்தனை பேர் திருட வந்தாலும் ஒத்தையாலாக நின்று அனைவரையும் விரட்டி அடிக்க கூடிய தைரியம் படைத்தவன் பல திருடர்கள் வீரணனுக்கு பயந்து ஊர் பக்கமே வருவதில்லை

'இது திருட்டு பய வேலை கிடையாது வேறு ஏதாவது பிரச்சனை இருக் குமோ' என யோசித்தான் வீரணன்



விவசாய நேரத்துல ஆடு மாடுகளை பயிர்ல விட்டு மேய்ச்சதுக்காக பக்கத்து ஊரு காரனை மடத்துல கட்டி வச்சி அடிச்சது. வேலைக்கு போன நம்ம பொண்ணுகள பக்கத்து ஊர்க்காரன் கேளி பண்ணான்னு மண்டைய உடச்சது. ஊர் பகட பெருமாளை வேலைக்கு வர லைன்னு அடிச்ச ஒத்த வீட்டு பாண்டிய கைய ஒடச்சதுனு. நிறைய பேர் பகையாளி இருக்கிறார்கள் இதில் யார் செய்த காரியம் இது என வீரணனுக்கு குழப்பம்.

'முதல்ல ஒத்த வீட்டு பாண்டிய போய் கேட்போம்' என சென்றான் வீரணன்.

பாண்டியை பார்ப்பதற்கு ஒத்த வீட்டை நோக்கி சென்றான் வீரணன். அங்கே பாண்டி மனைவி வீட்டு வாசலில் பாத்திரம் விளக்கிக் கொண்டிருந்தாள்.

'என்ன மதினி அண்ணன் வீட்ல இருக்கா' என கேட்டான் வீரணன் .

'ரவைக்கு சாராயத்தை குடிச்சிட்டு வந் துச்சு இன்னும் தூங்குது, பிரச்சினை ஏதும் பண்ணிருச்சா' என்றாள் பாண்டி மனைவி .

'அதெல்லாம் ஒன்னும் இல்ல மதினி நான் வாரேன்' என்று கிளம்பினான் வீரணன் .

'பக்கத்து ஊரு காரய்ங்க தான் ஏதாவது செஞ்சிருப்பாய்ங்க' என்ற சந்தேகம் வந்தது .

வேல் கம்ப எடுத்துக்கொண்டு பக்கத்து ஊருக்கு கிளம்பினான் வீரணண். வீரணண் செல்வதை பார்த்து இளவட்டங்கள் அருவா கம்புகளை எடுத்துக்கொண்டு உடன் சென்றார்கள். பக்கத்து ஊர் எப்போது முட்டலும் மோதலும் இருக்கிற ஊர். சொந்தபந்த கிராமமா இருந்தாலும் விட்டுக் கொடுக்காத பயலுக. அந்த ஊரில் பல பேர் வீரணனிடம் முட்டியவர்கள். ஆயுதங் களோடு சென்றதைப் பார்த்த பக்கத்து ஊர் பெருசுகள் பதட்டமானார்கள். பொண்டு, பொடுசுகள் அலறிக்கொண்டு கோவில் நோக்கி ஓடிவந்தது. ஏதோ விபரீதம் நடக் கப்போகுது என்று எண்ணி ஊரே கூடியது.

அங்கே, வீரணன் பத்து இளவட்டங் களை கூட்டிக்கொண்டு பக்கத்து ஊரை நோக்கி போவதை பார்த்த பெண்கள் பதட்டத்தோடு ஊர் தலை வர் துரைப்பாண்டியிடம் போய் சொன்னார்கள்.

கிடாய் தேடிச் சென்ற வீரணன் ஊர் கோயில் முன்பாக நின்று.

'ஏப்பா இதெல்லாம் நல்லா இல்ல சாமி கிடாய எவனோ தூக்கியாந்துட்டான் அவனா வந்து கொடுத்துட்டா நல்லது இல் லைனா' என்று சத்தமிட்டான்.

அந்த ஊர் பெருசுகளுக்கு வீரணனை பற்றி நன்றாக தெரியும் ரொம்ப நியாயமான ஆளு. வீண் சண்டைக்கு போக மாட்டான் வம்புன்னு வந்துருச்சுன்னா விடவே மாட்டான் என்று.

விபரீதம் ஏதும் நடந்து விடக்கூடாது என்று பக்கத்து ஊர் பெருசுகள் வீரணனை சமாதானப்படுத்திக் கொண்டிருந்தார்கள். பேசிக் கொண்டிருக்கும்போது கோயிலை நோக்கி ஒரு பெண் கிடாயை இழுத்துக் கொண்டு வந்தாள்.

'இந்தாப்பா ஓங்கிடாயி தெரியாம சாமி கிடாய தூக்கியாந்துட்டாய்ங்க மொதல்ல போய் கிடாய வெட்டுங்க அப்புறம் பேசிக்கலாம்' என்றாள்.

'டேய் மச்சக்காளை கிடாய தூக்கிட்டு போய் ஊர்ல குடு' என்று உத்தரவிட்டான் வீரணன். ஆள் உயர கிடாயை அலேக்காக தூக்கி தோளில் வைத்துக் கொண்டு ஓட்டமும் நடையுமாக ஊர் நோக்கி சென் றான் மச்சக்காளை.

அங்கே கிடாய் வெட்டல போன இள வட்டங்களையும் காணல என ஊரே பதட் டத்தில் இருந்தது.

‘மாமா நாம ஒரெட்டு போய் பாத்துட்டு வந்துருவோம்’ என்றான் கணேசன்

‘ஆமப்பா இளவட்டங்கள் ஏதாவது பண்ணிட்டா ஊர் சண்டையாகி போகும்’ என்றார் மூக்காண்டி

பெண்கள் தெருமுனையில் கூட்டம் கூட்டமாக நின்று ஏதேதோ பேசிக் கொண்டிருந்தார்கள். திருவிழா மும்மரம் அப்படியே அடங்கிப் போய் கிடந்தது. எல்லா வேலையும் அப்படியே நின்று போயிருந்தது.

‘அந்தத் தாயி ஏந்தான் இப்டி சோதிக்கிறாளோ’ என்று வேதனைப் பட்டார் ஊர் தலைவர் துரைப்பாண்டி.

திடீரென்று கீகாட்டுப்பக்கம் இருந்து சிறுவர்கள் ஓடிவந்தார்கள்.

‘மச்சக்காளை கிடாயோட ஓடி வர்றாரு’ என்று சத்தம் போட்டபடி ஓடி வந்தார்கள்.

அவர்களின் சத்தத்தை கேட்ட ஊர் பெருசுகள் முகத்தில் பெரிய சந்தோஷம்

‘ஆத்தா நீ தான் காப்பாத்துன’ என்று கோவில் முன் நெடுஞ்சான் கடையாக விழுந்து கும்பிட்டார் ஊர் தலைவர் துரைப்பாண்டி.

எதுத்தாப்புல ஓடி மச்சக்காளை தோள் மாத்தி வாராங்க இளவட்டங்க.

‘எங்கப்பா வீரனணையும் மத்த ஆளு களையும் காணோம்’ என்றார் ராமசாமி தாத்தா.

‘அது வந்து தாத்தா’ என்று மூச்சு வாங்கினான் மச்சக்காளை .

‘ஏய் பொறுப்பா அவனுக்கு கொஞ்சம் தண்ணி கொடுங்கப்பா‘

என்றார் மூக்காண்டி.

தண்ணீர் குடித்து அமைதியான மச்சக் காளை ‘கிடாய் கெடச்சதும் வேகமாக கொண்டு போய் ஊர்ல சேருனு சொன்னா வீரணே, நான் ஓடியாந்தேன். பின்னால யாரும் வரல’ என்றான் சிறிய மூச்சு வாங் கலோடு.

அங்கே வீரணன் ‘கிடாய் தூக்கிணவே ஆத்தா முன்னால வந்து மன்னிப்பு கேட்டா தான் விடுவேன், இல்லைனா நடக்கிறது வேற’ என்று ஊர் பெரியவர்களிடம் கூறிவிட்டு கிளம்பினான்.

ஓட்டமும் நடையுமாக வீரணனும் இளவட்டங்களும் வந்தபோது பத்திருவது இளவட்டங்கள் ஓடங்காட்டுக்குள்ள இருந்து வந்து வழிமறித்தார்கள். முத லில் வாய் தகராறாக ஆரம்பித்து பிறகு கைகலப்பில் முடிந்தது. ஒருவரை ஒருவர் தாக்கிக் கொண்டார்கள். திடீரென்று கோவிந்தனுடைய அலறல் சத்தம் கேட்டது. கோவிந்தனுடைய கையை ஒருத்தன் வெட்டியது தெரிந்து மறு நொடி வீரணன் ருத்ர தாண்டவம் ஆடினான். இரு கைகளிலும் வேல் கம் பும் வீச்சறிவாளும் விளையாடியது. எதுக்க துணிந்தவன் எல்லாம் நாலா புறமும் சிதறி ஓட ஆரம்பித்தார்கள் . இளவட்டங்களை எல்லாம் ஊரை நோக்கி செல்ல உத்தரவிட்டான் வீரணண். ஆனால் இளவட்டங்கள் யாரும் செல்லவில்லை.

பக்கத்து ஊரு இளவட்டங்கள் சிறிய வெட்டு காயங்களோடு தப்பி சென்றார்கள். வீரணன் இளவட்டங்களை முன்னே விட்டு ஓட்டமும் நடையுமாக ஊர்நோக்கி கிளம்பினான் .

ஒருவழியா எல்லாத்தையும் அடிச்சு விரட்டியாச்சு என்ற மன நிம்மதியோடு இளவட்டங்கள் ஊர்நோக்கிச் செல்ல. அங்கே எதிர்பாராமல் அது நடந்து விட்டது

ஒழிந்திருந்து ஒருத்தன் எறிந்த வேல் கம்பு வீரணணின் விலாவில் பாய்ந்தது. நேருக்கு நேராக நின்று எதிர்த்து வெல்ல முடியாது என்று நினைத்தவர்கள் மறைந்து நின்று தாக்கி நிலைகுலைய வைத்தார்கள்.

முன்னே சென்று கொண்டிருந்த

இளவட்டங்களுக்கு எந்த சத்தமும் கேட்கவில்லை வீரணனும் சத்தம் போடவில்லை. தனியாளாக நின்று போராடத் துணிந்தான். தன்னை வெட்ட வந்த இருவரையும் சமாளித்து தனி ஒருவனாக போராடி இருவரையும் வெட்டி சாய்த்தான்.

எப்படியும் தன்னுடைய ஊரில் தான் தன் உயிர் போக வேண்டும் என்று நினைத்து அரை மயக்கத்தில் ஊர் நோக்கி செல்கிறான் வீரணண்.

'இன்னும் ரெண்டு வயத்தாண்டினா ஊர் எல்லை வந்துரும் அதுவரைக்கும் உயிர்க்காத்து உடம்புல தங்கனு ஆத்தா' என்று மனதில் நினைத்துக் கொண்டு நடந்தான் வீரணன் .

மயக்கம் தலை சுற்றியது ரத்தம் அதிகமாக வெளியேறியது வீரணன் மரணத்தை கண்டு அஞ்சவில்லை. ஆனால் மண் மீது கொண்ட பற்று ஊர் மீது கொண்ட மரியாதை மரணத்தை கண்டு அஞ்சவைக்கிறது. இருந்தாலும் அவனால் மரணத்தை வெல்ல முடியவில்லை.

இறுதியில் மயங்கி கீழே சாய்கிறான். வீரணன்.

தன் மண்ணையும் மரணத்தையும் ஒருசேரத் தழுவிக்கொள்கிறான்.

அங்கே கோவிலில் 'வீரணன் வந்தா தான் கிடாய் வெட்ட முடியும்' என்று பேசிக் கொண்டிருந்தார்கள் ஒரு எட்டு போய் பாத்துட்டு வந்துருவோம் என்று கிளம்பினார்கள் பெருசுகள்.

அங்கே வீரணன் விழுந்ததை பார்க்காத இளவட்டங்கள் நான்கைந்து வயல்கள் தாண்டி சென்று இருந்தார்கள் .

'என்ன வீரணே அலுவாட்டத்தையே காணோம்' என்று திரும்பினான் பால்பாண்டி .

கண்ணுக்கெட்டிய தூரம் ஆள் ஆலுவாட்டமே இல்லை .பதறிப் போய் ஓடினார்கள்

'ஏ பால்பாண்டி மாப்ள எங்கயா ஓம்பங்காளி வீரனே' என்றான் வேல்சாமி.

அனைவரும் பதட்டத்தோடு வேகமாக ஓடினார்கள்.

இரண்டு வயக் கடப்பில் வீரணன் குப்புற விழுந்து கிடப்பதை பார்த்தார்கள் அலறி துடித்து ஓடினார்கள்

'ஏ மாப்ள வீரனா' என்று அலறினான் வேல்சாமி .

'யண்ணே' என்று அலறிக் கொண்டு ஓடினான் பால்பாண்டி.

அருகில் சென்று பார்த்த போது ரத்த வெள்ளத்தில் கிடந்தான் வீரணண். அவனுடைய முகம் மண்ணை முத்த மிட்டபடி கிடந்தது. அவனைத் தூக்கி மடியில் வைத்துக்கொண்டு அலறி துடித்தார்கள் இளவட்டங்கள்.

அருகில் யாரும் இருப்பார்களோ என்று எண்ணி ஓடிய ராசுவுக்கு அங்கே இருவர் வெட்டுப்பட்டு கிடந்தது தெரிந்தது.

வீரணணின் உடலை தூக்கிக்கொண்டு ஊர்நோக்கிச் சென்றார்கள் இளவட்டங்கள் அதற்குள் ஆடு மேய்க்கும் சிறுவர்கள் ஊருக்குள் தகவல் சொல்ல. ஊரே அலறல் சத்தம் கேட்டு பதட்டமாகி கிழக்குப் பக்கமாக ஓடியது கோவிலில் இருந்த பெருசுகளும் கிழக்கு நோக்கி ஓட ஆரம்பித்தார்கள்

சரியாக ஓராண்டு முடிந்தது அந்த ஆண்டுக்கான திருவிழா ஆரம்பம் ஆனது முதலில் பொது கிடாய் வெட்டப்பட்டது அடுத்து ஏழு கரைக்கும் மரியாதை செய்யும் விதமாக ஏழு கிடாய்கள் வெட்டப்பட்டது. எட்டாங்கரையாக வீரணனுக்கு மரியாதை செய்யும் விதமாக எட்டாவது கிடாயாக அவனுடைய கிடாய்.. வெட்டப்பட்டது .



# உதிர்ந்த இலைகள்

அது இளையுதிர் காலம் மரங்கள் மூன்று நிறத்தில் இலைகளை சுமந்திருந்தது. அது பார்க்கவே அழகாக கண்களை அலங்கரித்தது. மஞ்சள், பச்சை சிவப்பு என காணப்பட்டாலும் கண்களை கவந்தாலும் சொரியும் இலைகள் . கூலங்களாக நிறைத்து பரவி இடமெங்கும் காணவே சகிபற்று போயின.

விழும் இலைகள் கொடுத்த தளும்போடு மரமும் அடுத்த துளிர் இலைக்கு இட மளித்தன.

காற்றின் பலத்திற்கு ஈடாகாத இலைகள் முதிர்வில் வீழ்ந்து விட்டு மரமே தட்டி விட்டதென சொல்வதைப்போல மரத்தடி வேரோடு ஒதிங்கியும் காற்றிற்க்கு இசைந்து தொடர்ந்து செல்லும் இலைகளுக்கும் இன் னும் வாழ்வு முடிவாகவில்லை போல. முடிவின் எல்லை வரை தானே பயணமே அதுவரை பயணிப்பதை தவிர வேறென்ன செய்வது.

ஆகாஷ்யின் வீட்டை சுற்றி மரங்கள் செழிப்புடன் வளர்ந்து இலைகளை உதிர்த்து கொண்டிருந்தன. வளவெங்கிலும் பரவி அலகோலமாகி போயிருந்தது.

அதிகாலை நேரம் பனி விழுந்து குளிர் பரவிக்கொண்டிருந்ததால் வெளியிரங்கும் எண்ணம் குறைந்து போர்வையோடு சுருள நினைக்கும் மனங்களுக்குள் பெண்களுக்கு எப்போது விடுப்பு வரப்போகுதோ அவ்

வீட்டு பெண்ணவளும் எழுந்து தன் கடமை முடித்து விட்டு ஜன்னலை திறந்து பார்த்தவளோ தலையில் கை வைத்து கொண்ட இன்றுமா என சலித்து கொண்டு கிச்சனுக்குள் சென்றாள்.

தனக்காக சூடாய் தேநீர் கலக்கியவள் தனதறையில் ஜன்னலோரமாய் அமர்ந்து குடித்திட தொடங்கினாள்.

இக்காலம் தனது வேலைகளுக்கும் விடுப் பில்லை என்று வருந்தினாலும். பிள்ளைகள் எழும்ப நேரமாகும் என்பதோடு காலை நேரத்து உணவிற்கு விடுப்பு என்பதே மகிழ்ச்சி தான் அவளுக்கு.

சடச்சு போனாலும் தனக்குரியவர்களுக் காக தியாகம் செய்வதும் பெண்கள் தானில் லயா.

அவள் பார்வை ஜன்னல் தாண்டிய சென்றுக்கொண்டிருக்கையில் ஏதோ சத்தம் பார்வையை திருப்பிக் கொண்டு உள்ளே மீட்டியதால் திரும்பியவள் பார்வையில் துறத்தி செல்லும் அணில்களை கண்டவளுக்கு இதுகளுக்கு குளிர் தோன் றாதோ என தான் தோன்றினாலும் அதனை தாண்டி வந்தவள் பார்வையில் கண்ணாடி கதவை தாண்டி உள்ளிருக்கும். பொருளொன்று தென்பட்டது.

மெதுவாக எழுந்தவள் அதன் அரு கில் சென்றாள். மெதுவாக தொட்டு பார்த்தவள் கசந்த புன்னகையை சிந்திய படி அதே இடத்திலே வைத்து விட்டு திரும்பும் போது அவளை துளைக்கும் பார்வையை உணர்ந்தவள். மீண்டும் அதே புன்னகையோடு தன் வேலைகளை தொடர்ந்தாள்.

குளிரையும் தாங்கிக்கொண்டோ பொறுத்துக்கொண்டோ பணிகளை செய் திட வேண்டும்.

அவ்வப்போது அவளிடம் கசந்த புன் னகை வெளிவரவே செய்தது.

ஜன்னல் வழி தன் மனையாளை பார்த்த ஆகாஷுக்கு அவள் புரியா மொழியை விட தெரியா மொழியாய் தான் தெரிந்தால்.

அவள் வைத்த பொருளை இப்போது அவன் எடுத்து கையில் வைத்து பார்த்த வனுக்கு உதிர்ந்த இலையைப்போல கடந்தவையும் உதிர்ந்து போன இலைகளை போல தான் மரத்தோடு ஒட்டிட முடி யாதா என ஏங்கும் இளையைப்போல அவனுக்குள்ளும் எண்ணம் மாறாதா? என்று தான் தோன்றிட்டு..

வருடம் ஒன்று கடந்து அவனது நினைவு சென்றது.

ஆகாஷுக்கு கோவம் சட்டென்று வந்து வந்த வேகத்தோடு யாரென்று பாராது கடிந்துகொள்வதுண்டு. பள்ளிகாலம் தொட்டே தன்னோடு கோவத்தை இழுத்து கொண்ட வந்தவனுக்கு படிப்பு முடிந்த கையோடு மணமகள் தேடி அலைந்து கடைசியிலே தான் சரிதாவின் வரவு கிடைத்தது. குடும்பம் இரண்டும் கொண் டாடி தீர்த்து திருமணமும் அழகாய் நிகழ்ந்தேறியது.

வருடங்கள் முதலில் அழகாய் ஆதவ் வந்துதித்து குடும்பம் குதூகலிக்க சிறு சிறு சண்டை என்றாலும் சமாதானமாகி டுவார் கள். காலம் நான்கை தொட. சாசாவும் பிறக்க அழகாய் நகர்ந்தது வாழ்க்கை

சாசாவிற்கு வயது ஒன்றை நெருங்கை யிலே அடிக்கடி சரிதாவிற்கு மயக்க நிலை ஏற்பட யாரிடமுமே சொல்லாமலே இருந் தாள். சொல்வதற்கான தருணமும் வரவில்லை.

ஆகாஷிற்கு தோழர்களோடு நேரம் செல வழிக்க அலாதி பிரியமானது. அந்நேரத்தில் வேறார் அழைத்தாலுமே அழைப்பை ஏற்க மாட்டான்.

அன்று ஒரு நள் மதிய நேரத்தில் சாசா அழுதபடி இருந்தாள். வயது ஒன்று பூர்த்தி தடுப்பூசி இட்டு இருந்தது. பிள்ளையை

ஏதேதோ செய்து தூங்க வைத்தவளும்.

ஆதவ் விளையாட, பார்த்தபடி தூங்கி விட்டாள். ஆகாஷோ தத்தி தத்தி சென்று பல காலமாக இருந்த கண்ணாடி பிரேம் ஒன்றை ஆட்டி விட வீழ்ந்து சிதறி போன போது திடுமாய் எழுந்தவளோ? புள்ளையை தூக்கி கொண்டாள். அந்நேரம் பார்த்து வீட்டுக்கு வந்த ஆகாஷ் கண்களில் பட்டு விட

சூடேற வந்தவன் யார் உடைத்தது என்று உறுமலோடு கேட்டு வைக்க குழந்தையோ தாயோடு பயத்தில் ஒட்டி விட சரிதாவுக்கும் நடுக்கம். கணவனின் கோபத்தை பார்த்திருக்கிறாள் தான் ஆனால் இன்றோ அங்கொரு கொதரும் தன்மையில் வேட்டை புலியைப்போல காட்சியழித்தான் ஆகாஷ்.

யார் செய்தது சொல்லு நீ தானே? நீ தானே என சரிதாவின் கையை இழுத்து பிடியை இருக்கிய படி கேட்டான். என்ன சொல்வது தானென்று பொய் சொன்னாலும் கண வனின் ஆக்ரோஷம் எவ்வாறு இருக்குமோ என்று பயந்தாள். பிள்ளை தான் என்றால் கோபத்தை பிள்ளையில் காட்டி விட்டால் என்று அமைதியோடு நின்றவள் கை சிவப்பேறி வலியில் ஆ வலிக்குதென்று வாய் விட்டே கூறி அழுதும் விட்டாள். விடுவது போல அவனில்லை. உனக்கு தெரியுமா? மறுமடி இதை யாராலு தர முடியுமா சொல்லு சொல்லு எனக்கு இப்போவே வேணும் என கத்தினவன். அவளது வீட்டுக்கு அழைத்து உம் மகளை சரியாக வளர்க்க தெரியாதா? இப்போதே கூட்டிட்டு போயிடுங்க. இல்லை உங்க பொண்ணு உயிரோடு கிடைக்க மாட்டாள் என சொல்லிக்கொண்டு வைத்து விட தந் தையார் வந்தழைத்து சென்று விட்டார்.

நாட்களே கடந்தது. ஆகாஷ் வேலை, நண்பர்கள் என்று சென்றுக் கொண் டிருந்ததில் மனைவி மக்களோடு நடந்த கலவரத்தையுமே மறந்திருந்தான்.

அன்று தனது வீட்டில் இருக்கும் போது ஆகாஷின் தந்தையோ அவனைக்கடந்து. பேசாமல் சென்ற போது தந்தையின் முது கினை வெறித்தவனுக்கு ஏதோ சரியில்லை என தோன்றவே தனது தங்கையை தேடி சென்றான். அங்கு அவனது தங்கையோ கேட்டதற்கு பதில் சொல்லாது. அழத் தொடங்கி விட தாயாரோ வந்து ‘என்ன ஆகாஷ் செய்தாய்.

‘மா அப்பா கோவம இருக்கார். ஏனு தெரியல அது தான் இவட்டே கேட்டு வந்தேன். இவள் அழுறாள் மா’ என குழந்தை தன்மையாய் மாறி பேசினவனை வெறித் தவரோ ..

உனக்கு உன் மனைவி மக்கள் நினைவி ருக்கிறதா என கேட்டு வைக்க

தலையில் அடித்தது போல ஏதோ உறைக்க தாயை நிமிர்ந்து பார்த்தவனுக்கு அன்றைய தினம் நினைவில் வரவே

‘மா உங்களுக்கு தெரியும் தானே என் ப்ரண்ட்ஸ் எவ்ளோ பிடிக்குமென்று அவர் கள் தந்த பரிசுமா உடைச்சுட்டாங்கமா என்ன செய்ய நானும் வேலை முடிச்சு வரப்போ கோவத்தோடு தான் வந்தேன். இதையுமே பார்த்து கோவம் கூடிட்டு மா’7

என்றதும்

‘சரிதா வீட்டுக்கு கோல் பண்ணி என்ன சொன்ன’ என்று கேட்டதுமே

‘ம் உங்க பொண்ண என்னனு வளர்த் திங்க’ எனும் போதே

‘அவங்க சரியா தான் வளர்த்திருக்காங்க நாங்க தான் உன்னை கண்டுக்காது விட்டுட் டோம்.’

‘ஆமா அந்த கண்ணாடியை ஆதவ் தான் உடைச்சது என்ன செய்திருப்ப தெரிஞ்சதும் சொல்லு’ என்றதும் அமைதியோடு நின்றான்.

‘உன் மனைவிக்கு கொஞ்ச நாளா

மயக் கமா வந்திருக்கு உனக்கு தெரியுமா சொல்லு' என்று கேட்டதுமே அவனது விழி கள் தெரியாததை காட்ட விரிந்தது.

'அந்நாள் சாசாவுக்கு வயது பூர்த்தி தடுப் பூசி போட்டது தெரியுமா மகன்'

இல்லையென தலையை மட்டுமே ஆட்ட முடிந்தது.

உன் மனைவிக்கு நீ கொடுத்த பரிசு என்ன தெரியுமா. ?

கோபத்தோடு பிடிச்ச தானே கை நரம்பு நசுங்கி சின்ன ஒப்ரேசன் பண்ணிருக்கு அதை பார்த்து வந்தவள் தான் இப்படி அழு துட்டே கிடக்குறாள்.

உன் மனைவிக்கு சரியான தூக்கமில் லாததால் மயக்க நிலையென்றும். நீ கத் துன கத்தில் பயந்தே போயிருக்காள். அதிர்வு சத்தம் கேட்டாலும் பயந்து நடுங்குறாள். அதற்கு மருத்துவம் பண்ணிட்டு இருக்காங்க என்ன ஏதுனு தெரியாமல் போயி இவள் போயி மதனினு கத்தினதுல சரிதா உடல் தூக்கிவாரி போட மருத்துவர்களே அதிர்ந்தாச்சு

இப்போ சொல்லு ஆகாஷ் என்ன செய்யலாம்' என்று அத்தனையுமே கேட்ட வனுக்கு தன்னை தானே வெறுத்தது போல அமர்ந்திருந்தான்.

மனைவி மக்களை காண விரும்பினாலும் குற்ற உணர்வு தடுத்து நிறுத்தியதால் ஒன் றுமே செய்ய வழியின்றி நின்றான்.

நண்பர்களுக்கும் தெரிய வந்தது அவர்க ளும் வந்து பரிசு திரும்ப கூட கிடைக்கும் டா உயிரும் பாசமும் மீண்டும் கிடைக்காது டா என சொல்லவே அது அவனுக்குமே புரிந்தது தான்.

நாட்களின் வேகத்தில் நண்பர்கள் சேர்ந்து அதை போன்ற பரிசை கொண்டு கொடுத்து சென்றார்கள் அவன் 'ஏன்டா' இது என கேட்கவே உன் மாமா தான் எங்களிடம் பேரன் உடைத்தது போல வேறொன்றை எம்மிடம் கேட்டார் என் றதுமே ஆகாஷுக்கு வலித்தது எத்தனை பேருடைய மனதை உடைத்து விட்டான்.

சரிதாவும் சரியாகியதும் மகளையும் பேர பிள்ளைகளையும் கொண்டு விட்டவர் ஆகாஷிடம் என் மகளை எப்படி வளர்த்திருக்கனு எனக்கு தெரியவில்லை. ஆனா தவறா ஒன்றும் நான் வளர்க்களை. நல்லா வாழனும் என்று தான் எங்க ஆசை கோபத்தை மூட்டகட்டிட்டு எல்லார் மன நிலையிலும் யோசிச்சு பாருங்க என்று சென்று விட்டார்.

அந்நாளில் இருந்து இந்நாள் வரை அவனது மனைவி அவனோடு பேசுவதே இல்லை. எத்தனையோ தரம் மன்னிப்பும் யாசித்து விட்டான்.

மன்னிப்பு என்பது எதனையும் மாற் றவோ மறக்கவோ வைத்திடுமா?

இப்போது எல்லாம் ஆகாஷ் கோவப்ப டுவதில்லை மனைவியே பெரிதொரு பாடத்தை உணர்த்திக்கொண்டு தானே இருக்கிறாள். இப்போது பிள்ளைகளோடு விளையாடுவதற்கும் பேசுவதற்கும் நேரம் தருகிறான். மனைவி எழ முன் சில வேலைகளையும் செய்து வைப்பான் தான். ஏனோ அவளிடமிருந்து கோபத்தை கூட பெற முடியவில்லை.

காலம் தான் மாற்றும் காலம் தான் ஆற்றும் என நம்ப தான் வேண்டும்.

உதிர்ந்த இலைகளை மீண்டும் மரத்தில் ஒட்ட முடியாது அல்லவா. அது போல நினைவுகளை அழிக்கவுமுடியாது. நினைவினை கொடுத்த அத்தருணதிற்கு சென்று அழிக்கவும் முடியாதல்லவா!

பொருளை இருந்த இடத்திலே வைத்த வனுக்குள்ளும் வலிமிகுதியாய் இருக்கவே செய்தது.

ஜன்னலை தாண்டி பார்க்க மனைவி இலைகளை ஒதுக்கி கொண்டு சேர்ப்பதை

கண்டவனுக்கு என்ன செய்து தன் வாழ்வை சரி செய்வ தென்றுதெரிய வில்லை .

பிள்ளைகளின் சிணுங்களில் நினைவை கடந்து நனவிற்குள் வந்தான் ஆகாஷ்.

பிள்ளைகள் இருவருமே சிணுங்களோடு எழவே ஆகாஷ் அருகில் செல்ல பிள்ளைகள் தந்தையைக் கண்டதும் புன்னகையோடு எழுந்தனர்.

அவர்களது தேவைகளை முடிக்க உதவிய பின் சூடான பாலை இருவருக்கும் ஆற்றி பதமான சூற்றில் கொடுத்ததும் குடித்தார்கள். அதோடு அவர்களது கலாட்டாக்கள் மேலேழுந்து விடும்.

சகோதரனுக்கும் சகோதரிக்கும் ஏதொரு பொருளுக்காக சண்டை வர ஆரம்பித்தால் அதை இதை இழுத்து போட்டு நொறிக்கி விடவே இடமே கோலமாகி விடும் அதனை சுத்தம் செய்யவே தனியாக பாடுபவளுக்கு மீதமாய் ஒருவேலை பிள்ளைகள் சேர்த்து வைத்திருப்பார்கள்.

அதை போல விளையாடும் வாகன சண்டையில் இருவரது கை தவறி கண் ணாடி மேசை சில்லு சில்லாய் உடைந்து விட பதறிய பிள்ளைகள் பயத்தில் நடுங்கி ஒதுங்கி விட ஆகாஷோ பதறிக்கொண்டு பிள்ளைகளை பார்த்து வைக்க. வெளி வேலைகளை முடித்து விட்டு உள்ளே வந்த சரிதாவும் சத்தம் கேட்டு பதறி கொண்டு உள்ள வந்தவளோ கண்ணாடி துகள்களை தாண்டி மலையில் நனைந்து குளிரில் நடுங்கும் பறவைகளைப்போல தம் பிஞ்சுகளை கண்டு தாயாய் மாறி அவ்விடத்திலே முட்டுகாளில் வீழ்ந்தவள். இருகைகளையும் விரிக்க இரண்டு செல்வமும் சிட்டாக பறந்து தாயின் கைச்சிறைக்குள் அடங்கி கொண்டவர்களை அணைத்தவள் சிரித்துக்கொண்ட இருவர் உச்சந்தலையிலும் முத்தமிட்டவள் காதோ ரமாய் பயந்துட்டாங்களா என் செல்வங்கள் என்று கேட்டதும். தலையை மட்டுமே ஆட்டினர். சிரித்தவள் அது உடையும் தானே கவனமா இருக்கனும் தானே. நாங்க புதிதா வாங்கலாம். அதை கவனமா பார்த்துக்கலாம் என்றதும் சரி என்று இரு வரும் சொன்னார்கள் .

அன்றும் இதை தானோ தன் மனைவி பிள்ளைக்கு தானுமே கொடுத்திருக்க வேண் டுமோ என உணர்ந்தவன் மனைவியை பார்த்தான்.

புன்னகையோடு அவனை தான் பார்த்து கொண்டே பிள்ளைகளை அணைத்திருந்தாள்.

அவனால் நம்ப முடியவில்லை மீண்டும் பார்த்தான். ஆகாஷின் சந்தேகத்தில் சிரிப்பு மேலோங்க அடக்க முடியாமல் பக்கென்று சிரித்து விட பிள்ளைகளும் சிரித்து வைக்க சரிதாவோ ‘என்ன இங்கே பார்வை கண்ணாடி துகளெல்லாம் கிளீன் பண்ணுங்க பார்த்துட்டு நின்றா வேலையை யார் செய்றது’ என்று சொல்ல மனைவின் கட்டளையில் கண்களை விரித்தான் ஆகாஷ்

அவன் மன்னித்தாளா என்பதை கடந்து பேசி விட்டாள் என்பதே மகிழ்ச்சி அவனுக்கு ..


**சஹ்னாஸ் பேகம்**

முதலைப்பாளி, புத்தளம்

நிலவுக்கு என் மேல்
என்னடி கோபம்
ஒளிந்து விளையாடுகிறாதோ
மூன்றாம் பிறை.

**கமலி வெங்கட்**

# உமிழ்நீர்ச்சோறு



ஹலோ சார், உங்க பொண்ணுக்கிட்ட ஒரு அஞ்சு நிமிஷம் பேசணும்.

இங்க பாருங்க தம்பி உங்க குடும்பம் ரொம்ப வசதியான நல்ல குடும்பம், நீங்களும் பெரிய, பெரிய படிப்பெல்லாம் படிச்சு இருக்கீங்க, ரொம்ப பெரிய வேலைல இருப்பீங்கன்னு தான் உங்கள உங்க வீட்டுக்கு வந்து பார்க்க வந்தேன்...

உங்க குணமும் - உங்க குடும்பமும் எனக்கு ரொம்ப பிடிச்சு போச்சு. ஆனா உங்களுக்கும் - என் பொண்ணுக்கும் நிச்சயதார்த்தம் பண்ண வந்தப்ப தான் லட்ச கணக்குல சம்பாதிச்ச நீங்க ஐ. டி.வேலையை உதறி தள்ளிட்டு உங்களுக்கு பிடிச்ச விவசாயத்தை கடந்த ஒரு வருசமா செஞ்சுக்கிட்டு வரீங்கண்ணு தெரிஞ்சது.. ஒரு சக மனுஷனாய் நீங்க செஞ்ச விஷயத்துக்காக மனதார பாராட்ட முடியும். ஆனா என் மகளை எல்லாம் உங்களுக்கு மனைவியாக்க கட்டி தர இயலாது... நீங்க விவசாயின்னு தெரிஞ்சதும் முதல்ல நடக்கவிருந்த இந்த நிச்சயதாரத்தை நிறுத்த சொன்னதே என் மக தான் தம்பி..

என் பொண்ணுக்கு பிடிக்காத உங்களுக்கு என் பொண்ணை எப்படி தம்பி கட்டி தரமுடியும்..

இங்க பாருங்க சார் உங்க பொண்ணை எனக்கு கட்டி கொடுக்குறதும், கட்டி கொடுக்காததும் உங்க இஷ்டம். உங்க பொண்ணு என்னை பிடிக்கலைன்னு சொல்லியிருந்தா இங்க வந்து இருக்க மாட்டேன். ஆனா நமக்கு சோறு போடுற விவசாயத்தை நான் செய்யுறதாலே பிடிக்கலைன்னு சொன்னாங்க பாருங்க, அதனாலே தான் வந்தேன்... உங்க பொண்ணுக்கிட்ட ஒரு அஞ்சு நிமிஷம் பேசிட்டு போயிடுறேன் ப்ளீஸ்...

சரிப்பா எங்க முன்னாடியே பேசிட்டு போயிடு என்றார் சிவராமன்...

கீதா ஒரு நிமிஷம் இங்க வாம்மா...

அவ அப்பா கூப்பிடவும் கீதா அங்கு வந்தாள்..

வணக்கம் கீதா ஒண்ணே ஒண்ணு உங்ககிட்ட சொல்லிட்டு போக தான் வந்தேன்.. நீங்க பெருசா

*ஆசைப்படுற ஐ.டி. மாப்பிள்ளையும் பசிச்சா சோறு தான் சாப்பிடணும்.. நீங்க என்னை பிடிக்கலைன்னு சொன்னது எல்லாம் கோபமில்லை. ஆனா நான் தெய்வமா மதிக்குற விவசாயத்தை குறை சொல்லிட்டு அந்த புனிதமான தொழிலை செய்யுறதாலே தான் என்னை பிடிக்கலைன்னு சொல்லுறீங்க பாருங்க, அதைத்தான் என்னாலே தாங்க முடியலை.. இது எப்படி தெரியுமா இருக்கு. விவசாயியை குறை சொல்லிட்டு அவன் உண்டாக்கின அரிசியை சோறாக்கி உண்ணுறது அவன் சாப்பிட்டு விட்டு துப்பிய எச்சை சோற்றை திண்ணுறதுக்கு சமம்..*


*லாஸ்ட் பட் நாட் லீஸ்ட் கீதா. இந்த அட்வைஸ் உனக்கு மட்டுமல்ல இந்த நாட்டுக்கும் தான். விவசாயியை மதிக்காத நாடு கோடிக்கணக்கில் சொத்து வச்சு இருந்தாலும் சோத்துக்காக ஒரு நாளைக்கு பிச்சை எடுக்குற காலம் வெகு தொலைவில் இல்லை..*

*குட் பாய்...*

*அவன் பேசிய வார்த்தைகள் அவள் முகத்தில் காரி உமிழ்ந்தது போல் இருந்தது..*

**–நௌஷாத் கான். லி**

# தமிழின் பெருமை



தமிழினிலே பேசுவோம்...!
தலைநிமிர்ந்து வாழுவோம்..!
அன்னைத் தமிழைப் போற்றுவோம்..!
அகமகிழ்ந்து வாழுவோம்...!

உலக மொழிகள் அத்தனையும்
அறிந்து கொள்வோம்...!--அதில்,
உயர்ந்தது நம்தாய்த் தமிழெனப்
புரிந்து சொல்வோம்...!

உலகம் போற்றும குறளை தந்ததும்...!
நம்தாய்த் தமிழே...!
உயிரும் மெய்யுமாய்க் கலந்தே
வளர்ந்ததும்....!
நம்தாய்த் தமிழே....!

ஆதிமனிதன் பாஷைக்கும்....!
ஆடுமாடு குரலுக்கும்....!
காகங்கிளி மொழிக்கும்...!
இன்னபிற ஒலிக்கும்...!
ஓசை வடிவம் அத்தனைக்கும் ...!
எழுத்து வடிவம கண்டதும்.....!
நம்தாய்த் தமிழே...!

சித்திரமாய்த் தோன்றி சீக்கிரமாய்...!
வளர்ந்ததும் நம்தாய்த்
தமிழே..!கல்தொன்றி
மண்தோன்றும்...!--முன், தோன்றி
மூத்தது நம்தாய் தமிழே.!

அறிவியலும் மருத்துவமும் ...!
உயர்ந்து நிற்குது மேலை நாட்டினிலே..!
அதைப் பல்லாயிரம் ஆண்டின் முன்னே...!
எழுதி வைத்தார் நம்தமிழர்
ஏட்டினிலே...!--தம்,
ஓலைச் சுவட்டினிலே...!
இன்னும் எத்தனையோ பெருமை..!
உண்டு நம் தமிழுக்கு...!--அதை,
உணர மறுப்பது தானே நமக்கிழுக்கு..!


தாயைப் போற்ற மறந்த பிள்ளை...!
வாழ்வில் வாழ்ந்த தில்லையே...!
தாய்த் தமிழைப் போற்றி...!
நாமும் வாழ்வில் உயருவோம்....!!!

**கவி.பொன்பிரம்மா,**
நெல்லை.6

## நூலனுபவம்



# நடுகல்




இந்த பூமி யாருக்குச் சொந்தம்? யாருக்கெல்லாம் சொந்தம்? கண்டம், நாடு, மாகாணம், ஜில்லா, ஊரெண்டு நாம் தான் பிளவுபடுத்திருக்கினோம்.

பக்கத்து வீட்டுச்சண்டை, ஊர்ச்சண்டை, மாநிலங்களுக்குள் சண்டை, நாடுகளுக்குள் சண்டையென்று சுயநல சுவாமிகளால் இந்த பூமியே வீங்கிப்போய்த் தான் இருக்கிறது.

நான்(ம்) தான் வாழ வேண்டும். நான் (ம்) மட்டும் தான் வாழ வேண்டுமென்ற எண்ண ஆலமரம் விழுதுகள் எப்பொழுதோ தரையில் வேரூன்றி விட்டன. இவைய னைத்தும் அழிவின் காற்புள்ளியே.

பூமி மழை காற்று நிலமெல்லாம் எந் தவொரு இனத்திற்கோ எந்தவொரு உயிருக்கோ பத்திரம் எழுதித்தந்தன்று. எல்லோருக்கும் எல்லா உயிர்களுக்கும் சிலகாலம் உரிமையானது பலகாலம் பொது வானது.

பண்டைய தமிழ் கோன்கள் போர்க்கென்று அறத்தை வகுத்தும் அதை பின்பற்றியுமே வாகைபூவினை சூடி னார்கள். அந்த போர் அறம் தான் என்ன?

சூரியன் முன்னிலையில் தான் போர் நிகழும் மறைந்த பிறகு அல்ல. போர்க் களத்தில் தான் போர் நடக்கும். போரில் குழந்தைகள்,பெண்கள், , கர்ப்பிணிகள், முதியவர்கள், பொதுமக்கள் மீது எந்தவொரு தாக்குதலும் நடத்தமாட்டார்கள்.

ஈழத்தில் நடத்தது ஒரு சண்டையோ? அல்லது ஒரு சமரோ? அல்லது ஒரு

போரோ இல்லை பல போரோ? இவற்றில் எதிலுமே பொருந்தாத வென்று தான் அங்கு நிகழ்ந்து முடிந்தது போல் ஓய்வெடுக்கிறது. இனத்தின் அழிப்பு என்பதே மிகவும் சரி யானதாக இருக்குமென்பதை நடுகல் நங்கூரமாய் நெஞ்சில் ஊன்றச்செய்கிறது.

அகத்து ஆசைகளையெல்லாம் அவிழ்த்து விட வேண்டும். அன்பை அனு தினமும் ஆராதிக்க வேண்டும். அகிம்சை அகல்விளக்கை மனத்திலேற்ற வேண்டும். அகிலத்தில் அமைதிக்காற்று நிறைந் திருக்க வேண்டும்.எல்லா உயிர்களும் சம மென்பதை தான் புத்த மார்க்கம் புத்தியில் புகுத்துகிறது. தங்களின் நாட்டிற்கு இந்தியாவிலிருந்து

போதிமரத்துக் கிளையைக் கொண்டு வந்தால் மட்டும் புத்த சமயம் பூத்து விடுமாயென்ன? இல்லை அசோகன் ஆடவள் போதித்தால் மட்டும் பரவி வாழ்ந்து விடுமாயென்ன? பல கோடி புத்த மடலாயங்களெழுப்பி,புத்தரை கட வுளாய் வணங்கி,மொட்டையடித்து, காவி உடை யணிந்து,பூசனைசெய்தால் மட் டும் ஞானம் கிடைத்துவிடுமாயென்ன? முற்றிலும் இல்லை.

புத்த மார்க்கம் என்பது ஒவ்வொ ருவரும் உள்ளத்தில் உணரவேண்டியது. ஒவ்வொருவரும் புத்தனாக வாழ வேண்டியது. எந்தவொரு ஆணவமின்றியும் அடையாளமின்றியும் இயல்பாய் வாழ வேண்டியது. இவற்றில் ஏதேனும் ஒன்றை மீறும் எந்தவொரு புத்த சமயத்தவனும் புத்த பாதைக்கு எதிரான திசையில் பய ணிப்பவனே.

புத்தநாடென்பது விக்கிபீடியாவில் மட்டும் தானோ. பட்டத்து யானை முன்னேறும் காணியெல்லாம் மன்னன் ஆட்சியெல்லைக்குள் என்பது மறைந்து போய் புத்த மடாலயங்கள் முளைக்கும் காணியெல்லாம் எதிராளியுடையது என்பதாய் மருவிவிட்டது. பாவம் பூண் டோர்களால் செந்நீர் குளத்தில் செந்நீர் உடுப்புடுத்தி தாமரையில் குந்திருக்கும் புத்தனின் தியானம் நிச்சயம் கலைந்திருக்கும். இன்னொரு முறை நேபாளத்தில் அல் லாமல் ஈழத்தில் புத்தர்விதை துளிர்த்து பேய்ப்புத்தியர்களுக்குப் போதித்தாக வேண்டும்; உயிரிழந்தோரை உள்ளத்தில் சுமந்து வாடியிருக்கும் பூர்வீகமக்களுக்குத் துயர் துடைக்க வேண்டும்; இதுவும் கூட பயனற்றுப் போனாலும் போகலாம். ஏன் புத்தன் பலகோடி ஈழத்தமிழானகப் பிறக்கக் கூடாது? எதிரணியில் நிற்கக் கூடாது? அவ்வாரு நிகழ்ந்தால் வற்றிப் போன அறக்கடலில் நிற்போரின் குண்டுகள் நிச்சயம் அவர் மெய்க்குள்ளும் ஊடுருவறச்செய்து அவரின் நயனத் திற்குள் வெற்றிக்கொடியை நட்டுவாரென்று தான் ஆசிரியரின் எழுத்தில் இல்லை இல்லை வலியில் புரியமுடிகிறது.

இனஅழிப்பு காலத்தில் வலசை சென்ற அத்துனை ஈழத்து குயில்களுக்கும் புகழிடம் அழித்த ஐக்கிய ராச்சியம், ஐரோப்பிய மற்றும் கனடா நாட்டுத்தலைவர்களுக்குக் கோடி நன்றிகள் மொழியத்தான் நெஞ் சம் முந்துகிறது. உலகம் முழுவதும் பரவியிருக்கும் தமிழினம்

அம்மன், முருகன் தேர் இழுத்தல், பொங்கல், தீபாவளி கொண்டாட்டம் புரிபவர்களில் பெரும்பாலானோர் மீதமிருக் கும் இந்த ஈழத்து உயிர்களே.

மலேசியா சிங்கப்பூர் மொரிசியஸ் பிஜி போன்ற நாடுகளுக்கெல்லாம் வேலைக்காகவோ அல்லது வியாபாரத்திற் காகவோ புலம்பெயர்ந்தவர்கள் தமிழ்க் குடிகள் ஆனால் ஈழத்தழிழர்களாகிய நாங் களோ இலங்கை நாட்டின் பூர்வீகக்குடிகள் இது எங்கடை நாடு. இன அழிப்பு செய்தால் நாங்கள் எங்கு செல்வினமென்று கேள்விகளால் கேட்கிறார் நடுகல் ஆசிரியர்.

இன்னும் நான் நூல் பற்றி எழுத ஆரம்பிக்கவேயில்லை அதற்குள் ஒரு நூல்

இவ்வளவு விடயங்களை உள்ளத்தில் விதைக்கச் செய்யுமாயென்ன? செய்கிறதே! வலிகளால் வரிகள் நீள்கிறதே!..

மனையாளையும் மக்களையும் உற்றார் போல் எப்பொழுதாவது கண்டு வந்து செல்லும் பொறுப்பில்லாத பத்தனுக்கு இரண்டு ஆண்பிள்ளைகள் ஒரு பெண் பிள்ளை. தலைவிக்கு மட்டும் தான் வாழும் நாட்டிலும் யுத்தம்... வாழ்க்கையோடும் யுத்தம்...

இன அழிப்பு புயற்காட்டில் இளம் வயதில் உதிர்ந்த அண்ணாவொருவன் காணியில் புல்லை செருக்கிக் கொண்டிருப்பதைப் போல கேட்கும் சறுக் சறுக் சத்தம். வாய்க்கால் கரையிலிருந்து மீன்பிடிக்கையில் நிழலாடும் தோற்றம். வாய்க்காலில் தொப்பென்று குதிக்கும் சத்தம். நாவல் மரங்களில் ஏறி நாவற்பழம் பிடுங்கிக்கொண்டிருப்பதைப் போல கிளைகள் ஆடுவது. சைக்கிள் உருட்டும் கிறிச் கிறிச் சத்தமெல்லாம் பிற்பிறந்தோனான வினோதன் நினைவுகளில் மிதப்பது போல் அமைத்திருக்கும் காட்சிகள் வலியின் உச்சம்.

வெள்ளையன் மகன் இயக்கத்திற்கு போகாமலிருக்க அர்ச்சனை. இயக்கத்தில் இணைந்த பிறகு பாதுகாப்பாயிருக்க அர்ச்சனை. அவன் இறந்த பிறகு வீரவுயிர் சாந்தியடைய மோட்ச அர்ச்சனை இப்படியென அம்மையின் வேண்டுதல் களால் ஆனந்தபுரம் மீனாட்சிஅம்மன் கோவிற்படிகளில் கொட்டிக் கிடப்பதாய் எழும் வரிகளில் தாங்க ஏலாத தாயின் வலிகள்.

மாவீரர் தினத்தன்று இயக்கம் மா தென்னை தேசிக்காய் மரக்கன்றுகளைக் கொடுப்பினமாம். அவற்றை வீர்களின் குடும்பம் கல்லறைகளில் வளர்ப்பினமாம். விடுதலைக்காக மாண்டுபோன மைந்தன் அதில் வாழ்வாதாய் எண்ணும் அம்மை. அம்மரத்திற்கடியில் எரியும் விளக்குச்சுடரில் அவனின் முகம் காணுவதாய் வதைக்கும் வரிகளில் வலி மட்டுமே. ஆனால் அதையும் கூட செய்ய விடாமல் தடுக்க சாரை சாரையாய் இறங்குமாம் ராணுவம். காணியில் வளர்ந்து பூத்திருக்கும் கார்த்திகை மலர் மரத்தையும் வேரோடுப் பிய்த்தெடுத்து டிரக்கில் ஏற்றுவார்களாம். அதில் மின் விளக்கேற்றி மாண்ட வீரர்களுக்கு அஞ்சலி செலுத்தக் கூடாதென்று.

எங்கடை பிள்ளையள் மாண்ட பிறகும் அவர்களோடு போர் செய்யுறீங்கள் என்று ராணுவத்திடம் கேட்கும் பெற்றவளிடம் பேரரணத்தால் கொதிக்கும் நடுகல்.

வீரச்சாவடைந்த வீரர்களின் புகைப் படத்தை கூட அவர்களது குடும்பத்தார் இல்லத்தில் வைத்திருப்பதை விருப் பாத ராணுவம் எரித்திருக்கிறது... கிழித்தெறிந் திருக்கிறது.. ஆனால் அவர்களது நினைவிலிருக்கும் உயிர்ப்படத்தை எவரால் என்ன செய்ய முடியும்..??

ஆணவத்தோர்கள் அழித்த புகைப் படத்திற்காக புகைப்பட நிலையங் களுக்குச் சென்று தேடித்தவிக்கும் படலமெல்லாம் படபடவைக்கிறது.

யுத்தம் - குடும்பத்தார் வீரச்சாவு- பள்ளிப் படிப்புநிறுத்தம்-வாட்டும் வறுமை -இடம் பெயர்- மீண்டுவாழ்தல்-பள்ளிப்படிப்பு தொடரல் -யுத்தம் -குடும்பத்தார் வீரச்சாவு- பள்ளிப்படிப்பு நிறுத்தம்-வாட்டும் வறுமை - இடம் பெயர்-மீண்டுவாழ்தல்-பள்ளிப்படிப்பு தொடரல்-யுத்தம்.....

கொடூர வாழ்க்கை வலிகளை படிக்கும் பொழுதே அடியுள்ளம் வரை இவ்வளவு அனல் என்றால் அதில் பல வருடங்களாக வளையமுறையில் வாழும் ஈழத்து பாவ உயிர்களை எவ்வளவு வாட்டியிருக்கும்....?

புத்த பூமியா..? யுத்த பூமியா..?

பாடசாலை சென்று பயிலும் அகவையில் துவக்கு ஏந்தும் துயரத்திற்கு யார் காரணம்?

துவக்குயேந்தி இளமையில் வீரச்சாவு அடைவதற்குத் தூண்டியது எந்தச் சூழல்?. அரியணைக்கும் அதர்மத்திற்கும் இடையே ஆடும் உயிர்ஊசல் எப்பொழுது தான் ஓயும்?

பாடசாலைகளில் எப்பொழுது பதுங்கு குழிகள் மரித்துப் போகும்?

அகதிமுகமாய் மாறியிருக்கும் பாட சாலைகளில் ஆத்திச்சூடி எப்பொழுது ஓங்கியொலிக்கும்? கழுத்தில் தொங்கும் சயனைடுக்குப்பிகள் எப்பொழுது தான் இயற்கை மரணம் அடையும்?

எலும்புக்கூடாய் நிற்கும் பூர்வீக வீடு களும் புல் முளைத்துக்கிடக்கும் முக் கிய வீதிகளும் தேறுவதற்கு எவ்வளவு காலமாகும்? ஒப்பாரி வைக்கும் குயிலோசை சத்தம் எந்நாள் தான் இசையாகும்? சுதந்திரமாக புள்ளியினங்கள் கூடு கட்டிப் பொழிவோடு வாழ்வது எந்தவொரு விடிவு நாளில்?

வெள்ளமோடும் வாய்க்காலில் ராணுவ முகம் எப்பொழுது இத்து போகும்? கை கால்கள் இழந்து நிற்கும் சிலைகளுக்கு எந்த வருடம் மீண்டும் முளைக்கும்?

குண்டுகள் முளைத்திருக்கும் வயலில் குண்டுக்கத்திரிப்பூக்கள் எந்தப் பருவத்தில் மலரும்?

ஈழத்தைக் கடக்கும் கதிரவன் செல்களின் சத்தத்தில் காதை மூடிக் கொள்வதைக் எப்பொழுது தான் நிறுத்தும்? கந்தகப் புகையால் மூடியிருக்கும் வானத்தை செப்பனிடுவது எந்தக் காலம்?

இத்தனையாயிரம் கேள்விகளுக்குப் பிறக்கும் தலைப்பிரசவ விடைகளை எதிர் நோக்கி எழுந்து நிற்கிறது நடுகல்.

ஒரு தேசத்தில் போர் நீடித்தால் பாதிக்கப்படுவது மனித உயிர்கள் மட்டு மல்ல என்பதை நடுகல் எழுத்து மனுவால் எடுத்துரைக்கிறது.

எந்தவொரு தேசத்தில் போர் நிகழ் கிறதோ அங்கு அமைதி தீர்ந்து அழு குரல் பெருக்கெடுக்கும். வறுமை வருத்தி வளர்ச்சித் தேயும். ஜனநாயகம் மெலிந்து அநாயகம் பெருக்கும். ஒரு குடும்பத்திற்கு எப்படி கூடி வாழ்ந்தால் கோடி நன்மை பொருந்துமோ அது போலத் தான் நாட் டிற்கும் பொருந்தும் அல்லது பொருத் தியாகவேண்டும்...

அழிவு ஏணியில் வெவ்வேறு துரு வங்களாய் இருப்பவர்கள் பல படி கள் கீழிறங்க பேசப் பேச முடிவுகள் எட்டப்படும். வெற்று வெறுப்புணர் வுகளை எல்லாம் மகாவலி கங்கையாற்றில் தலைமுழுகத் தான் தேசத்தின் தலை யெழுத்து மாறும்... அடுத்த தலை முறையும் பொழிவாய் மலரும். பொருளாதார நிலைமையும் சீராகும் . ஈழமும் வளரும் நாடுகள் ஓடும் வரிசையில் கெதியாய் ஒரு துண்டு போட ஏலுமல்லவா.. நிச்சயம் ஏலும்...

நிகழ்ந்து முடிந்த துயரத்தை மட்டும் நெடுகல் ஒப்பிக்காமல் ஒரு தீர்வையையும் தெளித்திருக்கலாமென்றே நெஞ்சில் தோன்றுகிறது.. அது தான் ஒரு எழுத்தாளின் ஈடில்லா ஆற்றல்.. அது தானே ஒரு எழுத் தாளன் தலையாயக் கடமை. எழுச்சிபெறச் செய்யும் ஆற்றல் எழுத்திற்கு உண்டுதானே...

புத்தகம் சுமக்க வேண்டிய பள்ளிப் பருவக் கரங்களில் சுடுகலன் சுமைப்பதை யையும் எத்துனை பேர் எருவை சிந்தி உயிர்நீத்தாலும் அத்துனை பேரை யும் படிகளாய் மிதித்துப் ஆணவ அரியணை யிலேறி அமரத் துடிப்பதையும் முகப்புப் படமாய்க் கருத்துச் செறிவோடு வடிவ மைத்திருக்கும் சந்தோஷ் நாராயணன் அவர்களுக்கு வளமான வாழ்த்துகள்.

நல்ல நெடுவல் - உயரம் பதிற்றுப்பத்து

மருத மரக்குற்றி - மரக்கட்டை

நாலடியார்

பண்டைய தமிழ் இலக்கியங்களில் வரும்

தூயசொற்கள் நடுகல்லில் படர்ந்திருப்பது புதினம். தூய தமிழ்சொற்கள் அல்லது பழமையான சொற்களைக் கற்று நாம் ஒரு படைப்பை தவழ விடும் பொழுது அப்படைப்பு மிகவும் கனமாகிறது. வாசகர் அனைவரையும் தன்பால் எளிதாய் ஈர்த்துவிடுகிறது. நூலாசிரியருக்கு வண்டமிழ் வாழ்த்துகள்.

கதாபாத்திரங்களின் உரையாடல் குறைவாகவும் நாவலாசிரியர் கதை விவரிப்பது மிகுதியாகவும் கொண்டு நடுகல்லை செதுக்கியிருப்பது டிக்காஷன் கூடிய கடுந்தேத்தண்ணி போலாகிவிட்டது. நடுகல் வலிகளால் திரண்ட கருவாகயிருப்பதனால் குறையெல்லாம் கரைந்து நம்மை கதைக் களத்திற்குள் கரைத்து விடும்.

ஒரு நாவலுக்குள் பிறந்து வாழும் காதாப்பாத்திரங்களை ஆரம்பத்தில் அறிமுகம் செய்வது தான் வழமை. ஆனால் ஆசிரியர் பொன்னையாப்பு என்றொரு கதாப் பாத்திரத்தை நாவலின் மத்தியில் அந்தகனென்று பரிச்சயப்படுத்துவது புதுமையாயிருந்தது அதே சமயம் வலி தரக் கூடியதாகவுமிருந்தது. கிளிநொச்சியை விட்டு அவர் மட்டும் வரவேயில்லை. அவரை கொழுப்புச் சிறையில் ராணுவம் அடைத்த பிறகு அவருக்கு என்னவானதென்று ஆசிரியர் சொல்லாமல் முடித்து விட்டு வலியைக் கூட்டிவிட்டார். இப்பொழுது என்னெஞ்சிற்கும் வலிநிவாரணி தேவைப்படுகிறது. எங்கு கிடைக்குமென்று தான் தெரிவில்லை..?

இன அழிப்பிற்குப் பிறகு அகதிகளாய்த் திரிந்தது மண்ணவர் மட்டுமல்லவே.. குற்றுயிர் மரங்களும் சிறகிழந்த மைனாவையும் குடும்பமிழந்த நாய்க்குட்டியும் அடைகாக்கும் கோழியுமென்று ஆசிரியர் அடுக்குகையில் ஒவ்வொரு வாசகரின் இதயத்திலும் பல கீறல்களை உண்டாக்குவது உறுதி.

பூர்வ பூமியில் வாடும் பூக்கள். சுதந்திரக்காற்றுக்கு ஏங்கும் முகங்கள் செத்து செத்துப் போகும் உணவுவேட்கை. முடிவில்லாத இடம்பெயர்வுகள். ஒவ்வொரு பேருந்து நிறுத்தமும் அகதிமுகாம்களாய் முகமாற்றம். சாலையோர மரங்களில் கட்டப்பட்ட ஏணைகளில் உறங்கும் குழந்தைகள். தாலாட்டுப் பாடலுக்குப் பதிலாகச் செல்களின் சத்ததைக் கேட்டு அரையுறக்கம் கொள்ளும் பிஞ்சுகள். அந்தோ இந்த கொடுமையான வாழ்விற்கு என்ன தான் பெயர் நரகமா? இல்லை இல்லை.. அதற்கெல்லாம் பல படிகள் மேலேயிருக்கும் ஒரு கொடூர புதுயுலகம். ஒருவருக்கு வலி என்றால் இன்னொருவர் ஒற்றடம் கொடுக்கலாம் ஒரு இனத்திற்கே ஈழத்திற்கே வலியென்றால் யார் தான் ஒற்றடம் கொடுக்க முடியும்? எத்தனை இலட்சம் கைகள் தான் தேவைப்படுமோ?.

பாடசாலையில் ஓ.ல் தேர்வு எழுதிக் கொண்டிருக்கையில் குண்டிவிழுந்து வெள்ளைச் சீருடையெல்லாம் சிவப்பு சீருடையாகி கால் இழந்த மாணக்கன் வரி(லி)களில் வழுக்கி விழந்த நான் எழுவதற்கு எவ்வளவு காலமாகுமோ.. ஈழத்தைப் போல்...

**நூற்தந்தை:** தீபச்செல்வன், கிளி நொச்சி, ஈழம்
**நூல்பிரசுரம் :** டிஸ்கவரி புக் பேலஸ்
**முதற்பதிப்பாண்டு** : 2018
**நூல் ஊக்கத்தொகை** : ரூபாய் 220
**நூலைப் பெறுவதற்கு** : +91 8754507070

**ஸ்ரீவி.முத்துவேல்**
துபாய்



# வாழ்வில் ஒளிவீச



வாழ்வில் ஒளிவீச
கல்வி கற்றிடவே...
கண்களும் திறந்திட
கனவுகள் நனவாகுமே

பண்பால் போர்வைசெய்து
மனிதம் மதித்திடவே
மாண்புகள் பெருகிட
அன்பால் இணைவோமே

புன்னகை இதழ்விரித்து
பூவுலகு படைத்திட
புரிதலும் பொங்கிடவே
அறியாமை நீங்கிடுமே

அவனியில் ஆற்றல்பெற
இதயவானில் இனியவையும்...
செயலில் நல்லவையும்
இருந்தாலே போதுமே

ஓரப்பார்வை ஒழித்து
ஒற்றுமை ஓங்கிட...
இருகரம் கோர்த்து
இகத்தினை இரசித்திடுவோம்

நட்பால் நனைந்து
நன்மைகள் புரிந்திடவே...
நாளைய விடியலில்
நாமெலாம் எழுவோமே

உறவுகள் பேணி
உண்மைகள் உரைத்திட...
உவகைகள் நிரம்பி
உலகமும் வழியுமே

சிந்தனைச் சிறகுகள்
சிகரத்தில் விரிந்திட...
சிறப்புகள் மிளிர்ந்து
சிரம் நிமிர்ந்திடுமே

ஏற்றத் தாழ்வுகள்
முழுமையாய் மறந்து...
ஒருதாய் பிள்ளைகளாய்
அன்பால் அணைவோமே

சினத்தை சிலையாக்கி
குணத்தை உயிர்கொடுத்து...
உணர்வால் அடுத்தவரை
உண்மையாய் மதிப்போமே

சாந்தி மொழிபேசி
சமாதானம் நிலைத்திடவே...
பகைமை புதைத்து
பழிவாங்கல் நீக்கிடுவோம்

நற்குணத்தால் நகைசெய்து
நல்லுலகு படைத்திடவே...
வாழ்வும் ஒளிர்ந்திமே
தேசமும் புலர்ந்திடுமே

**சேஹு மொஹம்மது பெனாஸிரா**
மதவாச்சி, முஸ்லிம் ஹல்மில்லாவ.

# காணாமல் போன மனிதர்கள்

இந்த உலகில் சில மனிதர்கள் இருந்தார்கள்;
அந்த மனிதர்கள் சிலவற்றுக்கு விலை நிர்ணயித்தார்கள்!
அந்த விலைகள் சில விலைமதிப்பில்லாதவற்றின்
மதிப்பை பாதாளத்தில் வைத்து விட்டது.

முகம் பார்த்து புன்னகைக்கு முடியாதபடி,
பெரும் துயரொன்றில் அழ முடியாதபடி,
ஏதோ ஒரு நாளின் நினைவுகளை மீட்ட முடியாத படி,
தொலைந்த நாட்களுக்குள் வாழ்க்கையை
தேட முடியாத படி அவை மிகவும்
பெருமதியாக காணப்படுகின்றன!

ஒரு காலம் இருந்தது அங்கு இருந்த மனிதர்களோடு
இவ்வளவு சந்தோசமாக மகிழ்ந்து இருந்தோம்
என வாய்விட்டு கூற முடியாத ஒரு இருக்கம்
தொடர்ந்து கொண்டே உள்ளது!

அந்த மனிதர்களை இந்த உலகில் காணவில்லை,
அவர்களுக்கு சிரிக்க தெரிந்திருந்தது,
நேசிக்க தெரிந்திருந்தது,
மனதோடு உறவு கொண்டாட தெரிந்திருந்தது,
அந்த மனிதர்களிடத்திலே எதையும்
எதிர்பார்க்காத பேரன்பு இருந்தது!

இப்பொழுதும் இங்கு மனிதர்கள் வாழ்கிறார்கள்.
ஆனால்; அவர்களுக்கு சிரிக்க தெரிவதில்லை,
நேசிக்க தெரிவதில்லை,
உரையாடத் தெரிவதில்லை,
உணர்வுகளின் பெறுமதி தெரிவதில்லை,
நாட்களை அழகாக்குவதை பற்றி தெரிவதில்லை,
காதலை கொண்டாட தெரிவதில்லை,
ஆன்மாக்களை மகிழ்விக்க தெரிவதில்லை!

**அப்ரா ஜமீல்**



# முகங்களை மூடுங்கள்

அலுவலக அவசரம்
ஆதாயம் தேடும் வேகம்
அவ்வப்போது அடுப்பங்கரை கொஞ்சல்

நெருங்கிய நட்புகளின்
பெருமைக்கு இலக்கணமாய்
இல்லத்திலே போலி உபசரிப்பு

உயிரற்ற பொருட்களின் மதிப்புகளை
பட்டியலிடும் பேருவகை

நவநாகரீக உடையில் உலா
கௌரவ ஆடையில் மறைத்து வைத்த
உள்ளத்தின் உண்மைகள்...

கட்டாயமாக்கப்பட்ட
இரவுநேர உறக்கம்
வாரம் இருமுறை
பெற்றோரின் நிலைக்காண
முதியோர் இல்லப் பயணம்
தமக்குத் தாமே போட்டுக்கொண்ட
முகத்திரையை களைய

மறுக்கும் மனோபாவம்
ஏளனப் பார்வையில் ஏனோ
வாழ்வின் யதார்த்தங்கள்

வளர்ந்துவரும் இளம்
தலைமுறையினருக்கும்
பொருளற்ற பாடங்களை
போதித்துக் கொண்டிருக்கும்
மாந்தர்களே...

வாழ்க்கை முழுவதும் நீங்கள்
வேடதாரியாக இருந்துவிடலாம்...
ஆனால் மரணம் உங்களை
தோலுரித்துக் காட்டிவிடும்

இன்றில் இருந்தாவது
முகத்தை மூடுங்கள்
ஆம்...போலியான
முகத்தை மூடுங்கள்!

- கவிஞர் சாரா



# யாப்பியலும் யாப்பருங்கலக் காரிகையும்

கிண்ணியா சபீனா

*கவிதை என்பது வசனநடையிலிருந்து வேறுபட்டதெனச் சான்றோர் கூறுவர். இயற்கையாகவே சொற்களைக் கோர்த்து நயம்பெறச் செய்வார்க்குக் கவிதைக்கலை கைகூடும். அத்தகையோர் கவியெழுத முற்படலாம். செம்மையான உள்ளடக்கங்கள் கொண்ட சில வரையறைகளுடன் ஆக்கப்படும் பாடலைச் செய்யுள் என்பர்!*

*இதனை இயற்றுவதற்கான* **யாப்பிலக்கணம், நுண்மையானது** *என்றால் மிகையாகாது!*

*எனினும், முயன்று கற்றிடக் கன்னலாய் யாப்பும் இனிக்குமே!*

*யாப்பிலக்கணச் செம்மையுடைய பாக்கள், சிறப்பான ஓசையைக் கொண்டிருக்கும்!*

*ஓசைக்குக் காரணமாக அமைவது கவிதையின் கட்டமைப்பைக் கொண்டுள்ள யாப்பாகும்!*

*யாத்தல், கட்டுதல் என்பதிலிருந்து யாப்பு எனும் பதம் உருவானது என்பர்! செய்யுளானது, பாடல், பாட்டு, பா என்பட்டது.*

*பாக்கள் யாத்திட யாப்பினை அறிந்திடல் வேண்டும்!*

**யாப்பு**

**கற்றறிந்தால் யாப்புக் கடினமல்ல பாப்புனைய,**

**முற்றும் எளிதாகக் கைகூடும் - பற்றுடனே,**

**ஆசான் அடிபற்றி யாழ்ந்து பயின்றிடுங்கால்,**

**ஓசைக்குள் ஒன்றுமுன்றன் பா**

**(ஜின்னாஹ்)**

*ஆகவே,யாப்பறிந்து பாப்புனைந்திடல் சிறப்பாகும்!*

*இன்று நாம் காணும் யாப்பிலக்கணக் கட்டுக் கோப்பு ஏற்பட, அன்று பல்லாயிரக் கணக்கான ஆண்டுகளின் தேவை வேண்டியிருந்தது என்பதை, எம்மால் அறிய முடிகின்றது!.*

*அகத்தியரால் செய்யப்பட்ட* **அகத்தியத்தில் செய்யுளிலக்கணம் பரந்து கிடந்தது** *என்றும் அதனைத்* **தொல்காப்பியர்** *சுருங்கச் செய்தார் என்றும் அறிய கிடக்கின்றது!.*

இக்காலத்தில், கையில் உள்ள இலக்கண நூல்களில் காலத்தால் முந்தியது **தொன்மைமிகு தொல்காப்பியம்** என்பர்! **தொல்காப்பியத்தின் காலம், கி. மு இற்றைக்கு 3500-7000 ஆண்டுகளாக** இருக்கலாம் என்றோர் உய்த்துணர்வு உண்டு! அந்நூலின் மூன்றாவது அதிகாரமாகிய பொருளதிகாரத்தில் செய்யுளியல் என்பது, எட்டாவது இயலாய்

அமைந்தது என்பர்! இதில் தான் யாப்பிலக்கணச் செய்திகள் இடம் பெற்றுள்ளன. தொல்காப்பியத்தின் பின்னர் **அவிநயம் காக்கை பாடினியம், வீரசோழியம், தண்டியலங் காரம் சுவாமிநாதம், அறுவகை இலக்கணம்** எனப்பல இலக்கணநூல்கள் எழுந்தன. நச்சினர்க்கினியர் காக்கைபாடினியார் நக்கீரர் எனப் பலரும் செய்யுள் இலக்கணம் செய்தனர்.

இன்றைக்கு ஏறக்குறைய 1000 ஆண்டுகளுக்கு முன்னர் எழுந்த யாப்பருங்கலம் எனும் நூலானது, காக்கைபாடினியத்தைப் பின்பற்றியது என்றும் யாப்பருங்கலக் காரிகை ஆனது, யாப்பருங்கலத்தின் வழிபட்டது என்றும் கூறப்படுகின்றது.

இந்த நூலை இயற்றிய **அமித சாகரர்** சமண சமயத்தைச் சேர்ந்தவர் என்பர். இவரின் பெயரானது, **அமித**--அளவு கடந்த, **சாகரர்**-கடல் எனும் பெயரர் என்பதை உணர்த்துகிறது. மேலும், **அளப்பெரும் கடற்பெயர் அருந்தவத்தோனே** எனும் காரிகை நூலின் பாயிர அடி யும் இதனை உறுதிப்படுத்துகின்றது.

## யாப்பருங்கலக் காரிகையின் அமைப்பு

தொல்காப்பியத்திற்குப் பின்னர் தோன்றிய யாப்பியல் நூல்களுள் யாப்பருங்கலக் காரிகையே சிறப்புப் பெறுகின்றது.

இந்நூல், கட்டளைக் கலித்துறை என்னும் யாப்பில் இயற்றப்பட்டுள்ளது.

இந்நூலிலே நேரசை கொண்ட செய்யுள்கள் 21ம் நிரையசை கொண்ட செய்யுள்கள் 23ம் உள்ளதாக அந்நூலின் உரை கூறுகின்றது . ஆயினும், இன்று கிடைக்கும் நூலிலே 60 செய்யுள்கள் உள்ளன! மிகுதியாக உள்ள 16 செய்யுள்களும் பின் வந்த அச்சு நூலிற் காணப்படுகின்றன ! இவை உரையாசிரியரால் எழுதப்பட்டிருக்கலாம் என்பர்!

இந்நூல் மூன்று இயல்களைக் கொண்டு அமைந்துள்ளது.

இதில் முதலாவது இயலாகிய **உறுப்பியலிலே, எழுத்து அசை, சீர், தளை, அடி, தொடை** ஆகிய செய்யுள் உறுப்புகள் பற்றிக் கூறப்பட்டுள்ளன.

**இரண்டாவது இயலாகிய செய்யுளியலில் வெண்பா ஆசிரியப்பா கலிப்பா வஞ்சிப்பா** ஆகிய பாக்களுக்குரிய இலக்கணம் பேசப் பெற்றுள்ளது. இறுதியில் மருட்பா பற்றியும் கூறப்பட்டுள்ளது.

அத்துடன், நான்கு வகைப் பாக்களின் இனங்கள் பற்றியும் செய்யுளியலில் கூறப்பட்டுள்ளது.

அடுத்து ஒழிபியலிலே, முன் இரு இயல்களிலும் இடம்பெற்ற செய்திகளுக்கான ஒழிபுச் செய்திகள் தரப் பெற்றுள்ளன.

*ஒழிபுச் செய்திகள் என்பது முன்னர் கூறப்பட்ட செய்திகளுக்கு வேறுபட்டு வருவனவும் அங்கு கூறப்படாதனவும் ஆன செய்திகள் ஆகும்.*

*காரிகை என்னும் சொல்லுக்குக் கட்டளைக் கலித்துறை என்று ஒரு பொருள் உள்ளது. இந்நூலிலே, செய்யுள்கள்* ***மகடூஉ முன்னிலையாக*** *எழுதப்பட்டுள்ளன. எதிரில் ஒரு பெண் இருப்பது போலவும், அவளை விளித்து அவளிடம் பேசுவது போலவும் எழுதும் முறைக்கு* ***மகடூஉ முன்னிலை*** *என்று பெயர் ஆகும். மகடூஉ என்பதற்கு பெண் என்றும் பொருள்உண்டு. அதேபோலவே காரிகை என்பதற்கும் பெண் என்று பொருள் சொல்லப்படுகின்றது. எனவே காரிகையை முன்னிலைப்படுத்திச் செய்யுள்கள் அமைந்துள்ளமையால் இந்நூலுக்குக் யாப்பருங்கலக் காரிகை என்றும் கூறப்படுகின்றது என்பர். இன்னும்,* ***யாப்பு என்பதைச் செய்யுள் என்றும் அருங்கலம் என்பதை அணிகலன் என்றும் காரிகை என்பதைப் பெண் என்றும் பொருள் கொண்டு, பெண்ணுக்கு யாப்பு அணிகலனாகச் சூட்டப்பட்டது*** *என்று கூறுவாருமுளர்!*

*ஆயிரம் ஆண்டுகளுக்கு மேலாகத் தமிழ் யாப்புப் பயில்வோரால் பெரிதும் போற்றப்படும் ஒரு நூல்* ***யாப்பருங்கலக் காரிகை*** *ஆகும்.*

## காரிகையின் அவையடக்கம்

*காரிகையாசிரியர்,* **உயர்ந்த தமிழை என் சிறுமை பொருந்திய நாவால் உரைத்தேன்** *என்று பின்வருமாறு அவையடக்கத்திற் கூறியுள்ளார்.*

**தேனார் கமழ்தொங்கல் மீனவன் கேட்பத் தெண்ணீரருவிக்**
**கானார் மலயத் தருந்தவன் சொன்ன கன்னித் தமிழ்நூல்**
**யானா நடத்துகின் றேனென் றெனக்கே நகை தருமால்,**
**ஆனா வறிவினவர் கெட்கென் னாங்கொல னாதரவே.**

**பொருள்;**

*தேன் நிறைந்து மணம் கமழ்கின்ற வேப்பமாலை தரித்த பாண்டியன் கேட்க,தெளிந்த அருவியின் நீரையுடைய சந்தனச் சோலை சூழ்ந்த, பொதிய மலையில் எழுந்தருளி இருக்கின்ற அரிய தவத்தினையுடைய, முதலாசிரியராகிய அகத்திய முனிவரால் அருளிச் செய்யப்பட்ட, அழிவின்றி நிலை பெற்ற முத்தமிழுள் இயற்றமிழின் கூறாகிய* ***யாப்பிலக்கண நூலை*** *யானும் அவாவினால்* ***எனது புல்லிய நாவினால் சொல்லத் தொடங்கினேன்*** *இஃது அறிவிலியாகிய எனக்கே நகையினை விளைக்குமாயின், குறைவில்லாத அறிவுடையோர்க்கு யாதாகுமோ!*

*என்பதாக அவையடக்கத்தை முன் வைத்துள்ளார் அமித சாகரர்! யாப்பருங்கலக் காரிகைக்கு யாப்பியலிற் புலமை பெற்ற குணசாகரர் என்பவர் உரை எழுதினார். குணசாகரர் அமிதசாகரரின் மாணவர் என்றும் சொல்லப்படுகின்றது! அதன் பின்னர் பலரும் உரை எழுதியுள்ளமை உண்மையே! 19ஆம் நூற்றாண்டின் இறுதியிலே, இலங்கையின்*

*யாழ்ப்பாணத்துச் சுன்னாகத்தைச் சேர்ந்த, **அ.குமாரசாமிப் புலவர்** அவர்கள் ஓர் உரை செய்திருக்கிறார். **நாவலர், ந.மு வேங்கடசாமி நாட்டார்** சிவசம்புப் புலவர், **அ.கி, பரந்தாமனார் கொக்கூர் கிழார்** போன்றோரும் இன்னும் பலரும் பலரும் யாப்பருங்கலக் காரிகைக்கு யாப்புரைகள் எழுதியுள்ளனர்.*

*இன்று யாப்பிலக்கணம் கற்போர் பெரிதும் உவந்து உபயோகிப்பது யாப்பருங்கலக் காரிகையை ஆகும்! இதில் பாக்கள் பாவினங்கள் பற்றிச் சிறப்பாகக் கூறப்பட்டுள்ளது என்பர்! சுமார் ஆயிரம் வருடங்களுக்கு மேலாக இந்நூலின் யாப்பிலக்கணம் உயிர்ப்புடன் உள்ளது என்றால் அது மிகையாகாது*

***உசாத்துணை***

1. யாப்பியலுரை (அல் அஸூமத்)
2. யாப்பருங்கலக் காரிகை (குமாரசுவாமிப் புலவர் உரை )
3. யாப்பருங்கலக் காரிகை மூலமும் உரையும் (முனைவர் சோ. கண்ணதாசன்)
4. தமிழ் இணையம்

# சிறப்புடன் வாழ்கவே!


நற்குணத்திலே வாழ்ந்திடுவமே நல்லோரென
நற்சிந்தையில் என்றென்றுமே நலம்காண்கவே
கற்சிலையிலும் உயிருள்ளதே கலைவாழுமே
கற்பதினாலே வாழ்வென்றுமே கனியாகுமே
கற்றுயர்ந்திடு சிந்தையுடனே கரைச்சேர்க்குமே
நற்றமிழிலே இவ்வுலகமும் நமதாகுமே
பொற்குவையென மனம்விரிந்திட பொன்தோற்குமே!

**ஆகையால்**
மனத்தை யென்றும் மலராய் விரித்திடு
இனத்தில் மாந்தர் இனிதே
சினத்தைத் தவிர்த்தே சிறப்புடன் வாழ்கவே!



வாழ்வியல் கவி **சா.நாகூர் பிச்சை**
துபாய்

# கனாக்காணும் இருள் விழிகள்



எனது கனவுகளில் எப்பொழுதும்
இரு விழிகளே
ஆக்கிரமிக்கின்றன
ஒன்று ஏக்கத்திலும்
மற்றொன்று கோவத்திலும்
விழி உருட்டுகின்றன...!

அவைகள்
காண்கின்ற அனைத்தையும்
இரண்டாகத்தான் பிரித்து
உணர்கின்றது மனது
இருளை ஒளியாகவும்
ஒளியினை இருளாகவும் காண்கின்ற
கண்களைத்தான் அவை
பெற்றிருக்கின்றன..!

நான் கண்களை பொத்திக் கொண்டு
விளையாடும் பொழுதெல்லாம்
மறைந்தவர்கள் முன்னும்
கடந்தவர் பின்னும் வந்து செல்கின்றனர்
நான் கருப்பு துணியை
கட்டிக்கொள்வதன் அவசியமில்லாமல்
ஆயிற்று..!

அலங்கார ஆசைகளில் நான்
மூக்கு கண்ணாடி அணிவதில்லை
கண்ணுக்கு எதிரே
இருந்தும் இல்லாமல்
இதுவா அதுவாவென
அறிய இயலாத கண்களுக்கு
அருகிலும் தூரமும்
அழகும் குளிர்விப்பும் அவசியமாயென்ன..!

விழிகளை வானுயர்த்தி
வாலாட்டி காத்திருக்கும்
கருமை நிற எலியாகவும்,
வானை மட்டும் பார்த்துக் கொண்டே
இருளை நிமிர்ந்து பார்க்கும்
வாலில்லா
இருள் சிறகு ஆந்தையாகவும் நடைபோடந்
துவங்கிவிட்டேன்

இப்போது என்னை
பறவையெனலாம்
விலங்கெனலாம்
கண்களை மட்டும் மூடிவிடச்
சொல்லிவிடாதீர்
நான் குருடாகிப் போய் விடுவேன்
மனிதர்கள் மத்தியில்...

**சே கார்கவி கார்த்திக்**





# பூரி மசாலா கிழங்கு செய்வது எப்படி...

## தேவையான பொருள்கள்

உருளைக்கிழங்கு - 3
தக்காளி - 1
பெரிய வெங்காயம் - 1/2
தேங்காய் துருவல் - 4 மேஜைக்கரண்டி
மிளகாய் தூள் - 1 தேக்கரண்டி
மல்லித்தூள் - 2 தேக்கரண்டி
மஞ்சள் தூள் - 1/2 தேக்கரண்டி
கரம் மசாலா தூள் - 1 தேக்கரண்டி
உப்பு - தேவையான அளவு
மல்லித்தழை - சிறிது

தாளிக்க -
எண்ணெய் - 3 மேஜைக்கரண்டி
கடுகு - 1/2 தேக்கரண்டி
கடலைப்பருப்பு - 1 தேக்கரண்டி
பெரிய வெங்காயம் - 1/2
கறிவேப்பிலை - சிறிது

## செய்முறை

அடுப்பில் குக்கரில் உருளைக்கிழங்கு மூழ்கும் அளவுக்கு தண்ணீர் ஊற்றி மூடி வைக்கவும். நீராவி வந்ததும் வெயிட் போட்டு 4 விசில் வந்ததும் அடுப்பை அணைக்கவும்.

நீராவி அடங்கியதும் மூடியை திறந்து உருளைக்கிழங்குகளை சிறிது நேரம் ஆறவிட்டு தோலுரித்து மசித்துக் கொள்ளவும்.

வெங்காயத்தை நீளவாக்கிலும், தக்காளியை பொடிதாகவும் நறுக்கி வைக்கவும்.

தேங்காய் துருவல், நறுக்கி வைத்துள்ள வெங்காயத்தில் பாதி அளவு, தக்காளி எல்லாவற்றையும் மிக்ஸியில் அரைத்துக் கொள்ளவும்.

அடுப்பில் கடாயை வைத்து எண்ணெய் ஊற்றி சூடானதும் கடுகு, கடலைப்பருப்பு போடவும். கடுகு வெடித்தவுடன் கறிவேப்பிலை, மீதமுள்ள வெங்காயம் சேர்த்து வதக்கவும்.

வெங்காயம் பொன்னிறமானதும் மிளகாய் தூள், மல்லித்தூள், மஞ்சள்தூள், கரம் மசாலா சேர்த்து கிளறி பிறகு அரைத்து வைத்துள்ள தேங்காய் கலவையை சேர்த்து ஒரு நிமிடம் கிளறவும்.


பிறகு அதனுடன் மசித்து வைத்துள்ள உருளைக்கிழங்கு, மற்றும் உப்பு சேர்த்து கிளறி அதனுடன் 100 மில்லி தண்ணீர் சேர்க்கவும். மசாலா கெட்டியானதும் மல்லித்தழை தூவி அடுப்பை அணைக்கவும். சுவையான பூரி மசாலா ரெடி...

**- திண்டுக்கல்சமையல்**

# வளமெல்லாம் தரவே தை மகளே வருக!

வருக வருக தைமகளே!
　　　　வசந்தம் கொண்டு வந்திடுக!
அருமை வளங்கள் அத்துணையும்
　　　　அள்ளி அள்ளித் தந்திடுக!
திருவும் நாட்டில் பெருகிடவே
　　　　திரண்ட வயல்கள் செழிப்புறவே
கருணை பொங்க நீவருக!
　　　　கரங்கள் குவித்து வரவேற்போம்!

கழனி எங்கும் கண்குளிர
　　　　கரும்பும் நெல்லும் விளைந்திருக்கும்!
அழகு மஞ்சள் கன்றுகள்
　　　　அசையும் காட்சி ஆனந்தம்!
உழவர் வாழ்வில் உயர்வடைய
　　　　உணர்வில் கலந்த பொன்மகளே!
வழங்கும் இயற்கை உனைக்கண்டு
　　　　வரவை வரமாய் நினைக்கின்றோம்!





பொங்கல் படைத்துக் கதிரவனைப்
　　　　பொலிவாய் வணங்கி மகிழ்வோமே!
எங்கும் நிறைவைக் கண்டோமே!
　　　　எல்லாம் உன்றன் அருளாலே!
கங்குல் பகலாய் உழைத்திட்ட
　　　　களைப்பு நீங்கி உழவோரும்
தங்கும் இன்பம் தானடைவார்!
　　　　தமிழே! தவமே! தைமகளே!

**ஓசூர் மணிமேகலை**



# அவளும் பெண்தான்

‘எழும்பு இவ்ளோ நேரமும் உனக்கென்ன படுக்க...‘என்று அதட்டல் கலந்த தொனியில் ஸாஹிராவின் மாமியார்...

ஸாஹிரா திடுக்கிட்ட வண்ணம் ‘சரி மாமி’ என்று மென்மையான தொனியில் பதிலளித்த மாத்திரமே எழுந்து படுக்கையை சரி செய்து விட்டு குளியல் அறைக்குள் நுழைந்தாள். திருமணம் முடித்த கையோடு தன் கணவன் வீட்டுக்கு வந்த ஸாகிரா

தன் வீடாக நினைத்து அத்தனை வேலைகளையும் இழுத்துப் போட்டு செய்பவள். தன் கணவனின் குடும்பத்தாரை தாங்கிக் கொள்பவள் ஆனால் அவளை தாங்கிக் கொள்ள சில போது அவளின் கணவனைத் தவிர வேறு யாரும் இல்லை. தனக்குள் பட்டதை சட்டென்றே கூறி விடுவாள் உள்ளொன்று புறம் ஒன்று வைத்து அவள் நடப்பதே இல்லை. அவ ளின் கடந்த காலங்கள் சந்தோஷமாக கடந்தாலும் புகுந்த வீடு வந்தபின் அத்தனை சந்தோஷங்களும் காலப்போக்கில் காணாமலே போய்விட்டது. அத்தனைக்கும் ஒரே ஒரு விடயம் தான் இன்றுவரை அவளை கண்ணீர் சிந்த வைக்கின்றது.

திருமணம் முடித்து ஆறு மாதம் கழிந்து ஒரு நாள் ஸாஹிரா கணவனின் குடும்பத்தாருடன் குதூகலமாக பகலுணவை சாப்பிட்டுக் கொண்டிருக்கும்போது திடீரென்று குமட்டல் ஏற்பட்டது. உடனே எல்லோரும் பயந்து சற்று நேரம் பொறுத்திருந்து வைத்தியசாலைக்கு அழைத்துச் சென்றனர். உடனே அவளை பார்த்த வைத்தியரும் அவளை பரிசோதித்து அவளின் கணவரிடம் ‘உங்களுடைய மனைவி வாயும் வயுறுமாக இருக்கின்றாள் வாழ்த்துக்கள் இந்த நல்ல விஷயத்தை குடும்பத்தாருக்கு சொல்லி விடுங்க ’

என்று கூறியவுடன் ஸாஹிராவின் கணவன் இஸ்ஹாக்கிற்கு ஒரே குஷி தான் தந்தையாகப் போவதை நினைத்து. தங்களுக்கு பேரப்பிள்ளை வரப்போவதை

நினைத்து அந்தப் பக்கம் ஸாஹிராவின் குடும்பம். ஸாஹிரா தனது வீட்டுக்கு ஒரே பிள்ளை அவளின் பெற்றோர் அவளின் மீது உள்ள பாசம் குறைந்து விடும் என்பதால் வேறு எந்த பிள்ளைகளையும் பெறவில்லை என்றே கூற வேண்டும். அவ்வாறு இருக்க பேரப்பிள்ளை வரப்போவதை நினைத்து அவளின் குடும்பத்திற்கு சந்தோஷம் இல்லாமலா இருக்கும். இவ்வாறிருக்க ஸாஹிரா உண்டாகியிருப்பதை தெரிந்த அவளின் தந்தை வெளிநாட்டில் இருந்து மகளைப் பார்ப்பதற்காக ஆவலுடன் வருவதை எப்படியோ அறிந்துவிட்டாள். ஸாஹிராவின் தந்தை பாரூக் மகளுக்கு தேவையான ஆரோக்கியமான உணவுப் பண்டங்களை வாங்கிக் கொண்டு ஸாஹிராவின் புகுந்த வீட்டுக்கு ஸாஹிராவிற்கு செப்ரைஸ் கொடுப்பதற்காக அவர் வர முன்னரே தந்தை வருவதை ஏற்கனவே அறிந்திருந்த ஸாஹிரா தந்தைக்கு முன் அவள் செப்ரைஸ் கொடுக்க வேண்டும் என்பதற்காக மாமியாரின் பேச்சையோ கணவனின் சொல்லையோ கேட்காமல் விமான நிலையத்திற்கு அவளின் நண்பியொருத்தியோடு போகும் வழியில் திடீரென்று நாய் ஒன்று குறுக்கறுத்து வாகனம் ஒரு மலை அடிவாரத்தில் போய் மோதி புரண்டு விட்டது.

தன் மாமியாரினதும் கணவனதும் பேச்சை மதிக்காமல் தன் குழந்தையைப் பறி கொடுத்து விட்டேன் என்ற அதிர்ச்சியோடும் தன் தலையினால் வடியும் இரத்தத்தையும் பொருட்படுத்தாமல் தன் கணவனிற்கு அழைப்புக் கொடுத்து

'இஷாக்... இஷாக்.. என்னை மன்னிச்சிடுங்க...' என்று அவள் அழுது அழுது கதையை விழுங்கிக் கொண்டிருக்கும் போதே அவனுக்கு சந்தேகம் ஏற்பட்டு விட்டது. ஏதோ நடக்கக்கூடாத ஒன்று நடந்து விட்டது என. 'ஸாஹிரா என்னமா ஆச்சு சொல்லுமா பயமாயிருக்கு' என்று கேட்டுக் கொண்டேயிருந்தான் ஸாஹிரா காதில் போனை வைத்துக் கொண்டிருந்தாலும் பேச்சு மூச்சு ஒன்றுமில்லை.

இது சரிவராது என்று உணர்ந்த இஸ்ஹாக் உடனே தனது மோட்டார் சைக்கிளை எடுத்துக்கொண்டு அவளின் போன் நம்பரை வைத்து அவள் இருக்கும் இடத்தை அறிந்து அரை மணித்தியாலங்களில் பின் அவள் இருக்கும் இடத்தை அடைந்து விட்டான். இனி என்னத்த சொல்ல அவளைப் பார்த்த அவனுக்கு தன் மனைவி மூன்று மாத கர்ப்பிணி என்ற நினைப்பும் எனது குழந்தையை இப்படி அநியாயமாக கொலை செய்து விட்டாள் என்ற ஆதங்கமும் அவன் நிலையை சீர்குலையவைத்தாலும் அவன் எதையும் பொருட்படுத்தாமல் உடனே அவளையும் அவளின் நண்பியையும் வாக னம் ஒன்றில் ஏற்றி வைத்தியசாலைக்கு எப்படியோ கொண்டு போய் சேர்த்து விட் டான்.

அன்று வியாழக்கிழமை கிளினிக்கிற்காக வந்திருக்கும் நோயாளிகளால் வைத்தியசாலை நிரம்பியிருந்தது.

இருந்தாலும் எதுவும் அவனுக்குத் தென்படவில்லை 'டாக்டர்... டாக்டர்... ப்ளீஸ் காப்பாத்துங்க என்ட மனைவியையும் குழந்தையும்' என்று கத்திய வண்ணம் தள்ளுவண்டியை வைத்தியரை நோக்கி தள்ளிக் கொண்டு வந்தான். உடனே வைத்தியர் 'ரிலாக்ஸ். டோன்ட் பீல்... உங்க கடவுள் கிட்ட பிராத்திங்க நான் முடிஞ்ச அளவு ட்ரை பன்றேன்...' என்று வைத்தியரும் அவசர அவசரமாக கூறிவிட்டு ஐ.சி.யு அறைக்குள் நுழைந்தார்.இஸ்ஹாக்கிற்கு ஏது செய்வதென்றே தெரியாமல் அவனுடைய தாயிற்கு அழைப்பெடுத்து 'நான் சொல்லப்போறதை நினைத்து பதட்டப்படாமல் கேட்கணும்' என்று ஆரம்பித்து 'உம்மா ...ஸாஹிராக்கு எக்ஸிடண்டாகி நானிப்ப ஹொஸ்பிடல்ல அட்மிட் பண்ணி

இருக்கேன் அவளுக்கு மாத்துறத்துக்கு ஏதாவது உடுப்புகள எடுத்து வாங்கோ...' என்று கூறிவிட்டு போனை கட் பண்ணி விட்டான். தனது மனைவிக்கும் குழந்தைக்கு ஒன்றும் ஆகி இருக்கக் கூடாது என்று பிரார்த்தித்த வண்ணம் நின்று கொண்டிருந்த இஸ்ஹாக்கிற்கு 'குழந்தையை காப்பாற்ற முடியல தாய மட்டும் தான் காப்பாற்ற முடிஞ்சது ஐயம் சாரி சார்' என்று வைத்தியர் கூறியது' இன்னும் துயரத்தை தந்தது. இத்தனைக்கும் வைத்தியர் கூறிய வார்த்தைகள் தாயாரின் காதுகளிலும் பட்டடிருந்தாலும் தன் மகனுக்கு ஆறுதலளிக்கும் வகையில் 'கவலைப்படாதே மகன் ஒன்னு இல்லன்னா இன்னொன்னு' என்று ஆறுதல் வார்த்தைகள் பலதால் அவனை குளிப்பாட்டிய அவள்தான் இன்று வரை பேரப்பிள்ளை பெற்றுக் கொடுக்காத தன் மருமகள் ஸாஹிராவிடம் சுடுசுடு என்று பேசித்தீர்க்கின்றாள்.

இஸ்ஹாக் இல்லாத நேரம் பார்த்து அவளை மலடி என்ற கோர வார்த்தைகளால் வதம் செய்வதும் அவன் சில போது வீட்டில் இருந்தாலும் அவனுக்கு எதையாவது குத்தி விட்டு கூத்துப் பார்ப்பதுமாக இருப்பாள். அன்றும் அப்படித்தான் கொடூரமான வார்த்தைகளால் ஸாஹிராவின் மாமியார் பேசியதால் ஸாஹிரா இரவு முழுவதும் தூங்காமல் அழுது அழுது யோசித்துக் கொண்டிருந்தவள் எழும்புவதற்கு தாமதம் ஆகிவிட்டது.

'தாய்மை இல்லாவிடினும் தாய்மை அந்தஸ்தை தாராளமாய் தன் தாயிற்கு கொடுத்தவள் தானே அவளும்'


**ஸஞ்ஸீதா முஜீப் ரஹ்மான்**
**(இஸ்லாஹி)**

புல்மோட்டை (Trinco)


# ஹைக்கூ கவிதைகள்



உறவுகளை இழந்ததும்
பல்லின வாழ்வு பெறுகிறது
காடாகும் பாழ் வீடு

........................................

என்னே ஒற்றுமை
காக்காய் கடி மாம்பழம்
கோதி உண்ணும் கிளி

........................................

காலத்தை அசைத்து
கடத்தி விடுகிறது
வினாடிமுள்

........................................

அணைத்தபடி உறங்கி
உயிர் துறக்கின்றன
பூவில் வயதான தேனீக்கள்

........................................

நள்ளிரவில் மழை
நனைந்து இருக்குமோ?
வான் நிலவு

........................................

புள்ளி மான்
காடெல்லாம் பயணிக்கிறது
கொம்புகளிடையே சிலந்திவலை

........................................

கொக்கு மட்டுமல்ல
ஒற்றைக்கால் தவத்தில்
காதலனின் ரோஜா

........................................

கறுப்பு வெள்ளை புகைப்படம்
சுமந்து வருகிறது
வண்ண நினைவுகள்

........................................

காடழிப்பு
கொடுமையாக இருக்கிறது
கோடைகாலம்

........................................

காதல் கவிதையோ?
கொத்திக் கொத்தி எழுதுகிறது
மரங்கொத்தி


Dr. ஜலீலா முஸம்மில்
ஏறாவூர், இலங்கை

# புத்தாண்டை வரவேற்போம்

புத்தாண்டே வருக
புத்துணர்ச்சியை தருக
புதுப்பொலிவுடன் வருக
பழையன கழித்திட வருக
புதியன புகுத்திட வருக

நலம் பல பெறவே வருக
வளம் பல தரவே வருக
தீங்கினை அகற்றிட வருக
தீயோரை அழித்திட வருக
வறுமையை நீக்கிட வருக
வளங்களை வழங்கிட வருக

பெருமையை தந்திட வருக
பேருவுவகை பெற்றிட வருக
மடமையை அகற்றிட வருக
மலர்ச்சியைக்  கொடுத்திட வருக
கொடுமையை எதிர்த்திட வருக
கடுமையை கடிந்து கொள்ள வருக

கல்வியை கற்றிட வருக
கற்றவர் சபையில் தலை நிமிர்ந்திட வருக
இல்லாமை இருளை அகற்றிட வருக
இருப்போருக்கு இரக்கம் கொடுத்திட வருக
இயற்கையை காத்திட வருக
இன்முகம் காட்டி வருக

பயத்தை விரட்டிட வருக
பாசத்தை கொடுத்திட வருக
தைரியத்தை கொடுத்திட வருக
துரோகத்தை எதிர்த்திட வருக
துரோகியை விரட்டிட வருக

நல்லோரை வரவேற்க வருக
நன்றியை நினைவூட்ட வருக
நாளும் நாங்கள் மகிழ்ந்திட
வருக!வருகவே!
வாழ்வில் வளத்தை தருகவே!

**கவிஞர்.ச.சங்கீதா,**
ரெட்டிபட்டி , சேந்தமங்கலம்





# அன்றைய தினம்

எல்லா பாக்கெட்டுகளும்
விற்று தீர்ந்த பிறகு
பஞ்சு மிட்டாய் வியாபாரி
வைத்திருக்கும் கோல் ஆகின்றது
செங்கோலென அன்றைய தினம்

அலுவலகம் கிளம்பும் நேரத்தில்
வாகனத்தில் எரிபொருள் தீர்ந்து
போயிருப்பது தெரிய வருவதுபோல்
பெண் பிள்ளைகளை வளர்ப்போர்
பதற்றத்தைக் கூட்டிச்செல்கிறது
தினசரி நிகழ்கின்ற
பெண்கொடுமைச் செய்திகள்
நாளைய பொழுதைப் பற்றிக்
கவலைப்படாமல் கூடு வந்தடைகின்றன
அன்றைய பொழுதை
அளந்து வரும் பறவைகள்

அன்றைய நாளின்
அவமானம், நிராகரிப்பு,
வெற்றி, தோல்விகளை எழுதிட
துணிகின்றன
நாட்குறிப்பு எழுத பழக்கப்பட்ட விரல்கள்

சமயங்களில்
இதழ்களில் முத்தப்புள்ளி மட்டும்
வைத்துப் போகும் வண்ணத்துப்பூச்சிகள்
மறந்து போகின்றன
கோலம் போடுவதற்கு

ஒவ்வொரு நாளும்
தனக்கு கீழேயுள்ள அனைத்தையும்
தானே சிருஷ்டிப்பதாக
எண்ணிக் கொள்கிறது சூரியன்

நமக்கான வேலையை
நம்மைத் தவிர
வேறு யார் யாரோ
தீர்மானிக்கும் அந்நாளில்
களைத்து தான் போகிறது
அன்றைய தினம்

தாய்ப்பறவைக்காகக்
காத்திருக்கும் சேயைப் போல்
நல்லதொரு வார்த்தைக்காகக்
காத்திருக்கிறது
அன்றைய தலைப்புக்கு
எழுதி முடிக்கப்படாத கவிதை

**செந்தூர் குமார்**

எழுத்தாக்கம்

பாத்திமா நளீபா



தொடர் 12

# சிரிப்பால் மறைத்த சோகம்

அவன் அட்டகாசம் அத்துடன் நிறைவு பெறவில்லை. அவனது பார்வை மீண்டும் மரியம் மீதும் அவளது தங்கை மீதும் பட்டது. அந்த பார்வை தாக்குதலுக்காக இருந்தது இதனை உணர்ந்த அவள் தங்கையை தன் காயப்பட்டு இரத்தம் வடிந்த கைகளுடம் தூக்கி அனைத்துக் கொண்டு அவ்விடம் விட்டு ஓட பாரிஸ் துரத்தி செல்கிறான். இடையில் அவனை தடுத்து நிறுத்த மரியம் பக்கத்தில் ஏதோ ஒரு வீடு ஒன்றின் கட்டிலுக்கு அடியில் தங்கையை வைத்து விட்டு அவளும் ஒழிந்து கொள்கிறாள். அவன் விட்டபாடில்லை கையில் ஒரு கம்புடன் ஒவ்வொரு வீடாக தேடி அலைந்தான். அல்லாஹ்வின் அருளால் அவன் அவள் பக்கத்தில் இருந்தும் அவன் கண்கள் அவளை நோக்கவில்லை.

சிறுது நேரம் கழித்து அவன் அவ் விடம் விட்டு ஏன் விட்டை விட்டு துரத்தப்பட்டான் சென்ற மறுகணம் அனைவரும் அவளை அழைத்து சென்று காயத்துக்கு மருந்து விட்டு தூங்க வைத்தார்கள். அவளால் தூங்க முடிய வில்லை உடல் அனலாய் கொதித்தது. ஆம் மிகவும் காய்ச்சலால் அவதிப்பட்டாள். இதற்கிடையில் ஒரு குரல் ஸைனபுக்கு Call பண்ணி இந்த விஷயத்த சொல்லி வர வைங்க என்று கூறியது... உறவுகளும் ஓ சரி தான் அத தான் இப்ப செய்யனும் வேர வழியில்லை என்று பதிலளித்தார்கள். இதை உறங்கிய படி அவதானித்த மரியம் பேச ஆரம்பித்தாள்

மரியம் - நீங்க உம்மாக்கு இத சொன் னிங்கன்னா நான் தங்கச்சிய தூக்கிட்டு வாப்பாவோட போவன் என்று கூறி அனை வரையும் வாய் மூட வைத்தாள். ஆனால் அவர்கள் ஸைனபிடம் கூறினார்களா இல்லையா என்பது பற்றி மரியம் அறிய வில்லை. ஆனால் இவள் கூறிய வார்த்தை அவர்களுக்கு ஒரு பயத்தையும் ஏற்படுத்தி இருந்தது. அதனால் கூற மாட்டார்கள் என்று உறுதியாகவும் அவதானத்துடன் இருந்தாள்.

இப்படியே நாட்கள் கழிய பாடசாலையில் இந்த விடயமும் பரவ ஆரம்பித்தது. இனி என்னவாகும் என்று கூறவா வேண்டும். பாடசாலை நாட்கள் அவள் வாழ்வில் மிகவும் மோசமான நாட்கள். குடிகாரனின் மகன் என்றே சக மாணவர்கள் சிலர் அழைப்பார்கள். ஆசிரியர் சிலர் உட்பட அவ்வாறே நடத்தினார்கள். அப்படி இருக்கும் போது திடீரென பாடசாலையில் மாணவி ஒருவரின் பாணம் 350 ரூபாய் காணாமல் சென்று விடுகிறது. அதை மரியம் தான் எடுத்தாள் என்று ஆண் மாணவர்களிடம் சக தோழி ஒருவர் கூற வகுப்பின் சில ஆண் மாணவர்களும் தன் கால்களால் உதைத்து அவளை நோவினை செய்கிறார்கள். இதை அறிந்த ஆசிரியரும் எந்த விதமான விசாரணையும் இன்றி 'ஒன்னால பெரிய தொல்லையா போச்சு எங்களுக்கு சனியன் ஒன்ட வாப்பா குடிகாரன் நீ இப்டி புள்ளகள்ட சல்லிய கொண்டு போய் அவனுக்கு குடுக்கவா' என்று கூறி மேசையில் இருந்த கம்பால் தண்டிக்கிறாள். உண்மையில் அந்த காசு குறித்து அவள் அறிந்து இருக்கவில்லை. ஏற்கனவே அவள் உடல் நலனின்றி இருந்தால் அன்று பாடசாலையில் நடந்த சம்பவத்தில் இன்னும் சுக்குநூறாக நொறுங்கி விட்டாள். பாடசாலை வரும் போதும் போகும் போதும் தன் தந்தையின் பார்வையில் படக் கூடாது என்ற பயமும், பாடசாலை சென்றாள் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களின் சலிப்பும் மிகவும் அவளை வாட்டியது இவ்வாறான மன நிலையில் நாட்கள் கழிந்தது.

தன் தாயிடம் இருந்து ஒரு அழைப்பு நாளை வருவதாக. அவள் மனம் தள்ளாடியது மகிழ்ச்சியடைவதா இல்லை கவலை கொள்ளவா என்று சிந்தனையில் இருந்த போது ஒரு குரல் நாளைக்கி தாதாவ கூட்டி வர போகனும் மச்சன்கு தாதா வாரது செல்லாடி பிரச்சினை



வரும். செல்லி கூட்டிக்கொண்டு போவோம் என்றது. இவள் மௌனமாக கேட்டுக் கொண்டிருந்தாள். நாளைய தினம் தன் தாயை எதிர்பார்த்து கண்கள் விழித்திருந்தது.

அதிகாலை நேரத்தில் எழுந்து மும்முரமாக வீட்டு வேலைகளை முடித்து தன் தாயை எதிர்பார்த்து நின்றாள். உறவுகள் சிலர் ஸைனபை அழைத்து வர சென்றதாக தாயின் தங்கை கூறினாள். கூறி முடிக்கும் கணம் வேன்வந்து வாசலில் நின்றது. ஆம் அன்று நடந்த சம்பவம் அவள் அறிந்து இருக்கவில்லை என்று மரியம் புரிந்து கொண்டாள். ஸைனபை பார்த்ததும் ஓடிச்சென்று அணைத்து தேமித் தேமி அழ ஆரம்பித்தாள் என்ன செய்வது என்ன நடக்கும் என்று சுற்றி நின்றவர்கள் அறியவில்லை. ஒரு கணம் அதிர்ச்சியை ஏற்படுத்தியது...

மரியம் ஏன் தேமி அழுதாள்?

மரியம் ஸைனபிடம் நடந்த சம்பவத்தை கூறுவாளா?

தொடர் 13



**சிரிப்பால் மறைத்த சோகம்**

அவள் ஏன் அழுதாள்?

அத்தனை ரணங்களையும் அடக்கி வைத்த அவள் தன் தாயை கண்டதும் தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்ள முடியாமல் அழுது விடுகிறாள். ஆனால் எதுவும்

கூறவில்லை. சற்று நேரத்தில் மகிழ்ச்சியாய் சுற்றித் திரிய ஆரம்பித்தாள். பாரிஸ் அனைவரிடமும் மன்னிப்புக் கேட்டுக் கொண்டான். இனி இவ்வாறான தவறுகள் நடக்காது என்று உறுதியாக கூறினான். அன்று முஹம்மதை ஸைனபுடன் சென்று முதன் முறையாக வீட்டுக்கு அழைத்து வந்தான். உண்மையில் சிறுது நாட்கள் மகிழ்ச்சியாக நகர்ந்தது.

மீண்டும் வெடித்தது பூகம்பம். கீதா பாரிஸை தேடி வீடு வரை வர ஆரம் பித்தாள். பாரிஸிற்கும் கீதாவுக்குமான தொடர்பு பற்றி ஸைனபின் வீட்டில் யாரும் அறிந்திருக்கவில்லை. ஸைனப் அவள் பற்றி அறிந்து இருந்தாலும் முதல் முறையாக நேரில் காண்கிறாள். பாரிஸ் அவளை வீட்டினுள் அழைத்து பேச்சை ஆரப்பிக்கிறான் வேலைகள் எவ்வாறு செல்கிறது என கேட்க அவளும் சஹஜமாக பேசினாள். ஆனால் அவளது நடவடிக்கைகள் சற்று ஸைனபுக்கு சந்தே கத்தை ஏற்படுத்தியது. அவள் சென்றதும் அவள் பற்றி விசாரிக்க முற்பட்டாள். சிறிது நேரத்தில் Call வந்தது. அழைத்தது கீதா தான். விறு விறு என்று வீட்டை விட்டு வெளியேறிச் சென்றான். பாரிஸை தொடர்ந்து யாருக்கும் தெரியாமல் முஹம்மது பின்னால் செல்கிறான். அவன் அவதானித்ததில் பாரீஸ் கீதாவுடன் ஒரு ஆட்டோவில் ஏறி செல்வதை பார்த்தான். ஆனால் அதை மரியமிடம் மாத்திரம் கூறினான். இரவு தான் மீண்டும் பாரிஸ் வீடு திரும்பினான். சாப்பிட அழைக்கும் போது சாப்பிட்டு வந்ததாக கூறி மறுத்து விட்டான். முஹம்மது மூன்று மாத விடு முறையில் தான் வீட்டுக்கு வருகைதந்து இருந்தான். அவ்வாறு நாட்கள் நகர ஸைனப் மீண்டும் ஒரு பிள்ளைக்கு தாயானாள். அந்த குழந்தை கருவில் இருக்கும் போது ஜைனம் மிகவும் கஷ்டங்களை அனுபவித்து விடுகிறாள். பாரிஸ் ஏன் நல்லவனாக நடிக்கிறான் என்று நினைப்பீர்கள். ஹ்ம்ம் அவனுக்கு பணம் தேவைப்படும் பட்சத்தில் இவ்வாறு அன்பாக நடந்து கொள்வது வழக்கம். ஸைனபின் தங்க ஆபரணங்கள் அனைத்தும் இவனது வஞ்சனை மூலம் சூறையா டப்பட்டு நாசம் செய்தான். எதற்காக இவ்வளவு பணம் என்றால் காரணம் முன் னர் கூறினேன். குடும்ப நிலை மிகவும் மோசமாக இருந்தது சரியான முறையில் உணவுகள் இன்றி பிள்ளைகள் உட்பட கர்ப்பிணி அவளும் அவதிப்பட்டாள். இதை பார்க்க முடியாது முஹம்மது சுற்றித் திரிந்து கீரை வகைகளை சேமித்துச் சென்று சந்தையில் விற்பனை செய்து விற்று அதில் கிடைக்கும் பணத்தில் அன்றைய ஒரு நேர சாப்பாட்டுக்காக பொருட்களை வாங்கி வருவான். அவனுக்கு உதவியாக ஸைனப் மரியம் இருந்தார்கள். அதிக நாட்கள் பட் டினியாக கழிந்தது. இப்படி இருக்கும் போது ஒரு நாள் நடு இரவு மரியமை மிகவும் கொடுரமாக பசி வாட்டியது. என்ன செய்வது என்று தெரியாமல் பழுதடைந்த சோற்றை கழுவி சாப்பிட ஆரம்பித்தாள். இதை பார்த்த ஸைனபின் கண்களில் நீர் வழிந்தது. ஆனால் மரியம் கூறினாள். உம்மா சோறு நல்லா தான் இருக்கு ஆனா ஒன்னு உப்பு இல்ல என்று விளையாட்டுத்தனமாக கூறி கர்ப்பிணியாக இருந்த ஸைனபை சிரிக்க வைத்தாள்.

நீங்கள் நினைப்பீர்கள் எல்லாம் அறிந் தும் ஏன் ஸைனப் முட்டாள் தனமான மீண்டும் மீண்டும் அவனை நம்பி தன் வாழ்க்கையைத் தொலைக்கிறாள் என்று. சரி தான் ஆனால் அவள் முட்டாள் தனமாக நடந்து கொண்டதானாள் மட்டுமே அவளை ஒரு சிறந்த முடிவு எடுக்க வைத்தது. பார்ப்போம். இவ்வாறு அவனது அட்டகாசங்களுடன் மாதங்கள் கழிந்தது. முஹம்மதும் மத்ரஸா நோக்கி புறப்பட்டான். மரியமின் பாடசாலை நாட்களும் அவ்வாறே நகர்ந்தது.

இன்னோரு விடயம் நீங்கள் சிந்திப்பீர்கள் பாடசாலையில் இவ்வளவு துன்பம் நடந்தும் ஆசிரியரை யாரும் தட்டிக் கேட்கவில்லையா என்று. எப்படி கேட்பார்கள் இந்த விடயம் இந்த தொடர் கதை மூலமாகவே அவள் மனதில் இருந்து வெளியேறியது இப்போது தான் அவளை சுற்றி உள்ள உறவுகள் இதனை அறிந்து கண்களில் நீர் வழிய இத் தொடரை வாசிக்கிறார்கள். இப்படி இருக்கும் போது எப்படி அறிவார்கள். மற்ற மாணவர்களைப் போல தன் வீட்டு நிலை அறிந்தும் தன் நிலை அறிந்தும் இதை பகிரங்கமாக தெரிவித்து இருந்தாள் அன்று பாடசாலையில் அந்த ஆசிரியரின் பணி நீக்கப்பட்டிருக்கும், தன்னால் தானே இவ்வாறு என்ற குற்றவுணர்வு மரியமை வாட்டியிருக்கும்.

சரி கதைக்குள் செல்வோம்.

ஹ்ம்ம்...

மாதங்கள் உருண்டோடின

ஸைனப் ஒரு ஆண் குழந்தையை பிரசவிக்கிறாள். 2008.12.13 திகதி பூவுலகில் பாதம் பதிக்கிறான். அவன் பெயர் யஹ்யா.. அல்ஹம்துலில்லாஹ். வைத்தியசாலையில் இருந்து குழந்தையுடன் வீடு திரும்பும் நாள். அதற்கிடையில் ஒரு முறையாவது பாரிஸ் ஸைனபைப் பார்க்க வைத்தியசாலை வரவில்லை. இன்று அழைத்து செல்ல வருகிறான் யாருடன் வருகை தருகிறான் என்றால் மரியமுடன். ஆனால் வைத்தியசாலைக்கு இன்னுமோர் முக்கிய விருந்தாளி மறைமுகமாக வருகைதந்தார். அது யாராக இருக்கும் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்?

வைத்தியசாலையை விட்டு மகிழ்ச்சியாக வெளியேறும் போது ஸைனபின் கண்களில் அந்த வருகைதந்த நபர் படுகிறார். அந்த நேரத்தில் தன் சந்தோஷத்தை இழக்க விரும்பவில்லை அவள். அந்த நொடியில் மரியம் ஸைனபின் கையை இறுக்கமாக பிடித்து கொள்கிறாள். அந்த அழுத்தமான பிடியில் பொறுமை கொள் மனமே என்ற ஆறுதல் அவள் உணர்ந்தாள். அவ்விடம் விட்டு நகர்கிறார்கள். வீட்டில் அனைவரும் மகிழ்ச்சியாக வரவேற்பு செய்தார்கள்.

நிச்சயமாக அழகான நாட்கள் வாழ்வில் மறக்க முடியாத நிமிடங்கள். ஏன் என்றால் யஹ்யா விட்டினுள் நுழையும் போதே ஓர் அழகிய புன்னகையை தன் மென்மையான உதடுகளால் விரித்தான். மாஷா அல்லாஹ் அந்த புன்னகையின் அனைவரது மனமும் துள்ளியது..

அவ்வாறே நாட்கள் கழிய. பாரிஸின் ஒரு பாரிய விபரீதமான ஒரு முடிவின் காரணமாக இதில் மீண்டும் முஹம்மதும் மரியமும் இரையாக்கப்படுகிறார்கள்..

தொடர் 14



## சிரிப்பால் மறைத்த சோகம்

சரி சற்று முஹம்மதின் குணாதிசயங்கள் பற்றி கூறுவதாயின். அன்பானவன், குடும்பத்தின் மீது பொறுப்பும் அன்பும் கொண்டவன், அவன் பள்ளியில் அதான் கூறும் போது அனைவரும் ரசிக்கும் அளவுக்கு அழகான குரல், எழுத்தில் ஆர்வம் கொண்டவன் (கவிதை,பாடல்,கதை) என் இலக்கிய ஆர்வம் கொண்டவன். இப்படியான திறமை வாய்ந்தவனாக முஹம்மது காணப்பட்டான். அவன் விடுமுறையில் இருந்து வரும்போது ஒவ்வொரு முறையும் மரியமுக்காக கவிதைகள் பாடல்கள் எழுதி வைத்து வீட்டில் இருவரும் சேர்ந்து பாடி ஆடி மகிழ்வார்கள். மரியம் முஹம்மது மேல் மிகவும் அன்பாக இருந்தாள் அவனும் அவ்வாறே இருந்தான். மூன்று மொழிகளிலும் பேசும் வல்லமை கொண்டவன்.

முஹம்மது ஒரு நாள் சுகவீனம் காரணமாக வீட்டுக்கு அழைத்து வரப்படுகிறான். திடீரென குடி போதையில் வீட்டுக்கு வந்த பாரீஸ் முஹம்மதைப் பார்த்து 'வா என்னுடன் போக இனி நீ இங்க இருக்க கூடாது. நான் செல்ற இடத்தில தான் இனி நீ இருக்கனும். நான் ஒன்ட வாப்பா வா போக' என்று மிகவும் ஆக்ரோஷமாக கத்தினான். ஸைனபின் மணம் பட படத்தது எது நடக்க கூடாது என்று இவ்வளவு காலமும் பொறுமையாக இருந்தாலோ அந்த விடயம் தான் அன்று நடந்தது.

முஹம்மது - 'நான் எங்க வரனும் என்ட உம்மா தங்கச்சி எல்லாம் இங்க இருக்க கொள்ள நான் எங்க வரனும்,' என்று அவனைப் பார்த்து கேட்க பாரிஸ் - 'இது ஒன்ட உம்மவே இல்ல அத தெரிஞ்சிகோ முதல்ல, ஒன்ட வாப்பா நான் தான் நான் செல்றத நீ கேளு' முஹம்மது - (கோபத்தில்) குடிச்சிட்டு வாய்க்கு வந்த மாதிரி பேசா தீங்க. இது என்ட உம்மா இல்லாடி என்ட உம்மா யாரு?

ஸைனபின் இதயம் பட படத்த இந்த வார்த்தை இது தான் பாரிஸ் முஹம்மதைப் பார்த்து இப்படியான ஒரு வார்த்தையை கூறி விடக்கூடாது என்றும் முஹம்மது இப்படியான ஒரு கேள்வியை எழுப்பக் கூடாது என்றும். எதை இவ்வளவு காலமும் முஹம்மதிற்கும் மரியத்திற்கும் தெரியக் கூடாது என்று இவ்வளவு காலமும் எண்ணி அல்லாஹ்விடம் பிரார்த்தனை செய்து வந் தாலோ இன்று வீட்டில் வெடித்து சிதறியது.

மரியம் முஹம்மதைப் பார்த்த படி திகைத்து அசையாமல் நின்றாள் அந்த வார்த்தைகள் அவளால் ஜீரணிக்க முடியவில்லை. என்ன நடப்பது என்று இருவருக்கும் புரியவில்லை. அவனும் திகைத்த படி அவனை மறந்து பாரிஸீடன் வீட்டை விட்டு வெளியேறிச் செல்கிறான். உறவினர்கள் அயலவர்கள் என அனைவரும் தடுக்கிறார்கள் ஆனால் யாராலும் எது வும் செய்ய முடியாத நிலையில் ஏன் என்றால் உண்மை அது அவனது தகப்பன் என்ற ஒரே காரணத்திற்காக இருந்தது. வீட்டில் இடி விழுந்தது போல் இருந்தது அனைவரும் ஸைனபையும் மரியத்தையும் சமாதானம் செய்ய முடிந்த வரை முயற்சி செய்கிறார்கள். பாரிஸ் முஹம்மதை எங்கே அழைத்து சென்றான் என்ன செய்தான் என்பது யாருக்கும் தெரியவில்லை. பாரிஸின் வீட்டுக்கு அழைப்பை ஏற் படுத்தி முதல் முறையாக அனைத்து பிரச்சினைகளையும் ஸைனப் யாருக்கும் தெரியாமல் தனியாக சென்று கூறும் போது. பாரிஸின் தங்கை 'இங்க நாநா வரல்ல எங்க சரி போய்ரிப்பாங்க வாப்பா தானே வரும்' என்று அலட்சியமாக பேச ஸைனப் அழைப்பை துண்டித்து விட்டாள். பல இடங்களில் தேடியும் எங்கு சென்றார்கள் என்று தெரியவில்லை.

சில நாட்களுக்குப் பிறகு இருவரும் வீட்டுக்கு வந்தார்கள். வரும் போதே மரியம் நாநா என்று ஓடிச்சென்று முஹம்மதை அனைத்துக் கொள்கிறாள். அவன் அவளைப் பார்த்து 'நான் உன் கூட பிறந்த நாநா இல்ல' என்று கூறிய அந்த வார்த்தைகள் அவள் மனதை வெகுவாக பாதித்தது அது மட்டுமின்றி 'நான் இப்போ இங்க இருக்க வரல்ல என்னோட உடுப்பு எல்லாம் கொண்டு போக வந்தன் தள்ளிப்போ' என்று கூறி வீட்டினுள் நுழையும் போது ஸைனப் அவனை முத்தமிட்டு 'எங்க போன நீ' என்று அழ ஆரம்பித்தாள் அதற்கு அவன் கூறிய அந்த வார்த்தை அவள் நெஞ்சில் கத்தியினால் குத்திக் கிழித்து விட்டது..

அப்படி என்ன வார்த்தை கூறியிருப்பான் முஹம்மது?

தொடரும்..

# வானம் வசப்படும்.

எழிலாய் இனிதாய் அவனியி லெங்கும்,
வாழ்பவர்க் கெல்லாம் புவியெனும் இல்லம் ,
அதனின் மேலாய் வானக் கூரை,
அதன்கீழ் சிறுசிறு பொத்தல் களெல்லாம்,
அமரர் ஆளும் உலகின் ஒளியை,
உமிழ்வது வாக நம்பித் தொடர,

எழுந்தன ஆயிரம் கதைகள் அதனுள்,
கற்பனை குதிரை கட்டவிழ்த் ததனால்,
மொழிந்தது வெல்லாம் மிகைதான் எனினும்,
நாயக ரெல்லாம் நம்மை யீர்க்க,
தீரா வறுமை தீய்க்கும் கொடுமை,
தெய்வந் தீர்க்கா அறிந்தவர் உணர,

மழுங்கிக் கிடந்தோர் நடுவில் முழங்கி,
அறிவைக் கூராய்த் தீட்டிய பின்னே,
அழிவில் இருந்து மீண்டது உலகு,
அதன்பின் ஆள்பவர் அறிவியல் முன்னே ,
நாணிக் கவிழ்ந்து விதியின் தோலை ,
முழுதாய் உரித்து உப்பைத் தடவ ,

எங்கும் அறிவின் பெருமித வளர்ச்சி,
எல்லை கடந்து விண்ணில் சுழல,
செவ்வாய் சந்திரன் வந்தன அருகில்,
சிந்தனை யாவிலும் தேடல் மிகவே,
கொண்டது வெல்லாம் முயன்றத னாலே,
முயல்வோம் இனியும் வானம் கீழே.

என பண்பாடும்,
கவிஞர் ச.சுரேஷ்பாரதி

## வானம் வசப்படும்

நானிங்கு இன்று
மகிழ்வோடு இருந்தேன்!
மனதின் உணர்வுகள்
உண்மையில் சிலிர்த்தன!
இனமான உணர்ச்சிகள்
மலையெனப் பொங்கி!
எதையும் கைவரும்
வித்தை அறிந்தென்!
ஏழ்மையில் இருந்தும்
தனிமையில் உழன்றும்!
சாதனை படைக்கும்
சமயம நோக்கி!
அல்லும் பகலும்
ஆற்லை தீயாய்!
மனதினில் எரித்தே!
பொறுமை காத்தென்!
வந்தது வேளை!
தந்தது தமிழை!
கிளம்பினேன் புயலாய்!
உடைத்தென் தடைகளை!
சாதனைக் கோட்டையின்
சரித்திர வாயிலை!
தொட்டதும் எந்தன்
மனமும் குதித்தது!
வானமும் சுருங்கி
வாழ்த்தும் சொன்னது!
நீயொரு வீரன்
இதுவுன் உலகம் !
என்றே சொல்லி
கைவசம்வந்து!
வணங்கி பணிவுடன்
அமைதி கொண்டது!

அ.பாண்டுரங்கன் ,
மதுரை



# வெண்பா போட்டி (பயணம்) 37

## போட்டியின் காலம் : டிசம்பர் 2024

ஆத்தாநீ கண்திறந்தால் கூத்தாடும் நெல்மணிகள்
மூத்தவள் கண்ணீரை எண்ணியே - நாத்தாடும்
நஞ்சையினை நாள்தோறும் நம்பி இருக்கின்றேன்
கொஞ்சம் கருணையைக் காட்டு!

**பொன்மணி தாசன்**

.

பேஞ்சுக் கெடுக்காம போமழையே அப்புறம்
காஞ்சு விடாமயும் காத்துக்கோ - ஓஞ்சுப்போய்
உட்கார நேரமில்ல உள்ளபடி பிள்ளைக்குக்
பட்டணத்தில் கல்யாணம் பார்.

**ஃபக்ருதீன் இப்னு ஹம்துன்**

.

தங்கமோ விண்ணுக்குத் தாவும் விலைக்கெனது
தங்கத்திற்கு என்செய்வேன் தாநிலமே - அங்கமதில்
வேர்வை விளைச்சலாய் வேளாண்மை செய்திடுவாய்
கார்நெல் விளைச்சலைக் காத்து .

**கவிஞர்.அ.முத்துசாமி, தாரமங்கலம் .**

.

கார்பொய்க்க  மண்டும் களை,கடனில் என்வயல்
நேர்செய்து  நெல்வயல் நீரோட்ட ஊர்வந்தே
ஊர்வல மாகவே ஊர்மெச்ச என்மகளை
தேர்கொண்டுப் போகுமோ? தீர்.

## குயில்.மு.இரசியா பேகம்.

கல்யாணம் பண்ணிவைக்கக் காக்காசு வீட்டிலில்லை
கல்லாக நெஞ்சு கனக்குது - செல்லமக!
கொல்லை வௌஞ்சுரும் கோபுரமா நெல்லுவரும்
நல்ல வரனமையும் நம்பு.

## சுயமரிதைப்புலவர் சுரேசுமுனியாண்டி .

.
நட்ட பயிர்கள் நலமாய் விளையனும்
வட்டி முதலும் கழிக்கனும் பட்டகடன்
ஒட்டுமொத்தம் தீர்த்து மகளின் திருமணத்தைத்
திட்டமிட்டுச் செய்ய அருள்.

## கவிஞர் க.தங்கவேலு கிருட்டிணகிரி

.
வெள்ளாம வெட்டியதும் வச்சிடுவம் கல்யாணம்
வெள்ளத்தில் வீழாமல் வெட்டுமட்டும் - உள்ளத்தால்
வேலனுனை வேண்டினேன் வீண்போகாக் காத்தாலே
மாலதி மூத்தவள்க்குச் சீர்

## கரகரெட்னம் முரளிதரன்

கல்யாணச் சீர்செய்யக் காணிநிலம் கைகொடுக்கும்
நல்லா வெளயணும் நட்டபயிர்  - வல்லயென்
தெய்வமே என்வறுமை தீர்ந்தால் மகளுக்குச்
செய்வேன் சிறப்பாகச் சீர்.

## ஓசூர் மணிமேகலை

வான்மழையும் பொய்த்து வயல்காய்ந்து நட்டமய்யா
மான்நிகர்த்த பெண்ணின் மணவாழ்வும் - ஏன்ஏனோ
காதுக்கும் மூக்கிற்கும் காணும் நகைவாங்க
ஏதும் பணமில்லை யே.

## பாவலர் தாழை ந.இளவழகன், மணப்பாறை.

.

கார்கூடி வந்தால் கழனி செழிப்புற
நீர்கூடி இன்பம் நிறையுமே! - சீர்க்கூட்டிச்
செய்வேன் மகளின்  திருமணத்தைத் தெய்வமே!
உய்வேனே உள்ளம் உவந்து.

## ஜாம் சத்யா

.

மாமழையே வாராயோ மண்ணுலகில்  வேளாண்மை
தாமத மின்றியிங்குத் தந்திடவே  - மாமகட்குக்
கல்யாணச் சீர்செய்து காக்கவேண்டும் நானின்று
பல்கியே பெய்மழையே பார்!

## கெங்கை பாலதா

.

மழையே எனது மகளுக்குச் சீரை
வழங்க  வருவாய் வகையாய் - அழைத்தே
பயிர்கள்  மணப்பெண் பரிசத்தைக் காட்டும்
உயிராய் உனைநினைப்பே  னே!

## பாவலர் கோவதன்,  மலேசியா

.

முத்தாய் வளர்த்தமகள் முந்தாநாள் குத்தவைக்க
சொத்தா இருக்குதிங்கே சொன்னாரே - செத்தமழை
பெய்யாமல் பொய்த்ததானால் பேயாய் வறுமையும்
மெய்யாகிப் போகுமுன் பெய்...

## சக்தி.க.மகராசி, திருநெல்வேலி மாவட்டம்

சத்துடனே நெல்லுமே சரஞ்சர மாஇருக்க
கொத்தாக வந்தே கொடுமழை - பத்தி
வருகுது நேரமும் வந்திட பெண்ணே
பருவமும் பொய்த்தது பார்.

## இந்திராணி தங்கவேல், திண்டுக்கல்

.

பூண்டிடத் தாலியென் புத்திரி தைமாதம்
வேண்டு மளவில் விளைச்சளைக் காண்பிக்க
வாராய் வருணரே வட்டியும் ஏறுது
காராளன் கஷ்ரத்தைக் காண்

## குலா கிருஷ்ணா, ரொறொன்ரோ, கனடா

.

பெய்யாமற் பொய்க்காதே பேய்மழையாய்ப் பைங்கூழைச்
செய்யாமற் சாய்க்காதே சீருறவே ல் எய்தா
மகசூலால் வீழின் மகளின்மாங் கல்யம்
தகரும் கனவே தளர்ந்து

## விசு. இம்மானுவேல், பெங்களூரு

.

காதறந்த ஊசியாக காணிநிலம் நட்டாக
சூதறியா அப்பனாத்தா சொந்தமாக - ஏதறியா
நாதேரி பெத்தமழை நாளுநாளா பேஞ்சதுல
மூதேவி வீடுவந்தா முன்

## நலம் பயக்கும், மன்னை மணிமாறன்

.

மாரியே நீயும் மகசூல் தரும்தாயே
காரிகை கன்னிக் கடன்கழிக்கக் - காரிநிறை
விண்ணின் துளியே விளைச்சல் பெருகவே
பெண்ணைக் கரைசேர்ப்பாய் பெய்து.

## இரா.கவிதா, திண்டுக்கல்

.

பொண்ணைக் கரைசேர்த்துப் போதுமான சீர்செய்யக்
கண்ணைக் கரையவிட்டுக் காத்திருக்கேன் - மண்ணேநீ
பொன்னன்ன நெல்லைப் பொலிவிளங்கச் செய்தாலே
என்னளவில் ஆகும் இது

## க.சங்கரபாண்டியன்

.

தங்கம்போல் நெற்கதிரைத் தாங்கிடும் மண்தாயே
அங்கம் நிறைய அணிமணிகள் - எங்கள்
மகளுக்குச் சீராகி மாலையிடச் செய்வாய்
அகம்குளிர்வேன் அன்றாடம் ஆம் !

## எம்.ஆர்.தனசேகரன், மலேசியா.

.

பருவத்தை யெட்டிய பைங்கிளிக்குப் பார்த்தேன்
திருவொத்த மாப்பிள்ளை தேடி - வருணனே
கார்பொழிய வைத்துக் கருணையளி கல்யாணச்
சீர்செய்ய நானுஞ் சிறந்து

## சுந்தரராஜன் கீடாம்பி

.

நல்ல மழைபெய்து நட்ட பயிர்வளர்ந்து
நல்ல விலைவந்து நாட்டினில் - நெல்விற்றால்
பொன்பொருள் தந்தனைவர் போற்ற மகளுக்கே
மன்றல் முடிப்பேன் மகிழ்ந்து!

## பாவலர் கருமலைத்தமிழாழன், ஓசூர்.

.

தங்கம் விலையும் தரமற் றுயருதடி
தங்கம் கடத்தத் தவிக்குதடி - பொங்கிடும்
வங்கப் புயலினால் வாழும் பயிர்களும்
எங்கும் அழிவதைப் பார்.

## சோ. சுந்தரேசுவரி

.

கண்பொங்கக் கையெடுத்தேன் கார்மேகந் தான்பொழிவாய்
வெண்பொங்கல் சாப்பிடவா வேண்டுகிறேன் - மண்ணிலே
போரடித்த நெல்லையெல்லாம் பொன்னாக்கிப் பெண்ணுக்குத்
தாரமருஞ் செய்யவே தான்

## மலர்மைந்தன், கல்பாக்கம்

.

காடு வெளஞ்சுக் கடனுக்கே பத்தல
மாடுகன்ன வித்து மகளுக்குப் - போடும்
கலியாணச் சீருக்குக் காசதுதான் தேறும்
எலிவளை போதும் எனக்கு

## தனராஜ் பாப்பணன்

.

சம்பா அறுவடை செய்து மகளுக்குத்
தெம்பா வரிசையைத் தேர்விட்டேன் - வம்பாகச்
சென்றது வான்மழையால் சேர்ந்தது வெள்ளமும்
என்றபோது என்செய்வேன் இன்று?

## வா.சண்முகம்.

.

கண்மணிக்குக் கல்யாணம் காணுந்தை மாதத்தில்
தண்ணீரில் தத்தளிக்கும் தாளடி - கண்ணீரில்
கத்தரி வெண்டையும் கைவருமா ஏக்கத்தில்
எத்தனைப் பொன்செய்வேன் யான்?

## இராச. பத்மநாபன் தஞ்சை

.

காடுமலை காணாது கார்மேகம் எப்படி
வீடுவயல் விட்டாயா வீறுகொண்டாய் - வாடும்/
மகளின் திருமணம் மாறிடுமா சொல்வாய்/
மகமாயி நன்றாய் மகிழ்ந்து

## பாண்டிச்செல்வி கருப்பசாமி, கோவை

கல்யாணச் சீர்செய்யக் காலபெலாம் கண்விளித்து
நல்ல வழிதேடி நானிருந்தேன் - வல்லவனே
மெல்லநீ கண்திறந்தால் மீண்டும் மகிழ்வதைச்
சொல்லுவேன் சுற்றத்தைச் சூழ்ந்து/

**பா.இந்திரன்**

.

புயலும் மழையுடன் பூமியை வாட்டி
வயலில் பயிர்கள் வருந்தும் - செயலில்
முதிர்கன்னி வாழ்வது மூலையில் நின்று
உதிரமாய்க் கண்ணீரைக் காண்.

**கவிஞர் கவி நிலா மோகன், தஞ்சாவூர்.**

.

குறுவை விளையுமென்றே கொண்டிருந்தேன் ஆசை
சிறுமகள் மன்றலைச் செய்ய - அறுவடையே
இல்லாமல் எல்லாம் இழந்தேன் பெருமழையால்,
எல்லாம் பெறவழி ஏது...!

**செண்பக ஜெகதீசன்**

.

ஊர்போற்ற என்மகளுக்கு உற்றதுணை நிச்சயித்தோம்
சீர்போற்ற செய்யவேண் டும்நற்சீர் - கார்முட்ட
வெங்காயம் நட்டேன் விளைவிலை கூடினால்தான்
எங்காயம் தீரும் எமக்கு...!

**வள்ளி முத்து**

.

நான்பெற்ற தேவதையின் நல்வாழ்வில் பூமுடிக்க
வான்மழையே பெய்திடய்யா வாட்டமின்றி - நான்மலர
சீர்வரிசை செய்திடவே சீதன மேதுமில்லை
கார்மேக மேநீயும் காண்...

**ஜெ வசந்தி**

.

பூத்தழகாய்த் தானிருக்கும் பூங்கொடி என்மகட்கு
ஏத்தவூரார் நல்மணம் ஏற்படுத்தக் - காத்திருக்கேன்
வாசியில்லா செல்வமது வந்துசேரப் பூமியே
ஆசியை நெல்லாய் அளி.

### தமிழ்க்கீரன், ஈழநாடு.

.

சீதனமோ கேட்கிறார்கள் சீர்செய்ய யாருளர்
வேதனை நெஞ்சில் வெறுமையேன்?, - ஆதனம்
ஒன்றை யடைவுவைத் தூரார் சிறப்பிக்க
நின்றேன் திருமணத்தி லே!.

### சுதேன் சுதேகி

.

நெஞ்சம் பதறுது நெல்வயல் மூழ்குது
வஞ்சம் பிடித்ததோ வானம் - சஞ்சலமே
மிஞ்சுமோ வெள்ளாமை மீளுமோ யென்கவலை
தஞ்சமே நின்னருள் தா!

### மணிமொழி லிங்கம்.

.

அல்லும் பகலும் அடித்த மழைநீரால்
நெல்வயலும் முற்றாய் நெறைஞ்சிடுச்சி - எல்லாமே
நட்டமாய்ப் போனதால் நான்படும் வேதனை,
பெட்டைக்குச் சீரைப் பெற!

### கிண்ணியா சபீனா

.

விதச்ச தனைத்தும் விளைந்து வரட்டும்
அதிக வருமானம் அள்ளித் தரட்டும்
மகளோட கல்யாணம் ஊர்மெச்ச செஞ்சி
புகழோடு வாழவைப்பேன் பார்

### மருத்துவர் தேவி

.

தங்கை மகனுக்கே எண்மகளை நிச்சயித்து
எங்கெங்கோ கேட்டும் கிடைக்கவில்லை - தங்கநகை
செய்யப் பொருள வேண்டும் நெல்வயலில் பொன்விளைய
பெய்யட்டும் இன்றே மழை

## மன்மதன் ஒசூர்

சீர்கேட்டு சம்பந்தி வாசலிலே நிற்கையில்
ஏர் பூட்டி நன் செய்யில் நானுழுதேன் - கார்முகிலே
என்மேல் கருணைகொண்டு தேன் மழையாய்ப் பெய்தால்
பெண்ணுக்குச செய்வேன் சீர்

பெண்ணைப் பெற்றுவிட்டேன் சொந்தமேஎன் றாலு ம்
கண்ணாலம் செய்யப் பணம் வேண்டும் - இன்னும்
என்னை ஏமாற் றா துவிளைச்சல் தந்திடு
உன் னைந ம்பி நானிருக்கேன் மண்ணே.

## எம். எம். கோபால், சென்னை

அன்பு மகளவட்கு ஆகும் திருமணத்தில்
இன்பம் மிகச்சீர்தான் என்தருவேன்? - வன்மழையே
வாட்டி எடுத்ததனால் வாழ்பயிர்கள் மூழ்கியதால்
போட்டமுதல் எல்லாமும் பொய்த்து.

பொய்த்தது யெல்லாமும் பேராட்ட வெள்ளத்தால்
மெய்ப்பயிர் நீரில் மிதந்ததே - உய்யவழி
இல்லாமல் போனதால் என்னசீர் யான்தருவேன்
பொல்லாங்குச் சூழ்ந்தயிப் போது.

போனதினி வாரது பொன்னாகி மின்னாது
ஆனதெண்ணி யானே அரற்றுகிறேன் - தேனவட்குச்
சீரளிக்க வொண்ணாமல் செய்த இயற்கையின்மேல்
கூரம்புப் பாய்ச்சுகிறேன் கூர்ந்து.

கூடிக் களித்தமகள் கொண்டயென் தேனிசையாள்
நாடி நரம்பாமென் நல்லமகள் - நாடிச்சீர்
நானளிக்க வைக்காமல் நைந்திடச் செய்ததிந்த
வானமழை நீர்வற்று மா.

மாசில் திருமகள் மன்றினில்சீர் வைக்கத்தான்
காசினியில் வாழ்ந்துக் கரைகின்றேன் - வீசியே
வந்த புயல்மழையால் வைத்தப் பயிரிழப்பால்
நொந்துநூல் ஆனேன் நொடிந்து.

நொடியும் மகளுக்கு நூறுநூறாய் நற்சீர்
நெடிதாய்த் தரவே நினைந்தேன் - கொடிய
அடைமழை வந்திங்கே அத்தனையும் பாழாய்
நடைதளர்ந்து நின்றிங்கே நான்.

நான்வாழ என்றும் நலந்தந்த என்மகட்குத்
தேன்போல சீர்தரவே தேர்ந்திருந்தேன் - ஏன்தானோ
வந்தவெள்ளம் வாழ்பயிரின் வாழ்வழித்துப் போனதுவே
கந்தலாய் நானும் கசந்து.

கசக்கும் மருந்தும் கடுநோயைப் போக்கும்
இசைந்தசீர் எங்ஙணம் ஈவேன்? - இசையன்பே
கண்மணியே என்மகளே காலத்தின் கோலத்தை
எண்ணித் தவிக்கிறேன் ஈங்கு.

ஈந்துவக்கும் என்மகளே ஏற்றசீர் நான்தரவே
ஏந்தி வைத்த நற்பயிர்கள் இன்றில்லை - தீந்தீயில்
வெந்தாற்போல் நானானேன் வேண்டிய அத்தனையும்
இந்தமண் ஏற்றதும் ஏன்?

ஏன்தானோ என்னுழைப்பு  இம்மண்ணில் மண்ணாகி?
வான்மழை நின்னாலே வாடுவனோ? -  நான்மீண்டும்
வித்தாய் விளைந்திடுவேன் வேண்டும்சீர் நூறளிப்பேன்
அத்தனையும் ஆனமகள் அன்பு.

**படைக்களப் பாவலர் துரை. மூர்த்தி**

# வெண்பா போட்டி (பயணம்)

போட்டியின் கால அளவு : ஜனவரி 01 முதல் 12 வரை 2025

**இம்மாத போட்டி.....**

.

வேறு மதம் சார்ந்து காதலிக்கும் பெண்ணை, ஆணை அவர்களின் பெற்றோர்கள் அவர்களின் மனம் மாற்ற முயற்சி செய்து அறிவுரை என்ற பெயரில் துன்புறுத்துகிறார்கள். அவர்களுக்கு தைரியம் ஊட்டும் விதமாக அவர்களின் தோழமைகள் ஊக்கம் தருவதைப் போல ஒரு வெண்பா பாடவேண்டும்....

(எ-கா) பாடல்: ---

## (எ–கா) பாடல் :

தண்ணீரை ஊற்றி
தலைமூழ்கு வார்தந்தை
அன்னயதைப் பார்த்தழுவாள்
ஆனாலும் - பெண்ணின்
குணமறிந்து உந்தன்
குடும்பத்தில் சேர்க்க
மணம்முடிப்ப தொன்றே
மகிழ்வு.

பொதுவான விதிகள் : -

ஒருவர் பயன்படுத்திய பாடுபொருளை இன்னொருவர் பயன்படுத்த வேண்டாம். வெண்பாவிற்குக் கீழ் எழுதியவர்கள் தங்கள் பெயரினை தமிழில் எழுதுதல் அவசியம்.

அசத்துங்கள் கவிஞர்களே....

வழக்கம்போல் களம் முழுவதும் கவிஞர்களின் கற்பனைக்கு. மனதில் பட்டதை பட்டென்று போட்டு உடையுங்கள் வெண்டளையில். எல்லாம் கற்பனைக்கே... உங்கள் மனம் சொல்வதை சரியான இலக்கணத்தோடு பகிருங்கள் போதும். காலத்தை கவிஞர்கள் கையில் ஒப்படைக்கிறோம்....

தளர்வுகள் :-

தனித்தமிழில் தான் பாடல் அமையவேண்டும் என்ற கட்டாயம் இல்லை. வாசித்தால் புரியும்படி இயல்பான வார்த்தைகளோ, அல்லது வட்டார வழக்குச் சொற்களோ பயன்படுத்தலாம். தளை தட்டாமல், புணர்ச்சி இல்லாமல், பிழையின்றி எழுதினாலே சிறப்பு.

என்றும் தமிழுடன்....
தமிழ்நெஞ்சம் ஆசிரியர் மற்றும்
தமிழ்நெஞ்சம்ஆ சிரியர் குழு

https://www.facebook.com/profile.php?id=100030084520602

# ஆங்கிலப் புத்தாண்டே வருக வருக

ஆங்கிலப் புத்தாண்டு ஆரவாரத்துடன் பிறக்கட்டும்
ஓங்குபுகழை பாரதத்திற்கு ஏற்றம் ஆக்கட்டும்
தீங்குகள் ஏதுமின்றி தரணியெங்கும் வலம்வரட்டும்
பாங்காய் நற்பலன்களை நாட்டுக்கு அருளட்டுமே

வருகவருக ஆங்கிலப் புத்தாண்டே நலமாகவே
தருகதருக தரணியெல்லாம் செழிப்பு மிகவே
உருகி ஓடட்டும் பனியெல்லாம் ஆறாகவே
ஒருங்கிணைந்த வேளாண்மை வளர்க வளர்கவே

போர் மேகங்களெல்லாம் கலைந்து ஓடட்டும்
சீர்மையைச் சிக்கெனப் பிடித்தே சிறக்கட்டும்
தீர்வுகள் திரண்டுவர சமாதானம் பிறக்கட்டும்
வேர்களில் உலகமென்பது ஒன்றென ஆகட்டுமே

நாடுபிடிக்கும் ஆசையை நாடுகள் நாடாதிருக்கட்டும்
சூடுபிடிக்கும் வதந்திகளை என்றும் நம்பாதிருக்கட்டும்
ஈடுகொடுத்து வெற்றிகளை நம்நாடு குவிக்கட்டும்
பாடுபட்டு பெற்ற சுதந்திரத்தைப் பேணிடட்டுமே

எதிரிக்கு  எதிரி நண்பெனென்றும் ஆகிறதே
அதிரிபுதிரி நட்புக்கு நட்பு வில்லனென்றுமாகிறதே
சதிகாரக் கும்பலெல்லாம் சட்டம் பேசுகிறதே
அதிகார ஆணவமெல்லாம் அடியோடு ஒழியட்டுமே

வேளாண்மை வெற்றியோடு வீரநடை போடட்டும்
ஆளாண்மையால் அரங்கில் எங்கும் புகழாகட்டும்
காளான் முதல் கரும்புவரை செழிப்பாக வளரட்டும்
மேலான நன்மைகள் நாடெங்கும் மலரட்டுமே.

**கவிஞர் புல்லாங்குழலன்.**

## புத்தாண்டை வரவேற்போம்

2024க்கு விடை கொடுக்கிறோம்
2025ஐ வரவேற்கிறோம்
மலையிலிருந்து மாமலைக்கு
மனங்களை உயர்த்துவோம்

நண்பர்களின் நெருக்கம்
வீட்டினரின் ஆறுதல்
இப்புத்தாண்டில் உங்கள்
உற்சாகத்தை புதுப்பிக்கட்டும்.

இதயம் விரும்பும்
அனைத்தையும் பெறுவீர்
உங்கள் வாழ்க்கையின்
சிறந்த நேரத்தையும்

நல்ல நண்பர்கள் வாய்க்கட்டும்
சிறந்த வாய்ப்புகள் கிட்டட்டும்
அற்புதமான அனுபவங்களால்
வாழ்க்கை வளரட்டும்

நேசத்துக்குரிய தருணங்கள்
பகிரப்பட்ட அனுபவங்கள்
புதிய விருப்பங்களின்
இழைகளை ஒன்றாக இணைக்கட்டும்

அக்கரை சிவப்புகளை தள்ளி
இக்கரையை இன்னும்
பச்சையாக்குவோம்
அகல உழுதது போதும்
ஆழ உழுது சிறப்போம்

## ■ விமரிசனம்

பொசுக்கித் தள்ளுவோம் தாராளத்தை
அடுத்தவரைப் பார்த்து பொங்குதல்
அழகல்ல
பேணி வளர்ப்போம் சிக்கனத்தை

## ■ தன்முனைக் கவிதைகள்

உலகின் முதல்வன்
உயிர்களின் இறைவன்
அறுவடைக்கு நன்றி
ஆசீர்வாதத்துக்கு நன்றி

சேற்றில் உங்கள் கால்
சோற்றில் எங்கள் கைகள்
உழவுக்கு நன்றி
உழவனுக்கு நன்றி

உழவரின் தோழன்
உறவின் ஜீவன்
உழைப்புக்கு நன்றி
உதவிக்கு நன்றி

இத்துனைப் புயல்கள்
இன்னும் அமைதி
எஞ்சிய வாழ்வுக்காக
எல்லோருக்கும் நன்றி

பசிக்கு அரிசி
மகிழ்ச்சிக்கு பால்
இன்னும் இணைய
பொங்கலோ பொங்கல்

**ராஜீ ஆரோக்கியசாமி**
திருச்சி.




தமிழ்நெஞ்சம் வெளியீடு **வலிமைமிகு எண்ணங்கள்**

நூறு படைப்பாளர்கள் எழுதியுள்ள
தன்னம்பிக்கைத் தரும் கட்டுரைப் புத்தகம்

தொகுப்பாசிரியர்கள்
தமிழ்நெஞ்சம் அமின் அன்புச்செல்வி சுப்புராஜ்
விலை: 450/- ₹ + அஞ்சல் கட்டணம் - 65 ₹ ( இந்தியா)

தொடர்புக்கு: +91 9841978029


## புத்தாண்டு பிறக்கட்டும்

கவிஞர் வ. வெ. இராஜாமணி

உலகெலாம் ஒன்றிணைந்து
ஓரணியில் நிற்கட்டும்
பல நாளாய் நமை வாட்டும்
வறுமையும் தொலையட்டும்

மனமெல்லாம் நிறைவாக
மலர்ச்சியுடன் விளங்கட்டும்
மனம் போல வாழ்வெல்லாம்
மக்களுக்குக் கிடைக்கட்டும்

பொறுமைகள் நிலைக்கட்டும்
சிறுமைகள் புதையட்டும்
பெருமை தரும் செந்தமிழின்
சுவையெல்லாம் பருகட்டும்

புத்தாண்டும் பிறக்கட்டும்
பூவிதழ்போல் மலரட்டும்
நித்தமும் மகிழ்வுடனே
நாளெல்லாம் விடியட்டும்

## மார்கழிக் கோலம் மலர்விழி நாணும்

வெண்பனி பொழியும்
விடியாத பொழுதில்
வாசல்கள் தோறும்
வண்ணத்தின் அழகில்
கண்கவர் ஓவியமாய்
வீதியில் மிளிரும்
பிரமிப்பு காட்டியே
உறவுகள் மகிழும்
மார்கழிக் கோலம்
மலர்விழி நாணும்
அதிகாலை நேரம்
தெய்வீக கானம்
ரீங்கார வண்டுகள்
தேன்மதுரம் தூவும்
பேரெழில் கண்டு
பெருமிதம் பாடும்

லீ. லியாகத்அலி



# புதுமைப் பெண்! பூங்குழலி!

‘ஏ.. பூவு.. சாயங்காலம் சீக்கிரம் வந்திடுவியா? பொண்ணு பார்க்க வர்றாங்க..!’ அம்மா வசுமதி கேட்க,

‘தெரியாதும்மா.. ரிக்கார்டிங் டைம் பொறுத்து மா... அந்த இசை அமைப்பாளர் பின்னி பெடல் எடுப்பார் மா..!’ பூவு என்ற பூங்குழலி சொன்னாள்.

‘ஏம்மா...இப்படியே பண்ணுனா நாங்க எப்பம்மா காரியம் முடிக்கிறது. வயசு ஏறுதுலம்மா..!’ அம்மா ஆதங்கப்பட்டாள்.

‘எல்லாம் நான் பார்த்துக் கிடுறேன் ம்மா. ஏதாவது ஒரு ’பாட்டாவது, நான் பாடி ஹிட் ஆகனும்மா. இது என் இலட்சியம்மா!’ என்று சொல்லி அம்மாவின் கன்னத்தைக் கிள்ளினாள்.

‘இப்படியே சொல்லிச் சொல்லி நாள் ஓடிருச்சிலம்மா.. இப்ப வர்ற பையன் கூட மியூசிக்ல்ல அறிவு உள்ளவன் ம்மா. உன்னையப் பற்றித் தெரிந்து தான் குடும்பத்தோட பெண் பார்க்க வர்றான் ம்மா!’ என்று அம்மா சொன்னதும்,

‘ஓ.. அப்படியா... அப்ப எப்படின்னாலும் வந்திடுறேன் ம்மா..’ என்றாள் பூவு.

வீட்டிற்கு வந்தவர்களை வரவேற்ற பின் அம்மா, ‘பூவு, வந்தவர்களுக்கு தண்ணீர் கொடு மா‘ என்றதும்,

பூவு பரிமாறினாள். கண்களும் கண்களும் பரிமாறின.

‘மாப்பிள்ளை சார் ‘என்று பூவு திடீரென்று மாப்பிள்ளையைக்கூப்பிட,

‘என்னம்மா.. சொல்லு மா!’ என்று மாப் பிள்ளை அம்மா ஆச்சரியமாகக் கேட்க,

‘நான் பாடகி... என் பெயர் பூங்குழலி. எனக்கு இசை, பாட்டு, பாடகியாக, இயற்கை, நேர்மை, சமையல் ரொம்பப் பிடிக்கும்.. அதனால் உங்க பையனை ஒரு பாட்டு பாடச் சொல்லுங்க!‘ என்று சொல்லிச் சிரிக்க,

‘ஏம்மா.. எல்லாக் காலத்துலயும் இது வரை’ பொண்ண பாட வைத்துத் தான் கேட்குற வழக்கம். இப்ப இங்க அல்ட்டா உல்ட்டாவா இருக்கே மா!’ என்று மாப் பிள்ளை அம்மாவும் சிரித்தாள்.

‘ஆமா.. மாப்பிள்ளை பாடல் & மியூசிக் டைரக்டர் தான. மெட்டுக் கட்டி என்னைப் பாட வைக்கட்டுமே..!’ என்றதும்,

‘பூக்கள் மோதும்
பூங்குழலிப் பூவே!
ரோசாச் சிரிப்பழகியே!
ராசாவின் பல்லழகியே!
கண்கள் காந்தமாகி
கருவிழி இழுத்திடவே
களிப்புடன் அணைத்திட
இளிப்புடன் பற்றுவேன்!

தலையில் வைத்து
தலகால் தெரியாம
ஆடிட தலையணை
மந்திரம் பாடிடாதே!

புதுமைப் பெண்ணாக
பதுமை ஆகிவிட்டால்!
இசைந்தே வாழ்வோம்!
இரண்டே பெறுவோம்!‘

‘பூவு, நான் இப்ப எழுதுன இந்தப் பாட்டு எப்படி இருக்கு..?’ என்று மாப்பிள்ளை கேட்க,

‘மச்சான்..சூப்பர்..மச்சான்!’ என்றதும்,

‘இப்ப நீ பாடு..நான் ‘மெட்டு’ போடுறேன்‘ என்று வந்த புது மாப்பிள்ளை கைத் தாள மிட்டு வாய் இசைக்க,

‘பூங்குழலி ஒரு புதுமைப் பெண் மா‘’ என்று மாப்பிள்ளை சொல்ல,

பூவுல்என்கின்ற பூங்குழலி ஆசையாக, எதிர்பார்த்த மாப்பிள்ளை கரம் பற்றினாள்!‘

(முற்றும்)

**மீரா ஹுசைன்!**

# தாயுமானவன் விமரைக்கூ

## இரட்டைக் கிளவி

மளமளவெனும் பொங்கும் கண்ணீர்
தளதளவென வளர்ந்து நிற்கும் பெண்
கலகலவென சிரிக்கையில் கண்ணீர்
மினுமினுவென மினுங்கும் கண்
பட படவென கண் சிமிட்டலுடன்
பளபளக்கும் கண்ணாடி கண்
துடி துடிக்கும் வலியில் என்மின்
அம்மம்மா எனக் கதற நான்
தாயும் ஆவேன் என்பேன்

**சசிகலா விஸ்வநாதன்**

# அன்பாதவன் கவிதைகள்



### 01. மாநகரத் தனிமை

மனிதர்கள் நிரம்பி வழியும்
பெருநகரமொன்றில்
தனியனாய் இருப்பது பெரும் அவலம்

காற்றுப்புக வழியிலா
மின்ரயில் பெருங்கூட்டத்துள்
ஒருவனெனினும்
சுடுகிறது தகிப்பு

பல்மொழிகள் உலவும் பிரதேசத்தில்
மவுனத்தை மட்டுமே பேசுகிறவனாய்ப்
பொங்கி வரும் வார்த்தைகளை
எச்சிலோடு உள்விழுங்கி
ஊமையாய் வாழ்வதை எப்படிச் சொல்ல...!

உணர்வுப் பகிர்ந்து உரையாடத்
துணையிலாத் தனிமையில்
வெம்பிச் சூம்பும் மனசு

மின்ரயில் துப்பும் மனித எச்சிலில்
ஒருவனாய் நடந்தோடுகிறேன்
வேகமாய்க் கால் பதித்து
வேறென்ன இயலுமிப்போது...

### 02. வளையல் துண்டுகளின் காட்சி

அருகருகே தொடர்கிறது
நம் பயணம்
சுவாரஸ்ய மவுனத்தோடும்
சுகமான நினைவுகளோடும்
தண்டவாளங்களைப் போல

தகுந்த இடைவெளியோடு
உடைந்த வளையல் துண்டுகளாய்
வீழும் உரையாடல்களைக் குலுக்க
மனசின் முப்பட்டகக் கண்ணாடியில்
திரள்கின்றன புதியப் பொழிப்புரைகள்

‘பசிக்குதுடா’ என்ற கெஞ்சலில்
எட்டிப்பார்க்கும் உன்னுள்ளொரு குழந்தை
பசியறிந்து ஊட்டிய விரல்களிலிருந்து
வழியுமுன் கடவுளின் மனிதம்

சொல்லதிகாரம் திரண்ட
கட்டளைகளில்
நிமிர்ந்த பனையென
உன் ராட்சசம்
சொல் செல்வமே
யார்தான் நீ?

### 03. காற்றை புகழ நம்மால் முடியாது

அவள் நீர் துள்ளலில் அலையாக
வீழ்கையில் துளியாக
நதியாய்த் தவழ்ந்து
பனியாய்க்குளிருமவள்
தண் நீர் இறைக்க
சுரக்கும் நீர் குறித்து
பாடமுடியுமோ நீர்?

அவள் ஒளி! இருளுமவளே!
'இருளென்பது குறைந்த ஒளி'
பகர்வானோ பாரதி பாவலன் தவறாக
சூர்யோதயச் செங்காலை
சாம்பல் வண்ணக் கருக்கல்
பட்சிகளின் இசையோடு புலரும் பாஷை

உக்கிரக் கோப குறியீடாய் உச்சி வெயில்
காத்திருக்கும் நயனங்களில்
மாலைப் பொற்கதிர்
தென்னையிலைப் பின்னால் மறைந்து
வதனங்காட்டும் பவுர்ணமி
நள்ளிரவுகளில் ஒளிர் மீனென..
ஒளியைப் புகழ என்னால்... ம்ஹூம்...

அவள் சக்தி... சிவசக்தி
முடியும் அடியும் காணவியலாப் பெரும்சக்தி
வாலங்காட்டு சுடலையை
வசப்படுத்தியக் காமாட்சி
செங்கோட்டில் சேர்ந்திருக்கும் சமள்
சில்லறை சிவகணங்களுக்கு புரியுமோ

அர்த்தநாரிப் பகிரும் அர்த்தபூடகம்
சக்தியைப் போற்ற எவராலும் முடியாது
அவள் காற்று
வீசுதென்றலாய் வெறிபுயலாய்
கூதலாய் குளிராய் அனலாய்
சாந்தமாய் சந்நதமாய் வீசும்
காற்றை புகழ நம்மால் முடியாது

### 4. தனிமையின் இசை

தனிமையின் இசையைக்
கேட்டதுண்டா...?
சோகங்களிலும் துயரமானா
தனிமையின் இசையைக் கேட்பவர்
துரதிர்ஷ்டவான்கள்
வலியையும் சுமையையும்
சமநேரத்தில் சம்பவிக்கிறது
தனிமையின் இசை

தனிமையின் இசையை
இசைத்ததுண்டா..?
விரிந்து பரந்த மைதானத்தில்
ஒற்றையாய் நிற்கும் உணர்வை
வடிக்க இயலுமோ வார்த்தையில்?

கவியும் குளிரும் கசியும் காமமும்
கறை படிய வைக்கின்றன
தனிமையின் இசையை
தனிமையின் இசையை
நுகர்ந்ததுண்டா..?

தூரத்தில் பாவி நிற்கும்
வேர்களின் ஈரத்தை
உணரக் கூடுமோ
தொலைத் தொடர்புக்கம்பிகள்
வயிற்றுக்கும் மனசுக்குமிடையில்
எழும்புகிறது பேரோசையாய்த்
தனிமையின் இசை

பொங்கும் கடலலையாய் ஒரு நேரம்
ஓட்டுக்குள் சுருங்கும் மறு நேரம்
மாறும் உணர்வுகளுக்கேற்ப
நிறம் மாற்றிக் கொல்கிறது
தனிமையின் இசை

தகிக்கும் யதார்த்தம் மறக்க
லாகிரிக்குள் மூழ்கி மிதக்கவைக்கும்
தனிமையின் இசை நீள்கிறது
ஆரோகண அவரோகணங்களுடன்

மிக நீண்ட இரவுகளில்
மங்கும் மாலைகளில்
துரத்தும் பகல் போதுகளில்
தூக்கமிலா விடியல்களில்
கொஞ்சங் கொஞ்சமாய்
என்னை விழுங்குகிறது
தனிமையின் இசை
தனது சுவாரஸ்யமான குரூரத்துடன்.....

**அன்பாதவன்**



# மௌவல் சூடி மௌனம் பாடி

கண்ணாளன் பிரிந்தான்
கவலையும் கொண்டாள்
கன்னத்தில் கைவைத்து
கணப்பொழுதும் மறந்தாள்
தன்னவன் நினைவுகளில்
தன்னிலை திரிந்தாள்
என்னவன் வருவதெப்போ?
ஏக்கம் கொண்டாள்

ஏரிக்கரையில் அவனோடு
ஓடியாடிய ஆட்டம்
தூரிகை ஓவியமாய்
துளிர்த்ததன் நோட்டம்
மாரிப்பொழிவைக் கவனிக்காத
மனதில் அவனோட்டம்
நாரினைப் பிரிந்த
நறுமலராய் வாட்டம்

அயலகம் சென்றவன்
அகத்தில் இருப்பேனா?
நயமாய் பேசியவன்
நலத்தோடு இருப்பானா
சயனத்தில் என்னைச்
சுவனமென நினைப்பானா
நயனங்களில் நீர்வழிய
நற்காரிகையாள் இருத்தலானாள்

ஔடதமாய் அவனின்
அன்பை எதிர்ப்பார்த்தாள்
யௌவனம் கொண்ட
அன்னவள் பூத்திருந்தாள்
மௌவல் சூடியே
மௌனம் பாடியவள்
யௌவன ராசனுக்காக
ஆங்கவள் காத்திருந்தாள்

**செ. இலட்சுமணக்குமார்**
ஈரோடு

# நூல் அனுபவம்




| | |
|---|---|
| **நூல் :** | சாவித்திரியின் பள்ளி |
| **ஆசிரியர் :** | பஞ்சு மிட்டாய் பிரபு |
| **வெளியீடு :** | புக்ஸ் ஃபார் சில்ட்ரன் ஓங்கில் கூட்டம் |
| **ஓவியம் :** | சுந்தரன் முருகேசன் |
| **விலை :** | 60 |
| **பக்கங்கள் :** | 48 |

1800 களில் கல்வி நிலையங்கள் மதம் சார்ந்து இயங்கி வந்தன. ஆங்கிலேயர் நடத்திய பள்ளிக்கூடங்களிலும் உயர் சாதியினர் மட்டுமே கல்வி கற்றனர். கீழ் சாதியினருக்குக் கல்வி உரிமை மறுக்கப் பட்டு இருந்தது. இத்தகைய காலத்தில் தான் ஜோதிபா பல்வேறு எதிர்ப்புகளை மீறி மராத்தியப் பள்ளியில் ஆரம்பக் கல்வி கற்றார்.

ஆனால் ஜோதிபா கல்வி கற்பதை விரும் பாத உயர்சாதியினர் அவரின் தந்தையிடம் சென்று கீழ்சாதியில் பிறந்த உன் மகன் கல்வி கற்றால் தெய்வக் குற்றமாகிவிடும் என்று அவரை நம்ப வைத்து அவரின் படிப்பை நிறுத்தினர்.

ஜோதிபாவின் அத்தை அவரது அப் பாவின் சகோதரி இதை எதிர்த்தார். ‘எவனா வது எதாவது சொன்னா அதை கேட்டுட்டு புள்ள படிப்பை நிப்பாட்டு வாயா? என்று அவரிடம் வாதாடினார். ஜோதிபாவை மீண்டும் பள்ளிக்கு அனுப்பினார்.

ஜோதிபா ஆர்வமுடன் பள்ளிப் படிப் பைத் தொடர்ந்தார். 13 வயதில் அவருக்குத் திருமணம் ஆனது. அவரது மனைவி சாவித்திரிக்கு 9 வயது. ஜோதிபா தான் பெற்ற கல்வியை தன் மனைவிக்கும் கற்றுக் கொடுத்தார் . சாவித்திரி பாயுடன் சேர்ந்து அத்தை சுகுணாபாயும் கல்வி கற்றார்.

பெண்களுக்காக முதல் பள்ளிக்கூடம் தொடங்கப் போவதாக ஜோதிபா பொதுக் கூட்டத்தில் அறிவித்தார் . அதைக் கேட்டு அவருக்குப் பள்ளிக்கூடம் அமைக்க இட மும் கிடைத்தது. ஆசிரியர்கள் கிடைக் காத காரணத்தால் சாவித்திரிபாய் முதல் பெண் ஆசிரியராகப் பயிற்சி பெற்று பணியைத் தொடர்ந்தார் .

முதல் பெண் ஆசிரியரைக் கொண்டாட விரும்பாத சமூகம் அவர் மீது சேற்றையும், சாணியையும், மலத்தையும் வாரி இரைத் தது. அவர் மீது வீசப்பட்டவை நினைத்துச் சோர்ந்து விடவில்லை . அச்சம் கொண்டு வீட்டிலேயே அமர்ந்து விடவில்லை. கையிலே மாற்று உடை எடுத்து வந்து அணிந்து பெண்களுக்குக் கல்வி கற்பிக்கும் சேவை யைத் தொடர்ந்தார். பெண்கள் கல்வி அறிவு பெற வேண்டும் என்று உறுதி அவர் மனதிலும் அவர் கணவர் ஜோதிபா மனதி லும் இருந்தது.

கல்வி கற்கவே அனுமதி இல்லாத ஒருவர் தான் கல்வி கற்றதோடு இல்லாமல் தன் மனைவிக்கும் கல்வி கற்றுத் தந்தார். அதோடு மட்டும் இல்லாமல் தன்னை போன்ற ஒடுக்கப்பட்டோருக்கும் கல்வியை கற்றுக் கொடுக்க நினைத்தார் . குறிப்பாகப் பெண்கள் படிக்கப் பெண்களுக்கான பள்ளியைத் தொடங்கினார். அவரை நேரடியாக எதிர் கொள்ள முடியாத ஆதிக்கச் சாதியினர் அவர் தந்தை மூலம் மீண்டும் அவரது முயற்சிக்குத் தடை விதித்து அவர்களை வீட்டை விட்டு வெளியே அனுப்பினர் .

அவர்களின் உண்மையான தியாக குணத்தையும் அவர்களின் நல் சிந்தனை யும் புரிந்து கொண்ட ஓஸ்மானும், ஃபாத்திமாவும் அவர்களுக்கு இருக்க இடமும், பள்ளி ஆரம்பிக்க இடமும் தந்தனர். ஒஸ்மானின் சகோதரி ஃபாத்திமா சாவித்திரி பாய் உடன் சேர்ந்து ஆசிரியப் பயிற்சி முடித்தார்.பெண் பெண்கள் கல்வி அறிவு பெறுவதன் முக்கியத்துவம் குறித்து வீடு வீடாகச் சென்று பேசி குழந்தைகளைப் பள்ளிக்கு அழைத்து வந்தனர். எதிர்ப்புகளை எல்லாம் முறியடித்து புனேவில் ஐந்து பள்ளிக்கூடங்களை ஜோதிபா சாவித்திரி பாய் தம்பதியர் தொடங்கினர் .

1852 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் புனே கல்லூரி வளாகத்தில் 237 பள்ளி மாணவர்கள் தங்களின் ஆண்டு தேர்வு எழுதிக் கொண்டிருந்தனர். முதன்முதலாக தங்கள் குழந்தைகள் தேர்வு எழுதுவதைக் காண ஊரே வெளியில் கூடியிருந்தது.

ஜோதிபா சாவித்திரிபாய் தம்பதியினரின் கல்வி சேவை நாடெங்கும் பரவத் தொடங்கியது . அவர்களின் சேவையை பாராட்டி ஆங்கிலேய அரசு சால்வை அணிவித்து பாராட்டியது. அரசுப் பள்ளி யைக் காட்டிலும் பத்து மடங்கு அதிக மாண வர்கள் ஜோதிபா அவர்களின் பள்ளியில் படித்தனர்.

சாவித்திரியின் மாணவியான முத்தா சால்வே எழுதிய கட்டுரை 1855 இல் தியோனதயா என்ற பத்திரிகையில் வெளியானது. இந்திய வரலாற்றில் பதிவு செய்யப்பட்ட முதல் பெண் தலித் எழுத்தாளரின் கட்டுரையாகும். 14 வயது மாணவி எழுதிய கட்டுரைக்குப் பரிசும் கிடைத்தது. ஆனால் அவர் அதை வேண்டாம் என்று சொல்லிவிட்டு தனது பள்ளிக்கு நூலகம் அமைத்துக் கேட்டார். கல்வி மட்டுமே அடிமை விலங்கை உடைக்கும் என்று உறுதி யாக நம்பினார்.

விதவைகளின் மறுவாழ்வு குறித்து தீவிர மாகச் சிந்தித்த சாவித்திரிபாய் அவர்களுக்கு மொட்டை அடிக்கும் பழக்கத்தைத் தடுக்க புனேவில் உள்ள முடி திருத்துபவர்களைச் சந்தித்துப் பேசினார். சாதீயச் சட்டங்களுக்கு எதிராக முடி திருத்துபவர்களும் சாவித்திரி பாயுடன் சேர்ந்து இனி பெண்களுக்கு மொட்டை அடிக்க மாட்டோம் என்று 1850 இல் போராட்டம் செய்தனர்.

1852 இல் மஹிலா சேவா மண்டல் என்ற சங்கத்தினை பெண்களுக்கென்று தொடங்கினார் சாவித்திரிபாய். இச்சங்கத்தின் மூலம் சமூகத்தில் பெண்களுக்கு நிகழும் அவலநிலைகளை பற்றி பேசி விழிப்புணர்வு ஏற்படுத்தினார். சமூகத்தில் கைவிடப்பட்ட பெண்கள் மற்றும் குழந்தைகளுக்காக விடுபட்டோர் இல்லத்தையும் தொடங்கினார். சுமார் 60க்கும் மேற்பட்ட குழந்தைகளை இல்லத்தின் மூலம் வளர்த்தனர்.

பெண் மறுமலர்ச்சி செயல்பாடுகளில் சாவித்திரி பாயுடன் இணைந்து தாராபாய் என்பவரும் செயல்பட்டார். அவர் எழுதிய ஆண் - பெண் ஒப்பீடு என்ற கட்டுரை இந்தியாவின் முதல் பெண்ணிய படைப் பாகக் கருதப்படுகிறது.

சமத்துவக் கேணி திறந்து குடிநீரிலிருந்த தீண்டாமையைத் தகர்த்தெறிந்தனர். உணவுப் பஞ்சம் ஏற்பட்ட பொழுது உணவுக் கூடங்கள் திறந்து இலவசமாக உணவு வழங்கினர். பிளேக் நோய் பரவிய பொழுது

அரசு உதவி கிடைக்காத மக்களுக்கு சாவித்திரிபாய் தன் வளர்ப்பு மகனுடன் சேர்ந்து பல்வேறு உதவிகளைச் செய்தார். ஜோதிபா அவர்களின் 40 ஆண்டுகால சமூக சேவையினை பாராட்டி அவருக்கு மகாத்மா பட்டம் வழங்கப் பட்டது.

ஜோதிபா சாவித்திரி பாய் தம்பதியர் சமூக சீர்திருத்தச் செயல்பாடுகளில் தங் களை ஈடுபடுத்திக் கொண்டனர்.

இலக்கிய பணிகளிலும் தங்களை ஈடு படுத்திக் கொண்டிருந்தனர். கவிதை, கதை, கட்டுரை என்று 15க்கும் மேற்பட்ட நூல்களை எழுதி உள்ளனர். அதில்

அடிமைத்தனம் என்ற நூல் மிகவும் முக்கியம் வாய்ந்தது. சாவித்திரி பாய் தனது முற்போக்குச் சிந்தனைகளை எல்லாம் கவிதைகளாகத் தந்துள்ளார் . 'காவ்யா பூலே' என்ற அந்த நூல் மராத்திய இலக்கியத்திலும் இந்தியப் பெண் படைப்பாளர்களின் படைப்பிலும் முக்கியத்துவம் பெற்று விளங்குகிறது.

இன்று பெண்களுக்குக் கிடைத்திருக்கும் அனைத்து நலத்திட்டங்களுக்கும் வித் திட்டவர் சாவித்திரிபாய் பூலே அவர்கள்.

சாவித்திரியின் பள்ளி நூல் சாவித்திரிபாய் பூலே அவர்களுடன் இணைந்து போராடிய ஃபாத்திமா, முத்தா சால்வே, தாராபாய் போன்ற பெண் போராளிகளும் நமக்கு அறிமுகப்படுத்துகிறது. சாவித்திரிபாய் ஜோதிபா தம்பதியரின் வாழ்வின் முக்கிய சம்பவங்களை எளிய நடையில் இந்நூலில் தந்து இருக்கிறார் ஆசிரியர்.

பெண்கள் கல்வி பெற்றால் குடும்பம் முன்னேற்றமடையும் . அதன் மூலம் நாடும் வளர்ச்சி பெறும். முன்னேற்றத்திற்கான அடிப்படை கல்வி மட்டுமே

நன்றி

**ஜனனி குமார்**
**நாகப்பட்டினம்**



# ஹைக்கூ கவிதைகள்...

**ஐ.தர்மசிங்**, நாகர்கோவில்

முதுகில் குத்தும்
பரிசல்காரரையும் சுமக்கிறது
அமைதியாக ஆறு

கோயில் திருவிழா
இரவிலும் விழித்திருக்கிறார்
பாய் வியாபாரி

உயர்ந்தது பூவின் எடை
தலைகுனிகிறது
தராசு முள்

நட்பில் விரிசல்
சரிந்து விழுகிறது
மணல் வீடு

ஒற்றை நாயின் விசுவாசம்
நள்ளிரவில் கலைகிறது
ஊரின் அமைதி.



# உலக வரைபடமும் மகனும்
# 2030 கி.பி

ஒரு பக்கம் வன்முறையாலும்
போராட்டாத்தாலும் வறுமையினாலும்
கிழிந்துக்கொண்டிருப்பதை கண்கள் குளமாக
கண்டுக்கொண்டிருக்கிறேன்

மிஃப்ரான் கோடுப்போடாத
மேப் நோட்டில்
வரலாறு ஆசிரியர் வாங்கி ஒட்டி
வர சொன்னார்களென கதைக்கிறான்
ஸ்கேட்ச் பென்சிலால் சொன்னதுப்போலவே
வண்ணம் தீட்டுகிறான்

பசுமையான நிறங்களெல்லாம்
என் கண்களுக்கு சிவப்பு நிறமாகவே பதிகிறது
சோற்றுபருக்கையை
நான்கு புறங்களிலும் தடவுகிறான்
என் தாய் நிலம் மலடாகி
அது விற்பனையாகி பிறகு
அடுக்குமாடிகளாகி என் நினைவில்
பொறி தட்டுகிறது

கடல்லெல்லாம் நீலத்தை
கண்மூடித்தனமாக பாய்ச்ச செய்கிறான்
அணுக்கழிவுகளும் எண்ணெய் ஆலையும்
அவன் தீட்ட தீட்ட எனக்குள் கொந்தளிக்கிறது

ஒரு வரைபடத்தை ஒட்டி
ஒரு சில நாடுகளையும்
ஒரு சில கடல்களையும் வண்ணம் தீட்டி
அப்படியே அவன் தூங்கிவிட்டான்

நான் விழித்துக்கொண்டே இருக்கிறேன்
அவனுடைய வேறொரு உலக வரைபடத்தில்
நான் படிக்கும் போது இருந்த
சில நாடுகள்
தற்சமயம் காணவில்லை...

**- த.இர்ஃபான்**

# கோளின் அமைவு கண்டு

# மழையை கணிக்கும் சங்ககால முறை

கட்டுரையாளர்: முனைவர் பா.சக்திவேல்

பண்டைய தமிழர்கள் மழை வருவதை முன்கூட்டியே அறிய பல உத்திகளை கையாண்டுள்ளனர். மனிதனைச் சுற்றி வாழும் மற்ற சில உயிரினங்களின் செய்கையைக் கூர்ந்து நோக்கி அதன் மூலம் மழை வரவை உறுதிப்படுத்தும் முறை இருந்து வந்துள்ளது. மழைக்கு முன் மயில் தோகை விரித்து ஆடுவதையும், எருமை வானத்தைப் பார்த்து ஒலி எழுப்புவதையும், ஈசல் தனது இடத்திலிருந்து வெளியேறி அங்குமிங்கும் பறப்பதையும், எறும்பு தான் சேமித்து வைத்திருக்கும் இரையை தாழ்வான பகுதியிலிருந்து மேட்டு நிலத்திற்கு எடுத்துச் செல்வதையும், பூனை வீட்டில் பதுங்கி இருப்பதையும், பறவைகள் வானத்தில் தாழ்வாக பறப்பதையும் வைத்து கணித்துள்ளனர். இவைகளைத் தவிர சூரிய குடும்பத்தில் கோள்களின் இருப்பிடத்தை வைத்து மழையைக் கணிக்கும் முறையும் இருந்திருப்பது காணுதற்குரியது.


'வைகுறுமீன்' என அகநானூற்று அடியில் வெள்ளிக் கோள் குறிக்கப்படுகிறது. வெள்ளி முளைத்தால் அன்றைய பொழுது விடியப்போகிறது என்று அறியும் முறை தொன்று தொட்டு இருந்து வருகிறது. வெள்ளிக் கோளுக்கு மழைக்கோள் என்ற பெயரும் வழங்கப்படுகிறது.

செவ்வாய்க்கோளின் சுற்றுப்பாதையில் வெள்ளிக்கோள் செல்லாமல் இருப்பதால் நாட்டில்மழை பொழிந்து பசிப்பிணி இன்றி அனைத்துயிர்களும்நிறைவாய் வாழ்ந்ததாக குமட்டூர் கண்ணனார் எழுதிய பதிற்றுப்பத்து பாடல் உண்மை பகர்கின்றது.

'அழல் சென்ற மருங்கின் வெள்ளி ஓடாது
மழைவேண்டு புலத்து மாரி நிற்ப '

மழைக்கோள் எனப்படுகிற வெள்ளிக்கோள் மழை வருவதற்கு உகந்தவாறு கோண அளவில் வடக்கே சிறிது சாய்ந்து நிற்குமாறு இருப்பதை 'வயங்கு கதிர் வானகம் சுடர்வர வரிது வடக்கு இறைஞ்சிய சீர் சால் வெள்ளி' என பாலைக் கௌதமனார் பட்டினப்பாலையில் மொழிந்துள்ளார்.

தென்புலத்தில் வெள்ளி தோன்றிடில் மழை பிறக்கும் என்பதற்கு அடிப்படையாக பதிற்றுப்பத்து, சிலப்பதிகாரம், புறநானூறு ஆகிய நூல்களில் கூறப்பட்டுள்ளதை ' வசையில் புகழ் வயங்கு விண்மீன் திசை திரிந்து தெற்கு ஏகினும்' 'விரிகதிர் வெள்ளி தென்புலம் படரினும்' 'தென்றிசை மருங்கின் வெள்ளி ஓடினும்' என்ற வரிகளால் அறிய முடிகிறது. வானியல் அறிதலிலும் இயற்கையை புரிந்து கொண்டு வாழ்வதிலும் பண்டைய கால தமிழர்களின் திறமை தனித்தன்மையோடு விளங்கியிருக்கிறது.



# கேட்டிருக்கிறீர்களா?


திருமணமாகி முழுதாய் இரு வருடங்கள். ஒரு வகையில் எங்களுக்கும் காதல் திருமணம்தான். இந்த இரண்டு வருட காலத் தில் பெரிதாய் சலித்துக் கொள்ளும் படியாக எதுவும் நடந்திருக்கவில்லை. அதற்காக வியந்து விடும்படியாகவும் எதுவும் நடந்துவிடவுமில்லை. ஒரு சாதாரண தம்பதியினரின் எளிமையான வாழ்க்கை எங்களுடையது. அவருக்கு ஒரு நல்ல வேலை, வீட்டில் என்னுடனும் அன்பாய் நடந்துகொள்வார். குடும்ப வாழ்வில் முரண்பாடுகள் பெரிதாய் தோன்றியது கிடையாது. ஆனால் மாதம் ஒரு முறையேனும் இரவு முழுக்க வேலை பார்த்து விட்டுக் காலையில் வீடு திரும்புவார். அது மட்டும் தான் எனக்கு அவரிடம் பிடிக்காத ஒரேயொரு விடயம். மற்றும்படி தினமும் மகிழ்ச்சியான காதலுக்குப் பஞ்சமில்லாத வாழ்க்கை. கொஞ்ச நாளாய் அவர் நடத்தையில் மாற்றம், வேலை முடிந்து மாலையில் வீடு திரும்புபவர் இப்போது சற்று அதிக நேரம் எடுத்துக்கொள்கிறார். தாமதமாக வருவது பற்றிக்கேட்டால் வேலை அதிகமாகியிருக்கிறது இன்னும் சில நாட்களுக்கு இப்படித்தான் என் கிறார். எனக்குத் தினமும் நெஞ்சு பட படத்துக்கொள்கிறது. வரும்போது ஒரு வித்தியாசமான நறுமண வாசனை வேறு. அது பற்றிக்கேட்டால் யாரோ நண்பன் வெளிநாடு போய் வந்திருப்பதாகச் சொல்கிறார். என்னால் பொறுமையாக இருக்க முடியவில்லை, பொம்பளை விவகாரமாகத்தான் இருக்க வேண்டும். சட்டென்று கேட்டு விடுவதா? இல்லை பொறுத்திருந்து வேவு பார்ப்பதா? ஒரு வேளை உண்மையாக இருந்து கையும் களவுமாகப் பிடிபட்டால் என்ன செய்வது? மனதிற்குள் ஆயிரம் கேள்விகள். பக்கத்துவீட்டு ஜானகியிடம் ஏதாவது ஆலோசனை கேட்கலாம் என்றால் அவள் வாயில் போட்டுவிட்டால்; அடுத்த நாள் அது நாளிதளின் தலைப்புச் செய்தியாய் வந்தால்கூட ஆச்சர்யப்படுவதற்கில்லை. என்ன செய்யலாம் என்ற ஒரே குழப்பம்.

திருமண வாழ்க்கையில் ஒரு குளறுபடியும் இருந்ததில்லை. குழந்தைகூட அவர் விருப்பத்தின் பெயரில்தான் தள்ளிப் போட்டிருந்தோம். அம்மாவுக்கு எழுதுவதா? இல்லை வேறுயாரையும் ஆலோசிப்பதா ஒன்றுமே புரியவில்லை. இன்னும் எத்தனை நாளைக்குத்தான் இவ்வாறு அதிகம் வேலை இருக்குமோ தெரியவில்லை. அலுவலகத்தில் விசாரித்தால் அவர் பெயர் கெட்டுவிடும் என்ற பயம் வேறு. தினமும் வயிற்றில் நெருப்பைக் கட்டிக்கொண்டு இருப்பதை விட கேட்டுவிடுவது நல்லது என்று முடிவெடுத்துவிட்டேன். ஆனாலும் பயம் என்னைவிட்டு அகன்றபாடில்லை. வழக்கம்போல இன்றும் தாமதம். வாசலில் கதவு திறக்கும் சத்தம் கேட்டு எட்டிப் பார்த்தேன். வந்துகொண்டிருந்தார், உள்ளே வந்து ஏறியதும் முகத்தில் அடித்தாற்போல் வாசனை, அதே வாசனை. தைரியத்தை வரவழைத்துக்கொண்டு கேட்டுவிட்டேன்!

'எனக்கு டெய்லி இப்படியே இருக்க முடியாதுங்க! எனக்கு தெரிஞ்சே ஆகணும். அப்படி என்ன வேலை பாக்குறிங்கண்ணு, அப்பறம் அந்த வெளிநாட்டுல இருந்து வந்த பிரண்ட் யாருன்னு?'

கேட்டுவிட்டேன் ஒருவாறாகக் கேட்டுவிட்டேன். அவரும்,

'சந்தேகப்படறியா?'



'பின்ன என்னங்க நீங்க சொல்ற எல்லாமே ரொம்ப வித்தியாசமா இருக்கு, இப்பொவெல்லாம் சரியா என் கூட பேசறதில்லை டைம் ஸ்பெண்ட் பண்ற தேயில்லை, வீட்டுக்கு வந்தாக்கூட பெரும்பாலும் போன்லயே நேரம் போகிறது..'

'சரி இப்போ என்ன பண்ணணும் உனக்கு ப்ரூப் பண்ணுணா ஓகேயா, நாளைக்குப் பின்னேரம் அலுவலகத்திற்கு வா, என் வேலை முடியும் வரைக்கும் கூடவே இருந்துட்டு வரும்போது வெளியில டின்னர் சாப்பிட்டு வரலாம் ஓகேயா!' சிரித்துக்கொண்டே சொன்னார்.

அந்தப் புன்னகையே சொன்னது தப்பாக ஒன்றுமில்லை என்று. எதற்கும் ஒரு எட்டு போய் பார்த்துவிட்டு வருவோமே மனதுக்கு ஆறுதலாய் இருக்கும் என்று ஒத்துக்கொண்டேன்.

மறுநாள் சாதாரணமாக ரெடியாகிக் கொண்டு புறப்பட்டேன். நான் போகும் போது அலுவலகம் கலைந்தி ருந்தது. அவர் என்னை வந்து உள்ளே அழைத்துக்கொண்டு போனார். தன் நண்பனின் அறைக்கு உள்ளே சென்றதும் குப்பென்று ஒரு மணம், அதே மணம். மனதுக்கு சற்றே ஆறுதல் கிடைக்க தன் நண்பனை அறி முகம் செய்தார். அலுப்புத்தெரியாமல் இருக்க இதே அறையில்தான் சேர்ந்து வேலை பார்ப்போம் என்பதையும் அந்த வெளி நாட்டு மணம் பற்றியும் சொன்னார். ஒரு நல்ல நாவலைப் படித்த திருப்தி. அவரை சந்தேகப்பட்டது பற்றி ஒரு குற்ற உணர்வும் புதிதாக முளைத்திருந்தது. அலுவலக வேலைகளை முடித்துவிட்டு டின்னரும் முடித்துக்கொண்டு வீட்டுக்கு வந்தோம். இப்போ திருப்தியா என்றார். ஓடிச்சென்று கட்டியணைத்துக்கொண்டேன். பின்னர் குளித்துவிட்டு மொட்டை மாடிக்குச் சென் றார் மீண்டும் ஏதோ அலுவலக அழைப்பு போலும். சூடாகத் தேனீர் ஊற்றிக்கொண்டு மேலே சென்றேன்.

அந்த உரையாடல் என் காது களிலும் விழத்தவறவில்லை, கேட்டுக் கொண் டிருக்கும்போதே திக்.... திக்.... என்றது.

'ரொம்ப தாங்ஸ் டா!...............

'........................'

'ஆமாண்டா, வழக்கமா கேக்கமாட்டா, நேத்து கேட்ட ஒடனே என்ன பண்றதுன்னு தெரியல. அலுவலகம் கூப்பிட்டப்பகூட வரமாட்டானுதான் நினைச்சன் வர்ரேன் னுட்டா

'........................

'இப்போதான் கன்பார்ம் ஆயிருச்சே சோ நாளைல இருந்து இன்னும் வேலை கூடிருச்சுனு சொல்லி செக்ரட்டரி கமலினி கூட ஸ்பெண்ட் பண்றடைமகூட்டிக்கலாம்டா

'........................................

'ஆமா டெய்லி அவ அப்பார்ட்மென்ட்ல தான், ரொம்ப கொயட்டான ஏரியா, நாளைக் குக் கூட சினிமா போலாம்னு இருக்கோம்

‘......................................

‘இவ கெடக்கறா, எதுக்கும் உன்னோட நம்பர் குடுத்துவக்கிறன் போன் பண்ணி எதாவது விசாரிச்சா சமாளிச்சிரு மச்சா!

இதற்குமேல் என்னால் கேட்க முடியவில்லை. இதயம் பட படவென அடித்துக் கொண்டது. தலைசுற்றுவது போன்று உணர்ந்தேன். உடல் முழுவதும் பலமிழந்தது. ஆனால் எனக்கு ஏன் இவையெல்லாம் நடக்கவேண்டும். தப்பு பண்ணியவர்களல்லவா இங்கு தைரியமாக நடமாடுகின்றனர் என உள் மனம் மீண்டும் மீண்டும் கேள்வி எழுப்ப, எனக்குள்ளிருந்து எழுந்த ஏதோ ஒன்று என்னை அவரருகில் மெல்லமாக அழைத்துச்சென்றது. சத்தம் கேட்டுத்திரும்பினார். ஒரே அதிர்ச்சி! நான் கேட்டுவிட்டேன் என்பது அவருக்குப் புரிந்திருக்க வேண்டும். வியாக்கியானம் சொல்ல வாய் எடுத்தவரின் நெஞ்சில் கை வைத்து மெல்லமாய்த் தள்ளிவிட்டேன். மாடியிலிருந்து கீழேவிழுந்தார், கடைசியாக என் கை உணர்ந்த அவரின் இதயத்துடிப்பு இப்போது நின்றுபோய் இருந்தது. சரியாக ஒரு வாரத்தில் அந்த உதவிய நண்பன், அதற்குப் பிறகு பத்தே நாட்களில் செக்ரட்டரி கமலினி, அதற்குப்பின்னர் அங்கே இங்கே என ஏமாற்றுகிற, அதற் குத் துணைபோகின்ற பலபேர். இது எனக்கும் தான் பிடித்துப்போய்விட்டது.

‘கேட்டிருக்கிறீர்களா? உயிர்பிரியும் போது வரும் சுரு..... சுரு..... என்ற மைக்ரோ ஒலி!

- முற்றும்.

**அ.ஜ. அர்ஷாத் ஆஹாஸ்**

**மருதமுனை**

# தன்முனை இயைபு கவிதைச் சாரல்

## ( ஆறுதல் அந்தாதி)

ஆறுதல்

---

ஆறுதல் தேட
மாறுதல் வரும்
மாற்று வழியாகுமா
தேறுதலைத் தருமா

---

தரும் திரிபை
ஏற்குமா மனம்
இருக்கும் நிலையை
வெறுக்கும் மனம்

---

மனம் உவந்து
செய்யும் செயல் செய்ய
சனம் அத்தனையும் கொண்டிடும் மயல்

---

மயல் கொள்ளும்
உறவுகள் மலர்ந்திடும்
பயல் கட்டின
பாதம் பரதம் ஆடும்

---

ஆடும் ஆட்டம்
ஒருநாளும் ஓய்வதில்லை
அலையும் மனம்
தேடும் ஆறுதலை

**சசிகலா விஸ்வநாதன்**

# குவலயத்தின் முதல்விழா பொங்கல்

பாவலர் கருமலைத்தமிழாழன்

செழிப்பள்ளித் தருகின்ற இயற்கைத் தாய்க்குச்
செலுத்துகின்ற நன்றிவிழா செம்மைப் பொங்கல்
விழிதிறந்து உழைக்கவைத்து விளைச்சல் நல்கும்
விரிகதிரை வணங்குகின்ற வியர்வைப் பொங்கல்
வழிவழியாய்த் துணைநின்று வளத்தைக் கூட்டி
வாழ்வளிக்கும் மாடுகளைப் போற்றும் பொங்கல்
அழியாத தமிழ்ப்பண்பை அகிலத் திற்கே
அழைத்துரைக்கும் தைமகளை வாழ்த்தும் பொங்கல் !

ஊருக்கு நெல்மணிகள் குவித்த ளிக்கும்
உழவர்தம் உழைப்புதனை மதிக்கும் பொங்கல்
போருக்குச் சளைக்காத காளை யர்கள்
பொருதுகாளை அடக்குகின்ற வீரப் பொங்கல்
நேருக்கு நேர்பார்த்த களவுப் பெண்ணை
நேர்மையுடன் மணக்கின்ற கற்புப் பொங்கல்
யாருக்கும் இல்லையென்று சொல்லி டாமல்
யாசிக்கும் முன்கொடுத்து மகிழும் பொங்கல் !

உறவெல்லாம் ஒன்றுசேர்ந்து கரும்பைப் போல
உள்ளமெல்லாம் இனித்திடவே ; மஞ்சள் கொத்தாய்
அறம்விளங்க மாவிலையின் தோர ணத்தால்
அழகுசெய்து புதுப்பானை இல்லில் வைத்துக்
கறந்தபாலும் அரிசிவெல்லம் கலந்து பொங்கக்
கவலையெல்லாம் தீர்ந்தின்பம் வந்த தென்றே
குரலெடுத்து வாழ்த்துகின்ற தமிழ்ப்பண் பாட்டைக்
கூறுகின்ற பெருவிழாதான் தமிழர் பொங்கல் !

**குவலயத்தின் முதல்விழா பொங்கல்**



# மூன்று கால் ஆட்டுக்குட்டி

'பக்கத்துத் தோட்டத்தில சண்டை நடக்குது போல. எந்நேரமும் அதையே நோண்டிக்கொண்டு இருக்காம வெளிய போய் என்னெண்டு பாருங்க.' இது வரை தனது கைத்தொலைபேசியை நோண்டிக் கொண்டிருந்த அனஸின் மனைவி அதை மேசையில் வைத்துவிட்டு கணவனின் கவனத்தைத் திசை திருப்பினாள்.

தன் கையிலிருந்த கைத்தொலைபேசியை பக்கத்திலிருந்த கதிரை மீது வைத்துவிட்டு எழுந்த கணவனிடம் 'அதையும் கையோட எடுத்திட்டுப் போங்க' என அறிவுரை கூறிய போது மீண்டும் குனிந்து தனது கைத் தொலைபேசியை எடுத்தவன் 'மற்றவர்களின் புதினங்களை வீடியோ வடிவில் பார்ப்பதில் அவ்வளவு மகிழ்ச்சி என் மனைவிக்கு' என முணுமுணுத்தவாறு வீதிக் கதவைத் திறந்துகொண்டு வெளியே வந்தான் அனீஸ்.

எதிர் வீட்டு நண்பன் றமீஸ் வெளியே நின்று எதையோ அவதானித்துக் கொண்டிருப்பதைக் கண்ட அனீஸ், 'என்ன மச்சான் காலையிலேயே பெரிய சத்தம் கேட்குது. என்ன ஏதாவது சண்டையோ' என வினவினான்.

'இல்ல மச்சான். நம்மட இறமுளார் மாமாட தோட்டத்துக்குப் பக்கத்துல ஒரு குடும்பம் காணி வாங்கி வீடு கட்டிக் கொண்டு இருக்காங்க இல்ல. அந்த வீட்டுக்காரன் பெரிய கில்லாடி போல இருக்கான். நேற்றிரவு இறமுளார் மாமா வளர்க்கிற ஆட்டுக்குட்டி ஒன்றுட ஒரு கால தறிச்சிட்டான் போல' என்று கூறி முடிப்பதற்குள் 'என்ன! ஆட்டுக்குட்டிட காலத் தறிச்சிட்டானோ? இது பெரும்பாவம் இல்ல. வா போய் என்ன எண்டு பாப்போம்' எனக் கூறிய வாறு றமீஸை அழைத் தான், அனீஸ்.



'நீ போய் பாரு மச்சான். நான் இப்பதான் பாத்துப் போட்டு வாரன்.' எனக் கூறினான், றமீஸ்.

இற்றைக்கு மூன்று வருடங்களுக்கு முன் மிகக் குறைந்த விலையில் சிறிய வீட்டுடன் ஓர் ஏக்கர் காணி கிடைத்ததால் தான் வசித்து வந்த இடத்தை வாடகைக்குக் கொடுத்துவிட்டு மனைவியுடன் வந்து குடியேறினான், அனஸ். புதிதாகக் குடிவந்தவர்களைப் பார்ப்பதற்குப் பக்கத்திலுள்ளவர்கள் இடைக்கிடை வந்து தரிசித்துச் சென்றனர். வந்தவர்களில் இற

முளார் மாமாவின் மனைவி அனஸின் மனைவிக்குப் பிடித்துப்போகவே அவர்கள் நண்பிகளாயினர்.

இறமுளார் மாமா அவ்வளவு படிக்கா தவர் என்றாலும் நல்ல பண்பானவர். நல்ல உழைப்பாளி. அவர் வசிக் கும் காணி மிகப் பெரியது. நாலு ஏக்கர் இருக்கும். வலது பக்க மூலையில் சிறிய வீடொன்று கட்டி மனைவி மக்களுடன் வாழ்ந்து வருபவர். இடது பக்க மூலையில் பெரியதோர் ஆட்டுக் கொட்டில் அமைத்து ஆடுகள் வளர்த்து வருகிறார். மிகுதிப் பகுதியில் மரக்கறித் தோட்டம் செய்து வருகிறார். தானும் தன் பாடும் என்று இருப்பவர்.

ஆறு மாதங்களுக்கு முன்புதான் இற முளார் மாமாவின் பக்கத்துக் காணி யில் அரை ஏக்கர் காணித்துண்டு ஒன்றை வாங்கி, சிறிய வீடு ஒன்றைக் கட்டிய பின் மனைவியுடன் வந்து குடி யமர்ந்தான் உவைஸ். பார்ப்பதற்கு அப்பாவி போல தெரிந்தாலும் பக்கத்து வீட்டுக்காரர்களுடன் அடிக்கடி சண்டை போடத்தொடங்கினான். உவைஸ் என்ன தொழில் செய்கிறான் என்பது யாருக்கும் தெரியவில்லை. ஒரு வாரத்தில் ஓரிரு நாட்கள்தான் வீட்டுக்கு வருவான். வந்ததும் வராததுமாக பக்கத்து வீடுக்காரர்களில் ஒருவருடனாவது சண்டை பிடிக்காமல் இருக்க மாட்டான். அதனால் அனஸ் மற்றும் றமீஸ் குடும்பம் அவனுடன் நல்ல உறவு வைத்துக்கொள்வதில்லை.

இறமுளார் மாமாவின் வீட்டு முற்றத் தில் கூடியிருந்த அயலவர்களுடன் இணைந்து கொண்ட அனஸ் ‘என்ன நடந் தது மாமா?’ என வினவினான்.

‘இஞ்ச பாருங்க தம்பி இந்த அநியாயத்த. வாயில்லா ஜீவன்ட காலத் தறிச்சிட்டான் பாவி மகன். அவன் நல்லா இருப்பானா? நாசமாப்போவான். அவன்ட புள்ள குட் டிகளுக்கும் இப்படித்தான் நடக்கும்.’ எனச் சபித்தபடி கண்கலங்கினார், இறமுளார் மாமா. அப்போதுதான் ஒரு கால் தறிக்கப்பட்டதாகக் கூறப்பட்ட ஆட்டுக்குட்டியைப் பார்த்தான், அனஸ். ஒரு கால் துண்டாடப்பட்ட நிலையில் அவருக்குப் பக்கத்தில் சோகமே உருவாகக் கிடந்தது. இறமுளார் மாமாவின் முகத்தைப் பார்ப்பதை விட அந்த ஆட்டுக்குட்டியின் முகத்தைப் பார்ப்பதுதான் எனக்குப் பெரும் சங்கடமாக இருந்தது. பாவம் அந்த ஆட்டுக்குட்டி. ஒரு கால் இல்லாமல் எப் படித்தான் வாழப்போகுதோ.

‘மாமா! இத இப்படியே விட்டுவிடாம போலீசுக்குப் போங்க. போய் ஒரு முறைப் பாடு செய்யுங்க. அவங்க மிச்சத்தப் பாத்துப்பாங்க. அதுக்கு முதல்ல பக்கத்துக் கிராமத்தில இருக்கிற மிருக வைத்தியரக் கூப்பிட்டு ஆட்டுக்குட்டியக் காட்டுங்க. நேரம் போனா ஆட்டுக்குட்டிக்கு ஏதும் ஆகிடும்.’ என அறிவுரை கூறினான், அனஸ்.

‘இல்ல தம்பி. நான் போலீசுக்கெல்லாம் போகப் போறல்ல. அல்லாஹ்கிட்ட பாரம் கொடுத்திட்டேன். அவன் பாத் துக்குவான். மிருக வைத்தியருக்கு சொல்லி அனுப்பியிருக்கேன். அவர் வந்து மருந்து கட்டி சுகப்படுத்திடுவார்.’ எனக் கூறிய இறமுளார் மாமாவிடம் விடை பெற்றுக்கொண்டு வீடு வந்து சேர்ந்து நடந்தவற்றை தனது மனைவியிடம் கூறி மனவருத்தப்பட்டான், அனஸ்.

இச் சம்பவம் நடந்த பிற்பாடும் உவைஸ் பக்கத்து வீட்டுக்காரர்களுடன் நடந்து கொள்ளும் விதம் மிக மோசமாக இருந்ததால் அந்தச் சிறிய கிராமத்து மக்கள் உவைஸ் குடும்பத்தை அந்த ஊரிலிருந்து அப்புறப்படுத்த முனைந்து வெற்றியும் கண் டனர். உவைஸ் தான் குடியிருந்த காணியை விற்றுவிட்டு வேறு ஊருக்கு குடும்பத்துடன் சென்றுவிட்டான்.

இச் சம்பவம் நடந்த பிற்பாடும் உவைஸ் பக்கத்து வீட்டுக்காரர்களுடன் நடந்து கொள்ளும் விதம் மிக மோசமாக இருந்ததால் அந்தச் சிறிய கிராமத்து மக்கள் உவைஸ் குடும்பத்தை அந்த ஊரிலிருந்து அப்புறப்படுத்த முனைந்து வெற்றியும் கண்

டனர். உவைஸ் தான் குடியிருந்த காணியை விற்றுவிட்டு வேறு ஊருக்கு குடும் பத்துடன் சென்றுவிட்டான்.

நாட்கள் மிக வேகமாக நகர்ந்துவிட்டன. உவைஸ் ஊரைவிட்டுச் சென்று சுமார் ஐந் தாறு வருடங்களாகிவிட்டன.

ஒரு நாள் அனஸ் வீட்டுக்கு வந்த றமீஸ், இருவரும் உரையாடிக்கொண்டிருந்த போது ஏதோ ஞாபகம் வந்தவனாக 'அனஸ், ஒரு விஷயம் தெரியுமா? நம்ம இறமுளார் மாமாட பக்கத்து வீட்டில இருந்த உவைஸ் இருக் கானேல்'

'ஆமா. அவர்ர ஆட்டுக்குட்டிட காலத் தறிச்சவன்தானே?''

'அவன்தான். அவனுக்கு கிட்டத்திலே ஆஸ்பத்திரியிலே ஒரு பிள்ளை கிடைச்சிருக் காம். அந்தப் பிள்ளைக்கு மூன்று கால் களாம்.'

றமீஸ் சொல்லிமுடிப்பதற்குள்,

'யா அல்லாஹ். நீ படைத்த மனிதர்கள் அறியாமல் செய்யும் பாவங்களை மன்னித்து விடு. இவ்வுலகில் உனது தண்ட னைகளை வழங்கிவிடாதே, அல்லாஹ்.' எனக் கூறிய வாறு நண்பன் றமீஸின் கைகளை இறுகப் பற்றிக்கொண்டான், அனஸ்.

(முற்றும்)

**எஸ். ஏ. கப்பார்.**
**(இலங்கை)**

# கடந்து வந்த பாதை

கடந்து வந்த பாதை
கல்லும் முள்ளும் நிரம்பி இருந்ததால்
கடினப்பட்டே கரை சேர்ந்தேன்...
என்ன செய்வது என்று
யோசித்து முடிக்கும் முன்னே எந்தன்
முடிவை யாரோ நிர்ணயித்து விட்டார்கள்...

வந்த பாதை எதுவென்று
அறியும் முன்பே சொந்த பாதையை
அமைக்க வேண்டிய கட்டாயம்...

கல்லையும் மண்ணையும் கரைத்து
விண்ணையும் மலையையும்
மறைத்து இங்கே
வாழ்வை அமைத்தவன் நான்...

அதனால்தான் எனது வாரிசுகள்
அல்லலேதும் படாமலே
பிறர் சொல்லலேதும்
அறியாமலே வளர்ந்து வருகின்றனர்...

காணல்நீராய்ப் போன எனது
கனவுகள் எல்லாம் இன்று தான்
கட்டவிழ்த்து விடப் பட்டுள்ளது...
என்னவர்கள் எல்லாம் பிறர்
போற்றும் மன்னவர்களாக உலகில்
வலம்வரத் தொடங்கி விட்டார்கள்...

உலகின் மூலை முடுக்கெல்லாம்
உலாவரத் தொடங்கி விட்டார்கள் காரணம்
நான் கடந்து வந்த பாதை...

**கவி.செங்குட்டுவன்,**
ஊத்தங்கரை - 635207.

# ஒரு ஹலால் லவ் ஸ்டோரி

**ஹ**ம்தான் உன்கிட்ட ஒண்ணு சொல்லணும் ,நான் சொன்னா நீ தப்பா எடுத்திக்க மாட்டியே ??

நீங்க முதல்ல சொல்லுங்க அதுக்கப்புறம் சரியாய் எடுத்துக்கலாமா ?அல்லது தப்பா எடுத்திக்கலாமான்னு நான் முடிவு பண்ணிக்குறேன்

சின்ன வயசுல ஒண்ணா கைபிடிச்சு விளையாடியது மட்டுமின்றி பள்ளி படிப்பிலிருந்து இப்ப காலேஜ் வரைக்கும் ஒண்ணா தான் படிக்கிறோம் ,இன்னும் ஒரு வருஷத்துல நீயும், நானும் படிப்பு முடிச்சிட்டு ஏதோ ஒரு வேலைக்கு போய் செட்டிலாக தான் போறோம் அதுக்கப்புறம் வீட்ல பார்க்குற யாரோ ஒருத்தங்களை கல்யாணம் பண்ணிக்கதான் போறோம் .

யாரோ அறிமுகமில்லாத வரை கல்யாணம் பண்ணி காதலிக்கிறதை விட, சின்ன வயசுல இருந்து நல்லா பழகி, ஒருத்தருக்கு ஒருத்தர் விட்டு கொடுத்து நல்ல நண்பர்களா இருக்குற நாம்ம கல்யாணம் பண்ணிக்கிட்டா நம்ம வாழ்க்கை நல்லா இருக்கும்னு தோணு துடா. கண்டிப்பா உன்னை கட்டிக்கிட்டா என் வாழ்க்கை ரொம்ப சந்தோசமா இருக்கும்னு தோணுது. உன்னை நான் லவ் பண்ணுறேன், உன்னை கட்டிக் கிடனும் தோணுது.

நீ உன் முடிவை சொல்லு ஹம்தான் ?

போன வருஷம் அடுத்த தெருவை சேர்ந்த ஆனந்த் அவங்க தெருவுல உள்ள லூமினாவை லவ் பண்ணான் இந்த விஷயம் அந்த ஏரியா முழுதும் தெரிஞ்சு பெரிய பிரச்சனையாயிடிச்சு. லூமினா வீட்ல அந்த பையனை மதம் மாற சொன்னாங்க ஆனா ஆனந்த் வீட்லயோ ஒரு கிருத்துவ பொண்ணை மருமகளா ஏத்துக்க முடியாதுன்னு சொல்லிட்டாங்க ரெண்டு சமூகமும் மதத்தை காரணம் காதலை ஏற்றுக் கொள்ளாததாலே காதலர்கள் எங்கோ ஓடி போய்ட்டாங்க ஆனா ரெண்டு சமூகத்து நடுவுல ஏற்பட்ட பிளவு இன்னமும் எரிமலையா உள்ளுக்குள்ள எரிஞ்சுக் கிட்டுதான் இருக்கு., மதம் மாறின்னா தான் காதல்ல இந்த சமூகம் ஏத்துக்கும்னா அப்படி பட்ட காதலில் மீது எனக்கு உடன் பாடு இல்லை. இப்ப உன் காதல்ல நான் ஏத்துக்கிட்டா கண்டிப்பா



என் மதத்துல உள்ள சில அடிப்படைவாதிகள் நிச்சயம் உன்னை மதம் மாற சொல் வானுங்க, மதம் மாறலைன்னா என் குடும் பத்தை ஜாமத்துல சேர்க்க மாட்டானுங்க, அவ்வளவு ஏன் கப்ருஸ்தானுல கூட இடம் தர மாட்டானுங்க,காதலுக்காக நீ மதம் மாறணும்னு நினைச்சா கூட உங்க சமூகத்துல உள்ள சில அடிப்படைவாதிகள் நம்ம காதலை லவ் ஜிகாத்துன்னு சொல்லி அசிங்க படுத்துவாங்க, நான் உன் மதத்துல சேரணும்னு சொன்னா கூட தீவிரவாதிக்கு எங்க மதத்துல என்ன வேலைன்னு சில பேர் குதர்க்கமா பேசுவாங்க இப்ப இருக் கிற சூழ்நிலையில மனசு தான் முக்கியம், மனிதம் தான் முக்கியம்னு நாம்ம காதலுக்கு முக்கியம் கொடுத்தா சில மதவாத கட்சிகள் நிச்சயம் அவங்க அரசியல் போதைக்கு நம்ம காதல்ல ஊறுகாயாக்கி டெலி விஷன்ல டெலிகாஸ்ட் ஆகுற மாதிரி செஞ் சிடுவானுங்கமா

நம்மளை கஷ்டப்பட்டு பெத்து வளர்த்து ஆளாக்கிய பெற்றோர்க்கு இப்படி பட்ட அவப்பெயரை ஒரு காதல் மூலம் ஏற் படுத்தி தரணுமா என்ன ?? இன்னொரு ஜென்மம் ஒண்ணுன்னு இருந்தா நாம்ம ஒரே மதத்துல பொறக்கணும்னு வேண்டிப் போம் இல்லைன்னா மதம், சாதி இல் லாத பிரதேசத்துல பொறக்கணும்னு வேண்டிப் போம் இது ரெண்டுமே கனவுல மட்டும் தான் நடக்கும்னு நினைக்குறேன் உன் காதல்ல என்னாலே ஏத்துக்க முடியாது I am really sorry காயத்திரி என்று சொல்லிவிட்டு வந்த அழுகையை அவன் காதலை போல் உள்ளுக்குள் அடக்கி கொண்டு அவள் கண் பார்க்காமல் திரும்பி சென்றான் .அப்போது அவனது அழுகை அவனையும் மீறி பூமி தொட்டது .

**- நௌஷாத் கான். லி**

# நம்பிக்கை

அடிப்பிடித்து நீர் தேடிப் படர்ந்து போன
ஒரு தாவரத்தின் வேர் போலொரு
உறுதிப்பாட்டை கொண்டதாய்
நம்பிக்கை வேண்டும்

முறிப்பெடுக்க முந்நூறு காரணம்
திரண்டு நின்றாலும் கண்ணூறு படாமல்
கணக்காக நகர்த்தப் பழகலே சாமர்த்தியம்

பொல்லாப்புச் சண்டைகள்
புறம் பேசும் மனிதர்கள் பிழை தேடும்
குணங்களுக்கிடையில்
இரு கரத்துக்குள் மலர் மொட்டென
அதைக் காத்திடல் வேண்டும்

புடுங்கி எறியப் புயல் வந்தாலும்
புலர முடியா நிலை வந்தாலும் அந்த
நம்பிக்கையைத் தகர்க்காதிருக்க
வேண்டும்

அப்படியது தகர்ந்தால்
இனி அதேயழுத்தில் அடர்த்தியில் ஒரு
நம்பிக்கையை உருவாக்கி தொடர்தல்
சாத்தியமற்றதாகிவிடும்
அது அவ்வாறாகுமுன் சாத்தியமான
நம்பிக்கையைக் கைக்கொளச்
சத்தியம் செய்
பின்னசச்சத்தியவழி நட
யாவும் நலம்பெறக் காண்பாய்

**’அன்றில் கவி’**
**பாத்திமா மிஸ்னா**
சவளக்கடை
கிழக்கிலங்கை




பொழுது நன்கு புலர்ந்தது!
புதிய காலை மலர்ந்தது!!
' எழுக' வென்று அழைத்தது.
எழுந்த மெய்யும் சிலிர்த்தது!!
தொழுகை செய்யும் ஓசையோ
தொலைவி னின்றும் ஒலித்தது.
கொழுத் துயர்ந்த சேவலும்
'கொக்கரக்கோ' என்றது. (1)

பொன்னி றத்தின் கதிர்களால்
புன்னகைத்தான் கதிரவன்!
'தின்ன வேதும் கிடைக்குமா?'
திகைத்து நிற்கும் பறவைகள்,
தன்னி லையை மறந்ததாய்ச்
சேர்ந்திசைக்கும் குரவைகள்!
என்ன வென்ன காட்சிகள்
இந்த நாளின் மாட்சிகள்!! (2)

செய்தித் தாளைச் சிறுவனும்
சிறப்பாய் வீசிச் செல்கிறான்.
செய்யாக் கோலக் கன்னியர்
செய்வர் கோல ஓவியம்!
ஓய்வு பெற்ற மனிதரோ
ஒருங்கிணைந்து உரக்கவே,
வாய் விட்டே சிரிக்கிறார்
வரும் நோயைத் துரத்தவே !(3)

நடைப் பயிற்சி செல்பவர்
நகர் வலமும் செல்கிறார்!
எடை குறைக்கும் நோக்கிலே
உடற்பயிற்சி செய்கிறார்
கடை திறக்க வேண்டியே
காத்திருக்கும் மாந்தரும்
படையெடுத்துப் பாயுமிப்
பரபரப்பைப் பார்க்கலாம்! (4)
அன்ற லர்ந்த மலர்களின்
அணிவகுப்பே அழகு தான்!
முன்றி லுள்ள பூக்களை
மறைந் தொருவர் கொய்கிறார்!
இன்றி றைக்கு ஈயவே,
ஈனத் தனம் செய்கிறார்!
இன்னொருவர் செய்தித்தாள்
இரவல் கேட்டுப் பெறுகிறார்!(5)

வேலைக் காகச் செல்பவர்
வாகனத்தின் பேரொலி,
ஆலைச் சங்கின் எதிரொலி,
அடுத்துக் கேட்கும் வானொலி,
சாலை யோர நாய்களின்
சத்த மான குரைப்பொலி,
காலை யோர அமைதியில்
கரைவ தென்னே அதிசயம்!! (6)

இராமகிருஷ்ணன்

# எழுத்து



எழுத்து என்ற சொல்லே
எழுது எனச் சொல்லி
எழு’ப்புவதால் எழுதுகிறேன்....
இதோ எம் எழுத்து;

ஒலி மொழியானபோது
மொழி வரியானது..
வரி பதிவானபோது
மொழி வளமானது..

மொழியின் உயிர்
ஒலிதான் எனினும்..
ஒலியே இல்லாதும்
மொழியலாம் தானே..

அசோக பிராமியாய்
தமிழ் பிராமியாய்
சித்திர எழுத்தாய்
வட்ட எழுத்தாய்
தொடும் பிரெய்லியாய்
படும் குறியீடாய்...
நாணயத்திலும் பானையிலும்
கல்வெட்டிலும் ஓலையிலும்
தோண்டிடும் போதெல்லாம்
துலங்குவது என்ன இங்கே?!

எழுத்துருவின் முன்னோடி
யாமென்னும் அங்கீகாரம்தானே..?!

எண்ணென்ப ஏனை எழுத்தென்ப
-- என்றார் வள்ளுவர்!
எண் எழுத்து இகழேல்
-- என்றாள் ஔவை!
எழுத்தும் எழுதுகோலும் தெய்வம்
-- என்றார் பாரதி!
எனில்
எழுத்து சாதாரண விடயமா என்ன?!

எழுத்து
பழமையைப் படம்காட்டும்
பெருமையின் சொத்து!
புரட்சியை வித்தாக்கும்
புதுமையின் கெத்து!

எழுத்து
எப்போதும் எழுப்பிவிடும்
ஆத்மார்த்த தாய்!
தப்பாமல் வழிநடத்தும்
தத்துவார்த்த தந்தை!

எழுத்து
செல்களுக்குள் செல்லும்
செல்லுலாய்டு பொறி!
சொல்களுக்குள் நிற்கும்
சூட்சம நெறி!

ஆனால்....
எழுத்தின் விலைதான்
ஏறவே இல்லை..

பஞ்சதந்திர எழுத்தெல்லாம்
பஞ்சு மிட்டாய் விலையில்
ஹாரி பாட்டர் எழுத்தெல்லாம்
எத்தனையோ கோடிகளில்..

ஒருவேளை
எழுத்திற்கும் நிறம் உண்டோ?!
பாவம்...
விடைதேடும் எழுத்துக்கள்!

**செ. இராசா**

# வலிமைமிகு எண்ணங்கள் வாசிப்புரை




வலிமைமிகு எண்ணங்கள்-100 நபர்களைக் கொண்டு இந்த வருடத்தின் சிறந்ததொரு புத்தகமாக வெளிவந்திருக் கிறது. நூறு வெவ்வேறு மனிதர்கள், வெவ்வேறு பின்புலங்கள், வெவ்வேறு அனுபவங்கள். அப்பப்பா யோசிக்கவே மலைப்பாக உள்ளது. ஆனால் இவையெல்லாம் சாதாரணம் தான் எங்களுக்கு என்று சிறப்பாக நடத்திக் காட்டியிருக்கிறார்கள் தொகுப்பாசிரியர்கள் தமிழ்நெஞ்சம் அமின், கவிஞர் அன்புச்செல்வி சுப்புராஜு ஆகிய இருவரும். அவர்களுக்கு மனமார்ந்த வாழ்த்துகள் இப்படியானதொரு சிறப்பான முன்னெடுப்பிற்கு...

இந்தக் கட்டுரையாளர்கள் அனைவரும் வெவ்வேறு ஊர், மாவட்டம் , மாநிலம், நாடுகளைச் சார்ந்தவர்கள். ஒரே வயதினர் அல்ல. சிறியவர் முதல் பெரியவர் வரை. ஆசிரியர், முனைவர், பொறியாளர், இல்லத்தரசி, வல்லுனர், ஓய்வு பெற்றோர், மாணவர், ஆய்வாளர்கள் என பல்துறை வித்தகர்களை ஒருங்கிணைத்திருப்பது பெரும் பேறு. அனைவரும் தங்களுடைய அனுபவங்களையும், தங்களுடைய சூழலையும் வைத்து இந்த வலிமையான எண்ணங்கள் என்ற பூமாலையை அழகாகத் தொடுத்திருக்கிறார்கள்.

வாழ்க்கையில் மாற்றங்கள் எப்படி வேண்டுமானாலும் வரும், அவற்றின் தொடர்ச்சியாக என்னென்ன ஏற்படுத்தும், அதை எங்ஙனம் சரி செய்வது என்பதை மிக அழகாக ஒவ்வொருவரும் தங்களுடைய பாணியில் வெளிப்படுத்தி இருக்கின்றார்கள்.

சோர்ந்து போய் உட்காரும் ஒரு மனிதனுக்கு தேவை ஆறுதல். அந்த ஆறுதலை இந்த புத்தகம் நிச்சயமாகத் தரும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

வெற்றியை நோக்கி நாம் எப் போதும் சுறுசுறுப்போடு முன் னேறிக்கொண்டே இருக்க வேண்டும். நகர்ந்து கொண்டே இருக்க வேண்டும் என்று ஒரு கட்டுரையாளர் தெளிவாகக் கூறியுள்ளார். அதேபோல் வலிகள் சொல்லும் வழிகள், நாம் விடாமுயற்சியோடு வலிகளைக் கூட நம்முடைய வெற்றிப் பாதைக்கான வழியாக மாற்ற வேண்டும் என்ற ஒரு கட்டுரையும், ஒரு நொடி கனவினால் தன்னுடைய வாழ்க்கையில் சோர்ந்து போயிருந்த ஒருவர் இராணுவ வீரர் ஆகின்றார். அதே போல் சுய மரணம் இன்று ஒரு பெரிய பிரச்சினையாக உருவெடுத்துக் கொண்டிருக்கின்றது நம்முடைய சமூகத்தில். எப்பொழுதுமே உயிரைப் போக்கும் முடிவு ஒரு தீர்வு அல்ல என்ற கருத்தையும் பல்வேறு தரப்பினர் வலியுறுத்துகின்றனர். கல்லுக்குள் உள்ள தேரைக்குக் கூட உணவைத் தரும் ஆண்டவன் நம்மைப் படைத்ததன் நோக்கம் உணர்ந்து செயல்படுவது அவசியம் என்ற உத்வேகத்தை அளிக்கும் கட்டுரைகள் நன்று.

பல புதிய உத்திகளைப் பயன்படுத்தி நாம் வெல்வோம். அதற்கு நாம் செய்ய வேண்டியது ஒன்றுதான் ல் முடியும் என்ற நம்பிக்கையோடு செயல்பட வேண்டும். தன்னில் ஏற்படும் நம்பிக்கை எப்பொழுதுமே சிறு விதையாகத்தான் ஆரம்பிக்கும். அந்த சிறிய விதை விருட்சமாகி அதுவே பலவாகி அழகிய வனத்தை உருவாக்கும். இந்தச் சமுதாயமும் அதுபோல்தான் என் பதை எடுத்துக் கூறும் ஒரு கட்டுரை. சிகரத்திற்கான பயணத்தைச் சின்ன முட் களா சிதறடிப்பது... கரடு முரடான பாதையைக் கடந்து சென்று சிகரத்தை அடையும் போது கிடைக்கும் அளப்பரிய மகிழ்வைத் தருவது நம்மைச் செறிவாக்கிய எண்ணங்கள் தான். ஆகவே மாற்றி யோசித்து நாம் அந்த வெற்றியைப் பெற வேண்டும் என்பதற்கும், நல்ல செயல்களைச் செய்து கொண்டு மனநிறைவுடன் வாழ வேண்டும் என்பதையும் நிர்ணயிப்பது இந்த எண்ண ஓட்டமே. நம்முடைய கவலை களை எல்லாம் விட்டுவிடுவதற்கு நாம் முயற்சி செய்ய வேண்டும். எதை ஒதுக்க வேண்டுமோ அதை விட்டுவிட்டு எதை செதுக்க வேண்டுமோ அதைச் செதுக்க வேண்டும்அப்போதுதான் உளிபட்ட கல் அழகிய சிலையாகும். அன்பால் இத்தகைய எண்ணங்களை உருவாக்க முடியும் என்கின்றனர்.

மனவலிமை பெறுவதற்காகவும், மன அமைதிக்காகவும் நாம் தொடர்ந்து பயிற்சி எடுக்க வேண்டும். அந்தப் பயிற்சிக்கான முறைகளும் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. தியானத்தின் மூலமாக கவனத்தை ஒரு முகப்படுத்தி முன்னேறிச் செல்லலாம்.

சவால்கள் தான் வாழ்வின் சுவாரசியமே. நாம் எப்பொழுதும் நிமிர்ந்து நின்று சவால் களை எதிர்நோக்க வேண்டும் என்றும், மன உறுதியோடு தடைகளைத் தவிர்க்க புரிதலும் வேண்டும் என்றும் தெள்ளத் தெளிவாகக் கோடிட்டுக் காட்டுகின்றனர். ஏனென்றால் இந்த உலகில் நமக்கான எல்லைகள் இங்கேதான், இதுவரைதான் என்று வகுக்கப்படவில்லை. வானமே எல்லை. அதைப்போல் அன்பை விடுத்து மனம் சோர்ந்து அழிந்தால் எண்ணங்களும் அழியும் என்பது திண்ணம் இந்தப் புத்த கத்தின் அட்டைப்படமும் கவரும் வகையில் இருக்கின்றது. நீல நிறத்தில் அந்த வானமே நம்முடைய எல்லை அதை நோக்கி நாம் பயணிப்போம் என்பதை உணர்த்தும் வகையில் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது பாராட்டுக்குரியது. வெற்றி பெற்ற பின் வரும் உற்சாக கொண்டாட்டம் பின் அட் டையில், அற்புதம். தலைப்பின் வண்ணம் கூட வலிமைக்கு உதாரணமான சிகப்பு மற்றும் எண்ணங்களின், செயல்களின் வள மைக்கு உதாரணமாக பச்சையிலும் வரும் படி வடிவமைத்து இருப்பது சிறப்பு. இந்நூல் நம்முடைய வாழ்வை வளப்படுத்தும் ஒரு பொக்கிசம் என்று கூறினால் மிகையன்று. இந்த புதுவருடமான 2025 ல் நம்மை முன்னோக்கி நகர்த்தவே 2024 ஆண்டின் நிறைவுப் பகுதியில் வெளி வந்திருக்கின்ற இந்த ‘வலிமைமிகு எண்ணங்கள்’ புத்தகத் தினை அனைவரும் நிச்சயம் வாசியுங்கள். உங்களுடைய வாழ்க்கையை இரசித்து வாழுங்கள். வெற்றி இதோ வெகு அருகில் தான் உள்ளது, அதைப் பெறுவதில் நமக்கு ஏற்படும் அனுபவம்தான் இந்த ‘வலிமைமிகு எண்ணங்கள்’ புத்தகம். நூலில் இடம் பெற்றுள்ள அனைத்துக் கட்டு ரையாளருக்கும், தொகுப்பாசிரியர்கள் தமிழ்நெஞ்சம் அமின் ஐயா, கவிஞர் அன்புச்செல்வி சுப்புராஜூ இருவருக்கும் எனது நல்வாழ்த்துகள். வாழ்த்திய நல் உள்ளங் களுக்கு பாராட்டுகளும் நன்றிகளும்...



**இலாவண்யா மணிமுத்து**

**சென்னை**



# தாய்மார்களே

# உங்களுக்குதான்

## 30 நாளுக்கும் தினம் ஒரு கலந்த சாதம்

தினம் தினம் குழந்தைகளின் லஞ்ச் பாக்ஸில் என்ன சாதம் வைத்துக் கொடுப்பது என்பதுதான் பல அம்மாக்களின் கவலை.

பிள்ளைகள் வீட்டில் இருக்கும்போது வெரைட்டி காட்டி சந்தோஷப்படும் அம்மாக் களால், காலை நேர பரபரப்பில் அப்படி ஜமாய்க்க முடியாது.

அதிலும் வேலைக்குப் போகும் அம்மாக்கள் என்றால் சமையலுக்காக மெனக்கெடுவதை யோசித்துக்கூடப் பார்க்க முடியாது. எல்லோருக்கும் செய்வதையே குழந்தைகளுக்கும் கொடுத்தனுப்புவார்கள். அது, இரண்டு ஸ்பூன் அளவுக்கு மட்டுமே காலியாகி, கனத்த பாக்ஸாகவே திரும்பும்போது, அம்மாக்களின் இதயமும் கனத்துப் போகும்.

இந்தப் பிரச்னைக்கு சுலபத் தீர்வு, கலந்த சாதங்கள்! “நீங்க சொல்றது சரிதான். ஆனா அதிலயும் ஒரு பிரச்னை இருக்கே.. நாலஞ்சு வகையையே திரும்பத் திரும்பச் செஞ்சு கொடுத்தா ‘போர்’னு பிள்ளைங்க முகத்தை சுளிக்க ஆரம்பிச்சுடறாங்களே..” என்கிறீர்களா? அந்தக் கவலை இனி வேண்டாம்.

முப்பது நாட்களுக்கும் நீங்கள் விதவிதமான கலந்த சாதங்களை செய்து அசத்த, இதோ முப்பதுவிதமான ரெசிபிக்ள்

திகட்டத் திகட்ட கல்கண்டு சாதம், சப்புக் கொட்ட நெல்லிக்காய் சாதம், உடலுக்கு வலு சேர்க்க உளுந்து பொடி சாதம், கலக்கல் காளான் சாதம்& என்று புதுமையான ரெசிபிக்கள் மட்டுமல்ல;

நன்கு பரிச்சயமான தயிர், தக்காளி சாதங்களும்கூட இவரது ஸ்பெஷல் பக்குவத்தில் மாறுபட்ட சுவைகளோடு இங்கு வரிசை கட்டியிருக்கின்றன.

வெரைட்டிக்கு பஞ்சமில்லை. சுலபமாக சமைக்கலாம்.சத்தானதும்கூட. முக்கியமாக, பெரியவர்களும் ‘வேண்டாம்’ என்று சொல்லாமல் ரசித்து ருசித்து சாப்பிடுவார்கள்.

படித்த சூட்டோடு சமைத்து பரிமாறுங்கள். ‘உங்க கை பக்குவத்துக்கு ஈடு இணையே இல்லை’ என்று வீடே கொண்டாடும்!

## கோவைக்காய் சாதம்

**தேவை:**

*உதிராக வடித்த சாதம் 2 கப், பெரிய வெங்காயம் 1, கோவைக் காய் 100 கிராம், தேங்காய்த் துருவல், மிளகாய்த் தூள் தலா 2 டீஸ்பூன், எலுமிச்சை சாறு 1 டீஸ்பூன், கடுகு, உளுந்து தலா அரை டீஸ்பூன், கடலைப் பருப்பு 1 டீஸ்பூன், எண்ணெய் 2 டேபிள் ஸ்பூன், உப்பு தேவைக்கு, கறிவேப்பிலை சிறிதளவு.*



**செய்முறை:**

*வெங்காயம், கோவைக்காயை மெல்லியதாக நறுக்குங்கள். வாணலியில் எண்ணெயை காயவைத்து கடுகு, உளுந்து, கடலைப் பருப்பு ஆகியவற்றை தாளித்து, வெங்காயம், தேங்காயை வதக்குங்கள். பச்சை வாடை போனதும், கோவைக் காய், மிளகாய்த் தூள், உப்பு சேர்த்து காய் வேகும் வரை வதக்கி, கறிவேப்பிலை, எலுமிச்சம் சாறு சேர்த்து இறக்குங்கள்.*

*இந்தக் கலவையோடு சாதத்தைக் கலந்து பரிமாறுங்கள்.*

## கறிவேப்பிலை சாதம்

**தேவை:**

*உதிராக வடித்த சாதம் 2 கப், கடுகு, உளுந்து தலா அரை டீஸ்பூன், கடலைப் பருப்பு 2 டீஸ்பூன், எண்ணெய் 1 டேபிள் ஸ்பூன், நெய் 2 டேபிள் ஸ்பூன், உப்பு தேவைக்கு.*

*பொடிக்க: மிளகு, கசகசா தலா 1 டீஸ்பூன், சீரகம் 2 டீஸ்பூன், முந்திரி 4, கறிவேப்பிலை 1 கப், தேங்காய்த் துருவல் 2 டேபிள் ஸ்பூன், மிளகாய் வற்றல் 6.*

**செய்முறை:**



*கறிவேப்பிலையை சுத்தம் செய்து வெறும் வாணலியில் சிறிது சிறிதாகப் போட்டு வறுத்தெடுங்கள். பிறகு மிளகு, சீரகம், கசகசா, மிளகாய் வற்றல், முந்திரி, தேங்காய்த் துருவல் ஆகியவற்றை வறுத்தெடுத்து ஆறியதும் கறிவேப்பிலை உட்பட வறுத்த பொருட்கள் அனைத்தையும் ஒன்றாகச் சேர்த்துப் பொடித்து வையுங்கள்.*

*எண்ணெய் மற்றும் நெய்யைக் காயவைத்து கடுகு, உளுந்து, கடலைப் பருப்பு ஆகியவற்றை தாளியுங்கள். சாதத்தில், பொடித்த பொடி, உப்பு, தாளிதக் கலவை அனைத்தையும் ஒன்றாகச் சேர்த்து கலக்குங்கள்.*

## மும்பை சாதம்



**தேவை:**

*பச்சரிசி அரை கப், தோலுடன் உடைத்த பாசிப் பருப்பு 1 கப், மஞ்சள் தூள் 1 சிட்டிகை, பச்சை மிளகாய் 2, நெய் 2 டேபிள் ஸ்பூன், கடுகு, சீரகம் தலா அரை டீஸ்பூன், பெருங்காயத் தூள் ஒரு சிட்டிகை, கறி வேப்பிலை சிறிதளவு, உப்பு தேவைக்கு.*

**செய்முறை:**

*குக்கரில் அரிசி, பருப்பு இரண்டையும் ஒன்றாகச் சேர்த்து அதில் ஒரு டேபிள் ஸ்பூன் நெய், மஞ்சள் தூள், உப்பு மற்றும் நான்கு கப் தண்ணீர் சேர்த்து வேக வையுங்கள். ஒரு விசில் வந்ததும் தீயை மிதமாக்கி ஐந்து நிமிடங்கள் வைத்து இறக்குங்கள்.*

*பச்சை மிளகாயைப் பொடியாக நறுக்குங்கள்.*

*வாணலியில், மீதமுள்ள நெய்யை ஊற்றி கடுகு, சீரகம், கறிவேப்பிலை, பெருங்காயம் ஆகியவற்றை தாளித்து மிளகாயை சேர்த்து வதக்குங்கள்.*

*இந்தக் கலவையை, சாதக் கலவையோடு சேர்த்துக் கலந்தால் மும்பை சாதம் தயார்.*

## கதம்ப சாதம்

**தேவை:**

*பச்சரிசி, துவரம் பருப்பு தலா 1 கப், காய்கறி கலவை (கேரட், பீன்ஸ், கோஸ், பீட்ரூட்&) 2 கப், சின்ன வெங்காயம் 10, தக்காளி 5, சாம்பார் தூள் 2 டேபிள் ஸ்பூன், புளி கரைசல் அரை கப், பெருங்காயம், மஞ்சள் தூள் தலா அரை டீஸ்பூன், கடுகு, உளுந்து தலா 1 டீஸ்பூன், எண்ணெய், நெய் தலா 2 டேபிள் ஸ்பூன், உப்பு தேவைக்கு.*

**செய்முறை:**

*காய்களை விரல் நீளத் துண்டுகளாகவும், வெங்காயம், தக்காளியை பொடியாகவும் நறுக்குங்கள். அரிசி, பருப்புடன் ஆறு கப் தண்ணீர், காய்கறிகள், மஞ்சள் தூள், உப்பு ஆகியவற்றைச் சேர்த்து வேக வையுங்கள். இரண்டு விசில் வந்ததும், மிதமான தீயில் இரண்டு நிமிடங்கள் வைத்து இறக்குங்கள்.*

*வாணலியில் எண்ணெய், நெய்யை சூடாக்கி கடுகு, உளுந்து தாளித்து, வெங்காயத்தை வதக் குங்கள். பிறகு தக்காளி, சாம்பார்தூளைச் சேர்த்து ஐந்து நிமிடங்கள் வதக்கி, புளி கரைசல், மஞ்சள் தூள், பெருங்காயத்தூள், உப்பு, ஒரு கப் தண்ணீர் ஆகியவற்றைச் சேர்த்து கொதிக்க வைத்து இறக்கி, பருப்பு சாதக் கலவையோடு சேர்த்துக் கலக்குங்கள்.*



## எள் சாதம்



**தேவை:**

உதிராக வடித்த சாதம் 2 கப், கடுகு 1 டீஸ்பூன், கறிவேப்பிலை சிறிதளவு, நெய் 1 டேபிள் ஸ்பூன், உப்பு தேவைக்கு.

பொடிக்க: எள் 2 டேபிள் ஸ்பூன், உளுந்து 1 டேபிள் ஸ்பூன், மிளகாய் வற்றல் 8, தேங்காய்த் துருவல் 2 டேபிள் ஸ்பூன், எண்ணெய் 2 டீஸ்பூன், பெருங்காயம் சிறு துண்டு.

**செய்முறை:**

எள்ளை வெறும் வாணலியில் போட்டு, பொரியும்படி வறுத்தெடுங்கள். எண்ணெயில் பெருங்காயத்தைப் பொரித்து பிறகு மிளகாய், உளுந்து, தேங்காய்த் துருவல் ஆகியவற்றைச் சேர்த்து சிவக்க வறுத்தெடுங்கள். எள் உட்பட, வறுத்த பொருட்கள் அனைத்தையும் ஒன்றாகச் சேர்த்து நைஸாக பொடித்து வையுங்கள்.

நெய்யில் கடுகு, கறிவேப்பிலையை தாளியுங்கள்.

சாதத்தில் எள் பொடி, உப்பு ஆகியவற்றைத் தூவி, கடுகு தாளிதத்தை சேர்த்துக் கலக்குங்கள்.

## மாங்காய் இஞ்சி சாதம்



தேவை: உதிராக வடித்த சாதம் 2 கப், தோல் நீக்கி துருவிய மாங்காய் இஞ்சி துருவல் அரை கப், மஞ்சள்தூள் அரை டீஸ்பூன், பச்சை மிளகாய் 4, எலுமிச்சை சாறு, எண்ணெய் தலா 2 டேபிள் ஸ்பூன், கடுகு, உளுந்து தலா அரை டீஸ்பூன்,கறிவேப்பிலை சிறிதளவு, உப்பு தேவைக்கு.

பொடிக்க: உளுந்து 1 டேபிள் ஸ்பூன், கடலைப் பருப்பு அரை டேபிள் ஸ்பூன், தனியா 2 டீஸ்பூன், தேங்காய்த் துருவல் 2 டேபிள் ஸ்பூன், மிளகாய் 3, எண்ணெய் 3 டீஸ்பூன்.

செய்முறை: ஒரு டேபிள் ஸ்பூன் எண்ணெயில், மாங்காய், இஞ்சி துருவல், பச்சை மிளகாய், மஞ்சள் தூள், சிறிதளவு உப்பு ஆகியவற்றை வதக்கி, கரகரப்பாக அரைத்தெடுங்கள். பொடிக்கக் கூறப்பட்டுள்ளவற்றை சிவக்க வறுத்து பொடியுங்கள். மீதமுள்ள எண்ணெயில் கடுகு, உளுந்து, கறிவேப்பிலையை தாளியுங்கள்.

சாதத்தில், அரைத்த விழுது, பொடித்து வைத்துள்ள பொடி, உப்பு, தாளிதக் கலவை, எலுமிச்சம் சாறு அனைத்தையும் ஒன்றாகச் சேர்த்துக் கலக்குங்கள்.

## ஸ்பெஷல் எலுமிச்சம் சாதம்

**தேவை:**

*பச்சரிசி 2 கப், பால் 1 கப், எலுமிச்சம் பழச்சாறு 2 டேபிள் ஸ்பூன், மஞ்சள் தூள் 2 டீஸ்பூன், வேக வைத்த கொண்டைக் கடலை கால் கப், கடுகு 1 டீஸ் பூன், உளுந்து, கடலைப் பருப்பு தலா 2 டீஸ்பூன், மிளகாய் வற்றல் 3, பெருங்காயம் அரை டீஸ்பூன், எண்ணெய் 2 டேபிள் ஸ்பூன், பச்சை மிளகாய் 3, இஞ்சி 1 துண்டு, கறிவேப்பிலை சிறிதளவு, உப்பு தேவைக்கு.*



**செய்முறை:**

*அரிசியுடன் பால், மூன்று கப் தண்ணீர், உப்பு ஆகியவற்றைச் சேர்த்து உதிராக வேக வையுங் கள். பச்சை மிளகாய், இஞ்சி, கறிவேப்பிலை இவற்றை ஒன்றிரண்டாக நசுக்குங்கள். எண்ணெயில் கடுகு, உளுந்து, கடலைப் பருப்பு, மிளகாய் வற்றல், பெருங்காயம் ஆகி யவற்றை சிவக்க வறுத்தெடுங்கள். பிறகு பச்சை மிளகாய், இஞ்சி, கறிவேப்பிலை ஆகியவற்றைச் சேர்த்து வதக்கி, மஞ்சள்தூள், உப்பு, எலுமிச்சம் பழச்சாறு, கொண்டைக் கடலை ஆகியவற்றைச் சேர்த்து கிளறி இறக்குங்கள்.*

*இந்தக் கலவையோடு சாதத்தை சேர்த்துக் கிளறுங்கள்.*

## புதினா கத்தரிக்காய் சாதம்

**தேவை:**

*உதிராக வடித்த சாதம் 2 கப், பச்சை கத்தரிக்காய் 8, பெரிய வெங்காயம் 1, தக்காளி 2, புளி கரைசல் 1 டேபிள் ஸ்பூன், கடுகு, சீரகம், மஞ்சள் தூள் தலா அரை டீஸ்பூன், நெய் 1 டேபிள் ஸ்பூன், எண்ணெய் 2 டேபிள் ஸ்பூன், உப்பு தேவைக்கு.*

*அரைக்க: தேங்காய்த் துருவல் 2 டேபிள் ஸ்பூன், புதினா, மல்லி தலா அரை கட்டு, பச்சை மிளகாய் 4, பூண்டு 6 பல்.*

**செய்முறை:**

*அரைக்கக் கூறப்பட்டுள்ள பொருட்களை ஒன்றாகச் சேர்த்து நைஸாக அரையுங்கள். வெங்காயம், தக்காளி, கத்தரிக்காய் இவற்றை நீளவாக்கில், மெல்லியதாக நறுக்குங்கள். எண்ணெய், நெய்யைக் காயவைத்து கடுகு, சீரகத்தை தாளித்து வெங்காயம், கத்தரிக்காயைச் சேர்த்து, உப்பு, மஞ்சள் தூள் தூவி ஐந்து நிமிடம் வதக்குங்கள். பிறகு, அரைத்த விழுது, தக்காளி, உப்பு ஆகியவற்றைச் சேர்த்து பச்சை வாடை போக வதக்கி,புளி கரைசலைச் சேர்த்து இரண்டு நிமிடங்கள் கொதிக்க வைத்து இறக்குங்கள்.*

*இந்தக் கலவையை சாதத்தோடு சேர்த்துக் கிளறுங்கள்.*

## தேங்காய்ப்பால் தக்காளி சாதம்

**தேவை:**



பச்சை பட்டாணி அரை கப், பச்சரிசி 2 கப், தேங் காய்ப் பால் 2 கப், தக்காளி 6, பச்சை மிளகாய் 2, மிளகாய்த்தூள் 1 டீஸ்பூன், மஞ்சள் தூள் கால் டீஸ்பூன், உப்பு தேவைக்கு, கடுகு, சீரகம் தலா அரை டீஸ்பூன், நெய் 2 டேபிள் ஸ்பூன்.

**செய்முறை:**

அரிசியை சுத்தம் செய்து அதனுடன், தேங் காய்ப் பால், மூன்று கப் தண்ணீர், உப்பு ஆகிய வற்றைச் சேர்த்து உதிராக வேக வையுங்கள். தக்காளி, பச்சை மிளகாய் ஆகியவற்றை பொடி யாக நறுக்குங்கள். நெய்யைக் காய வைத்து கடுகு, சீரகம் தாளித்து பச்சை மிளகாயை வதக்குங்கள். பிறகு தக்காளி, மஞ்சள் தூள், மிளகாய்த்தூள், உப்பு, பட்டாணி ஆகிய வற்றைச் சேர்த்து பட்டாணி வேகும் வரை கிளறி இறக்குங்கள். சாதத்தில் தக்காளி கலவையை சேர்த்துக் கலக்குங்கள்.

புளிப்பில்லாத தக்காளி என்றால் ஒரு மூடி அளவு எலுமிச்சம்பழச் சாறு சேர்க்கலாம்.

## பிஸிபேளா பாத்

**தேவை:**

அரிசி, துவரம் பருப்பு தலா 1 கப், மஞ்சள் தூள் கால் டீஸ்பூன், பெருங்காயத்தூள் அரை டீஸ்பூன், எண்ணெய் 2 டேபிள் ஸ்பூன், நெய் 1 டேபிள் ஸ்பூன், கடுகு, உளுந்து தலா 1 டீஸ்பூன், சின்ன வெங்காயம் 1 கப், தக்காளி 4, பச்சை பட்டாணி அரை கப், வேகவைத்து வழித்தெடுக்கப்பட்ட முருங்கைக்காய் விழுது அரை கப், புளி எலுமிச்சை அளவு, கறிவேப்பிலை சிறிதளவு, உப்பு தேவைக்கு.



அரைக்க: தனியா 2 டேபிள் ஸ்பூன், மிளகாய் வற்றல் 8, கடலைப் பருப்பு 1 டேபிள் ஸ்பூன், வெந்தயம் அரை டீஸ்பூன், பட்டை, லவங்கம், ஏலக்காய் தலா 1, கசகசா 2 டீஸ்பூன், எண்ணெய் 1 டேபிள் ஸ்பூன்.

**செய்முறை:**

அரிசி, பருப்புடன் மஞ்சள் தூள், பெருங்காயத் தூள், உப்பு மற்றும் ஆறு கப் தண்ணீர் சேர்த்து குக்கரில் வேக வையுங்கள். இரண்டு விசில் வந்ததும், மிதமான தீயில் பத்து நிமிடங்கள் வைத்து இறக்குங்கள். அரைக்கக்

*கூறப்பட்டுள்ளவற்றை பொன்னிறமாக வறுத்துப் பொடியுங்கள். புளியை ஒன்றரை கப் தண்ணீரில் கரைத்து வடிகட்டுங்கள். எண்ணெய் மற்றும் நெய்யைக் காயவைத்து கடுகு, உளுந்தை தாளித்து, வெங்காயத்தைச் சேர்த்து வதக்குங்கள். பிறகு தக்காளி, பட்டாணி சேர்த்து வதக்குங்கள். பிறகு புளி கரைசலைச் சேர்த்து, பச்சை வாடை போகக் கொதித்ததும் பொடித்து வைத்துள்ள பொடியைச் சேர்த்து, மேலும் இரண்டு நிமிடங்கள் கொதிக்க வைத்து முருங்கை விழுதை சேர்த்துக் கிளறி இறக்குங்கள். இதனை வெந்த அரிசி பருப்பு கலவையுடன் கலக்குங்கள்.*

## கல்கண்டு சாதம்

**தேவை:**

*பச்சரிசி 1 கப், பால் 1 லிட்டர், கல்கண்டு 1 கப், ஏலக்காய்த் தூள் அரை டீஸ்பூன், கிராம்பு 1, மில்க்மெய்ட் 3 டேபிள் ஸ்பூன், நெய் கால் கப், முந்திரி 10, பாதாம் 8, வெள்ளரி விதை 1 டேபிள் ஸ்பூன், சார பருப்பு அரை டேபிள் ஸ்பூன், கிராம்பு 1, ஜாதிபத்ரி சிறிதளவு.*



**செய்முறை:**

*அரிசியை ஒரு கப் தண்ணீர், ஒருலிட்டர் பால் சேர்த்து மிதமான தீயில் வேக வையுங்கள். அடிப் பிடிக்காமல் இருக்க, அவ்வப்போது கிளறிவிடுங்கள். அரிசி வெந்து குழைந்ததும் அதில் கல்கண்டை பொடித்துச் சேர்த்து மேலும் பத்து நிமிடங்கள் கிளறுங்கள்.*

*பாதாமை மெல்லிதாக சீவுங்கள். ஏலம், கிராம்பு, ஜாதிபத்ரி ஆகியவற்றை லேசாக வறுத்துப் பொடித்து வையுங்கள். நெய்யைக் காயவைத்து முந்திரியை வறுத்து, வெள்ளரி விதை, சார பருப்பு சேர்த்துக் கிளறி இறக்குங்கள்.*

*கல்கண்டு சாதத்தில் பாதாம், ஏலம், கிராம்பு, ஜாதிபத்ரி பொடி, முந்திரி, வெள்ளரிவிதை கலவையைச் சேர்த்துக் கிளறுங்கள்.*

## சீரக சாதம்

**தேவை:**

*உதிராக வடித்த சாதம் 2 கப் (பாசுமதி அரிசியாக இருந்தால் கூடுதல் சுவை தரும்), முந்திரி 10, சீரகம் 1 டீஸ்பூன், கறிவேப்பிலை சிறிதளவு, நெய் 1 டேபிள் ஸ்பூன், உப்பு தேவைக்கு.*

**செய்முறை:**

*நெய்யை சூடாக்கி சீரகத்தைத் தாளியுங்கள். பிறகு முந்திரியைச் சேர்த்து இளம் சிவப்பாக வறுத்து, கறிவேப்பிலை சேர்த்துப் பொரித்து இறக்குங்கள்.*

சாதத்தில், சீரகக் கலவை, தேவையான உப்பு சேர்த்துக் கலக்கினால் சீரக சாதம் ரெடி.



## ஆந்திரா புளியோதரை

**தேவை:**

உதிராக வடித்த சாதம் 2 கப், புளி சிறிய எலுமிச்சை அளவு, பச்சை மிளகாய் 2, கறிவேப்பிலை சிறிது, மஞ்சள் தூள் அரை டீஸ்பூன், உப்பு தேவைக்கு, வெல்லத் துருவல் 2 டீஸ்பூன், நல்லெண்ணெய் 2 டேபிள் ஸ்பூன், கடுகு ஒன்றரை டீஸ்பூன், உளுந்து, கடலைப் பருப்பு தலா 2 டீஸ்பூன், மிளகாய் வற்றல் 4, பெருங்காயம் அரை டீஸ்பூன்.

**செய்முறை:**

சாதம் சூடாக இருக்கும்போதே அதை குவித்தாற்போல வைத்து நடுவில் குழிவாக்குங்கள். அதில் பச்சை மிளகாய் (இரண்டாகக் கீறி), கறிவேப்பிலை, மஞ்சள் தூள், 1 டேபிள் ஸ்பூன் நல்லெண்ணெய் ஆகியவற்றைப் போட்டு மூடி வையுங்கள். புளியை ஒரு கப் தண்ணீரில் கரைத்து வையுங்கள்.

மீதமுள்ள எண்ணெயில் 1 டீஸ்பூன் கடுகு, உளுந்து, கடலைப் பருப்பு, மிளகாய் வற்றல், பெருங்காயம் ஆகியவற்றை சிவக்க வறுத்து, புளி கரைசலை ஊற்றி, உப்பு சேர்த்து பச்சை வாடை போக கொதிக்க வையுங்கள். பிறகு வெல்லம் சேர்த்து மேலும் ஒரு நிமிடம் கொதிக்க வைத்து இறக்குங்கள்.

மீதமுள்ள கடுகை அரைத்து வையுங்கள்.

சாதத்தில் புளி கலவை, அரைத்து வைத்துள்ள கடுகு விழுது ஆகியவற்றைச் சேர்த்துக் கிளறுங்கள்.

## மாங்காய் சாதம்



**தேவை:**

உதிராக வடித்த சாதம் 2 கப், புளிப்பான மாங்காய் துருவல் 1 கப், பச்சை மிளகாய் 6, பெருங்காயம் 1 டீஸ்பூன், எண்ணெய் 3 டேபிள் ஸ்பூன், கடுகு, உளுந்து, தலா அரை டீஸ்பூன், மிளகாய் வற்றல் 3, மஞ்சள் தூள் கால் டீஸ்பூன், உப்பு தேவைக்கு.

**செய்முறை:**

ஒரு டேபிள் ஸ்பூன் எண்ணெயில் மாங்காய்த் துருவல் மற்றும் மிளகாயை வதக்கி எடுத்து கரகரப் பாக அரையுங்கள். மீதமுள்ள எண்ணெயில், கடுகு, உளுந்து, மிளகாய் வற்றல், பெருங்காயம் ஆகியவற்றைத் தாளித்து, மஞ்சள் தூள் சேர்த்து இறக்குங்கள். இதனை மாங்காய் கலவையோடு சேர்த்து மேலும்

ஒரு சுற்று அரைத்தெடுங்கள். சாதத்தில், அரைத்த விழுது, தேவையான உப்பு சேர்த்துக் கலக்குங்கள்.

## தோசைக்காய் சாதம்

**தேவை:**

*உதிராக வடித்த சாதம் 2 கப், தோசைக் காய் 1, பச்சை மிளகாய் 6, புளி சிறிய எலுமிச்சை அளவு, மஞ்சள் தூள் கால் டீஸ்பூன், கடுகு அரை டீஸ்பூன், மிளகாய் வற்றல் 3, பெருங்காயம் அரை டீஸ்பூன், கறிவேப்பிலை சிறிதளவு, எண்ணெய் 2 டேபிள் ஸ்பூன், உப்பு தேவைக்கு.*

**செய்முறை:**

*தோசைக்காயின் தோல், விதைகளை நீக்கிவிட்டு சிறு துண்டுகளாக நறுக்குங்கள். பச்சை மிளகாயை இரண்டாக கீறி வையுங்கள். ஒரு டேபிள் ஸ்பூன் எண்ணெயில் தோசைக் காயை வதக்குங்கள். பிறகு பச்சை மிளகாய், புளி, மஞ்சள் தூள், உப்பு சேர்த்து மேலும் சிறிது வதக்கி இறக்குங்கள். ஆறியதும் கரகரப்பாக அரையுங்கள்.*

*மீதமுள்ள எண்ணெயில் கடுகு, மிளகாய், பெருங்காயம், கறிவேப்பிலை ஆகியவற்றை தாளியுங்கள்.*

*சாதத்தில், அரைத்த விழுது, உப்பு, கடுகு தாளிதக் கலவை ஆகியவற்றைச் சேர்த்துக் கலக்குங்கள்.*

## பூண்டு சாதம்

**தேவை:**

*உதிராக வடித்த சாதம் 2 கப், சின்ன வெங்காயம் அரை கப், பூண்டு 1 கப், இஞ்சி 1 துண்டு, கறிவேப்பிலை சிறிதளவு, வறுத்துப் பொடித்த மிளகுத் தூள் 2 டீஸ்பூன், சீரகத் தூள் 1 டீஸ்பூன், மஞ்சள் தூள் கால் டீஸ்பூன், கடுகு, சீரகம் தலா அரை டீஸ்பூன், நெய் 2 டேபிள் ஸ்பூன், பச்சை மிளகாய் 4, உப்பு தேவைக்கு.*



**செய்முறை:**

*வெங்காயம், பூண்டு, இஞ்சி இவற்றின் தோலை நீக்கிவிட்டுப் பொடியாக நறுக்குங்கள். நெய்யில் கடுகு, சீரகம், மிளகாய், கறிவேப்பிலை ஆகியவற்றைத் தாளித்து வெங்காயம், இஞ்சி, பூண்டு ஆகியவற்றை ஒரு*

சிட்டிகை உப்பு சேர்த்து வதக்கி, மிளகுத்தூள், சீரகத்தூள் சேர்த்துக் கிளறி இறக்குங்கள்.

இந்த பூண்டுக் கலவையில் சாதத்தைச் சேர்த்து, தேவையான உப்பு தூவிக் கிளறுங்கள்.

## மாங்காய் மசாலா சாதம்

**தேவை:**

உதிராக வடித்த சாதம் 2 கப், புளிப்பான மாங்காய் 1, மிளகாய்த் தூள் 2 டீஸ்பூன், கடுகுத் தூள் 2 டீஸ்பூன், நல்லெண்ணெய் 3 டேபிள் ஸ்பூன், கடுகு 1 டீஸ்பூன், நெய் 2 டீஸ்பூன், உப்பு தேவைக்கு.

**செய்முறை:**

மாங்காயைப் பொடியாக நறுக்குங்கள். எண்ணெயுடன் மாங்காய், பொடி வகைகள், உப்பு ஆகியவற்றைச் சேர்த்துக் கலக்குங்கள்.

நெய்யில் கடு-கை பொரித்தெடுங்கள்.

சூடான சாதத்தில் தாளிதக் கலவை மற்றும் மற்ற அனைத்துப் பொருட்களையும் ஒன்றாகச் சேர்த்துக் கலக்குங்கள்.

## சோயா சாதம்

**தேவை:**

பச்சரிசி 2 கப், சோயா உருண்டைகள் அரை கப், பெரிய வெங்காயம் 2, இஞ்சி,பூண்டு விழுது 2 டீஸ்பூன், மிளகாய்த் தூள் 4 டீஸ்பூன், தயிர் அரை கப், கரம் மசாலாத் தூள் 1 டீஸ்பூன், சீரகம் அரை டீஸ்பூன், எண்ணெய், நெய் தலா 2 டேபிள் ஸ்பூன், உப்பு தேவைக்கு.

**செய்முறை:**

சோயாவை கொதி நீரில் ஐந்து நிமிடம் ஊற வைத்து பிறகு பச்சைத் தண்ணீரில் இரண்டு, மூன்று முறை நன்றாகக் கழுவுங்கள். வெங்காயத்தை நீளவாக்கில், சன்னமாக நறுக்குங்கள்.

குக்கரில் நெய் மற்றும் எண்ணெயை ஊற்றி சூடாக்கி, சீரகத்தை தாளித்து, வெங்காயத்தை வதக்குங்கள். பிறகு இஞ்சி பூண்டு விழுதைச் சேர்த்து பச்சை வாடை போக வதக்குங்கள். பிறகு உப்பு, தயிர், மிளகாய்த் தூள், கரம் மசாலா, சோயா ஆகியவற்றைச் சேர்த்து சிறிது நேரம் கொதிக்க வையுங்கள். பிறகு அரிசி மற்றும் நான்கு கப் தண்ணீர் சேர்த்து குக்கரை மூடி வையுங்கள்.

ஒரு விசில் வந்ததும் தீயை மிதமாக்கி, இரண்டு நிமிடங்கள் வைத்து இறக்குங்கள்.ம

## அரை நெல்லிக்காய் சாதம்

**தேவை:**

பச்சரிசி 2 கப், அரை நெல்லிக்காய் அரை கப், பச்சை மிளகாய் 10, தேங்காய்த் துருவல்

2 டீஸ்பூன், பெருங்காயம் 1 டீஸ்பூன், கடுகு, உளுந்து, மஞ்சள்தூள் தலா அரை டீஸ்பூன், எண்ணெய் 4 டேபிள் ஸ்பூன், கறிவேப்பிலை சிறிதளவு, உப்பு தேவைக்கு.

**செய்முறை:**

அரிசியை உப்பு சேர்த்து உதிராக வடியுங்கள். நெல்லிக்காய்களை சுத்தம் செய்து கொட்டைகளை நீக்குங்கள். 1 டேபிள் ஸ்பூன் எண்ணெயில் பச்சை மிளகாய் மற்றும் தேங்காய்த் துருவலைச் சேர்த்து வதக்குங்கள். பிறகு, நெல்லிக்காய், மஞ்சள் தூள், சிறிதளவு உப்பு ஆகியவற்றைச் சேர்த்து வதக்கி நைஸாக அரைத்தெடுங்கள்.

மீதமுள்ள எண்ணெயில் கடுகு, உளுந்து, பெருங்காயம், கறிவேப்பிலை ஆகியவற்றை தாளியுங்கள். சாதத்தில், நெல்லிக்காய் விழுது, கடுகு தாளிதம் ஆகியவற்றைச் சேர்த்துக் கிளறுங்கள்.



## கொண்டைக்கடலை சாதம்

**தேவை:**

பச்சரிசி 2 கப், சிறிய கருப்பு கொண்டைக் கடலை அரை கப், தேங் காய்ப் பால் 2 கப், பெரிய வெங்காயம் 2, தக்காளி 3, இஞ்சி பூண்டு விழுது 1 டேபிள் ஸ்பூன், மிளகாய்த் தூள் 2 டீஸ்பூன், தனியாத் தூள், கரம் மசாலா தலா 1 டீஸ்பூன், எண்ணெய், நெய் தலா 1 டேபிள் ஸ்பூன், பிரிஞ்சி இலை 2, உப்பு தேவைக்கு.

**செய்முறை:**

கடலையை முதல் நாளே ஊற வைத்து மறுநாள் வேகவைத்து எடுத்து வையுங்கள். வெங்காயம், தக்காளியை மெல்லியதாக நறுக்குங்கள். குக்கரில் எண்ணெய் மற்றும் நெய்யை காயவைத்து, பிரிஞ்சி இலையை தாளியுங்கள். பிறகு வெங்காயம், தக்காளியை வதக்கி, இஞ்சி பூண்டு விழுது, மிளகாய்த் தூள், தனியாத் தூள், கரம் மசாலாத்தூள் ஆகியவற்றைச் சேர்த்து பச்சை வாடை போக வதக்குங்கள். பிறகு தேங்காய்ப் பால், இரண்டு கப் தண்ணீர், தேவையான உப்பு, வேக வைத்த கடலை, அரிசி ஆகியவற்றைச் சேர்த்து மூடி வையுங்கள். ஒரு விசில் வந்ததும் தீயை மிதமாக்கி, மேலும் இரண்டு நிமிடங்கள் வைத்திருந்து இறக்குங்கள்.

## ஸ்பெஷல் தக்காளி சாதம்

**தேவை:**

உதிராக வடித்த சாதம் 2 கப், பெரிய வெங்காயம் 2, தக்காளி 6, பச்சை மிளகாய் 3, மஞ்சள் தூள் ஒரு சிட்டிகை, கறிவேப்பிலை, மல்லித்தழை தலா சிறிதளவு, கடுகு, உளுந்து தலா அரை டீஸ்பூன், நெய் 1 டேபிள் ஸ்பூன், எண்ணெய் 3 டேபிள் ஸ்பூன், உப்பு தேவைக்கு.

பொடிக்க (முதல் வகை): பட்டை, லவங்கம், ஏலக்காய் தலா 2, கசகசா 2 டீஸ்பூன், முந்திரி 6, எண்ணெய் 1 டீஸ்பூன்.

மற்றொரு வகை பொடிக்கு: தனியா, துவரம் பருப்பு தலா 2 டீஸ்பூன், மிளகாய் வற்றல்

4, கொப்பரை தேங்காய்த் துருவல் 3 டேபிள் ஸ்பூன், எண்ணெய் 1 டீஸ்பூன்.

**செய்முறை:**

பொடிக்கக் கூறப்பட்டுள்ளவற்றை (இரண்டு வகையையும் தனித்தனியாக) வறுத்து பொடித்து வையுங்கள். வெங்காயம், தக்காளியை பொடியாக நறுக்குங்கள். மிளகாயை இரண்டாக கீறி வையுங்கள்.

வாணலியில் எண்ணெய், நெய்யைக் காய வைத்து கடுகு, உளுந்தை தாளியுங்கள். பிறகு வெங்காயம், மிளகாய், தக்காளி ஆகியவற்றை உப்பு, மஞ்சள் தூள் சேர்த்து வதக்கி இறக்குங்கள். சாதத்தில், பொடி வகையை தூவி, தக்காளி கலவை மற்றும் கறிவேப்பிலை, மல்லித்தழை சேர்த்துக் கிளறுங்கள்.

## காய்கறி சாதம்

**தேவை:**

பச்சரிசி 2 கப், காய்கறி கலவை (கேரட் பீன்ஸ், பட்டாணி) 1 கப், பட்டை, லவங்கம், ஏலக்காய் தலா 2, பெரிய வெங்காயம் 3, தக்காளி 3, இஞ்சி பூண்டு விழுது 1 டேபிள் ஸ்பூன், தயிர் அரை கப், புதினா, மல்லி தலா அரை கட்டு, பச்சை மிளகாய் 3, மிளகாய் தூள் 1 டீஸ்பூன், உப்பு தேவைக்கு, நெய் 1 டேபிள் ஸ்பூன், எண்ணெய் 3 டேபிள் ஸ்பூன்.

**செய்முறை:**

குக்கரில் எண்ணெய், நெய்யைச் சூடாக்கி பட்டை, லவங்கம், ஏலக்காய், வெங்காயம் சேர்த்து வெங்காயம் நிறம் மாறும் வரை வதக்குங்கள். பின்னர் காய்களைச் சேர்த்து வதக்கி, இஞ்சி பூண்டு விழுது, தயிர், மிளகாய், மிளகாய் தூள், உப்பு, மஞ்சள் தூள் சேர்த்து பச்சை வாடை போகும் வரை வதக்கி ஆறு கப் தண்ணீர் சேர்த்து கொதிக்க வையுங்கள். பிறகு அரிசியைச் சேர்த்து கிளறி மூடி வையுங்கள்.

ஒரு விசில் வந்ததும் தீயை மிதமாக்கி பத்து நிமிடங்கள் வைத்து இறக்குங்கள்.

## உளுந்து பொடி சாதம்

**தேவை:**

உதிராக வடித்த சாதம் 2 கப், எலுமிச்சை சாறு 2 டேபிள் ஸ்பூன், கடுகு 1 டீஸ்பூன், கறிவேப்பிலை சிறிதளவு, நெய் 2 டேபிள் ஸ்பூன், உப்பு தேவைக்கு.

பொடிக்க: முழு உளுந்து 4 டேபிள் ஸ்பூன், துவரம் பருப்பு 1 டேபிள் ஸ்பூன், கொப்பரைத் தேங்காய்த் துருவல் 2 டேபிள் ஸ்பூன், மிளகாய் வற்றல் 8, பெருங்காயத் தூள் அரை டீஸ்பூன், எண்ணெய் 2 டீஸ்பூன்.

**செய்முறை:**

பொடிக்கக் கூறப்பட்டுள்ளவற்றை, மிதமான தீயில் சிவக்க வறுத்துப் பொடியுங்கள். நெய்யில் கடுகு, கறிவேப்பிலையை தாளித்துப் பொடியோடு சேர்த்துக் கலக்குங்கள்.

சாதத்தில், பொடித்து வைத்துள்ள பொடி கலக்குங்கள்.

**TamilFoods**

# தன்முனைக் கவிதையின் தோற்றமும், வளர்ச்சியும் (12)

அன்பு செல்வி சுப்புராஜு
தன்முனைக் கவிதை படைப்பாளர்கள் பேரவை
பட்டாபிராம், சென்னை



*புதுப்புது முயற்சிகள் நமக்கு புத்துணர்வை ஊட்டும், ஊக்கமுடன் செயலாற்ற உதவும் என்பதற்கொப்ப என்னால் 23/08/2023 ம் நாளன்று அறிமுகம் செய்யப்பட்ட தன்முனையியைபு வகைமையில் 46 படைப்பாளர்களின் தன்முனையியைபுக் கவிதைகளின் தொகுப்பு 'தன்முனையியைபுக் கவிதைகள்' எனும் தலைப்பில் நவம்பர் 2023 அன்று அன்பின் சங்கமம் வழியாக வெளியீடானது. அந்நூலில் இருந்து சில கவிதைகள்*

**காந்தித் தாத்தா நாளும்
பேசியது வாய்மை
அவரிடம் என்றும்
இருந்ததில்லை பொய்மை
சு.பிரவந்திகா**

**விதைத்தது முளைத்தது
முளைத்தது கிளைத்தது
கிளைத்தது சளைத்தது
சளைத்தது தழைத்தது
வாசன் சாவி**

**மண்ணில் மூடி
மறைக்கப் பட்ட விதை
செடியாகி மௌனமாய்ச்
செப்பும் தன் கதை
ஜாய் சந்தியா**

**பார்த்த சிகரங்கள்
தன்னம்பிக்கை ஊட்டும்
பயணித்த பள்ளத்தாக்குகள்
பக்குவத்தை நாட்டும்
கவிநிலா மோகன்**

**தத்துவங்களைச் சொல்லிச்
சென்றார் ஓஷோ
ஹைக்கூ கவிதைகளைப்
பயில வைத்தார் பாஷோ
சாந்தி சரவணன்**

*ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதமாக, சில கவிதைகளை உதாரணமாக அளித்துள்ளேன். நூலில் இடம் பெற்றுள்ள அனைவரின் கவிதைகளும் இயைபுத் தொடையுடன் அமைந்திருப்பது சிறப்பு.*

**முயற்சி திருவினை ஆக்கும் முயற்றின்மை
இன்மை புகுத்தி விடும். (குறள் 616)**

*என்ற குறள்தான் நினைவுக்கு வருகிறது.*

*முயற்சி இல்லாமல் எதுவும் இல்லை. முயற்சிதான் சிறப்பான செயல்பாடுகளுக்குக் காரணமாக அமையும் அல்லவா? எதுவொன்றையும் மிகவும் எளிமைப்படுத்தி வித்தியாசமான முறையில் சொன்னால் அது மக்களிடம் சென்று சேருமென்பது திண்ணம். அவ்வகையில் கவிஞர் மு.சந்திரனார் எடுத்துள்ள முன்னெடுப்பு பாராட்டுக்குரியது. இவர் ஜூன் 2023, மஞ்சிகை பதிப்பகம் வழியாக திருக்குறளுக்கான பொருளைத் தன்முனைக் கவிதைகளாக எழுதி 'குறுங்கவியில் குறள் விளக்கம்' எனும் நூலினை வெளியிட்டுள்ளார். உலகப் பொதுமறைக்கு வார்த்தைகளைக் கோர்த்த*

விளக்கமாக இல்லாமல் எதுகையும், மோனையும் இயைந்து வர, தன்முனைக் கவிதை வடிவிலான விளக்கமாக இந்நூல் வெளியிடப்பட்டது பாராட்டுக்குரியது ஆகும். இந்நூலில் இருந்து ஒரு கவிதை உங்களுக்காக....

**துறந்தார் பெருமை**
**துணைக்கூறின் வையத்து**
**இறந்தாரை எண்ணிக்கொண்**
**டற்று** *- குறள் 22*

**இறந்தவர்களின் கணக்கெழுத**
**ஏடேதும் இல்லை**
**துறந்தவர்களின் பெருமைகூற**
**வாயேதும் இல்லை**
**சந்திரனார்**

*அடுத்ததாக கவிஞர் திருமதி இரா. இராஜாமணி அவர்கள்...*

**அருமை உடைத்தென்று**
**அசாவாமை வேண்டும்**
**பெருமை முயற்சி தரும்.** *- குறள் 611*

நம்மால் முடியுமா என்று மனத் தளர்ச்சி அடையாமல், முடியும் என்ற நம்பிக்கையுடன் முயற்சி செய்தால் அதுவே பெரிய வலிமையாக அமையும் என்பது நிதர்சனமான உண்மையல்லவா? அதற்கொப்ப கவிஞர் திருமதி. இரா ஜாமணி அவர்கள் திருக்குறள் மட்டு மின்றி மேலும் பல சங்க இலக்கியப் பாடல் களை ‘தன்முனையயியைபுக் கவிதை’ வகை மையில் தொடர்ந்து எழுதி வருகிறார் என்னென்ன இலக்கியங்களை தன் முனை யியைபு வகைமையில் எழுதியுள்ளார் என்று பார்க்கலாம்.

- தன்முனையியைபில் குறளமுதம்...
- நாலடியாரும், தன்முனையியைபுக் கவிதைகளும்...
- பழமொழி நானூறு இலக்கியமும், தன் முனையியைபுக் கவிதைகளும்...
- சிவப்பிரகாசர் எழுதிய நன்னெறி வெண்பாக்களும், தன்முனையியைபுக் கவிதைகளும்...
- பொருட்பால், அறத்துப்பால் தன் முனையியைபுக் கவிதைகள்

எனத் தொடர்ந்து பல்வேறு இலக்கிய நூல்களையும் தன்முனையியைபுக் கவிதை யில் எழுதுவதை வாசிக்கும் பலரையும் தமிழ் இலக்கியங்கள் சென்றடைகிறது. அவ்வகையில் தொடர்ந்து இன்னும் பல இலக்கிய நூல்களையும் கவிஞர் இராஜா மணி அவர்கள் தன்முனையியைபுக் கவிதை யின் வழியாக மக்களிடம் கொண்டு சேர்ப் பார் என்பதே எங்களின் எதிர்பார்ப்பு.

இவர் எழுதி நூல்வயல் பதிப்பகம் வழியாக வெளியான ‘தன்முனை இயைபில் குறளமுதம்’ புத்தகத்தில் இருந்து ஒரு கவிதை உதாரணமாக...


**‘கணைகொடிது யாழ்கோடு**
**செவ்விது;ஆங் கன்ன**
**வினைபடு பாலால்**
**கொளல்** *- குறள் 279*

**நேராக நின்றாலும்**
**அம்பினால் கொடுமை**
**நிலைமாறி நின்றாலும்**
**யாழிசை இனிமை**

*இரா.இராஜாமணி*

எனும் தன்முனையியைபில் குறளின் கருப்பொருள் தெளிவாக உள்ளதல்லவா?

தன்முனைக் கவிதை மற்றும் அதன் வகைமையில் பல நூல்கள் வெளிவந்து கொண்டிருக்கும் இன்றைய காலகட்டத்தில், இதுநாள்வரையில் வெளிவந்த நூல்களில் ‘முதல் நூல்’ எனும் சிறப்புக்குரிய நூல்களின் பட்டியலை அடுத்து வரும் கட்டுரைகளில் காண்போம்...



# ரயில் பயணம்

தேவைகளால் முத்திரையிடப்பட்ட
முகத்துடன் பலர் வரிசையில்
டிக்கெட்டுக்காய் அங்கே நானும் …

யன்னலோர இருக்கை தான்
எண்ணில் அடங்கா கதைகள்
பேசியது என்னுடன்
வர்ணம் இழந்த உள்ளத்தை
வர்ணனைகளால் நிரப்பியது …

ரயிலின் தரிசனத்துக்காய்
கிளை பரப்பிக் காத்திருக்கும் தருக்கள்
ரயிலின் சத்தத்துக்கு
தாளம் அமைக்கும் பட்சிகள்…

யன்னலால் ஊடுருவி உறங்கும்
கண்களை உற்சாகப்படுத்தும் சூரிய ஒளி
ரயில் பேசும் சத்தம் தாண்டி
தன் கதை பேசும் பல குரல்கள்…

பயணக்களைப்பை நீக்கும்
சிற்றூண்டியின் வருகை
பாதையில் மட்டும்தான்
ரயிலின் பயணம்
பயணிகளின் மனமோ எல்லை
கடந்து பயணிக்கின்றது…

இறுதியில் தரிப்பிடத்தில் கால் வைக்கின்றேன்
உள்ளம் முனுமுனுக்கின்றது
நாடுகள் தாண்டியும் நீள வேண்டும்
ரயில் பாதை என்று…

**அதீபா ஹஸன்**
காத்தான்குடி



# வலி

**ஜரீனா முஸ்தபா**

உணவகத்தில் ஷிபானும் மபாஸூம் நேர் எதிரில் அமர்ந்து உணவருந்திக் கொண்டிருந்தனர். ஷிபானின் முகம் வாடியிருந்தது. எதிலும் பற்றுதலற்ற நிலையில் இருந்தான். யாருடனும் பேசுவதில்லை. பேசினாலும் கவனம் முழுவதும் வேறு திசையில்.

இப்படியே விட்டுவிடுவதில் யாருக்கும் எந்தப் பயனும் இல்லை. காரணம் அவனுக்குத் தெரியும். ஆயினும் அவனாக ஆரம்பிக்கட்டும் என காத்திருந்தான். நாட்கள் நகர்ந்து சென்றனவேயன்றி அவன் வாய் திறக்கவில்லை. அவனது வாட்டம் நாளுக்கு நாள் அதிகரித்தது. இது மபாஸூக்கு வேதனையை ஏற்படுத்தியது. ஆகவே அவர்களாவது பேச வேண்டும் எனத் தீர்மானித்தான்.

'உங்க டென்சனில எந்த அர்த்தமும் இல்ல ஷிபான்.'

இப்படி திடீரென மபாஸ் கூறியதும் சற்று திகைப்புடன் அவனை நோக்கினான் ஷிபான்.

'உங்களுக்கு என் டென்சனைப்பத்தி என்ன தெரியும்?'

'எல்லாமே.'

'என் சிஸ்டர், அதான் உங்க வைஃப் என் வைஃப்கிட்ட எல்லாத்தையும் சொல்லி இருக்கா.'

அவனால் நம்ப முடியவில்லை. எதை சொல்வது? எப்படி சொல்வது?? குடும்ப கௌரவம் பாதிக்காதா??? இவற்றுக் கெல்லாம் ஒரு தீர்வை நான் எப்படி காண்பது???' போன்ற அடுக்கடுக்கான கேள்விகள் அவனுக்கு மன அழுத்தத்தை ஏற்படுத்திக் கொண்டிருந்தன.

ஆனால்?

அவனது மனைவியால் அது எப்படி முடிந்தது?

ஒருவகையில் அதுவும் நல்லதுதான். 'அவன் நம்மைப்பற்றி என்ன நினைப்பானோ?' என எண்ணிக் காலம் கடத்துவதில் எந்தப் பயனும் இல்லை. ஆகவே பேசலாம். ஏதாவது வழி பிறக்க வேண்டும்.' என்ற தீர்மானத்துடன் அவனும் பேசத் துவங்கினான்.

'அவ சொன்னதெல்லாம் உண்மதான் மபாஸ்'

'அதையெல்லாம் நீங்க நம்புறீங்களா ஷிபான்?'

அவன் எதிர்பாராத கேள்வி இது.

'என் வைஃப் எதுக்காக பொய் சொல்லனும்?'

'உங்க உம்மா எதுக்காக அவவை கொடுமை செய்யனும்?'

'இதத்தானே நா தினமும் யோசிச்சுப் பாக்குறேன். ஆனா? பதில் தெரியலயே.'

‘எந்தக் கொடுமைஷ்யாவது நீங்க நேரில் கண்டிருக்கீங்களா?’

’இல்லையே!’

‘அப்போ எப்படி நம்புவீங்க?’

‘தினமும் அழுவுறா. என்னால தாங்க முடியல. நிம்மதியே இல்லாம தவிக்கிறேன். பசிச்சாலும் திங்க முடியல. படுத்தாலும் தூங்க முடியல.’

‘உங்க உம்மாவோட பேசிப் பாத் தீங்களா?’

’இல்ல’

‘ஏன் இல்ல?’

‘அவங்க மூஞ்சை பாக்கவே பிடிக்கல்ல. பேசி பல மாசங்களாவுது.’

‘நீங்க பெரிய பாவம் செய்றீங்க ஷிபான்.’

‘நிச்சயமா இல்ல. அவங்க செய்யுறதுதான் பாவம். மிகப்பெரிய பாவம். எங்களுக்கு நிறைய வசதி இருக்கிறதால, எந்த வசதியும் இல்லாத ஒரு ஏழைக்கு என் மூலமாக வாழ்க்கை குடுக்கனும்னு உம்மாவும், வாப்பாவும் ‘நிய்யத்’ வெச்சிக்கிறதா என்கிட்ட சொன்னாங்க. அத நான் ஏத் துக்கலையா? அவங்களாவே பாத்து முடிவு பண்ணின ஒரு ஏழை புள்ளக்கு நா வாழ்க்கை குடுக்கலையா? எல்லாமே அவங்க இஷ்டப்படிதானே நடந்திச்சு? நாங்க வாழ்றதைப் பாத்து ஏன் பொறுக்க முடியல? ஏன் இப்படி அழ வக்கிறாங்க.’

‘நீங்க நினைக்குறதுல எந்த உண்மயும் இருக்க முடியாது ஷிபான்.’

‘எல்லாமே அவவே உருவாக்கின பொய்னு சொல்ல வாரீங்களா?’

‘இல்ல ஷிபான். நா அப்பிடி சொல்ல வரல்லை.’

‘பின்னே, உங்க பேச்சுக்கு என்ன அர்த்தம்?’

‘இப்படியான ‘நிய்யத்’ வசதி படைச்ச எல்லாருக்கும் தோனுறதில்லை. அல்லாஹ் விரும்பினவங்க மனசுல மட்டும்தான் ‘நிய்யத்து’ தோணும். உங்க வாப்பா உசுரோட இருக்கிற காலத்துல எவ்லோ பேருங்களுக்கு எத்தன குடும்பங்களுக்கு நல்லதை செஞ்சிருக்காங்கனு எங்க எல் லாருக்கும் தெரியும். அதுல ஒன்னுதான் அவங்களுக்காக தேடின இந்த மருமகளும். நல்லதை மட்டுமே செஞ்சி வாழ்ந்த ஒரு தாயால தன் வீட்டுக்கு வந்த மருமகளுக்கு மட்டும் எப்பிடி கொடும செய்ய மனசு வரும்? அதத்தான் நா சொல்ல வந்தேன்.

‘ஊர் பெருமைக்காக செஞ்சு வச்சாலும் நாங்க ஒத்துமையா, சந்தோஷமா வாழ்றதை காண பொறுக்க முடியலயே’

இவ்வாறு ஷிபான் கூறியதை நம்ப முடியாமல் பார்த்தான் மபாஸ். ‘உம்மா... உம்மா...’ என்று உயிரை விட்டவனா இது? எப்படி மாறிப்போனான்? அவனது உள்ளத்தில் இந்த ‘விஷ’த்தைக் கலந்தது யார்? அவனது இதயத்தில் இரத்தக் கசிவு ஏற்படுவது போன்ற ஒரு வலி பிறந்தது. அந்த நொடியில் அவனுக்கான ஒரு மான சீகமான பிரார்த்தனை அல்லாஹ்வை நோக்கிப் பறந்தது.

மீண்டும் அவனை வேதனையோடு நோக்கினான் மபாஸ்.

‘ஏற்கனவே உங்க உம்மாவைப் பத்தி உங்களுக்கு தெரியாதா ஷிபான்?’

‘அவங்க சுயரூபம் இப்பதானே புரியிது’

‘இல்ல ஷிபான். நீங்க தப்பா யோசிக் கிறதா நான் நினைக்கிறேன்.’

‘எதுக்காக அவ தப்பா என்கிட்ட சொல் லனும்?’

‘அத நீங்கதான் கண்டுபிடிக்கனும்’

‘ன்ன சொல்ல வாறீங்க’

‘சத்தியமாக சொல்றேன். உங்க உம்மா ஒரு கொடுமக்காரி இல்ல. யாருக்கும் அநி

யாயம் செய்றவங்களும் இல்ல. ஆனா உங்க மனச இந்தளவுக்கு மாத்தி வெறுப்ப ஏற்படுத்த ஏதாவது ஒரு பெரிய காரணம் இருக்கும். அத நீங்கதான் கூடிய சீக்கிரம் கண்டுபுடிக்கனும், உங்க நல்லதுக்காகத்தான் சொல்றேன்.'

முதலில் மறுத்தாலும், பின்னர் சற்று தீவிரமாக சிந்திக்கத் துவங்கினான் ஷிபான். வீட்டை விட்டு காலையில் சென்றால் மாலையில் வீடு திரும்புகின்றவன், விடுமுறை நாட்களில் கூட வீட்டில் இருக்கப் பிடிக்காமல், தன் தாயாரின் மூச்சுக்காற்றைக் கூட சுவாசிக்கக் கூடாது என தனது மனைவியை அழைத்துக்கொண்டு எங்காவது பயணம் செல்கின்றவன், தனது நண்பனின் ஆலோசனையைக் கேட்டு தனது நடவடிக்கைகளில் சில மாற்றத்தை ஏற்படுத்திக்கொண்டான். அடிக்கடி பகல் பொழுதுகளில் வீட்டுக்கு வந்தான். விடுமுறை நாட்களில் வீட்டில் இருக்க ஆரம்பித்தான்.

அவனது இதயத்தில் குடியிருந்த ஒரு அழுத்தமான 'இருள்' கொஞ்சம் கொஞ்சமாக விலக ஆரம்பித்தது. அவன் அதிகமாக வெறுப்பை வெளிப்படுத்துவதால் அவனது தாயார் அவனை விட்டும் கொஞ்சம் விலகியே இருக்க ஆரம்பித்திருந்தாள். அவனது இந்த வெறுப்பிற்கு என்ன காரணம் என அவளுக்குப் புரியவில்லை. திருமணம் ஆகியதும் மகன்கள் மாறிவிடுவதாக சொல்லக் கேட்டிருக்கிறாள். ஆனால்... அதற்கும் காரணம் வேண்டாமா? அதை அறிய முற்பட்டாலும், அதற்கு ஒரு வாய்ப்பை அவன் வைக்கவில்லை. ஒரே வீட்டில் வசித்தாலும், இதயத்தாலும், செயல்களாலும் வெகு தொலைவில் அவன் இருந்தான். பேசவென்று அவனிடம் சென்றால், தொலைபேசியில் யாரையோ கடுமையாக ஏசிக்கொண்டிருப்பான். அவள் நிற்கும் வரையில் அந்த 'ஏச்சு' நிற்காது. அது வெறும் பாசாங்கு. அவனோடு உரையாட, உறவாட விருப்பமற்ற தன்மை என்பதை அவள் புரிந்து கொள்ள அதிக காலம் தேவைப்படவில்லை. அவளும் ஒரு தாயல்லவா?

எதற்குமே காரணம் புரிய முடியாமை, அவளை அல்லாஹ்விடம் அதிகளவில் நெருங்க வைத்தது. அதிகமாக அழுதாள். அதிகமாகப் பிரார்த்தித்தாள். அவளது கணவரின் திடீர் இழப்பில் இருந்து மீள முடியாமல் அவள் தவித்த அந்த தருணங்களில் 'எல்லாம்' எனக்காக! என்னை உயிராக நேசிக்கின்ற மகன் இருக்கின்றான். பாசமுள்ள மருமகள் இருக்கிறாள்' என்று தன்னைத்தானே ஆறுதல்படுத்திக் கொண்டவள்தான், இப்போதெல்லாம் கலங்கியிருக்கிறாள்.

வீட்டில் நடக்கும் விடயங்கள் பற்றி அதிக அக்கறையுடன் ஆராய ஆரம்பத்திருந்தான் மபாஸ். ஷிபான் ஒன்று விடாமல் சொல்லி வந்தான். மபாஸுக்கும் இதுபோன்ற அனுபவம் இருப்பது ஏற் கனவே ஷிபானுக்கு தெரியும். ஆகவே அவனது ஆலோசனைகளை ஏற்று நடந்தான். அவளோடு கோபிக்கவில்லை. சண்டையிடவில்லை. தனது தாயுடன் நன்றாகவே நடந்து கொள்கிறான். ஆனால், அவளைப் பற்றி மிகவும் தவறாகவும், தாழ்வாகவும் அவனிடம் சொல்லி, இந்தளவிற்கு ஒரு கடுமையான வெறுப்பை ஏற்படுத்தியிருக்கிறாள் என்றால்...

'அதற்கு என்ன காரணம்?'

சிந்தித்தான். மிக அதிகமாகவே சிந்தித்தான். அல்லாஹ்விடம் பிரார்த்தித்தான். ஒருநாள் அவன் அரவமின்றி வீட்டுக்குள் வந்தான். யாருடனோ அவள் உரையாடிக்கொண்டிருந்தாள்.

'இனிமே காலத்துக்குக் காலம் கூலி வீடு தேடிக் கஷ்டப்பட வேணாம் உம்மா. தம்பியயும் தங்கச்சியையும் இவருதானே படிக்க வக்கிறார். ஊட்டுக்

*கூலியும் இவருதான் கட்டுறார். இனி நீங்க எல்லாரும் இந்த ஊட்டுலயே வந்து இருந்துருங்க. ஒன்னா இருப்போம். கூடிய சீக்கிரத்துல அவர்ட உம்மாவ அவர் தங்கச்சி வூட்டுல கொண்டுபோய் விட்டுருவாரு' இந்த வார்த்தைகள் அவனது காதில் வீழ்ந்த போதும் எதுவுமே அறியாதது போன்று அரவம் காட்டிவிட்டு அறைக்குள் நுழைந்தான் ஷிபான். அப்போதும் அவன் நிதானம் இழக்கவில்லை. பொறுமையுடன் ஒரு முடிவை எடுக்க வேண்டும் என தீர்மானித்துக் கொண்டான்.*

*ஆனாலும்...*

*நாளுக்கு நாள் அவனுக்கு அவன் மீதே வெறுப்பு ஏற்பட்டது. பத்துமாதம் சுமந்து பெற்றவள், இரவுப்பகலாக பேணிக் காத்து வளர்த்தெடுத்தவள் மீது பழி சுமத் தப்பட்டிருக்கிறது.*

*'அதையெல்லாம் நம்புகிற அளவுக்கு நா பலஹீனமானவனா? அதுவும் இந்தளவுக்கு வெறுத்து ஒதுக்கும் முட்டாளா நா? எது உண்மை, எது பொய்னு தேடியிருக்க வேணாமா?' இப்படியெல்லாம் அவன் உள்ளம் அவனை வதைக்கத் துவங்கியது.*

*அவன் வாடியிருந்த நிலையைக் கண்டு அவனது அருகில் வந்தாள் அவனது மனைவி ஹம்னா.*

*'ஏன் கவலையா இருக்கீங்க?'*

*'நா உங்க குடும்பத்து ஏதும் கொர வெச்சேனா ஹம்னா?'*

*'இல்லையே. யார் சொன்னது? எங்க குடும்பத்துக்கு தேவையான எல்லாத்தையும் நீங்கதானே பாத்துப் பாத்து செய்றீங்க.'*

*'அதுக்கெல்லாம் யார் காரணம் தெரியுமா?'*

*'யாரு?'*

*'எங்க உம்மாதான். உங்க தம்பி தங்கச்சிய படிக்க வக்க சொன்ன அவங்க ஒரு விதவ மனுசி. ஒரு தாய் ஸ்தானத்துல வச்சி உன் மாமிய நீதான் பாத்துக்கனும். உங்க வாப்பா செஞ்சு வந்த எல்லா நல்ல காரியங்களயும் ஒன்று விடாம நீயும் செஞ்சி வரனும். உங்க வாப்பா ஆயுளோட எல்லாம் முடிஞ்சிடக்கூடாதுன்னும் சொன்னாங்க. அதத்தான் நானும் செஞ்சேன். உங்க உம்மாவையும் என் உம்மாவா மதிச்சேன். அதே எங்க உம்மாவ உங்க உம்மாவா ஏன் உங்களால ஏத்துக்க முடியல? இப்படியெல்லாம் செய்ய உங்களுக்கு எப்படி மனசு வந்தது?'*

*'என்ன, நானா??? நா என்ன செஞ்சேன்?'*

*'நீங்க உங்க உம்மாவோட போன்ல பேசினதையெல்லாம் நா கேட்டுட்டேன் ஹம்னா. உங்க சுயநலத்துக்காக நா உங்க மேல வச்ச பாசத்தையும், நம்பிக்கையையும் ரொம்பவே தவறா பயன்படுத்திட்டீங்க. 'நா செஞ்சதெல்லாம் தவறுதான். என்னை மன்னிச்சிடுங்க. ப்ளீஸ்'*

*'நா செஞ்சதும் தவறுதான் ஹம்னா. நாங்க ரெண்டுபேரும் உம்மாகிட்ட போய் மன்னிப்பு கேப்போம். உம்மா மன்னிச்சாதான் அல்லா எங்களை மன்னிப்பான்.' என அவளை அழைத்துக் கொண்டு அவனது தயாரின் அறைக்குச் சென்றான் அவன்.*

*நடந்தவைகளை செவிமடுத்துக் கொண்டிருந்த அவனது தாயார்.*

*'மவன்' உங்ககிட்ட ஒன்னு சொல்லனும்.'*

*'சொல்லுங்க உம்மா!'*

*'ஹம்னாவோட உம்மா, தம்பி, தங்கச்சி எல்லாரும் எங்ககூடவே வந்து ஒன்னா இருக்கட்டுமே' என்று கூறியதும் அவன் ஹம்னாவின் முகத்தைப் பார்த்தான். அவளது கண்களில் இருந்து கண்ணீர் பெருகியது. 'அல்ஹம்துலில்லாஹ்' என அவனது உள்ளம் மொழிந்தது.*

■

# சிறுவர் சங்கமம்

## வாசிப்பின் உன்னதம்

வாசிப்பு அனைவரையும்
நேசிக்க வைக்கும்
வாசிப்பு அனைவரையும்
யோசிக்க வைக்கும்
ஒரு பட்சியை உயர உயர
பறக்கவைப்பது இறக்கை!
மனிதனை உலகில்
உயர வைப்பது அவனது வாசிப்பே!

அரிவுறையை அள்ளித்தரும்!
அனுபவங்களை அணிதிரட்டும்!

வாசிப்புக்கு வயதில்லை!
உடலுக்கு பயிற்சி உடற்பயிற்சி!
மூலைக்கு பயிற்சி வாசிப்பு!
வழிதவறியவர்களை சரி செய்யும்!
வழிதவறாமல் பாதுகாக்கும்!

வாசிப்பின் சுவாரஷ்யம்
யாரும் அறிவதன்று!
இதுவே வெற்றியின் ஆயுதம்!
ஆயிரம் கனவுகளின் களஞ்சியம்!
விடாமுயற்சி!
அமைதியின் உறைவிடம்!
அறியாமையின் விடை!

எல்லோரின் நேசம் பெற தேவை வாசிப்பு!
இதுவே நிலையான சொத்து!
இதுவே அன்பு பெட்டகம்!
தேடி பெறுவோருக்கு புதையல்!

‘வாசிப்பு‘ என்ற நான்கெழுத்தை
அடைந்தால்!
‘வெற்றி‘ என்ற மூன்றெழுத்தை
பெறுவாய்!

நல்நூல் வாசிப்பாய்!
என்றும் உயிர்பெறுவாய்!
தொடர்ந்து படித்தால் வெற்றி!

வாசிப்பே சுவாசி!
வாசிப்பை நேசி!

நிகழ்காலத்தை சரியாக பயன்படுத்தினால்
எதிர்காலம் நம்மை வரவேற்கும்!

இன்றுமுதல் நாம் நம்மை
மிகச்சிறந்தவர்களாக மாற்ற வாசிப்போம்!

வெற்றி நிச்சயம்!



**அஹ்லா ஹபீப்,**
அக்குறணை

# மதிப்பு

நல்ல பிரஜையாக வாழலாம்
மதிக்க கற்றுக்கொள்.
பல அனுபவங்களைப் பெறலாம்
மதிக்க கற்றுக்கொள்
இறைவனின் அருளை சுவைக்கலாம்
மதிக்க கற்றுக்கொள்.
கடப்பாறையாய் நிலைத்து நிற்க
மதிக்க கற்றுக்கொள்.
உன்னுடன் பலரும் நட்பு கொள்ள
மதிப்பே சிறந்த ஆயுதம்
நம்பிக்கை ஒரு உதாரணம் அதனால்
மதிக்க கற்றுக்கொள்.
உன் மனதை மட்டும் வார்த்தை எல்லாம்
உலகினில் இருக்காது அதனால்
மதிக்க கற்றுக்கொள்.
எதிரிகள் கூட காலடியில்
முடங்கி விடுவார்கள்
மதிக்க கற்றுக்கொள்.
மதிப்புள்ள இடத்தில்
தடைகளும் சாதனையாகிவிடும்.
அன்பான சொற்கள் கூட
மதிப்பாக மாறும் மதிப்பினாலேயே...
சிறுதுளி நீரை கடலாக்கிவிடும்
மதிப்புள்ள இடத்திலே
மதிக்க கற்றுக்கொள்..
மதிப்பே உன்னை உயர்ந்தவன் ஆக்கும்.
மதிக்க கற்றுக் கொள்வதால்
போற்றும் உலகமே உன்னை
மதிக்க கற்றுக் கொள்ளும்.
உயர உயர பறக்க வைக்கும்
இறக்கையாக மாறலாம்
மதிக்க கற்றுக்கொள்.
உன்னில் புகழோங்க நீ மற்றவர்களை
மதிக்க கற்றுக்கொள்
மதிப்பே சிறப்பு பொலிப்பு.

**அஹ்லா ஹபீப்.**
அக்குறண இலங்கை.










**இரா. சபரிநாதன்**

XI - ம் வகுப்பு, புதுச்சேரி







**நிரஞ்சனா**

எட்டாம் வகுப்பு







கா அக்ஷரா பழநி



விபாகர் பி, சென்னை






**கா. ஸர்வா**
அரசு உயர்நிலைப்பள்ளி,
பாண்டியன் நகர்,
திருப்பூர்.





**கு. பூமிகா**
அரசு உயர்நிலைப்பள்ளி,
பாண்டியன் நகர்,
திருப்பூர்.







**த.ஆதன்யா**
இரண்டாம் வகுப்பு
கெருகம்பாக்கம்
சென்னை



ஜீ.மைத்ரேயி - வந்தவாசி

# அழகிய கிராமம்

**சா**லையோரத்தின் இருபுறமும் பூத்துக் குலுங்கும் செங்காந்தள் மலர். அதில் சொட்டும் தேனைப் பருக கூட்டம் கூட்டமாக ரீங்காரமிடும் வண்டுகள், வண்ணத்துப்பூச்சிகள் அங்கும் இங்கும் பறந்து கொண்டே இருந்தன. இவை அனைத்தும் கார் செல்லும் சாலையின் இருபுறமும் காணப்பட்டது. ஆதிரவனுக்கும், கதிரவனுக்கும் இவை அனைத்தும் புதிது. ஏனென்றால், அவர்களின் பாட்டி ஊருக்கு எப்போதும் கோடை விடுமுறை வரும் போது தான் வருவார்கள்.



அப்போது வெப்பத்தின் காரணமாக செடி, கொடிகள், காய்ந்து பெரிய மரத்திலிருந்து மட்டுமே காற்று வீசும். ஆகையால் இப்போது மார்கழி மாதம் என்பதால் இலேசான குளிர் காற்று, பனி, மழை அனைத்தும் இப்போது தாங்கள் உணரலாம் என்று அவர்களின் சித்தப்பா நலன் கூறத் தொடங்கினார்.

‘குழந்தைகளா உங்களுக்குத் தெரியுமா! நம் கிராமத்தில் என்னென்ன இருக்கிறது என்று சொல்லுங்கள் பார்க்கலாம்?’ என்றார்.

‘தாத்தா நாங்கள் வரும் போது எல்லாம் குளத்தில் மீன் பிடிக்க அழைத்துச் செல்வார், ஏரியில் தண்ணீர் கொஞ்சமாக இருக்கும் போது அதில் நீச்சல் அடிக்க சொல்லித் தருவார். பாட்டி ஆலமரத்திற்கு கீழ் உள்ள கடைத்தெருவுக்கு அழைத்து செல்வார். மாலை நேரத்தில் கோவிலுக்கு அழைத்து செல்வார்’ என்றார்கள் இருவரும் சேர்ந்து.

‘இவ்வளவுதான் தெரியுமா உங்களுக்கு’ சித்தப்பா கேட்கவும் ‘ஆமாம்’ என்று சொன்னார்கள் இருவரும். நமது ஊரின் இயற்பெயர் ‘சொர்ணபுரி’ பொன் விளையும் பூமி என்பார்கள்.

‘அப்படி என்றால் நிஜமாகவே கோல்டுல் விளையுமா...!!’ என ஆச்சரியத்துடன் கேட்டார்கள் இருவரும்.

‘அது அப்படி இல்லை, நாம் மண்ணில் எந்த விதை விதைத்தாலும் நன்றாக விளைந்து பெரிய அளவில் இலாபம் தரும். அதைத் தான் அப்படி கூறுவார்கள்’ என்றார் சித்தப்பா.

‘இன்னும் நம் ஊரின் சிறப்புகள் எவ்வளவு தெரியுமா? வந்தவரை வாழ வைக்கும் ஊர். கோரைப்புல் விளையும் ஊர். பல கிராமங்களை ஒன்றிணைக்கும் கிராமம்.எண்ணற்ற மதத்தவர்கள் ஒன்றாக வாழும் ஊர். கிராமத்தைச் சுற்றியுள்ள இடத்தில் அறிஞர்களையும், கல்வியின் மூலம் உயரத்திற்கு அழைத்துச் செல்லும் ஊர்’

‘பலப் பள்ளிகளையும், கல்லூரிகளையும் அருகிலே கொண்டவைதான் நமது கிராமம். பெண்களும், ஆண்களும் பலத் துறைகளில் சமமாக உழைக்கும் ஊர். கிராமங்களில் விளையும் பச்சைக் காய்கறிகள், பழங்கள், கீரைகள், பல பொருட்கள் உற்பத்தி செய்து விற்கும் வார சந்தை நடைபெறுகிறது. அந்தச் சந்தையில் கிடைக்காத பொருட்களே இல்லை.’

‘நமது கிராமத்தில் கைத்தறியும், பட்டுத் தறியும் இயங்கி வருகிறது. இங்கு உற்பத்தி செய்யப்படும் பட்டு சேலைகள் பெரிய ஊர்களுக்கும், கடைகளுக்கும் விற்பனைக்குச் செல்கிறது’

‘ஊரைச் சுற்றி பெரிய மலையும் அமைந்துள்ளன. காட்டில் சிறுசிறு விலங்குகள் குரங்கு, மான்,முயல்,கரடி, யானை, மயில் போன்றவையும் வாழ்கின்றன. குளத்தில் சிறுசிறு நீர்வாழ் உயிரினங்கள் காணப்படும். ஏரியில் நீரைச் சேமித்து வைத்து விவசாயத்திற்குப் பயன்படுத்துவார்கள். அதனால் தான் எப்பொழுதும் பசுமையாக காணப்படும். நமது அழகிய ஊரான அழகிய கிராமம்’ என்று சித்தப்பா ஊரின் பெருமையை எடுத்துச் சொல்லவும் ‘மிக்க மகிழ்ச்சி சித்தப்பா, இந்த ஊர் எங்களின் ஊர் என்று சொல்வதில் பெருமைப் படுகிறோம்’ என்றார்கள் இருவரும்.

**நன்றி.**

# உணவே மருந்து

காலங்கள் மாறியது
உண்ணும் முறையும் மாறியது
உடல் மாறியது ல் இன்று
மருந்து மட்டுமே உணவாய் போனது

பச்சையாய்த் தின்று
நாளும் பறித்து சமைத்து
உடலும் மனமும் ஒன்றிணைந்து
செயல்பட்ட காலமது

தினமும் ஒரு கீரை சாப்பிடு
உற்சாகமாய் வாழ்ந்திடு
உணர்வுகளையும் உயர்த்திட
முருங்கைக்கீரை சூப்,
காய்கறி சூப் பருகிட

வெந்தயக் களி, உளுந்தங்களி
ராகி களி சாப்பிடுவதற்கு
விருப்பமில்லை இன்று

மருத்துவரிடம் விருப்பத்துடன்
மருந்துகளை வாங்கி செல்கின்றோம்
சிறு புன்னகையோடு

நாளும் மருந்தாய் உணவைச்
சுவைத்திட
நம்மை விட்டு நோய் நீங்கிட......



**ஆண்டாள் ரங்கநாயகி**
கோயம்புத்தூர்

# கிறிஸ்மஸ் இரவு



ஜிங்கிள் பெல் ஜிங்கிள் பெல்
கிறிஸ்மஸ் இரவு வந்ததே
கிறிஸ்மஸ் இரவு வந்ததே

குழந்தைகளுக்குப் பரிசுகள் தரவே
கிறிஸ்மஸ் தாத்தா புறப்பட்டாரே
கிறிஸ்மஸ் தாத்தா புறப்பட்டாரே

குழந்தைகளிடமிருந்து கடிதங்கள்
பரிசுகள் வேண்டி வந்ததே
பரிசுகள் வேண்டி வந்ததே

வண்டி நிறையப் பரிசுகள்
நிரப்பியே தாத்தா சென்றாரே
நிரப்பியே தாத்தா சென்றாரே

கரடி பொம்மை பார்பி பொம்மை
விதவிதமான பரிசுகள்
விதவிதமான பரிசுகள்

பரிசுகள் பெற்றதும் குழந்தைகள்
சந்தோஷமாய் துள்ளிக் குதித்தனரே
சந்தோஷமாய் துள்ளிக் குதித்தனரே

சட்டை இல்லா ஏழை சிறுவன்
அம்மாவுக்குச் சேலை கேட்டானே
அம்மாவுக்குச் சேலை கேட்டானே

சேலையோடு சட்டைகள் இரண்டும்
சிறுவனுக்குப் பரிசாய் தந்தாரே
சிறுவனுக்குப் பரிசாய் தந்தாரே

குழந்தைகளுக்குப் பரிசுகள் தந்து
மகிழ்வாய் தாத்தா புறப்பட்டார்
அடுத்த கிறிஸ்துமஸ் வரவை நோக்கி
ஆவலோடு காத்திருந்தார்

**ஜனனி குமார்**
நாகப்பட்டினம்



**ஆ. காளீஸ்வரி**
நாகப்பட்டினம்

# பார் போற்றும் பாரதி



பார் போற்றும் பாரதி,
பாட்டுக்கொரு பாரதி,

பண்பாட்டுக்கு ஒரு பாரதி,
காவியத்தலைவன் பாரதி,
புரட்சிக்கவி பாரதி,
புவி இன்பமுற வந்த சாரதி,

புகழ் பெற்ற பாரதி,
இகழ்ந்தோரை நாணச் செய்த பாரதி,
பெண் நலம் போற்றிய பாரதி,
நானிலம் போற்றும் பாரதி,

முறுக்கு மீசை பாரதி, நேர் கொண்ட
பார்வையுடைய பாரதி,
சாதனையாளன் பாரதி,
சோதனைகளை வீழ்த்திய பாரதி,

அச்சமிலா பாரதி,
ஆங்கிலேயரை துச்சமெனக் கருதிய பாரதி,
வறுமையில் வாடிய பாரதி,
அறிவுத்திறன் மிக்க பாரதி,


சிறுவர்களுக்குப் பிடித்த பாரதி,
சிறப்புக்குரிய பாரதி,
மகாகவி பாரதி,
கவிகளுக்கெல்லாம் தலையாய பாரதி ,

இளம் வயதிலேயே
உலகை விட்டு நீங்கிய பாரதி,
இரவாப் புகழுடைய பாரதி ,
ஆதவன் மறையலாம்,
காலங்கள் மாறலாம்,
அவர் புகழ் என்றும் மாறாது

வாழ்க பாரதி!!
வையகம் உள்ள மட்டும்
நின்புகழ் ஓங்குக!

**ரா.ரியா செரபினா**





# எளிய தன்முனை, எனக்குக் கொடுப்பினை

கவிச்சுடர் கல்யாண சுந்தரம் தாத்தா அவர்களால் தமிழுக்கு அறிமுகமான தன் முனைக் கவிதை வகைமையை எனது ஆச்சி அன்புச்செல்வி சுப்புராஜு தொடர்ந்து எழுதி வந்தார்கள். குட்டி , குட்டி கவிதைகளாக எளிய சொற்களுடன் கூடிய தன் முனைக் கவிதை வடிவம் எனக்கு மிகவும் பிடித்தது. நானும் எழுதத் தொடங்கினேன். மேலும் தன்முனைக் கவிதைகள் எழுதுவது எப்படி என்று எங்களுடைய ஆச்சி 'அன்பின் சங்கமம் சிறுவர் உலகம்' வழியாக குழந்தைகளுக்குப் பயிற்சியாகத் தொடர்ந்து நடத்தி வந்தார்கள். அந்தப் பயிற்சியின் மூலம் என்னுடன் சேர்ந்து பல குழந்தைகள் தன்முனைக் கவிதைகளைத் தொடர்ந்து எழுதி வந்தோம்.

சில புதுக்கவிதைகள் எழுதி இருந்த எனக்குள் மிகவும் எளிய இலக்கணமுடன் கூடிய தன்முனைக் கவிதைகள் எழுதுவதற்கான ஆர்வம் அதிகரித்தது. தொடர்ந்து எழுதத் தொடங்கினேன். நான் எழுதிய தன்முனைக் கவிதைகளைத் தொகுத்து 'சிறகடிக்கும் பட்டாம்பூச்சி' புத்தகத்தை வெளியிட்டுள்ளேன். இந்நூலுக்காக நானிலு' கவிதைகளைத் தமிழுக்கு அறிமுகம் செய்துவித்த பெரும் எழுத்தாளர் சாந்தாதத் அம்மா அவர்கள் வாழ்த்துரை தந்தது எனக்கு பெரும் மகிழ்ச்சியைத் தந்தது. எனது கவிதைகள் மேலும் பலத் தொகுப்பு நூல்களிலும் இடம் பெற்றுள்ளன.

கவிச்சுடர் கல்யாண சுந்தரம் தாத்தா தன்முனைக் கவிதைகள் குழுமத்தில் 'பதினாறு வயதிற்குட்பட்ட குழந்தைகளில் தன் முனைக் கவிதை எழுதிய முதல் குழந்தை' என்கிற வாழ்த்தினைச் சொன்னதோடு, சாதனைப் பதிவும் இட்டுப் பாராட்டியது எனக்கு பெரும் ஊக்கமாக இருந்தது. பாவலர் தமிழ்நெஞ்சம் அமின் ஐயா அவர்கள் பிரான்ஸ் நாட்டிலிருந்து வெளிவரும் 'தமிழ் நெஞ்சம்' இதழில் எனது தன்முனைக் கவிதைகளை இடம் பெறச் செய்து வாழ்த்தியது என்னை மேலும், மேலும் எழுதத் தூண்டியது. மேலும் கவிஞர் சாரதா க சந்தோஷ் அத்தை அவர்கள் 'நிறை' இலக் கிய இதழிலும், கவிஞர் வஃபீரா வஃபி அத்தை அவர்கள் 'முத்தமிழ்க் கலசம்' இலக்கிய இதழிலும், திரு. ஹேமந்த் குமார் அண்ணா அவர்கள் 'நமஸ்தே இந்தியா' இதழிலும் (Namaste India Magazine) என்னை வாழ்த்திப் பதிவுகள் இட்டனர்.

கவிஞர் வே.புகழேந்தி மாமா அவர்கள் எனது கவிதை ஒன்றை ஆய்வு செய்தது பெரும் மகிழ்ச்சியைத் தந்தது. மேலும் தங்களின் பதிவுகளின் வழியாக தொடர்ந்து என்னை வழிநடத்தி வரும் கவிஞர் ராஜூ ஆரோக்கியசாமி மாமா, கவிஞர் சுந்தரமூர்த்தி மாமா, இன்னும் எனது நூலினை வாசித்து என்னைப் பண்படுத்தி வரும் அணைவருக்கும் எனது நன்றியையும், வணக்கத்தையும் இரு கரம் கூப்பித் தெரிவித்துக் கொள்கிறேன். குழந்தைகளையும் எழுதத் தூண்டும் வண்ணம் உள்ள எளிய தன்முனைக் கவிதை எழுதுவது எங்களுக்கு கொடுப்பினை. நன்றி

**இளங்கவி சு. பிரவந்திகா**

பட்டாபிராம், சென்னை






# நூல் விமர்சனம்

**(சிறார் இலக்கியம்) மிதிவண்டி**
**ஆசிரியர்:** கவிஞர் அறிவுஜீவி
**பக்கங்கள்:** 16
**விலை:** ரூ 30/-
**பதிப்பு:** வண்ணத்துப்பூச்சிகள் பதிப்பகம், சென்னை - 28.
**அலைபேசி எண்.:** 7010 30 9595 / 9382 301 898

**வ**ண்ணத்துப்பூச்சிகள்ல் மின்னிதழின் நிறுவனர் திருமிகு லூ. தாமஸ் அவர்கள் (புனைப்பெயர்: கவிஞர் அறிவு ஜீவி), இச் சிறார்களுக்கான நூலை எழுதியுள்ளார். சென்னை, சுஜய் பப்ளிக் பள்ளியில், ஆறாம் வகுப்பு படிக்கும் (10 வயது), 'தூரி கைச் சிற்பி' பெமு. சாய்ஹர்ஷித் எனும் மாணவனின் ஓவியங்கள் இந் நூலில் அழகுற தடம் பதித்துள்ளன. அம்மாணவனுக்கும் ஊக்க முட்டும் திருமிகு லூ. தாமஸ் அவர்களுக்கும் அவனுடைய அன்னை, ஆசிரியர் திருமதி சு. மகேஸ்வரி அவர் களுக்கும் வாழ்த்துகள்!

சென்னை, புரசைவாக்கம், இஎல்எம் மேல்நிலைப் பள்ளியில் தலைமை ஆசிரியராக பணிபுரியும் தமிழ் சொற் பொழிவாளர் திரு அருள் பிரகாஷ் அவர்க ளின் வாழ்த் துரையுடன் வெளிவந்துள்ள நூல் இதுவாகும்.

105 யீ 148மி.மீ. அளவுள்ளது இச்சிறு புத்தகம். கோவிந்தன் எனும் பள்ளி மாணவனின் வாழ்க்கையில் நடக்கும் சில வற்றைப் பற்றி, இதில் காணலாம். வீட்டின் வறுமையைப் போக்கிட தோள்தாங்கும் அவனுடைய உழைப்பு, இதில் முன் நிற் கிறது. அதில் மிதிவண்டியின் பங்கும் உள்ளது. கோவிந்தனின் செய்கைகளைக் கவனிக்கிறார் அவனுடைய ஆசிரியர். மாண வன் முன்னேற அவனுக்கு அவர் பயிற்சி அளிக்கிறார். அதைக்கொண்டு கோவிந்தன் எப்படி முன்னேறுகிறான் என்பதே கதை யாகும்.

ஒரு அதிகாலையின் வெளிச்சூழல், ஒரு குடிசையில் ஒரு காட்சி, சாலையின் ஒரு பிண்ணனி என்று பல்வேறு வகையில் இந் நூலின் ஓவியங்கள் நம்மோடு பேசுகின்றன.

இக்கதை எளிய சொற்களால் ஆக்கப் பட்டுள்ளது. ஒவ்வொரு பக்கத்திலும் ஓவி யம், ஓரிறு வரிகளில் கதையின் தொடர்ச்சி என்றுள்ளது. சிறார்களுக்குப் பிடிக்கும் கதை வரிசைகளில் இந்நூலும் இடம்பெறும் என்ப தில் சந்தேகம் இல்லை.

நிறைவாக, ல்வண்ணத்துப் பூச்சிகள்ல் நிறுவனர் திருமிகு லூ. தாமஸ் அவர்களுக்கு, நன்றி நிறை வணக்கங்கள்! அவர் வழியே, இந்நூலின் வாசிப்பனுவத்தைப் பகிர்ந்து கொள்ள வாய்ப்பளித்தமைக்கு மிக்க நன்றி!

**கவிஞர் மாலதி இராமலிங்கம்**
**புதுச்சேரி**

# புத்தாண்டுப் பொங்கல்



புத்தாண்டும் பொங்கலுமே பூக்கப் பார்ப்போம்
புன்னகையாய்க் கொண்டாடவே பண்பைச் சேர்ப்போம்
இத்தரையில் உழவினையே உயர்த்தும் பொங்கல்
எழுதமிழர் இயற்கைக்கு எடுக்கும் நன்றி
எத்திசையும் சென்றாலுமே இதயம் ஒன்றி
ஏற்ற முற புத்தாண்டும் பொங்கலும் காண்போம்
புத்தொளிதான் பெற்றதெனப் பாரினில் தமிழா
பயணிப்போம் அன்புடனே பண்பாய் நாமே.

தாய்மொழியைப் புறந்தள்ளிப் போகின் றாயே
தனித்துவமாய்த் தரணியிலே இருந்தத் தமிழா
தாய் மொழியாம் தமிழ்தன்னை எண்ணி டாது
தன்னாட்டுப் பண்பிணையும் நண்ணி டாது
உன்னினத்து மக்களுயர் வையுமுள் ளிடாது
ஒற்றுமையின் உறவுகளை ஒட்டவிடாது
என்னதான் நினைக்கின்றாய் அந்தோ தமிழா
இவ்வுலகில் தாழ்ந்திடவோ இயம்பு தமிழா

இத்தரைமீது தாய்மொழியின் ஏற்ற மறியா
இதயத்தோடு இருக்கின்ற இற்றையத் தமிழா
சுத்தமானத் தமிழதனின் தொன்மை அறியா
சிந்தையில் வாழ்கின்றத் தமிழா தமிழா
தலைப்பிள்ளை நீயல்லவோ புவியி னிலே
சரித்திரந்தான் விழவில்லையோ செவியி னிலே
விலைப்பிள்ளை போலல்லவோ வேற்று மொழிக்கு
விலையாகிப் போகின்றாய் மாண்புதானா

மொழியுணர்வும் பண்பாடுமே வற்றிப் போனால்
மேன்மையதன் சுவடின்றி மறைந்து போகும்
விழியதனை அற்றவனாய் விளங்க நேரும்
வையகமதில் உன்சரித்திரம் வீழ்வைச் சேரும்
மொழியுணர்வும் இனநலமும் மனதில் உள்ளி
விழிப்புடனே செயலதில் சிந்தை அள்ளி
பழிச்சொற்கள் பதியாநிலைப் பார்த்துச் செல்ல
பகுத்தறிந்தப் பண்பாட்டின் பயணம் வெல்ல
புத்தாண்டே தமிழருக்கு தமிழுணர்வைத்தா.

**வில்லவன் மல்லி**




# பிரதேச கலை இலக்கிய விழாவிற்கான பரிசுகள் அன்பளிப்பு

மூதூர் பிரதேச செயலகத்தில் வருடாந்தம் நடைபெறும் பிரதேச கலை இலக்கிய விழா மூதூர் பிரதேச செயலகமும், பிரதேச கலாசார அதிகார சபையும் இணைந்து நடாத்தும் பிரதேச கலை இலக்கிய விழா 2024 நாளை மாலை பிரதேச செயலாளர் தலைமையில் நடைபெறவுள்ளது.

குறித்த நிகழ்வில் கலாசார அதிகார சபை நடாத்திய பாடசாலை மாணவர்களுக்கான இலக்கியப் போட்டி நிகழ்ச்சியில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கான 46,240.00 பெறுமதியான பரிசுகள் மூதூர் ஜே.எம்.ஐ. நிறுவனத்தினால் இன்று (17.12.24) பிரதேச செயலாளர் எம்.பி.முபாறக் அவர்களின் முன்னிலையில் கலாசார உத்தியோகத்தர்களான பஷீர், லலிதா ஆகியோருக்கு மூனிஹூா நிறுவன முகாமைத்துவப் பணிப்பாளர் முஹம்மட் இஹ்ஸான் அவர்களினால் கையளிப்பு செய்யப்பட்டது.

குறித்த பரிசுகளை அன்பளிப்பு செய்ய நிதி உதவி அளித்த னிற்மிற்ஷெ மூனிஹூா நிறுவன பணிப்பாளர்களான பிரான்ஸ் நாட்டை சேர்ந்த முஹம்மட் அமீன் அவர்களுக்கும் தொழில் நிமிர்த்தம் கட்டாரில் பணிபுரியும் பொறியியலாளர் ஷப்ரூல் இன்பாஸ் அவர்களுக்கும் நிறுவனத்தின் சார்பில் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.